தமிழிசை இயக்கம்

இரா. இளங்குமரன்



தமிழிசை இயக்கம்

புலவர்
இரா. இளங்குமரன்

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கித் தெரு, சென்னை-600001.

முதல் பதிப்பு: 21, திசம்பர், 1993.

உரிமை: ஆசிரியர்க்கு

விலை: ரூ. 30.00

மணிவாசகர் வெளியீட்டு எண்: 511

தமிழவேள் ச. மெய்யப்பனார்
மணிவிழா ஆண்டு வெளியீடு

பதிப்புச் செம்மல்

டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்; திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; தமிழகப் புலவர் குழு உறுப்பினர்; பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருபவர். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பன்னிரண்டு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய 'தாகூர்' நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர் துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். பதிப்புச் செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம்:
மணிவாசகர் நூலகம்
12–B, மேல சன்னதி, சிதம்பரம் – 608 001.
55, லிங்கித் தெரு, சென்னை – 600 001.
28–A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை – 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் – 641 001.
28, கிளைவ்ஸ் கட்டிடம், திருச்சி – 620 002.

தொலைபேசி : சிதம்பரம் 23069 – சென்னை 513707
கோவை 37155 – மதுரை 36853

பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 600 013.

காணிக்கை

அண்ணாமலையரசர்

அவர்கட்கு

நில்லாத செல்வத்தை நிலைக்கச் செய்தான்;
    நீங்காத கலைப்புரட்சி நிரம்பச் செய்தான்;
கல்லாத இனமெல்லாம் கற்க வைத்தான்;
    காணாத பெருங்கழகம் களத்து வைத்தான்;
இல்லாத புலவர்களை இருப்போர் ஆக்கி
    இணையாத தமிழ்ப்புகழை ஈட்டிக் கொண்டான்;
வெல்லாத செயலில்லை என்று போற்ற
    விளங்கியவன் மன் அண்ணாமலையன் வாழ்க.

– மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்

RAJAH
SIR ANNAMALAI CHETTIAR,
OF CHETTINAD

THE PALACE
CHETTINAD.

25. 3. 1944

உ

சிவமயம்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]



தமிழிசைச் சங்கம் கண்ட

ராஜா சர் அண்ணாமலை செட்டியார்



தமிழ் இசைச்சங்கம்

தமிழிசை

வெந்தழல் நீராகும்; வெள்ளெலும்பு பெண்ணாகும்;
வந்தமத வேழம் வணங்கிடுமே — சந்தமெழப்
பாடுவார் உள்ளுருகிப் பாடும் தமிழிசைக்கு
நீடுலகில் உண்டோ நிகர்!

தமிழிசைச் சங்கம்

ஆதி பகவன் அறவாழி அந்தணன்
யாதும் உவமையிலான் இன்னருளால் — பூதலத்தில்
எங்கும் புகழ்பெற் றினிய தமிழிசைச்
சங்கம் வளர்க தழைத்து.

வேதப் பரியான் விரிசடையான் கங்காள
நாதன் நடராஜன் நல்லருளால் — பூதலத்தில்
பொங்கு புகழ்பெற்றுப் பொலிந்து தமிழிசைச்
சங்கம் வளர்க தழைத்து.

-- கவிமணி

முன்னோட்டம்

நூலின் பெயர் 'தமிழிசை இயக்கம்' என்பது. இது, இவ்வியக்கம் தோன்றி வளர்ந்து ஆற்றிய தொண்டு பற்றியவற்றைத் தொகுத்துரைக்கும் நூலாகும்.

எங்கே தாய்மொழி தனக்குரிய தகுதியான இடத்தைப் பெற்றிருக் கிறதோ, போற்றப்படுகிறதோ — அங்கே இத்தகைய இயக்கம் ஒன்று தோன்ற வேண்டிய நிலையும் தோன்றியிராது. அவ்வியக்கம் பற்றிய வரலாறும் தோன்றியிருக்கவும் நேர்ந்திராது. தமிழர் தம் தாய் மொழியைப் போற்றிக் காவா நிலைமையே இத்தோற்றங்களுக் கெல்லாம் இடமாயிற்றாம்.

தாய்மொழியால் கல்விகற்க இயலாது இங்கே; தாய்மொழியால் ஆளவாய்க்காது இங்கே; தாய்மொழியால் வழிபடமுடியாது இங்கே; தாய்மொழியால் முறை மன்றேறி முறையிடவும் முடியாது இங்கே; தாய் மொழியால் இசையரங்கேறி இசைக்கவும் முடியாது இங்கே; விடுதலை பெற்ற நாட்டில் — விடுதலை பெற்று ஏறத்தாழ ஐம்பது யாண்டுகள் உரிமை வாழ்வுடையோம் என்னும் நிலையுடைய நாட்டில் — உள்ள மீளா அடிமை நிலை இது!

"நாட்டு விடுதலைக்கு முற்பட வேண்டியது மொழிவிடுதலை" என்றார், கூரிய நோக்கமைந்த மொழிஞாயிறு பாவாணர். ஏனெனில், மொழிவிடுதலை பெறாத நாட்டு விடுதலை, உரியபயனைச் செய்யாது என்னும் தெளிவால் உரைத்தார் அவர்.

தமிழர், 'மொழி வழியால் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம்' என்னும் இழிமையை உணர்ந்தாரில்லை! அம்மட்டோ! அவ் விழிமையைப் பெருமை எனவும், அவ்வகையில் 'கொத்தடிமையாய் இருப்பதும் கொண்ட பிறவிப் பயன்' எனக் கொண்டும் விட்டனர்.

விழிப்புற்றவர் எனப்படுவாரிடத்தும், இவ்வடிமை நிலை மாறவே இல்லை!

வந்தவர் — வந்தவர், வேட்டைக் காடாக இத்தமிழ்நாடு இருப்பதே அன்றி, 'அயல் வழக்கே வழக்கு' என, அறிவு மேம்பட்டு வழிகாட்டியாக இருப்பாரும் இருந்து வருவதால், வழிவழியும் மாறாவழியாய் இயல்வதாயிற்று.

இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, சிலருக்கு உண்டாகிய உள்ளுணர்வு வெளிப்பாடுதான் 'தமிழிசை இயக்கம்' என ஒன்று உண்டாகத் தூண்டுதல் ஆயிற்று. அத்தூண்டுதல் ஆங்கும் ஈங்கும் இலைவிட்டுக் கிளையும் உருவாகும் நிலையிலேயே, அரசர் அண்ணாமலை வள்ளல் உள்ளத்தில் ஓர் இயக்கம் வேண்டும் என்னும் உந்துதல் உண்டாயிற்று! அதற்கு முன்னரே 'இயக்கம்' என்னும் பெயரீடு இல்லாமலே, இயக்கச் செயல்கள் நடந்து வந்தமையே இயக்கத் தூண்டலாகித் துலங்கச் செய்ததாம். ஆதலால், இயக்க வரலாற்றுக்கு முன்னோடி நிகழ்ச்சிகள் தோன்றி வளர்ந்த நிலை, கிடைத்த அளவான் அறிந்து கொள்ளுதல் இன்றியமையாத தாயிற்றாம்.

கனியும், காயும், பூவும், இலையும், கிளையும், அடியும் வெளிப் படத் தெரியும் மரத்திற்குப் பற்றுக்கோடும் நீரும் உரமும் ஊற்றமும் எல்லாம் அதற்கமைந்த ஆணிவேர், பக்கவேர் என்பன அல்லவோ! சல்லி வேர், சிம்பு வேர் என்பன கூட, நீரும் உரமும் பிடியும் உடையவை தாமே!

இனி, இசை வளம் இம்மொழியில் இவ்விவ்வாறெல்லாம் கனிந்து குலுங்கிக் கிடப்பவும், இவற்றைக் கண்டு கொள்ளவும் காக்கவும் இல்லாராய்க் கிடந்த நம்மவர் நிலையும், இந்நிலையைத் தமக்கு நெட்ட நெடு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, ஒட்டு மொத்தமாகத் திட்டமிட்டுக் கிளர்ந்த எதிர்ப்புக் கேடும், இன்னவை யெல்லாம் இவ்வோரியக்கம் பற்றியது என்பது இன்றிப் பலவற் றுக்கும் இந்நிலையே உண்மையைச் சுட்டிக் காட்டக் கூடியதுமாம். ஆதலால், 'தமிழிசை இயக்கம்' என்னும் இது, அது தோன்றிய நாள் தொட்டுத் தொடங்காமல் தொல்பழநிலை தொட்டுச் சுட்டிக் காட்டுவதாயிற்றாம்.

'தமிழிசை இயக்கம்' பத்துத் தலைப்புகளால் இயல்கின்றது. அவற்றின் பகுப்பே நூற் பொருளடைவைப் புலப்படுத்தும் வகை யில் அமைந்துள்ளமை, பார்த்த அளவானே புலப்படும்.

'ஒன்றுளே மூன்று' என்னும் முதற்பகுதி, தமிழ் மொழி 'முத்தமிழ்' என்னும் பாகுபாடு உடைமை பற்றிய விளக்கமாகும்.

'பண்சுமந்த பாடல்கள்' என்னும் இரண்டாம் பகுதி, தொல் காப்பியம் சங்க இலக்கியங்கள் ஆகியவற்றில் உள்ள தமிழிசைக் குறிப்புகளைச் சுருங்கிய அளவில் தொகுத்துரைப்பதாகும்.

'ததும்பி வழிந்த தமிழிசை' என்னும் மூன்றாம் பகுதி, புலவர்கள் பெயர்களில் இசைக்குறிப்பு உள்ளமையும், ஆட்சியாளர் தமிழிசை வளர்த்தமையும், அவர்களும் அவர்கள் குடும்பத்தவர்களும் இசை வல்லுநராக இருந்தமையும் ஆகிய இன்னவை சொல்வது.

'தமிழிசை வெள்ளம்' என்னும் நான்காம் பகுதி, வரிப் பாடல்கள், வாரப்பாடல்கள், கலைச்சொற்கள், பிற்கால இசைச் செய்திகள், இசை வளர்த்த தோன்றல்கள் பற்றிய செய்திகளைக் கூறுவது.

'தமிழிசைக் கலைவளம்' என்னும் ஐந்தாம் பகுதி, கல்வெட்டு, செப்பேடு, இசைத்தூண், இசைச்சிற்பம், இசைவழியாப்பியல் என்பனவற்றைத் தொகுத்துரைப்பது.

'காரிருள் மூட்டம்' என்னும் ஆறாம் பகுதி, இசைத் தமிழ், மேடையில் இருந்தும், சாலையில் இருந்தும், ஏட்டில் இருந்தும், மறைக்கப்பட்டும், மறுக்கப்பட்டும், ஒதுக்கப்பட்டும், தீண்டாதது ஆக்கப் பட்டும் – காருவாப்பட்டுக் கிடந்த (அமாவாசை இருளால் மூடுண்டு கிடந்த) நிலையைச் சொல்வது.

'விடிவெள்ளி' என்னும் ஏழாம் பகுதி ஞாயிறு கிளம்புதற்கு முன்னர், அதற்குக் கட்டியங் கூறுவது போல விடிவெள்ளியாய்த் தமிழில் இசை நிகழ்த்தப்பெற வேண்டும் என்னும் இயற்கை உணர்வு தம்முள் எழும்பித் தமிழ் இசைப்பாக்கள் இயற்றியவர், அவ்விசைப் பாக்களைக் கற்பித்தவர், தமிழிசைப்பாக்கள் வேண்டுமெனக் குரல் எடுத்தவர், நூல் ஆக்கியவர் ஆகியோரைப் பற்றிய செய்திகளை இசைப்பது.

இவ்வேழு தலைப்புகளும், தம் அளவாலும் படிப்படியே விரிவு பெற்று நடையிடுவனவாம்.

இனி எட்டாம் தலைப்போ, தமிழிசை இயக்கம் பற்றிய நேர் வரலாறேயாம். அத்தகுதிக்கு ஏற்பவும் அதற்கு நேரிட்ட எதிர்ப்பு, எதிர்ப்பை அடக்க எழுந்த கிளர்ச்சி, வெற்றி இன்னவும் ஆகியவை போராட்ட நிலைப்பட்ட தேரோட்டச் செலவு ஆகலின், நூலின் ஒட்டுமொத்த அளவில் செம்பாதி எனச் சொல்லத்தக்க அளவின தாகிய விரிவுடையதாம். அது 'ஏழு ஞாயிறு' என்னும் தலைப் புடையதாம்.

ஞாயிறு கிளர்ந்தபின் விரியும் ஒளிவிரிவு போல, தமிழிசை இயக்கம் ஏற்பட்டு வளர்ந்த பின்னர் விரிவுற்ற பண்ணாய்வு, சென்னை அண்ணாமலை மன்றத் தோற்றம், மதுரை முத்தையா மன்றத் தோற்றம் அவற்றின் செயற்பாடுகள் என்பன பற்றிய செய்திகளைக் கொண்டு **'ஒளிபரவல்'** என்னும் தலைப்பில் ஒன்பதாம் பகுதி இயல்கின்து.

நிறைவுப்பகுதியாகிய பத்தாம் பகுதி **'விரிவாக்கம்'** என்பது. தமிழிசை இயக்கம் தோன்றுவதற்கு முன்னோடியாக அமைந்த நூல்கள், அவற்றை இயற்றிய பெருமக்கள், இயக்கச் செயற் பாட்டுக்குக்கிளர்ந்த நூல்கள், அதற்குப்பின்னர் எழுந்த ஆய்வு நூல்கள் என்பனவும், தமிழிசை வளர்த்த இசைவல்லார் பெயர்கள், நிறைவுரை என்பனவும் உடைய பகுதியாகும். மேலும், மேலும் விரியத்தக்க இப்பகுதி சுட்டிக் காட்டும் அளவில் சுருங்கியமை நூல்வரம்பும், இயக்கவரம்பும் கருதியதாம்.

'தமிழிசை இயக்கம்' என்னும் பெயரிய இந்நூலை, எழுதத் தூண்டியவர், துணை நூல்கள் பலவும் தொகுத்து வழங்கியவர் — பேராசிரியர் மெய்யப்பனார். பதிப்புச் செம்மலாகிய அவர், முன்னரும் 'இலக்கண வரலாறு', 'தனித்தமிழ் இயக்கம்' என்னும் தமிழினத் தற்காப்பு நூல்களை உருவாக்கித் தரத் தூண்டிப் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிமைப்படுத்தியவர். அப்பெருந்தக்க பேராசிரியர், மணிவிழாக் காணும் மணியாகத் திகழும் நாளில், இத்'தமிழிசை இயக்கம்' வெளிப்பட அவாவினார்! அவ்வவாவே, இந்நூலுருக் கொள்ளக் காலக் கொடையாய்க் கனிவதாயிற்றாம்.

பேராசிரியர் மெய்யப்பனார்க்கு இளந்தைப்பருவந் தொட்டே இனமானப் பற்றுமையும் வளர்ச்சி காணும் வேட்கையும் அரும்பா யிருந்தமை நாடறிசெய்தி. 'சத்திய மூர்த்தி'யாக இருந்த அவர் 'மெய்யப்பர்' ஆனமை, வெளிப்படு சான்று! அவர், ஆர்வத் தளிர்ப்பால் வெளிப்பட்டுவரும் ஆய்வு நூல்களே அகத்துறு சான்றுகள்! அவ்வகையில், தமிழிசைக் காவல் கடமை பூண்ட வள்ளல் அண்ணாமலையாரின் முக்கொள்கை முகிழ்ப்பிலும் தம்மை ஒப்படைத்துக் கொண்டு அவற்றின் தளிர்ப்பே தளிர்ப்பு ஆகப் பேணும் பெற்றிமை கொண்டார்:

தில்லைப் பெருமானை நாளும் வழிபடுதல்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரிய நிலை போற்றியதுடன் அறக்கட்டளைகள் விளங்கச் செய்தல்.

இவற்றோடு அண்ணாமலையார் ஊனாய் உணர்வாய் உயிராய்க் கொண்ட தமிழிசையைப் போற்றல் என்பவை அவை.

தமிழிசையை வரலாற்று அடிப்படையில் மறவாது போற்று வதற்கு மணிப்பணியாக, மணிவிழாவைத் தெரிந்து கொண்ட சீர்மை பெரிது!

மெய்யப்பர் பிறந்த ஆண்டு 1933. அவ்வாண்டு தமிழிசை இயக்கம் வீறு மிக்க பணிகளில் ஒன்றி நின்று, வெற்றிக் கனி அவாவிய பொழுதாகும்! தமிழிசைக் கல்லூரி நிறுவியும், தமிழிசை அரங்குகளில் மின்னியும், தமிழிசை பரப்பும் திட்டங்கள் மேற் கொண்டும் திகழ்ந்த காலம் அது! பிறந்த நாள் நிலையைச் சிறந்த நாள் நிலையொடு சேர எண்ணிச் செழிப்பச் செயலாகும் செம்பணி ஈதாம்!

நெஞ்சநிறை பணிக்குத் தம்மை ஈந்தார் – நெறிநின்றார் – நீடுவாழ்வார்! வாழிய, மெய்யப்பச் செம்மணி!

பாவாணர் ஆராய்ச்சி நூலகம்
திருநகர், மதுரை – 625 006.

தமிழ்த் தொண்டன்,
இரா. இளங்குமரன்.

இனிய தமிழில் பாடி இசைக் கலை வளர்ப்போம்.



தமிழிசைக் காவலர்
ராஜா சர் முத்தையா செட்டியார்

திருமிகு மு.அ. சிதம்பரம்
மதிப்பியல் செயலர்

பண்சுமந்த பாடல்

தமிழவேள் பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன்

கடந்த முப்பது ஆண்டுகளாக மணிவாசகர் பதிப்பகம் 500 நல்ல நூல்களை வெளியிட்டு நாளும் வளர்ந்து வருகிறது. தமிழ் வழங்கும் இந்தியப் பல்கலைக் கழகங்களிலே 50க்கு மேற்பட்ட நூல்கள் பாடநூல்களாக ஏற்றுக்கொள்ளப் பெற்றுள்ளன. 35 நூல்கள் மாநில, மத்திய மற்றும் தமிழ்ப் பல்கலைக் கழகப் பரிசுகளைப் பெற்றுள்ளன.

மொழியியல், நாட்டுப்புறவியல், பண்பாட்டியல், மானிடவியல், தகவல் தொடர்பியல், நிதியியல், சுற்றுலாவியல் முதலிய துறைகளில முதன் முதலில் அதிகாரபூர்வமாகப் பெருநூல்களை வெளியிட்ட பெருமையுடையது, மணிவாசகர் பதிப்பகம். நாட்டுடைமையாக்கப்பட்ட பாவேந்தர் பாரதிதாசன் நூல்கள் அனைத்தையும் செம்பதிப்பாகக் கொண்டு வந்த சிறப்புடையது.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இயக்கத்தின் தலையூற்றுக்களாக இருபெரும் இயக்கங்கள் முகிழ்த்தன. தனித்தமிழ் இயக்கம் வீறார்ந்த மரபுகளுடன் வெற்றி குவித்தது. தமிழ் இயக்கத்தின் வெற்றி ஊரறிந்தது; உலகறிந்தது. தமிழ் இயக்க விளைவு எல்லாத் துறைகளிலும் தன்னுடைய நுண்ணிய ஆழ்ந்த கருத்துக்களைப் பதிவு செய்துள்ள வரலாற்றினை மணிவாசகர் பதிப்பகம் 'தனித் தமிழ் இயக்கம்' எனும் நூலில் ஆவணமாக்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து இப்பொழுது தமிழிசை இயக்கம் மலர்கிறது.

இந்த ஆண்டு தமிழிசை இயக்கத்தின் பொன்விழா ஆண்டு. தமிழிசை இயக்கத்தின் எழுச்சி அலைகள் என்னுள் எப்பொழுதும் ஒரு கிளர்ச்சியை எழுப்பிக் கொண்டிருக்கும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முப்பது ஆண்டுப் பணி, இந்த இயக்கத்தின் நலன்களைப் பதிவு செய்யத் துடித்தது. பல்துறை அறிஞர் இளங்குமரன் அவர்களைக் கொண்டு இந்த நூலினை உருவாக்கத் திட்டமிட்டோம்.

சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் ஆண்டறிக்கைகள் முழுதும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் தங்கள் முகங்களை ஒவ்வொரு துறையிலும் இழந்துவரும் இந்நாளில், இவ்வகை நூல்கள் இன்றியமையாதவை ஆகின்றன. தமிழிசை இயக்கம் என்பது நீண்ட நெடிய போராட்ட

வரலாறே! அண்ணாமலை அரசர் அவர்கள் தமிழிசை இயக்கத்திற்கு ஊற்றுக்கண்ணாய் விளங்கினார்கள். ஆர்.கே. சண்முகம் செட்டியார், ராஜாஜி, கல்கி போன்ற அறிஞர் பெருமக்களின் துணையுடன் இயக்கம் வேரூன்றியது. கடுமையான எதிர்ப்புகளுக்கிடையே விழுது விட்டுள்ளது. அறிவாற்றலும் செல்வாக்கும் செல்வமும் உள்ளஉறுதியும் வாய்ந்த குழுவின் தொடர்ந்த போராட்டத்தின் வெற்றிக் கனியே இந்த இயக்கம்.

'இசைக்கு மொழி தேவையில்லை' என்று கூக்குரல் மீண்டும் எழுகிறது. தொன்மைமிகு தமிழிசையின் மாற்று வடிவம் கர்நாடக இசை என்றும், தியாகராசர் கீர்த்தனைக்குத் தமிழ்ப் பண்களே ஊற்று என்பதும் ஆராய்ச்சிகளின் மூலம் – சொற்பொருள்களின் மூலம் நிறுவப்பட்டன.

இந்த ஆய்வு நூலில் தமிழிசையின் தோற்றம் வளர்ச்சி தொன்மை முதலியன பேசப்படவில்லை; தமிழிசை இயக்கத்தின் தோற்றமும் எழுச்சியும் பரவலும் நுண்ணாய்வு நெறியில் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. தமிழிசை இயக்கத்தின் பயனாகத் திருமுறைகள் மறுமலர்ச்சி பெற்றன. திரை இசைப் பாடல்கள் தீந்தமிழ் மரபில் வேர் கொண்டன.

முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தா பிள்ளை மூவரின் இசைப்பாக்கள் முதன்மை பெறுகின்றன. ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிர்த சாகரமும், விபுலானந்தரின் யாழ் நூலும் இவ்வியக்கத்திற்கு இரு கண்களாய் ஒளியூட்டுகின்றன. இசை வல்லுநர்கள் முனைவர் எஸ். இராமநாதன், பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப. சுந்தரேசனார், முனைவர் வி.பா.கா. சுந்தரனார், புரட்சிதாசன் போன்றோரின் உழைப்புகள் – பாடுகள், ஏட்டில் எழுதி முடியுமா? சுத்தானந்த பாரதியார், பெ. தூரன் இசைப் பாடல்கள் இன்று வானொலியிலும் தொலைக்காட்சியிலும் வாழ்வு பெற்று வருகின்றன.

பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் திரையிசையிலும் வாழ்வு பெற்றுள்ளன.

மூத்த குடியினரான தமிழினத்தின் தொன்மைமிகு தமிழிசையின் தடங்கள் அழியாதவாறு காக்கப்பட்டன. தமிழிசையின் மூலவேர்களின் மூலங்கள் கண்டறியப்பட்டன. ஒரு மாபெரும் இயக்கத்தின் எழுச்சி அலை அலையாக எழுந்து இன்று புதிய வடிவம் பெற்றுப் புத்துணர்ச்சியுடன் பொலிவுற்றுத் திகழ்கிறது. இந்த இயக்கத்திற்காக நிலம் திருத்தியோர், விதை நட்டோர், நீர் பாய்ச்சியோர், உரமிட்டவர்கள், களை எடுத்தவர்கள், கண்ணீர்

சிந்திக் காத்தவர்கள் அனைவரும் என்றும் நம் வணக்கத்துக் குரியவர்கள்.

இப்பேரியக்கத் தேரினைப் பெருமையுடன் இழுத்து வந்தோர் பலர். பெயரும் தெரியாத பெருமக்கள் எத்தனையோ பேர். அனைவரும் நம் நன்றிக்குரியவராகின்றனர்.

காலத்தின் சுவடு அழியாது காப்பது நம் கடமை என்று கருதி இப் பெருநூலை இயற்றும் திருப்பணியினை அறிஞர் இளங்குமர னாரிடம் ஒப்படைத்தோம். தமிழே மூச்சாக – பேச்சாகக் கொண்டு வாழும் அறிஞர் இந்நூலினை உருவாக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். பெரிய திட்டத்துடன் நீடு உழைத்தார்கள். ஐம்பதாண்டு வரலாற்றினையும் அணுஅணுவாக ஆராய்ந்தார்கள். இவ்வியக் கத்தின் பன்முக நலன்களைத் தெளிவாக உணர்ந்தார்கள். உணர்ந்த வண்ணம் உயர்ந்த நூலாக வடித்துள்ளார்கள்.

ஓர் இயக்கத்தின் வரலாறாகக் கொள்ளாமல், ஓர் இன எழுச்சி யின் வரலாற்றுக் காவியமாக இதனை உருவாக்கியுள்ளார்கள். இயக்கம் எழுந்த கதையினையும் வளர்ந்த கதையினையும் விடியல் கண்ட வரலாற்றையும் பட்டயமாக்கியுள்ளார்கள். அடிப்படைச் சான்றாதாரங்களைத் தொகுத்துக் கல்வெட்டாக்கியுள்ளார்கள். தமிழிசை இயக்கம் பற்றிய ஆதாரபூர்வமான – முழுமையான முதல்நூலாக இது திகழ்கிறது.

ஆசிரியர் இதற்கெனப் பார்த்த கட்டுரைகளும் படித்த நூல்களும், எழுதிய குறிப்புகளும் எண்ணில் அடங்கா. தவமிருந்து தனித்தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம் எனும் இருபெரும் நூல்களைத் தமிழ் வேள்விக்கு அளித்த தனிப் பெரும் பெருமைக்குரியவராகிறார். இயக்கத்தின் படிமுறை வளர்ச்சி நிலைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இயக்கத்திற்கு அகத்திலும் புறத்திலும் தோன்றிய எதிர்ப்புக் களுக்கும் ஏச்சுக்களுக்கும் பேச்சுக்களுக்கும் இயக்கப் பொறுப்பாளர் களின் தளரா முயற்சி முனைகளின் கூர்மையை ஆசிரியர் விளக்கி யுள்ள திறம் இயக்க வரலாறுகள் எழுதுவதற்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது.

'இசைக்கு மொழி வேண்டாம்' என்ற குரல் இந்நாளில் மீண்டும் ஒலிக்கிறது. தமிழிசை வெற்றி பெறவில்லை என்ற குரலும் கேட்கிறது. இந்த நிலையில் துறைதொறும் தமிழுக்குத் தொண்டு செய்யும் மணிவாசகர் பதிப்பகம் இதனை அறைகூவலாக ஏற்றுக் கொண்டு செவ்விய திட்டத்துடன் இந்நூலை உருவாக்கியுள்ளது.

இந்நூல் காலத்தின் கட்டாயமாகிறது. தமிழிசைச் சூழலில் வாழ்கிற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எனக்கு இந்த நல்லுணர்வு நாளும் முகிழ்க்கும். இப்பொழுது செய்யாவிட்டால், எப்பொழுது செய்வது? நாம் செய்யாவிட்டால் வேறு யார் செய்வர்? என்ற விழிப்புணர்வே இந்நூல் எழ மூலகாரணம். இந்த மாபெரும் இயக்கத்தின் வரலாறு நிகழ்வுகள் மறைக்கப்படலாகாது என்ற நோக்குடனேயே நூல் வருகிறது.

ஆன்ற அறிஞர்குழு இவ்வியக்கத்திற்கு வலிமை சேர்த்தாலும், அண்ணாமலை அரசர், தமிழிசைக் காவலர் முத்தையவேள், பெரியவர் எம்.ஏ. சிதம்பரம், இணைவேந்தர் எம்.ஏ.எம். இராமசாமி, டாக்டர் ஏ.சி. முத்தையா முதலிய அண்ணாமலை அரசர் கால்வழியினர் வழிவழியாக வளர் தமிழிசைக்குச் செய்துள்ள — செய்து வரும் தொண்டு செப்பேட்டுப் பெருமை வாய்ந்தது.

ஆண்டுதோறும் நடக்கும் தமிழிசை மாநாடுகளும் பண்ணாய் வும், வல்லுநர்களுக்குக் கொடுக்கப்படும் இசைப் பேரறிஞர் விருதுகளும், தமிழிசை இயக்கத்தின் வெற்றிச் சின்னங்களே! தமிழிசை இயக்கத்திற்கு என்றும் கட்டியம் கூறும், மதுரையில் எழுந்துள்ள மாபெரும் மன்றமாகிய முத்தையா மன்றமும் புகழுடன் விளங்கும் பொள்ளாச்சி தமிழிசைச் சங்கமும் இவ்வியக்கத்தின் புகழ்பாடும் பொன்மலர்களே!

இவ்வியக்கத்தின் பயனாகத் திருக்குறளுக்கே இசைவடிவம் அமைத்ததும், கம்பனின் செவிநுகர் கனிகளாகிய பாடல்களுக்கு இசைவடிவம் அமைத்ததும், பட்டினத்தார், தாயுமானவர் பாடல் களுக்குப் பண் வகுத்ததும் இவ்வியக்க உணர்வின் வீச்சே!

அருணகிரியாரின் திருப்புகழும், அருட்பிரகாச வள்ளலாரின் திருவருட்பாவும் இன்று வீதிதோறும் உலா வருவதும் இதன் விளைவே!

பண்சுமந்த பாடலின் உள்ளார்ந்த உயர்நுட்பங்களைத் தெள்ளத் தெளிவாகத் தமிழிசை இயக்கம் எடுத்துப் பறைசாற்றியது.

வள்ளல் பொள்ளாச்சி மகாலிங்கம் ஆண்டுதோறும் நடத்தும் தேவார மூவரிசை விழா தமிழிசை இயக்கத்தின் மற்றொரு ஆளுமை மிகுந்த விரிவாக்கமே! திருக்கழுக்குன்றத்தில் ஆண்டுதோறும் சேலம் ஜெயலட்சுமி அவர்கள் எடுக்கும் திருஞானசம்பந்தர் இசை வெள்ளமும் இந்த இசையியக்க ஆற்றின் பெருக்கே!

தமிழோடு இசைபாடும் நன்மரபும் நலமுடன் விளக்கம் பெற்றது. திருமுறையைத் தமிழ் நாடு தழுவிய இயக்கமாக ஞானசம்பந்தர் தம்

இசையால் எடுத்துச் சென்ற பெற்றிமையும் தமிழிசை இயக்கம் பேசிற்று. புதிய ராகங்களில் ஒளிந்து கொண்டிருக்கும் பழைய பண்களின் நரம்புகள் கண்டறியப்பட்டன. தடந்தெரியாமல் மறைந்து விடுமோ என்ற தமிழிசையின் ஆணிவேர்களும் சல்லி வேர்களும் அடையாளம் காட்டப்பட்டன.

இயக்கத்திற்குப் பின்புலமாக அமைந்த ஆற்றலாளர்கள், களத்தில் இறங்கிய நாவலர்கள்,• இசைப்பாடல்கள் இயற்றிய பாடலாசிரியர்கள், பாடிப் பெருமை சேர்த்த இசையரசு தண்டபாணி தேசிகர், ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராச பாகவதர், இசைமணி சீர்காழி கோவிந்தராசன், இசைச்சித்தர் சிதம்பரம் செயராமன், மதுரை சோமு, இசைக்குயில் கே.பி. சுந்தராம்பாள் போன்ற ஊரெல்லாம் – நாடெல்லாம் இவ்வியக்கம் பரந்து விரிந்து சிறக்கப் பாடுபட்ட பெருமக்கள் என்றும் நம் உள்ளத்தை விட்டு நீங்காத வர்கள்.

ஓங்கி உயர்ந்த தமிழியக்கக் கம்பத்தில் தமிழிசை இயக்கக் கொடி, வெற்றிக் கொடியாகப் பட்டொளி வீசிப் பறக்கிறது.

மார்கழித் திங்களில் திருப்பாவை – திருவெம்பாவை இசைநலம் பெற்று எங்கும் ஒலிப்பதும் இவ்வியக்கத்தின் விளைச்சலே! பாமரரின் நெஞ்சங்களில் ஆடிப்பெருக்கெனப் பெருகி வரும் திரைப்பாடல்களும் தமிழிசையின் புதிய அலைகளே!

வானொலியில் தமிழிசைப் பயிற்சிகள், நகரங்கள்தோறும் தமிழிசைச் சங்கங்கள் தோன்றுதல், நாட்டுப்புறப் பாடல்கள் இசைவடிவங்கள் புத்துயிர் பெறுதல், திருமுறைகளுக்கு ஒலி இழை – இசை நாடாக்கள் மிகுதியான மக்களால் விரும்பிக் கேட்கப்படுதல், திருமுறை இசை குடமுழுக்குகளில் கட்டாயமாக நடைபெறுவது, மணவிழா, சிலநேரங்களில் மணி விழாக்களில் பெரும்பாலும் திருமுறைகள் இடம்பெறுவது போன்றன தமிழிசை இயக்கத் தாக்கமே!

திருக்கோயில்களில் தமிழ்வழி அருச்சனை செய்து வருவோர் களும் நாள்தோறும் திருமுறைகளை ஓதிவரும் பெருமக்களும் தமிழிசை காக்கும் வன்தொண்டர்களும், தமிழியக்க நெறியாளர் களும் நம் வழிபாட்டுக்கு உரியவர்கள்.

இந்நூலுக்கு அழகிய முகப்போவியம் வரைந்த ஓவியர் மணியம் செல்வன் அவர்களுக்கு நன்றி!

தமிழில் பாடுவோம்; தமிழ்மை பெறுவோம்.

இனிய தமிழில் பாடி இசைக் கலை வளர்ப்போம்.

உள்ளுறை

	பக்கம்
1. ஒன்றுளே மூன்று	1
2. பண்சுமந்த பாடல்கள்	6
3. ததும்பி வழிந்த தமிழிசை	12
4. தமிழிசை வெள்ளம்	18
5. தமிழிசைக் கலைவளம்	26
6. காரிருள் மூட்டம்	33
7. விடிவெள்ளி	43
8. எழு ஞாயிறு	66
9. ஒளி பரவல்	154
10. விரிவாக்கம்	180
பிற்சேர்க்கை	197

1. ஒன்றுளே மூன்று

ஒன்றுளே இரண்டு (Two in one), ஒன்றுளே மூன்று (Three in one) என்பவை இக்கால அறிவியல் கண்டு பிடிப்புகள். ஒன்றுளே மூன்று என்பது நம் முந்தையோர் கண்ட மொழியியல் நிலைபேறு.

தமிழ் என்பது மொழிப்பெயர். அதன் செம்மை வரம்பு கொண்டு செந்தமிழ் எனப்பட்டது. அதன் மும்மை இயக்கம் கொண்டு முத்தமிழ் எனப்பட்டது.

'தமிழ்' என ஒட்டுமொத்த அமைப்பாகவும் வழங்கப்பட்டது. **'தமிழ்கள்'** எனப் பகுப்பாய்வுக் கூறுகளாகவும் வழங்கப்பட்டது.

முன்னதற்குச் சான்று தேட வேண்டியதில்லை. உலகளாவிய வழக்கு அது. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" என்னும் தொல்காப்பியப் பாயிரம் ஒன்று சாலும்.

பின்னதற்கு,

"இமிழ்கடல் வரைப்பில் தமிழக மறியத்

தமிழ்முழு தறிந்த தன்மைய னாகி"

என்னும் சிலப்பதிகார அடிகளுக்கு, "தமிழோரால் எல்லை கூறப்படா நின்ற தமிழ்த் தேசத்தார் அறிய மூன்று தமிழும் போம் என்னும் தன்மையுடையனாகி" யென்று அரும்பத உரைகாரரும் அடியார்க்கு நல்லாரும் உரைக்கும் உரைகளாலும்,

"தமிழென்றது, வடவெழுத் தொரீஇ வந்த எழுத்தானே உறழ்ந்து கட்டப்பட்ட வாக்கியக் கூறுகளும் இய லிசை நாடக மென்று சொல்லப்பட்ட **மூவகைத் தமிழ்களும்**" என்று அவர்கள் எழுதும் விளக்கத்தானும் (சிலப். 3:45) அறியலாம்.

முத்தமிழ் எனத் தனித்தனிப் பாகுபாடு உடையதாயினும் அஃது ஒத்தியங்கும் ஒருமையது என்பதைப், "பாணி என்றது பாட்டு" **அது முத்தமிழுக்கும் பொது.** அஃது இயற்றமிழில் வருங்கால்...., இனி இசைத்தமிழில் வருங்கால் ... இனி, நாடகத் தமிழில் வருங்கால் ... என விரித்துக் கூறும் அடியார்க்கு நல்லார் உரை கண்டு தெளிக. (6:35)

த.உ.

பழந்தமிழ் நூல்கள் சிலவற்றை இறையனார் களவியலுரை சுட்டுகின்றது. சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிடும் அது இத்தொடக்கத்தன எனப்பல நூல்களை உட்கொண்டு கூறுகின்றது.

"தலைச்சங்கம் இருந்தவர்களால் பாடப்பட்டன, எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியா விரையும் என இத்தொடக்கத்தன.

"இடைச்சங்கம் இருந்தவர்களால் பாடப்பட்டன, கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை அகவலும் என இத் தொடக்கத்தன.

"கடைச்சங்கம் இருந்தவர்களால் பாடப்பட்டன, நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும் பேரிசையும் என்று இத்தொடக்கத்தன."

என்பது அது. இவற்றுள் பல **இசைத் தமிழ்நூல்கள்** என்பது தம்பெயரானே வெளிப்படும்.

இசைத் தமிழ்நூல்களைத் தனியே அறியுமாறு,

"இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலா உள்ள தொன்னூல் களும் இறந்தன. நாடகத் தமிழ் நூலாகிய பரதம் அகத்தியம் முதலாக வுள்ள தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒரு சார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தன போலும். இறக்கவே வரும், பெருங்கல முதலிய பிறவுமாம்" என அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரம் நன்கு விளக்குகிறது.

சிலப்பதிகாரம் "முழுத்தும் பழுதற்ற முத்தமிழ்" எனப்பட்டதும். அதனை இயற்றிய இளங்கோவடிகளார், '*முத்தமிழ்க் கல்வியும் வித்தகக் கவியும்*' உடையார் என்பதும் அவ்வுரைப் பாயிரத்தாலே விளங்கும்.

நூன்மரபு சொல்லும் ஆசிரியர் **தொல்காப்பியர்** அதன் நிறைவில்,

"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்"

என்கிறார்.

"இயற்றமிழில் உயிர் எழுத்தும் ஒற்றெழுத்தும் ஒலிக்கும் ஒலிநிலைவேறு; அவ்வெழுத்துகள், இசைத்தமிழில் ஒலிக்கும் ஒலிநிலைவேறு; அதனை அவ்விசை நூலில் கண்டு கொள்க" என்கிறார்.

அவர் காலத்திற்கு முன்னரே இசைத்தமிழ் நூல்கள் தனித்து விளங்கியமையாலேதான், "இசையொடு சிவணிய நரம்பின் மறைய" என்றார். 'மறை' என்பது நூல் என்னும் பொருளதாதல் அறிக.

தமிழிசை பாடுபவரும் தெலுங்கிசை பாடுபவரும் கருநாடக வடமொழி இசைபாடுபவரும் 'ச ரி க ம ப த நி' என்னும் எழுத்து களையே இசைத்து முழக்குதலைக் கேட்பவர் வடமொழியில் இருந்தே தமிழிசை உண்டாயிற்று என்ற முடிவுக்கு வந்துவிடுவர். அந்த முடிவுக்கு வருதல் வேண்டும் என்பதே அவர்கள் ஆர்வமாகவும் திட்டமிட்ட ஒட்டுமொத்த வேலையாகவும் இருந்துள்ளமை தெளி வாகும். இல்லையானால், 'பழமலை' விருத்தாசலமாகவும், 'மறைக் காடு' வேதாரணியமாகவும் ஆக்கப்பட்டிராவே! பழமலை, மறைக் காடு என்பவற்றின் தடத்தை மறைத்துவிடத்தானே விருத்தாசலமும் வேதாரணியமும் எழுந்தன. இதனை எண்ணிப் பார்ப்பவர் தமிழிசை அயலிசையான வரலாற்றைக் கண்டு கொள்வர்.

"குரலே துத்தம் கைக்கிளை உழையே
இளியே விளரி தாரம் என்றிவை
எழுவகை இசைக்கும் எய்தும் பெயரே"

என்கிறது முதல் நிகண்டாகிய திவாகரம்.

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் இவ்வேழிசைக்கும் உரிய எழுத்துக்கள் இவை என்பதையும், இவை பிறக்கும் இடம் இவை என்பதையும், இவற்றின் மாத்திரை இவ்விவ்வளவு என்பதையும் அத்திவாகரம் முறையே கூறுகின்றது.

"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔவெனும்
இவ்வே ழெழுத்தும் ஏழிசைக் குரிய"

"மிடறும் தாலும் அண்ணமும் சிரமும்

நெற்றியும் நெஞ்சும் நாசியும் முறையே
குரலாதி யேழிசைக் குப்பிறப் பிடமே"
"இளிதுத்தம் குரல் ஏற்கும் நந்நான்கே;
கிளையும் விளரியும் மும்மூன்று, உழையும்
தாரமும் இவ்விரண் டேழிசை மாத்திரை"

என்பன அவை.

'தமிழிசை வேற்றிசையாக மாற்றப்பட்டிருக்குமா? என்று மயங்கியவரை ஏமாற்றிய காலம் எப்பொழுதோ போய் ஒழிந்தது! எண்ணிப் பார்ப்பவர் எவருக்கும் வெளியிடை மலையாக விளங்கு வதே இது.

'மிலச்சர் ஆரியர்'

என்பது திவாகரம். இதனை எப்படி மாற்றிப் பதிப்பித்தனர்?

'அநாரியர் மிலேச்சர்'

ஓர் 'அ' ஒட்டால், ஆரியர் அல்லார் அனைவரும் மிலேச்சர் ஆக்கப்பட்டு விடவில்லையா? இதனை முதற்கண் எடுத்துக் காட்டியவர் — ஏட்டொடும் ஒப்பிட்டுக் கண்டு உண்மை உரைத்தவர் — பேராசிரியர் ச. வையாபுரியார்.

ஏழிசை எழுத்தின் பெயர்க்கு இரண்டு நூற்பாக்கள் உள. அவை அச்சில் அமைந்து கிடக்கும் முறை எவ்வாறு?

"சவ்வும் ரிவ்வும் கவ்வும் மவ்வும்
பவ்வும் தவ்வும் நிவ்வும் என்றிவை
ஏழும் அவற்றின் எழுத்தே யாகும்."

"ஆஈ ஊஏ ஐஓ ஔ என்னும்
இவ்வே ழெழுத்தும் ஏழிசைக் குரிய"

என்று அமைந்துள.

இந்நூற்பாக்கள் இரண்டையும் தனித்தனியே சீட்டில் எழுதி, மொழி இயல் அறிந்த ஒருவரிடம் தந்து, "இதில் எது முன்னதாக இருக்க வேண்டும்? எது பின்னதாக இருக்க வேண்டும்?" எனக் கேட்டால், பின்னதே முன்னதாகவும், முன்னதே பின்னதாகவும் இருக்க வேண்டும் எனத் தெளிவாக்கிவிடுவார். ஏனெனில் மொழியியல் அதனை அவர்க்குத் தெளிவாக அவ்வாறு காட்டி விடுகின்றது.

"இவ்வே ழெழுத்தும் ஏழிசைக் குரிய"

எனத் தெளிவாக்கிவிட்டுப், பின்னே வந்து ஒட்டிய எழுத்துகளை,

"என்றிவை, ஏழும் அவற்றின் எழுத்தே யாகும்."

என்றமை விளக்கமாக்கிவிடும். பின்னுக்குத் தள்ளலும், முன்னுக்குக் கொள்ளலும் எவ்வளவு எளிமையாகச் செய்யப்பட்டுள என்பதற்கே இக்குறிப்பாகும்.

மூத்து வளர்ந்து செழித்திருந்த முழுத்தமிழிசைக்குப் புத்துயி ரூட்டி வளர்க்க வேண்டிய நிலைமையும் இவ்விருபதாம் நூற்றாண்டிற்கு நேரிட்டமையை எண்ணிய அளவில் தோன்றும் இரங்கத்தக்க நிலை ஈதாம்!

இது, முத்தமிழ் என்னும் பெயரால், ஒன்றுளே மூன்று என்னும் அமைப்பருமை அறியப்பெற்றதாம்.

2. பண்சுமந்த பாடல்கள்

பழந்தமிழ் இலக்கண நூல்களுள் முழுமையாகக் கிடைத்துள்ள நூல் தொல்காப்பியம். அத்தொல்காப்பியத்திற்கு முன்னை இலக்கண நூல்கள் எண்ணற்று இருந்தன. இலக்கண நூல்கள் அவ்வாறு பல்கி இருந்தன எனின், இலக்கிய நூல்கள் அவற்றினும் மிகுதியாக இருந்திருத்தல் வேண்டும். எனெனில், "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்" என்பது இலக்கண நெறிமுறை ஆகலின்.

தொல்காப்பியத்தில் **"நரம்பின்மறை"** எனப்படும் இசைநூல் குறிக்கப்படுதலை அறிந்துள்ளோம். அவர் கூறும் அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபா என்பனவெல்லாம் **இயற்பா எனினும்,** இசைப்பாக்களேயாம்.

செய்யுளியல் முதல் நூற்பாவிலேயே – செய்யுள் உறுப்புகள் இவை எனக் கூறும் நூற்பாவிலேயே–

"நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென"

வகுத்து உரைத்தமையைக் கூறுகிறார் (செய். 1).

பாவின் அடிப்படை உறுப்பான அசையைக் கூறுமிடத்தில்,

"அசையும் சீரும் இசையொடு சேர்த்தி"

வகுத்து உணர்த்துதலை உரைக்கிறார் (செய். 10).

பா எனப்படுவதும் இசை வழிப்பட்டதே என்பதை, "பாவென்பது, சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்தற்கு ஏதுவாகிய **பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை"** எனப் **பேராசிரியர்** கூறும் விளக்கத்தால் அறிந்து கொள்ளலாம்.

இயற்றமிழ்ப்பா இசைப்பாவும் ஆமோ எனின், **"பல இயற்பாக் களுடனே நிறத்தை இசைத்தலால் இசை என்று** பெயராம்" எனவரும் அடியார்க்கு நல்லாருரை இதனைத் தெளிவிக்கும் (சிலப். அரங். 26). **நிறமாவது இசை.**

செய்யுள் உறுப்புகளுள் **வண்ணம், வனப்பு** என அமைந் திருப்பவை, இயற்றமிழ் வழிப்பட்ட இசைத்தமிழ் என்பதை நிறுவிக் காட்டுவன. ஆதலால், தொல்காப்பியர் கூறிய செய்யுளியல் இயற்பா இலக்கணமாவதுடன் இசைப்பா **இலக்கணத்தின் ஒருபகுதியையும் தன்னகத்துக் கொண்டது** என்பது வெளிப்படும்.

தொல்காப்பியர் **வண்ணம்** இருபது வகையென எண்ணுவார் (செய். 212).

"வண்ணம் என்பது சந்த வேறுபாடு" என்பார் பேராசிரியர். "நூறும் பலவுமாகி வேறுபடினும் அவை ஈண்டடங்கும்" என இருபது வண்ணங்களின் சிறப்பையும் கூறுவார் அப்பேராசிரியர்.

பாஅ வண்ணம், தாஅ வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், அளபெடை வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம், அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம், எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம், தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என அவ்வண்ணங்கள் இருபதனையும் கூறி அவற்றின் இலக்கண ஒழுங்கையும் தனித்தனியே குறிப்பிடு கிறார் தொல்காப்பியனார்.

இவ்வண்ணங்களின் பெயர்களையும் இவற்றின் இலக்கணக் குறிகளின் அமைதியையும் மேலோட்டமாகப் பார்க்கும் எவரும் **தமிழ்நெடுங்கணக்கின் அருமையையும், இயற்கையொடு இயைந்து விளங்கும் இசைநயத்தையும் இனிதின் உணர்வர்.**

குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம், ஆய்தம், அளபெடை என்னும் எழுத்துவகை அமைதியே - இசையாகி இன்பஞ்சேர்க்கும் அருமையே - இவ்விலக்கண அருமையாக **அமைதலைக் காண்பாராக.**

இனி, ஒழுகு வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம், அகைப்பு வண்ணம் என்பனவெல்லாம் இசைவடிவாகவே இருத்தலையும் கண்டு கொள்க.

இழுமென் மொழியால் விழுமியது நுவலும், 'தோல்' என்னும் **வனப்பும்,** பெயரும் இசைவடிவாதல் அறிக.

'தேவர்ப் பராஅய' (தெய்வத்தை வாழ்த்திய) **தேவபாணி** என்னும் பாவகை, தொல்காப்பியத்தில் குறிக்கப்படும். அது உறுப்பு அளவால் **பெருந்தேவபாணி, சிறுதேவபாணி** எனப்பகுத்துக் கொள்ளவும் படும். **இத்தேவபாணி** இசைப்பா என்பது வெளிப்படை.

இனி, அகப்பொருள் என்பது முதல், கரு, உரி என்னும் முப்பொருள்களைத் தன்னகத்துக் கொண்டது. அவற்றுள் இடைப்பட்டதாம் கருப் பொருள்களைக்கூறும் தொல்காப்பியர்,

'தெய்வம் உணாவே மாமரம் புள்**பறை**
செய்தி **யாழின்** பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"

என்கிறார்.

முதற் பொருளாகிய இடம், காலம் என்பவற்றின் வழியே கருக் கொண்ட – தோன்றிய – தோற்றுவிக்கப்பட்ட பொருள்களே கருப்பொருள்கள் என்பனவாம். அவற்றில் பறை என்னும் தோற்கருவியையும், யாழ் என்னும் நரம்புக் கருவியையும் கூறும் முகத்தால் ஐந்நிலத்து இசைப் பேற்றையும் கூறுதல் அறிந்து போற்றத் தக்கதாம். **தெய்வக் கொள்கை, உணவு, தொழில்** என்பன போலவே **இசையும் தமிழர்தம் வாழ்வியற் பகுதியாக இருந்தமை அறிந்து மகிழும் செய்தியாம்.**

குறிஞ்சி முதலிய ஐவகை நிலத்தவரும் தம் நிலவகையால் தம் உணர்வையும் தம் அறிவுத் திறத்தையும் வெளிப்படுத்தும் முறையில் **குறிஞ்சிப்பண், பாலைப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தற்பண்** என்பனவற்றைக் கண்டனர். இவற்றையே ஆதிப்பண் எனவும் கொண்டனர்.

பண்களைக் கண்டது போலவே அவ்வந் நிலத்திற்குத் தக யாழும் பறையும் கண்டனர். அவ்வகையில் குறிஞ்சியர் **குறிஞ்சியாழ் தொண்டகப்பறை** என்பவற்றையும்; பாலையர், **பாலையாழ் நிரைகோட்பறை** என்பவற்றையும், முல்லையர், **முல்லையாழ் ஏறுகோட்பறை** என்பவற்றையும், மருதத்தர், மருதயாழ் மணமுழவு என்பவற்றையும்; நெய்தலர், **விளரியாழ் மீன்கோட்பறை** என்பவற்றையும் கண்டனர்.

பண்ணும் பறையும் கண்ட அளவொடும் நில்லாராய், இன்னபண் இன்ன பொழுதில் பாடத்தக்கது எனவும் வரம்பு கொண்டு வழக்குப்படுத்தினர்.

குறிஞ்சிப்பண் இசைக்கும் பொழுது, யாமம் என்பதும், பாலைப்பண் இசைக்கும் பொழுது, நண்பகல் என்பதும், முல்லைச் சாதாரிப்பண் இசைக்கும் பொழுது மாலை என்பதும், மருதப்பண் இசைக்கும் பொழுது, விடியல் என்பதும், நெய்தல் விளரி இசைக்கும் பொழுது, எற்பாடு என்பதும் அவர்கள் வகுத்தனவாம்.

மாலையில் பாடப்படவேண்டும் பண் செவ்வழி; காலையில் பாடப்பட வேண்டும் பண் மருதம்; அவற்றை மறந்து, மாலையில் பாடும் பண்ணைக் காலையிலும், காலையில் பாடும் பண்ணை மாலையிலும் பாணர் பாடுகின்றனராம். இது, வள்ளல் நள்ளி வழங்கிய கொடைப் பெருக்கின் மயக்கத்தால் நேர்ந்து விட்டதாம். இதனைக் குறிப்பிடும் வன்பரணர்,

"நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கில் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தனர் அதுநீ
புரவுக்கடன் பூண்ட வண்மை யானே"

என்பது (புறம். 149).

காலமும் பொழுதும் கணித்து இசைக்கப்பட்ட இவ்விசையை, தன் தலைவன் மேதக்க தகைமைக்கு உவமையாகக் காட்டும் அழகும் ஒருபாட்டில் இடம் பெறுகிறது. அது,

"தொல்இசை நிறீஇய உரைசால் பாண்மகள்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே"

என்பது (அகம். 352).

இனித் தமிழ்ப் பாவகையுள்,

கலிப்பாவும் பரிபாவும் இசைப்பாக்களே. கலிப்பாவின் உறுப்புகளாகிய தரவு, தாழிசை, சுரிதகம், வண்ணகம், அம்போதரங்கம் என்பன இசைப்பா என்பதை வெளிப்பட விளக்கும்.

எத்துணையோ பரிபாடல் எனத்தலைச்சங்க நூலாகச் சுட்டப் படும் பரிபாடல் நமக்குக் கிட்டவில்லை. கடைச் சங்கநூல்களுள் ஒன்றாகிய பரிபாடல் கிடைத்துள்ளது. எனினும் எழுபது பரிபாடல் என்பவற்றுள் கிடைத்தவை இருபத்து இரண்டே. இக் கிடைத்த பகுதியாலும் பரிபா இசை வகுத்துப் பண்ணொடு பாடப்பட்ட பா என்பது வெளிப்படுகின்றது.

பரிதல் என்பது ஓடுதல், விரைந்தோடுதல் என்னும் பொரு ளுடையது. குதிரையோட்டம், நீரோட்டம், காற்றோட்டம் என்பவை இடம் காலம் சூழல் ஆகியவற்றுக்குத் தக்கவாறு நெட்டோட்டம், சுழிப்போட்டம், வளைவோட்டம், நிமிர்வோட்டம், தாழ்வோட்டம், அசைநிலை முதலியவற்றைக் கொள்ளல் போல அடிவகையாலும் இசைவகையாலும் செல்லும் பா, பரிபா என்பது தெளிவாகின்றது. அருவி 'கல்'லெனக் கரைந்து வீழும் வீழ்ச்சியும் 'ஒல்' லெனத் தவழும் தவழ்ச்சியும், மெல்லெனச் செல்லும் செலவும், அகன்று விரியும் அகற்சியும், குறுகி ஒடுங்கி விரையும் விரைச்சியும் அறிவார் பரிபாடல் நடையைப் புரிவார்.

கிடைத்த பரிபாடல்களுள் இரண்டாவது முதலிய பதினொரு பாடல்களின பண் **பாலையாழ்** என்றும், பதின்மூன்றாவது முதல் ஐந்து பாடல்களின் பண் **நோதிறம்** என்றும், பதினெட்டாம் பாடல் முதல் நான்கு பாடல்களின் பண் **காந்தாரம்** என்றும் அறிய வருகின்றன. இவற்றால் **பண்முறையில் தொகுக்கப்பட்ட இசைநூல்** இஃதென்பது தெளிவாகும்.

இப்பரிபாடல்களுக்கு இசை வகுத்தோர் இவர் என்னும் குறிப்பும் உள்ளது. அவர்கள் கண்ணகனார், கண்ணாகனார், கேசவனார், நல்லச்சுதனார், நன்னாகனார், நாகனார், பித்தாமத்தர், பெட்ட னாகனார், மருத்துவன் நல்லச்சுதனார் என்பார். நந்நாகனார், நன்னாகனார் என்றும் இரு பெயர்கள் (2, 12) நன்னாகனார் என்பதே ஆகலாம்.

கேசவனார் தாம் பாடிய பாடலுக்குத் தாமே இசையும் வகுத்துள்ளார் (14).

நல்லச்சுதனார் தாம் பாடல் பாடியதுடன் நல்லழுசியார் குன்றம் பூதனார் பாடல்களுக்கு இசையும் வகுத்துள்ளார் (16 – 18). நல்லச்சுதனார் பாட்டுக்கோ, கண்ணகனார் இசை வகுத்துள்ளார்.

இவை அக்கால இசை வளத்தை யன்றி, இசை யுளத்தையும் காட்டும் இனிய வரலாறாம்.

சங்கநூல்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்து அகவல் நடையது. அகவல் என்பது இசைப்பாவாதல், வியாழமாலை அகவல் என்னும் இசைநூல் பெயரால் விளங்கும்.

பதிற்றுப்பத்தில் முதற்பத்தும் இறுதிப்பத்தும் நீங்கிய எட்டுப் பத்துகள் கிடைத்துள.

ஒவ்வொரு பாட்டின் நிறைவிலும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்னும் நான்கு குறிப்புகள் இடம் பெற்றுள. முதற் குறிப்பாகிய துறை, இயன்மொழி வாழ்த்து, உழிஞையரவம், ஒள்வாளமலை, களவழி, காட்சி வாழ்த்து, காவன் முல்லை, குரவை நிலை, செந்துறைப் பாடாண்பாட்டு, தும்பையரவம், நாடுவாழ்த்து, பரிசிற்றுறைப் பாடாண்பாட்டு, பாணாற்றுப் படை, பெருஞ்சோற்று நிலை, முல்லை, வஞ்சித் துறைப் பாடாண்பாட்டு, வாகை, வாகைத் துறைப் பாடாண்பாட்டு, விறலியாற்றுப்படை என்பனவாக உள்ளன. இவை கருவியும் கண்டமும் கொண்டு நேருக்கு நேர் நின்று இசைத்த இசைப்பாக்கள் என்பதை உணர்த்துகின்றன.

மேலும், ஒழுகு வண்ணமும், ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும் என்னும் வண்ணஅமைதியும், செந்தூக்கு, செந்தூக்கும் வஞ்சித்தூக்கும் என்னும் தூக்கு அமைதியும் இப்பதிற்றுப் பத்து இசைப்பாவாக இசைக்கப்பட்டது என்பதைத் தெளிவிக்கும்.

"ஒவ்வொரு செய்யுளின் பின்னும் அமைந்துள்ள துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பன உரையில்லாத மூலப் பிரதிகளி லெல்லாம் இருத்தலின், அவை உரையாசிரியரால் எழுதப்பட்டன அல்ல என்பதும், நூலாசிரியர்களாலோ தொகுத்தாராலோ எழுதப்பட்டன என்பதும் தெரிகின்றன" என்று பதிற்றுப்பத்துப் பதிப்புரை சுட்டுவதால் பண்வகுத்த பழமை நன்கு புலப்படும்.

இவை தமிழ், "பண்சுமந்த பாடல்க"ளைக் கொண்டது என்பதை எண்ணிறந்த சான்றுகளால் காட்டுவனவாம்.

3. ததும்பி வழிந்த தமிழிசை

அகம் புறம் ஆகிய பொருள்களைப் பற்றியவை சங்க இலக்கியங்களாகிய பாட்டு தொகை நூல்கள். அவை இசையிலக் கணம் கூற எழுந்த நூல்கள் அல்ல. ஆனால், அவற்றில் பொதிந்து கிடக்கும் இசைச் செய்திகள், இவ்வளவு அவ்வளவா? இசை வெள்ளம் பெருக்கெடுத்த காலநிலை ஒன்று இல்லாக்கால், புலவர்கள் தாம் பாடு பொருளுக்கு ஊடு பொருளாக இத்துணை இசைக் கருவூலங்களை வைத்திரார். தமிழிசை ததும்பி வழிந்தமையைக் காட்ட அச்சங்க இலககியங்களே போதிய சான்றுகளாம்.

'இம்' என்பதோர் ஒலிக்குறிப்பு. அக் குறிப்பு இசைக்கும், இசைநயம் தோய இரங்கலுக்கும் பயன்படுத்தப்படும். இமிர், இமிழ், இமிழிசை எனவும் ஆளப்படும்.

இம்மென் கடும்பு பத்துப் பாட்டில் இறுதியான மலைபடு கடாத்தில்,

"இம்மென் கடும்போ டினியிர் ஆகுவிர்"

என்று வரும். 'நும்முடைய இம்மென்னும் ஓசையையுடைய சுற்றத் தோடே மனமகிழ்வீர்" என்னும் உரையும், "சுற்றத்தார் இசைப் புலவ ராதலால் இம்மென் கடும் பென்றார்" என்னும் குறிப்புரையும் கருதத் தக்கன.

சங்கப் புலவருள் ஒருவர் பெயர் இம்மென் கீரனார் என்பது. கீரர் பிறருள் இவரை வேறுபடுத்திக் காட்ட 'இம்மென்' என்னும் அடைமொழி நடையுறப் பெற்றதாம். இப்புலவர் பெருமகனார் தம் பாடலில் 'நும்மோன் செய்த கொடுமைக்கு இம்மென்று அலமரல்' என்று நயமாய் உரைத்தது கொண்டு வழங்கப்பெற்ற பெயராம். (அகம். 398). இசைப்பால் இசையுற்ற புலவருள், இவர் ஒருவர்.

நற்றிணை அறுபத்தாறாம் பாடலைப் பாடியவர் இனிசந்த நாகனார். நாகனார் என்னும் பெயரினர் பலர் இசைத்திறம் வல்லராகத் திகழ்ந்தமை பரிபாடலால் விளக்கமாம். இப்புலவர் பெயரிலோ "இனிசந்த" என்னும் இசை நல அடையே இடம்

பெற்றமை இவர்தம் இசைப்புலமைச் சான்றாம். இவரைச் சுட்டும் உரையசிரியர் பின்னர்த் தூரார், 'இவர் இனிய குரலொடு பாடவல்ல ராதல் பற்றி இவ்வடை மொழி கொடுக்கப்பட்டார் போலும் என்கிறார்.

'பண்' என்பது பண்ணப்படுவது; இசைகூட்டப்படுவது.

"பண் என்னாம் பாடற்கு இயைபின்றேல்" என்னும் குறள் இதன் பொருளைத் தெளிவிக்கும். புகழாளனாகிய ஒரு வள்ளலின் பெயர் **பண்ணன்** என்பது. இசைவல்ல சங்கப்புலவர் ஒருவர் பெயர் **நப்பண்ணனார்.** முன்னவன் பாடுபெறு புகழாளன்; பின்னவர் பாடுபுகழாளர். முன்னவன் பெருமை சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனால் பெரிதும் போற்றப்படும். பின்னவர் பெருமை பரிபாடலில் விளங்கும்.

பல்வகை இசைக் கருவிகளுக்கும் அமைந்த பொதுமைப் பெயர் **'பல்லியம்'** என்பது. பல இயம் – பல்லியம். **நெடும் பல்லியத்தனார்** என்னும் ஆண்பாற் புலவர் ஒருவரும் **நெடும் பல்லியத்தை** என்னும் பெண்பாற் புலவர் ஒருவரும் சங்கப் புலவர் வரிசையுள் இடம் பெறுகின்றனர். முன்னவர் புறம் 64 ஆம் பாடலைப் பாடியவர், குறுந்தொகை 203 ஆம் பாடலும் இவர் பாடியதே. பின்னவர் குறுந்தொகை 178 ஆம் பாடலைப் பாடியவர்.

முன்னவர்,

"நல்யாழ் ஆகுளி பதலையொடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி"

என விறலியாற்றுப்படை பாடுகின்றார். **யாழ், ஆகுளி, பதலை** எனப் பல்வகை இசைக்கருவிகள் இடம் பெறல் காண்க (புறம். 64).

பின்னவரை முன்னவரின் உடன் பிறந்தாரோ என ஊகிக்கப்படுகிறார் என்பார், பெரும் பேராசிரியர் **உ.வே. சாமிநாதர்.**

சங்கப்புலவர் வரிசையுள் இடம் பெறுவாருள் ஒருவர் ஆரிய வரசன் யாழ்ப் பிரமதத்தனார் என்பார். இவர் பாடியது குறுந்தொகை செய். 184. இவர் பெயரில் உள்ள **'யாழ்'** இவர் தமிழிசைப் புலமையைப் புலப்படுத்துவதாம். ஆரிய அரசன் முத்தமிழ் அறிய விழைந்ததும், அம்புலமை பெற்றதும், பத்துப்பாட்டில் எட்டாவதாம் குறிஞ்சிப் பாட்டின் உரைநிறைவில் "ஆரிய வரசன் பிரகத்தனைத் **தமிழ் அறிவித்தற்குக்** கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டிறகு மதுரை

ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று" என்பதால் புலப்படும்.

இளம்பாலர்க்குக் கற்பிக்கும் கடமை ஏற்ற ஆசிரியப் பெருமக்கள் இயல் இசை கூத்து ஆகிய முத்தமிழும் வல்லராக இருத்த இன்றியமையாதது என்பார் போல் மதுரை இளம்பாலாசிரியர் சேந்தங் கூத்தனார் என்னும் சங்கப் புலவர் பெயர் அமைந்துள்ளது.

இவர் மதுரையினர் என்பதும், இவர் இளம் பாலர்க்கு ஆசிரிய ராக இருந்தவர் என்பதும், இவர் தந்தையார் பெயர் சேந்தனார் என்பதும், இவர் பெயர் கூத்தனார் என்பதும் இவர் பெயரறிந்த அளவானே அறியக் கிடக்கும் வரலாற்றுக் குறிப்புகள் ஆகும். இவர் பாடிய பாடல்கள் மூன்று கிடைத்துள. அவை அகம். 102, 348; நற்றிணை 273.

மலையடிவாரத் தினைப்புனம்

அதிலோர் பரண்.

அப்பரணில் தன்னை மறந்த குடியில், கானவன் படுத்திருக் கிறான். கரிய நெடிய கூந்தலை மெல்லென விரலால் கோதிக் கொண்டு நிற்கிறாள் கானவன் துணையான கொடிச்சி.

அவ்வேளையிலே தினைக் கொல்லையுள் புகுந்ததொரு களிறு.

நிலைமறந்து கிடக்கும் அவனை எழுப்புவதா?

நிலையழிக்க வரும் களிற்றின் போக்கைத் தடுப்பதா?

அல்லல் வேண்டா! அழிவும் வேண்டா!

அவனை எழுப்பவும் வேண்டா! அழிக்கவரும் களிற்றைத் தாக்கி அல்லல் ஊட்டவும் வேண்டா!

'இசைப்பேன் இசை' யெனக் குறிஞ்சிப்பண் பாடினாள். மூடாக் கண்ணை மூடி உறங்கிப் போனது களிறு!

நிலையில் பெயர வில்லை யானை!

தினையின் கதிருக்கு அழிவும் இல்லை!

தமிழிசையாலே களிற்றை உறங்குவித்த கலைத்திறம் இது!

இதனை,

"உளைமான் துப்பின் ஓங்குதினைப் பெரும்புனத்துக்
கழுதிற் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென.
உரைத்த சாந்தின் ஊரல் இருங்கதுப்பு
ஐதுவரல் அசைவளி யாற்றக் கைபெயரா

ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும்"

என்கிறது அப்பாடல்.

இசையால் களிற்றையும் வயப்படுத்தவல்ல இளம்பாலாசிரியன் உளவியல் தேர்ச்சி, இளையோர் கல்விக்கு எத்தகு இன்றியமை யாதது. தமிழிசை வளர்ந்த – வளர்க்கப்பட்ட – குழந்தைப் பூங்காவை உணர்த்துவது இவ்வகைப் பாடலாம் (அகம். 102). இவர் பாடிய பிறபாடல்களும் குறிஞ்சித்திணைப் பாடல்களே! குறிஞ்சியே பாடிய இவர் குறிஞ்சிபாடும் கொடிச்சியைப் படைத்த அருமை எண்ணத் தக்கதாம்.

இயற்புலவர்களே இசைவல்லாராக இருந்ததுடன் தமிழகத்து மன்னர்களும் அவர்தம் அரசியரும் இசைவல்லாராகத் திகழ்ந் தமையும் அறியத்தக்கதாம்.

பாண்டியன் மதிவாணனார் என்பார் இயற்றிய இசை நாடகத் தமிழ் இலக்கண நூலே மதிவாணர் நாடகத் தமிழ் நூல் என்பதாம். அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டும் நூல்களுள் அஃதொன்று. இடைக்கால மன்னர்களிலும் இசைவல்லார் இருந்துளர். அத்தகை யவருள், ஒருவர் திருவிசைப்பா பாடியவர். அவர் முதலாம் இராச ராசனின் பாட்டனாராகிய **கண்டராதித்த தேவர்** என்பார். அவ் விராசராசனின் மகனாகிய **முதற் குலோத்துங்கன்** இசை நூல் ஒன்று கண்டவன் என்பதும் அவ்விசையாளனின் துணையாகத் திகழ்ந்தவள் **'ஏழிசை வல்லபி'** என்பாள் என்றும், அவள் இலக்கணம் தவறாது இசைக்கவல்லாள் என்றும், **இராசராசன்** தான் இயற்றிய இசைப்பாட்டின் தாளமும் இசையும் தவறா வகையில் பாடுதல் கேட்டுப் பரிசு வழங்கியவன் என்றும் **சயங்கொண்டார்** கலிங்கத்துப் பரணியில் பாடுகின்றார்.

"வாழி சோழ குலசேகரன் வகுத்த இசையின் மதுர
வாரி எனலாகும் இசைமா தரிதெனா
ஏழுபார் உலகோ டேழிசை வளர்க்க உரியாள்
யானை மீது பிரியா துடனிருந்து வரவே

"தாளமும் செலவும் பிழையா வகை
தான்வகுத்தன தன்னெதிர் பாடியே
காளமும் களிறும் பெறும் பாணர்தம்
கல்வியில் பிழைகண்டனன் கேட்கவே"

என்பவை அவை.

இனி, வள்ளல் ஓரியை வன்பரணர் பாடிய புறப்பாடல் ஒன்றில்,

"பாடுவல் விறலியோர் வண்ணம் நீரும்
மண்முழா அமைமின் பண்யாழ் நிறுமின்
கண்விடு தூம்பின் களிற்றுயிர் தொடுமின்
பதலை ஒருகண் பையென இயக்குமின்"

என்கிறார். இசைப்பாடல் இயக்கும் போது அதற்கேற்பத் தோற் கருவிகளை இசைக்கும் வழக்கம் பண்டே இருந்ததைக் காட்டுவது இது. இதனை அறிந்த இசைப்பாவலர் பொன்னையா பிள்ளை "ஒருவன் தோற்கருவியை இசைத்துக் கொண்டு தானும் பாடுவது மிகவும் அருமையான காரியம். ஒரே பாட்டை இரண்டு தாளங்களுக்கு அமைய ஒருவனே பாடிக் கொண்டு தடாரி என்னும் தோற்கருவியை வாசித்தான் எனனும் உண்மையைக் கேட்கும் போது பழந்தமிழரின் இசை நுணுக்கம் எவ்வளவு உயர்ந்தது என்று நமக்கு விளங்குகிறது" என்கிறார்.

ஆற்றுப்படைகள் இசைச் செய்தி மிக்கவை. அவற்றுள்,

யாழ் உறுப்புகள் பற்றியவற்றைக் காண்க.

பத்தல்:— மானின் குளம்பு பதிந்த இடத்தைப் போல இருபக்கமும் தாழ்ந்து நடுவுயர்ந்த பத்தல்.

தோல்:— விளக்கொளி நிறத்தை ஒத்த நிறமும், கட்டிப் போர்த்தப் பட்டதுமாகிய தோல்.

போர்வை:— பிறரால் அறியப்படாத இளைய கருவமைந்த சிவந்தவளின் அழகிய வயிற்றின்மேல் அமைந்த மயிர் ஒழுங்கு போல இருதலைப்பையும் கூட்டித் தைத்த போர்வை.

ஆணி:— நண்டின் கண்ணைப் போன்ற, பத்தல் இரண்டும் சேர்த்தற்குத் திறந்த துளைகளின் வாய்மறைய முறுக்குதல் அமைந்த ஆணி.

வறுவாய்:— எட்டாம் நாள் பிறைவடிவை ஒப்பதாகவும் உண்ணாக்கு இல்லாததாகவும் அமைந்த வறுவாய்.

மருப்பு (தண்டு):— பாம்பு தலை தூக்கினாற் போன்று ஓங்கிய கரிய தண்டு

வார்க்கட்டு:— கருநிறத்தவள் முன்கையில் அணிந்த அழகிய வளையலைப் போன்று நெருங்கியதும் பிணிப்புடையதுமாகிய வார்க்கட்டு.

நரம்பு:— குத்திய தினையரிசியை ஒத்த நிறத்ததாய்க் குற்றமற்ற நரம்பு

தோற்றம்:— புதுமணக் கோலம் பொலிவு பெற விளங்கும் மாதரை ஒப்பனை செய்து கண்டாற் போன்ற தோற்றம்.

இசை:— வழிப்பறி செய்யும் கொலைஞர் உள்ளத்தையும் உருக்கிக் கொலைக் கருவியைக் கைவிடும் படியாகச் செய்யும் இன்னிசை.

இவ்வாறு யாழையும் யாழுறுப்புகளையும் பலப்பல உவமை நயங்கள் மலிந்து கிடக்கப் பாடுகின்றது பொருநராற்றுப்படை (4–22). பெரும்பாணாற்றுப்படையும் சிறுபாணாற்றுப்படையும் பாணர் வாழ்வு, இசைத்திறம் பற்றிய பல செய்திகளைத் தொகையாக உரைக்கின்றன. இன்னவற்றை நோக்கிய அளவில் 'ததும்பி வழிந்த தமிழிசை வளம்' நன்கு புலப்படும்.

த.ே.

4. தமிழிசை வெள்ளம்

தமிழிசை வெள்ளமெனப் பெருக்கெடுத்ததை அறிய வேண்டுமா?

பல நூல்களைத் தேடி அலைதல் வேண்டா. ஆழ்ந்து நின்று சிலப்பதிகார நூலையும் அரும்பத உரைகாரர் அடியார்க்கு நல்லார் உரைகளையும் கற்றாலே போதும். அப் பழந்தமிழிசையின் தடத்தை முழுமையாகக் கண்டறிய முடியாத நிலைமை ஒன்று இருப்பினும், தமிழிசைப் பெருக்கை மாறுபட்டாரும் மதித்துப் போற்றும் அளவுக்குக் காட்டுகின்றவை அவை.

"சிலப்பதிகாரத்து இசைத்தமிழ், சிலப்பதிகாரத்து இசை நுணுக்க விளக்கம், சிலப்பதிகாரத்தில் யாழும் இசையும், சிலப்பதிகாரச் செங்கோட்டு யாழ்" என்பனவாகப் பல நூல்கள் வெளிவந்துள. வெளிவந்து கொண்டும் உள்ளன. ஆகலின் அவற்றைக் கண்டு கொள்வாராக. இவண் குறிப்புகளாகச் சில செய்திகளை அறிதல் போதும்.

சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள இசை (வரி) ப் பாடல்கள்:

அம்மானைவரி
ஆற்றுவரி
ஊசல்வரி
ஊர்சூழ்வரி
கந்துகவரி
கானல்வரி
சாயல்வரி
சார்த்துவரி
திணைநிலைவரி
நிலைவரி
மயங்கு திணை நிலைவரி
முகமில்வரி
முரிவரி
வாழ்த்துவரி
வேட்டுவவரி
ஆய்ச்சியர் குரவை
குன்றக் குரவை
மங்கல வாழ்த்துப்பாட்டு
வள்ளைப்பாட்டு.

யாழ் இயக்கம்:

யாழ் இயக்கவகை பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, •கையூழ், குறும்போக்கு என எட்டாம். அவை வருமாறு:

பண்ணல் – பாட எடுத்த பண்ணுக்கு இணை, கிளை, பகை, நரம்புகள் பெயரும் தன்மை, மாத்திரை அறிந்து கட்டுதல்.

பரிவட்டணை – கட்டிய நரம்பை அகவிரலாலும் வினை செய்து தடவிப் பார்த்தல்.

ஆராய்தல் – ஏறுவரிசை இறங்கு வரிசையால் இசையைத் தெரிதல்.

தைவரல் – சுருதி ஏற்றுதல்.

செலவு – ஆளத்தியில் நிரம்பப் பாடுதல்.

விளையாட்டு – பாடநினைத்த வண்ணத்தில் சந்தத்தை விடுத்தல்.

கையூழ் – வண்ணத்தில் செய்த பாடல்களை இனிதாகப் பாடல்.

குறும்போக்கு – குடகச் செலவும் துள்ளற் செலவும் பாடுதல்.

இவையன்றி **வார்த்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல்** என்பனவுமாம்.

வார்த்தல் – சுட்டு விரலால் தொழில் செய்தல்.

வடித்தல் – சுட்டுவிரலும் பெருவிரலும் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்.

உந்தல் – நரம்புகளைத் தெறித்து வலிவிற் பட்டதும் மெலிவிற் பட்டதும் நிரல்பட்டதும் அறிதல்.

உறழ்தல் – ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் நரம்புகளைத் தெறித்தல்.

உருட்டல் – இடக்கைச் சுட்டுவிரல் உருட்டலும், வலக்கைச் சுட்டுவிரல் உருட்டலும், சுட்டு விரலோடு பெருவிரல் கூட்டி உருட்டலும் இருபெருவிரல் இயைந்து உடன் உருட்டலும் எனப்பலவகை.

யாழிசைப்புக் குற்றங்கள்:

செம்பகை, ஆர்ப்பு, அதிர்வு, கூடம் என்பன அவை.

செம்பகை – பண்ணோடு உளராமை.

ஆர்ப்பு – ஓங்க இசைத்தல்.

அதிர்வு – நரம்பைச் சிதற உந்தல்

கூடம் – தன் பகையாகிய ஆறாம் நரம்பின் இசையிற் குறைந்து தன் ஓசை மழுங்கல்.

இயக்கு என்பது நடை. அது கால அளவு, தாளம் எனப்படும். இது முதல் நடை, வாரம், கூடை, திரள் என்னும் நால்வகைப் பட்டதாகும்.

முதல்நடை என்பது, மிகுந்த காலச் செலவுடைய மந்தநடை.

வாரநடை என்பது, முதல் நடையில் சற்றே காலம் குறைந்த செலவுடைய சிறிது முடுகுநடை.

கூடை நடை என்பது, வாரநடையினும் குறைந்த காலச் செலவுடைய சற்றே விரைந்த முடுகு நடை.

திரள் நடை என்பது, கூடை நடையினும் குறைந்த காலச் செலவுடைய மிகு முடுகு நடை (சிலம்பு 3:67).

இவற்றை வடமொழியில் முறையே விளம்ப காலம், மத்திம காலம், துரித காலம், அதிதுரித காலம் என்பர்.

ஐவகை இசைக் கருவிகள்:

தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்ச (உலோக)க் கருவி, மிடற்று (கழுத்து)க் கருவி.

தோற்கருவிகள்:

பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, தூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை (சிலம்பு. 3: 27. அடியார்க்)

இவையெல்லாம் சிலம்பு வழியாக அறியப் பெறும் சில குறிப்புகள். பிறவற்றை அறிய விரும்புவார் ஆங்குக் கண்டு கொள்க.

இனிப் பெருங்கதை என்னும் பெருநூல் தலைவன் உதயணன் என்பான். அவன் பிரமசுந்தர முனிவர் என்பாரிடம் யாழிசை கற்றுத்

தேர்ந்தான். அம்முனிவர் யானை முதலியவற்றை வயமாக்கத் தக்க கோடபதி என்னும் பெயரிய யாழைப் பரிசாக வழங்கினார்.

உஞ்சை வேந்தன் பிரச்சோதனனால் சிறைப்பட்ட உதயணன், வேந்தன் மகள் வாசவதத்தைக்கே யாழ் கற்பிக்கும் ஆசிரியனாக விளங்குகின்றான். அதற்குரிய சூழல் ஒன்று அவன் சிறையில் இருந்தபோதே நிகழ்கின்றது.

அரசயானை மதங்கொள்கின்றது. அடக்குவாரற்று அழிசெயல் செய்கின்றது; ஊரே அலமருகின்றது. அந்நிலையில் உதயணனே அதனை அடக்கத் தக்கான் என்பதை அறிந்த வேந்தன் விருப்பப் படியே உதயணன்,

"வீணை எழீஇ வீதியின் நடப்ப

ஆணை ஆசாற் கடியுறை செய்யும்

மாணி போல மதக்களிறு" படிகிறது. பெருங்கதை (2.9.57–59)

சிந்தாமணியின் பாட்டுடைத் தலைவன் **சீவகன்;** அவன் யாழிசை வல்லானாகப் படைக்கப் பட்டுள்ளான்.

யாழில் வெல்ல வல்லவரே காந்தருவ தத்தையாரை மணங் கொள்ள முடியும் என ஓர் இசைப் போட்டி எழுந்தது. அப்போட்டியில் பலரும் தோற்க, சீவகன் போட்டியில் தலைப்பட்டான். அவனிடம் மீட்டுதற்காகத் தரப்பட்ட யாழ்களைக் கையில் எடுத்த எடுத்த அளவில், 'இந்த மரம் மெலியது', 'இந்த மரம் அழுகியது', 'இந்த மரம் வடுவுற்றது', 'இந்த மரம் இடியுண்டது', 'இந்த மரம் சிறப்பற்றது', 'இம் மரம் வெந்தது' என யாழ் செய்யப் பட்ட மரங்களின் குறைபாடு களை எடுத்துரைத்து ஒவ்வொன்றாக ஒதுக்கிச் சரியானதொன்றைத் தேர்ந்தெடுத்தான்.

யாழின் நரம்புக் குறை இவை இவை என விரியக் கூறிய சீவகன், ஒரு நரம்பைப் பிரித்து அதன் ஊடு புகுந்திருந்த மயிர் ஒன்றினைச் சுட்டிக்காட்டி ஒதுக்கினான். பின்னர்த் தன் யாழிசையால் காந்தருவ தத்தையை வென்று மணம் கொண்டான்.

ஆடவர் எவரும் தன் வீட்டின் அருகில் வந்தார் எனினும் அவர் பெயரை ஒருவர் விரும்பிச் சொன்னார் எனினும் உயிரை விடுவேன் என்னும் உறுதியில் இருந்தவராகிய சுரமஞ்சரியார் என்பாரைச் சீவகன் பெருமூதாளனாம் வடிவில் சென்று இசையால் வென்று மணங்கொண்ட செய்தியே **சுரமஞ்சரியார் இலம்பகமாகும்.**

பொன்னறையின் இன்னமளிப் பூவணையின் மேலான்
முன்னியதன் மன்றலது முந்துறமு டிப்பான்
மன்னுமொரு கீதமது ரம்படமு ரன்றாற்கு
இன்னமிர்த மாகஇளை யாருமது கேட்டார். (41)

கள்ள மூப்பி னந்த ணன்க ளிந்த கீத வீதியே
வள்ளி வென்ற துண்ணி டைம ழைம லர்த்த டங்கணார்
புள்ளு வம்ம திமகன்பு ணர்த்த வோசை மேற்புகன்
றுள்ளம் வைத்த மாமயிற்கு மூர்த்தி னோடி யெய்தினார் (45)

பறவை வேட்டையென இசையால் பாவை வேட்டையாடிய காதை இது.

பெரியபுராணத்தில் இசைச் செய்திகள் பலவுண்டு. குறிப்பாக ஆனாய நாயனார் புராணம் அவ்வகையில் தனியே சுட்டத் தக்கது. 'ஆனாயர் கோவலர்; பசுக் காவலர்; குழற்கலை வல்லாராகச் திகழ்கின்றார். முல்லைக் குழல் முறையாக இசைக்கும் திறம் இறைமையாகிச் சிறக்கின்றது.

முத்திரையே முதலனைத்து முறைத்தானம் சோதித்து
வைத்ததுளை யாராய்ச்சி வக்கரனை வழிபோக்கி
ஒத்தநிலை உணர்ந்ததற்பின் ஒன்றுமுதல் படிமுறையாம்
அத்தகைமை ஆரோசை அமரோசை களினமைத்தார்.

மாறுமுதற் பண்ணினபின் வளர்முல்லைப் பண்ணாக்கி
ஏறியதா ரமும்உழையும் கிழமைகொள விடுந்தான
மாறுலவு சடைமுடியார் அஞ்செழுத்தின் இசைபெருகக்
கூறியபட் டடைக்குரலாம் கொடிப்பாலை யினின்றிறுத்தி,

மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன்முறையாற்
தந்திரிகள் மெலிவித்தும் சமம்கொண்டும் வலிவித்தும்
அந்தரத்து விரற்றொழில்கள் அளவுபெற அசைத்தியக்கிச்
சுந்தரச்செங் கனிவாயும் துளைவாயும் தொடக்குண்ண,

எண்ணிறூற் பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பென்னும்
வண்ணஇசை வகையெல்லா மாதுரிய நாதத்தின்
நண்ணியபா ணியுமியலும் தூக்குநடை முதற்கதியிற்
பண்ணமைய எழுமோசை எம்மருங்கும் பரப்பினார்.

இவ் வானாயநாயனார் புராணப் பாடல்களை மேலோட்டமாக நோக்குவார்க்கும் சேக்கிழார் காலம்வரை தமிழிசையே இசையாகத் தமிழ்மண் சிறந்து விளங்கியமை புலனாகும்.

கல்லாடத்தில் இசைபற்றிய செய்திகள் விரவிக் கிடக்கின்றன. அதன் நிறைவாக நிற்கும் (100) ஒரு பாடலைக் கண்ட அளவானே தமிழிசை வளம் வெள்ளமெனப் பெருகும் மாண்பு அறியப்பெறும். அதன் 43 ஆம் பாடல் வரியே, விறகு விற்ற திருவிளையாடலாகிச் சாதாரிப் பண்ணின் நயத்தைச் சாற்றுகின்றதாம். அக்கல்லாடம்,

"வடபுல விஞ்சையன் வைகிடத் தகன்கிடைத்
தென்திசைப் பாணன் அடிமை யானெனப்
போகா விறகுடன் தலைக்கடை பொருந்தி
உந்தித் தோற்றம் ஓசைநின் றொடுங்கப்
பாலையில் எழுப்பி அமரிசை பயிற்றித்
தூங்கலும் துள்ளலும் சுண்டிநின் றெழுதலும்
தாரியிற் காட்டித் தருஞ்சா தாரி
உலகுயிர் உள்ளமும் ஒன்றுபட் டொடுங்க
இசைவிதி பாடிய இசைப்பகை துரந்த
கூடற் கிறையோன்",

என்பது.

'இசைக்குற்றம்' இவை எனவும், 'இசையழகு' இவை எனவும் அறிய விரும்புவார் கல்லாடம் இருபத்தொன்றாம் பாடலை உணர்ந்து கொண்டாலே போதும்.

சித்தர் பாடல்கள் என்பன வெல்லாம் பொருட்சிறப்பும் எளிய சொல்லாட்சியும் உடைய இசைப்பாடல்களேயாம். பொதுமக்கள் வாய்ப்பாட்டாக வழங்கும் மண்ணின் மணத்தோடு கிளர்ந்தவை அவை.

"பாபஞ்செய் யாதிரு மனமே – நாளைக்
கோபஞ்செய் தேயமன் கொண்டோடிப் போவான்"

என்னும் கடுவெளிச் சித்தர் பாடல் தொடக்கமோ,

"தெளிந்து தெளிந்து தெளிந்தாடு பாம்பே – சிவன்
சீர்பாதம் கண்டுதெளிந் தாடுபாம்பே"

என்னும் பாம்பாட்டிச் சித்தர் பாடல் தொடக்கமோ,

"தாந்தி மித்திமி தந்தக்கோ னாரே
தீந்தி மித்திமி திந்தக்கோ னாரே
ஆனந்தக் கோனாரே —அருள்
ஆனந்தக் கோனாரே"

என்னும் இடைக்காட்டுச் சித்தர் பாடல் தொடக்கமோ சித்தர் பாடல்களின் இசைத்திறத்தைக் காட்டத் தவறாவே.

தமிழிசைக் களஞ்சியம் என்று சொல்லத் தக்க பெருமைக் குரியது திருப்புகழாகும். அவ்விசைக் களஞ்சியப் பிறப்பராகத்திகழ்ந்தவர் அருணகிரியார். அவர் பொழிந்த பாடல்களின் எண்ணிக்கை எவ்வளவோ அறியக் கூடவில்லை. அறிய வாய்த்தவை 1360 என்னும் அளவின. அவற்றுள் வரும் இசைப் பகுதியை மட்டும் திரட்டின் அஃதொரு பெருந்திரட்டாகவும் இசை வளமாகவும் உறுதியாகத் திகழும். அவர்தம் பாடலை மனத்துத் தேக்கிச் சின்முறை அசையிட்ட அளவாலே இசைநடப் பாடல்கள் ஊற்றுச் சுரப்பெனச் சுரத்தலை உணர்வார் உணரப் பெறுவார்.

"பதினைந்தாம் நூற்றாண்டில் வேறு எம் மொழியிலும் என்றும் எவராலும் பாடவியலாத நூற்றுக் கணக்கான வண்ணக் குழிப்பு களில் பாடப்பட்ட ஒப்புயர்வற்ற தமிழ்ப்பனுவல் அருணகிரி நாதரின் திருப்புகழ்த் திரட்டே" என்பார் பாவாணர் (தமிழிலக்கிய வரலாறு. 46)

பட்டினத்தாரின் உடற்கூற்று வண்ணம், தாயுமானவர் கண்ணிகள், வள்ளலாரின் இசைப் பாடல்கள், வண்ணச் சரபம் தண்டபாணியடிகளின் வண்ணங்கள் இன்னவையெல்லாம் இசைச் செல்வங்கள்தாமே!

மாம்பழக் கவிச்சிங்க நாவலரின் சந்தப்புகழ், ஆனந்தகீதரசம், இசைப்பாடல்கள் என்பவையும், அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து, பொன். பாண்டித்துரையாரின் காவடிச்சிந்து, இன்னவும் தமிழிசைப் பெருக்குகளே அல்லவோ!

குணங்குடி மத்தான் சாகிப்பு கீர்த்தனைகள் இராகம் — தாளக் குறிப்புகளுடன் எடுப்பு (பல்லவி) தொடுப்பு (அநுபல்லவி) அடி (சரணம்) என்பன வெல்லாம் கொண்டவை.

இவ்வாறே இராகம் தாளம் என்பவற்றுடன் வண்ணக் குழிப்பு களும் ஒருங்கமைந்த வண்ணத் திரட்டு நூல்களும் வெளிவந்துள.

காசிம் திருப்புகழ், என்பது அருணகிரியாரின் திருப்புகழ்ப் பாவின் சுவை நலம் தூண்டலால் துலங்கிய சிறப்பானது. அமீது இபுராகிம் என்பார் தம் பெயரே வண்ணக் களஞ்சியப் புலவர் என்று வழங்குமாறு வண்ணம் பாடிய புலவராகத் திகழ்ந்தார்.

குறவஞ்சி நூல்கள், பள்ளு நூல்கள், நொண்டி நாடகங்கள் என்பனவெல்லாம் இசைத்தமிழ் நூல்களே. குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற் பள்ளு என்பவற்றை அறியார் எவரும் இரார்.

திருநீலகண்ட நாயனார் கீர்த்தனை, இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை என்பவை கோபால கிருட்டிண பாரதியார் பாடியவை. சீர்காழி அருணாசலக் கவிராயர் பாடியது இராம நாடகக் கீர்த்தனை. கீர்த்தனைப் பாடல்களை நகைச்சுவை நலமும், பொதுமை வளமும் திகழப் பாடியவர் வேதநாயகம் பிள்ளை. வேதநாயக சாத்திரியார், கவிகுஞ்சரபாரதியார் கனம் கிருட்டிணையர் ஆகியோரும் தமிழ்க்கீர்த்தனை பாடினர். இக் கீர்த்தனைப் பாடல்கள் தமிழிசை வளங்களே.

இவ்வகையில் நாட்டுப்பற்று மொழிப்பற்று என்பனவும் இயைந்து நடக்க கவிபாற்கரதாசர், பாரதியார், பாவேந்தர், கவிமணி, சுத்தானந்த பாரதியார், பெ. தூரன் ஆகியோர் இசைப்பாடல்கள் பாடினர். பாவேந்தர் பாடிய பாடல் தொகுதி 'இசையமுது' என்னும் பெயர் தாங்கியமை அறியத் தக்கது. இவ்விசை வளர்ச்சியில் நாடகத்துறை, திரைத்துறை ஆகியவற்றின் பங்களிப்பும் பெரிதாகும். இவை தமிழிசை வெள்ளப்பெருக்காம்.

5. தமிழிசைக் கலைவளம்

எழுத்திற்கு ஒலிவடிவு, வரிவடிவு என வடிவிரண்டு இருத்தல் போல, ஒவ்வொரு கலைக்கும் ஒலிவடிவும் வரிவடிவும் உண்டு. இசைப்பாடல்கள் வாய்ப்பாட்டாக மட்டும் இல்லாமல் எழுத்துருப் பெற்ற நிலையும் பண்டே அமைந்தமை அறிந்தோம். கருவி இசையும் கண்டத்து இசையும் கலந்து ஒலிக்கும் சிறப்பும் அதற்குண்மை எவரும் அறிந்ததே.

இசைப்பா இசைத்துக் காட்டிப் பயிற்றிய பயிற்சியர், தம் பயிற்று திறம், காலம் கடந்தும் இடம் கடந்தும் பயன்பட வேண்டும் என்று எண்ணிய பேருள்ளப் பாங்கால் இயற்றமிழ் இலக்கணம் போல, இசைத்தமிழ் இலக்கணமும் எழுதிவைத்தனர். அந்நூல்களின் பெயர்களையும் அவற்றின் அழிவுகளையும் முன்னரே அறிந்துள் ளோம். அவற்றை அன்றி வழிபாட்டு நூல்கள், இலக்கியப் படைப்புகள் ஆகியவற்றிலும் இசைத்தமிழ்க் கலைவளங்கள் மின்னலிடக் காண்கிறோம். கல்லில் எழுதிய எழுத்தாக இசைவளம் உள்ளமை வியப்பாவதாம்.

இசைக்கல்வெட்டுகள்:

வரலாற்றின் வைப்பு நிலையமாகத்தான் கல்வெட்டுகள் விளங்குகின்றன என்பதையன்றி இசைக் கருவூலமாகவும் கல்வெட்டுகள் விளங்குகின்றன என்பதன் சான்றுகளாக **அறச்சாலையூர் (அரச்சலூர்) திருமெய்யம் (திருமயம்), மலையடிப் பட்டி, குடுமியான்மலைக் கல்வெட்டுகள்** உள்ளன.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த அறச்சாலையூர்க் கல்வெட்டே முதல் இசைக் கல்வெட்டு என்பர். இக்கல்வெட்டில், வழக்கிலும் செய்யுளிலும் உள்ள எழுத்துக்களைப் போல, இசை எழுத்துக்களைத் தொகுத்தலும் இசை நூல்களில் உள்ளது என்னும் குறிப்புப் பொறிக்கப்பட்டுள்ளது.

"இசைக்கும் தாளத்திற்கும் ஏற்ப எழுத்துக்களைப் புணர்ப்பது சிலம்பு காலத்திற்கும் முன்பிருந்தே வழங்கிய ஒருபண்பு என்பது

இக்கல்வெட்டின் மூலம் தெளிவாகும்" என்பர் (கல்வெட்டு ஓர் அறிமுகம். 75; குடுமியான்மலை. 92).

திருமெய்யம், மலையடிப்பட்டி இசைக்கல்வெட்டுகளும், குடுமியான் மலை இசைக்கல்வெட்டும் கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தன என்பர். மூன்றையுமே மகேந்திரவர்மன் உருவாக்கம் புரிந்தான் என்றும் கூறுவர். வேறு வேறு என்பாரும் உளர். இக்கல்வெட்டை விபுலானந்த அடிகள்,

"சார்ங்க தேவர் சொல்லுகின்ற சுத்தவுருவம், காகலியோடு கூடிய உருவம், அந்தரத்தோடு கூடிய உருவம், காகலி அந்தரத்தோடு கூடிய உருவம் என்னும் நான்கினுள் காகலியோடு கூடிய உருவம் இக்கல்வெட்டில் கொள்ளப்பட்டிலதாதலின், கல்வெட்டினைப் பொறித்த ஆசிரியர் முற்றிலும் பழந்தமிழ் மரபினைக் கையாள் கிறார் என்பது தெளிவாகிறது" என்கிறார் (யாழ் நூல். 339)

இசைக்கலை பற்றிய இக்கல்வெட்டு வடமொழியிலே உள்ளது. இதனை ஆராயும் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்.

"வடமொழியிலே எழுதப்பட்டிருப்பதனாலே இந்தச் சாசனம் கூறும் விசயம் தமிழ்நாட்டு இசையன்று என்று கருதக்கூடாது. தமிழ் நாட்டில் வழங்கிய இசையைத்தான் இந்தச் சாசனம் வடமொழியில் கூறுகிறது. வடமொழியில் சங்கீத நூல்கள் எழுதப்பட்டிருப்பத னாலே அவை தமிழ்நாட்டு இசையல்ல என்று கருதுவது தவறு. இப்போதுள்ள வடமொழி சங்கீத நூல்களில் பலவும் தமிழ்நாட்டு இசையைத்தான் கூறுகின்றன" என்கிறார் (தமிழர் வளர்த்த அழகுக்கலைகள். 92 – 93).

இக்கல்வெட்டின் நிறைவில் "எட்டிற்கும் ஏழிற்கும் இவை உரிய" என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது என்றும் ஏழு நரம்புள்ள வீணையிலும் எட்டு நரம்புள்ள வீணையிலும் இதில் சொல்லப்பட்ட இசை வாசித்தற்குரியது என்றும் கூறுவர். இதனை மறுத்து வேறு கூறுவாரும் உளர் என்பர் (குடுமியான் மலை) 100.

இசைத்தூண்கள்:

தமிழ் நாட்டில் இசைத்தூண்கள் சில இடங்களில் உள்ளன.

மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில் வடக்குக் கோபுர உள்வாய்ப் பகுதியில் ஐந்து தூண்கள் உள்ளன. ஒருதூணில் 22 மெல்லிய தூண்கள் உள்ளன. அவற்றை மெல்லெனத் தட்ட

வெவ்வேறு இசையொலி எழுகின்றன. இத்தகைய தூண்கள், திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில், சுசீந்திரம் தாணுமாலயர் திருக்கோயில் ஆகியவற்றிலும் உண்டு.

மதுரை ஆயிரக்கால் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள இரதி தேவியின் ஊர்தியாகிய அன்னத்தின் பல்வேறு பகுதிகளைத் தட்டினால் வெவ்வேறு இசை எழும் இசைச்சிற்பமாக அது உள்ளது. அவ்வாறே சிற்றன்னவாயில் சைனச் சிற்பம் ஒன்றும் இசைச் சிற்பமாக அமைந்து பேணா முறையால் சிதைவுற்றுள்ளது. "கல்லும் சொல் லாதோ கவி" என்பது, "கல்லும் சொல்லாதோ இசை" என இசைக்கும் சிறப்புகள் இவையாம்.

யாழ்ச்சிற்பங்கள்:

புதுக்கோட்டை மாவட்டம் திருமெய்யத்திலுள்ள அரவணைத் துயின்ற அண்ணலின் குடைவரை கோயிலில் பெருமானின் தலைப்பக்கத்தில் நாரத முனிவர் கையில் யாழ் கொண்டு நிற்கிறார்.

திருஎருக்கத்தம் புலியூரில் உள்ள திருக்கோயில் நீலகண்ட யாழ்ப்பாணர் உருவத்தொடு யாழ் உள்ளது. இது சகோடயாழ் என்பர்.

மாமல்லை வராகமண்டபத்தில் வராக மூர்த்திக்கு அடுத்து நிற்கும் சிவபெருமான் முன்னர் ஒரு யாழ்ச்சிற்பம் உள்ளது.

மாமல்லை அருச்சுனன் தவக் கோயில் சிற்பங்களில் கின்னரர் யாழ்மீட்டும் சிற்பங்கள் உள்ளன.

இவை பண்டை யாழ்வடிவை நமக்கு வடித்துக்காட்டுவனவாம். (குடுமியான்மலை. 93; இசையும் யாழும். 30; மாமல்லை 76 – 100).

தமிழிசை வளர்த்தற்கெனவே சங்கம் பண்டே இருந்தது என்பதும் அதுவும் இயற்றமிழ்ச் சங்கம் இருந்த சூழலிலேயே இருந்தது என்பதும்,

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி ஏழிசைச் சுழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென் கொலாம் புகுந்தெய்தியதே"

என்னும் திருச்சிற்றம்பலக் கோவையார் வழியே அறியலாம்.

"ஏழிசை நூற்சங்கத் திருந்தானும்" என்னும் நளவெண்பாவும் இதனைச் சுட்டுவதே. ஏழிசைநூற் சங்கத்திருந்தான் பாண்டியன் என்க. இறைமை இசைவழியே இயங்கியமையைப் பின்வரும் குறிப்புகளால் அறியலாம்.

திருவாசக இசைப் பாடல்கள்

திரு அம்மானை
திரு உந்தியார்
திரு எம்பாவை
திரு ஏசறவு
திருக் கோத்தும்பி
திருச் சாழல்
திருத் தெள்ளேணம்
திருத் தோணோக்கம்
திருப் படையாட்சி
திருப் படையெழுச்சி
திருப் பள்ளியெழுச்சி
திருப் புலம்பல்
திருப் பூவல்லி
திருப் பொற்சுண்ணம்
திருப் பொன்னூசல்

இவை, இறைமை இசைவழியே இயங்கிய இயக்கமாதலைத் தெளிவிக்கும் இசைப்பா வகைகளாம்.

தேவாரப் பாடல்கள் இசைப்பாடல்கள் என்பதை அப்பெயரே வெளிப்படுத்தும். 'வாரம்' என்பதும் 'வரி' என்பதும் இசைப்பாடல் களே. வாரம் என்பதையே பெயராகக் கொண்டது இசை முத்திரை காட்டுவதேயன்றோ! "வாரம் இரண்டும் வரிசையிற்பாட" என்பது சிலம்பு.

ஊரூர் தோறும் தேரூர் கோலமாகச் சென்று, அடியார் கூட்டம் தொடர இசைமழையாய்ப் பொழியப்பட்டவை தேவாரப் பாடல்கள். ஞானசம்பந்தர் இசைபாட, திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழிசை எழுப்ப இசைத்த பான்மை அறியவருகின்றது. யாழிசையில் அடங்கா வார இசையைக் காட்டுமாப்போல அமைந்த 'யாழ்முரி' வரலாறும் இடம் பெறுகின்றது.

தேவாரப் பாடல்களைத் திரட்டிப் பண் வகுக்கும்போது உதவியாக நின்ற திருநீலகண்ட யாழ்ப்பாணர் வழியில் வந்த பெண்மணியார் வரலாறும் இசைவரலாற்றில் தனியுயர் இடம் பெறுகின்றது.

திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்பனவும் இசைப்பாடல்களே. இவற்றை அப்பரடிகள் மட்டுமே பாடியுள்ளார்.

நாலடி, ஈரடி, திருமுக்கால், திருவிராகம், திருவிருக்குக்குறள், யாழ்முரி, திருத்தாளச்சதி, திருவியமகம் முதலியன பண்ணால் வந்த பெயர்கள் அல்ல என்றும், திருவிராகம் என்பது இந்தளம், சாதாரி, நட்டபாடை முதலியன பண் அமைந்த திருப்பதிகங்களிலே சில முடுகிசையாக உள்ளவற்றிற்குப் பெயராகி வருவன என்றும் கூறுவர்.

சைவ மடங்களில் ஓதப்படும் பண்கள் 21 என்றும், அவற்றை ஓதும் காலவரையறை ஈதெனவும் மரபுவழிக் கொள்வர். அது வருமாறு:

1. புறநீர்மை, 2. காந்தாரம்; பியந்தைக் காந்தாரம், 3. கௌசிகம், 4. இந்தளம்; திருக்குறுந்தொகை, 5. தக்கேசி, 6. நட்டராகம்; சாதாரி 7. நட்டபாடை 8. பழம்பஞ்சுரம் 9. காந்தார பஞ்சமம் 10. பஞ்சமம்.

இப்பத்து வரிசைகளில் உள்ளவை பகற்காலத்தில் ஓதும் பண்கள். இப்பண்களைப் பகல் 3 நாழிகையில் இருந்து மும்மூன்று நாழிகையாக ஒவ்வொரு வகைக்கும் முறையே மேலேற்றி ஓதுதல் இவற்றின் காலவரையறையாகும்.

1. தக்கராகம் 2. பழந்தக்கராகம் 3. சீகாமரம் 4. கொல்லி; கொல்லிக் கௌவாணம் திருநேரிசை திருவிருத்தம். 5. வியாழக் குறிஞ்சி 6. மேகராகக் குறிஞ்சி 7. குறிஞ்சி 8. அந்தாளிக் குறிஞ்சி இவ்வெட்டு வரிசைகளில் உள்ளவை இரவுக் காலத்தில் ஓதும் பண்கள்.

இப்பண்களை இரவு மூன்றே முக்கால் நாழிகையில் இருந்து மூன்றேமுக்கால் மூன்றேமுக்கால் நாழிகையாக ஒவ்வொரு வகைக்கும் மேலேற்றி ஓதுதல் காலவரையறையாகும்.

1. செவ்வழி 2. செந்துருத்தி 3. திருத்தாண்டகம் இம்மூன்று வரிசைகளில் உள்ளவை பகல், இரவு எக்காலமும் பொதுவாக ஓதும் பொதுப் பண்களாகும். இவற்றிற்குக் காலவரையறை இல்லை.

பகற்பண் 10; இரவுப்பண் 8; பொதுப்பண் 3. ஆகப்பண் 21.

— திருஞானசம்பந்தர் தேவாரம்

வெளியீடு: திருப்பனந்தாள் — தேவாரப் பண்கள்

நாயன்மார்களுக்குப் பின்னே தமிழிசைப் பாக்கள் பாடிய பெருமக்கள் பலர் இருந்துளர். அவருள் ஒன்பதின்மர் பாடிய பாடல்கள் பதினோராந் திருமுறையில் இடம் பெற்றுள. அப்பாடல் களின் பெயரே 'திருவிசைப்பா' என்பதால் அதன் இசைநலம் இனிது விளங்கும். அவ்வொன்பதின்மரும், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி, நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்பார்.

மூவர் முதலிகளுக்கும் முற்பட்டவராம் காரைக்காலம்மையார் பாடல்கள் இசைவளம் பயின்று பண்ணோடு இசைக்கும் பாடல் களாக இலங்கியவையாம். இனி, ஆழ்வார் பாடல்களும் அவ்விசை வழிப்பட்ட பாடல்களே என்பதையும் அவற்றின் பண்குறிப்புகளால் அறியலாம். 'திருப்பாணாழ்வார்' என்பது ஓர் ஆழ்வார் பெயரே அன்றோ!

திருவாய் மொழியால் அறியப்படும் பண்கள்

இந்தளம்
காந்தாரம்
குறிஞ்சி
கொல்லி
கௌசிகம்
சீகாமரம்
செருந்தி
தக்கராகம்
தக்கேசி
நட்டபாடை
நட்டராகம்
நாட்டம்
பஞ்சமம்
பழந்தக்கராகம்
பழம்பஞ்சுரம்
பாலையாழ்
புறநீர்மை
முதிர்ந்த குறிஞ்சி
முதிர்ந்த இந்தளம்
வியந்தம்

பிங்கலந்தை நிகண்டால் அறியப்படும் பண்கள்: 103

அவற்றை அங்குக் கண்டு கொள்க

கின்னரி:

வயலின் (violin) என்றும் பிடில் (fiddle) என்றும் சொல்லப்படும் மேலை நாட்டு இசைக்கருவி 'கின்னரி' எனப்படும். "கிழவன் சொல்லைக் கின்னரிக்காரன் கேட்பானா? " என்றொரு பழமொழியும் எழுந்தது.

நரம்பிசைக் கருவி ஒன்றும் இசைபாடும் பறவை ஒன்றும் பண்டே 'கின்னரி' என வழங்கப்பட்டமை இலக்கியங்களில் காணலாம். காள மேகப்புலவர், "கின்னரிவா சிக்கும் கிளி" என்னும் ஈற்றடி கொண்டு பாடிய பாட்டொன்று தனிப்பாட்டில் உண்டு. அது:

"ஆடல்புரிந் தானென்றும் அந்நாளிலே மூவர்
பாடல்உகந் தானென்றும் பான்மையினால் – கூடலிலே
நன்னரிவா சிக்கு நடைபயிற்றி னானென்றும்
கின்னரிவா சிக்குங் கிளி",

என்பது.

பிடில் என்னும் ஐரோப்பிய இசைக்கருவியை நம் நாட்டு இசைக் கருவியாக முதற்கண் மாற்றம் செய்து அமைத்துத் தந்தவர் வித்துவான் வடிவேலுப்பிள்ளை என்பவர். அவர் தஞ்சை அரண்மனை இசைப்புலவராக விளங்கியவர்.

தஞ்சை அரண்மனையில் ஆங்கில இசைக்கருவியாகிய 'பாண்டு' என்பதுடன் பிடிலும் இசைக்கப்பட்டதை இவர் ஊன்றிக் கவனித்து, அதனை நன்கு கற்று இசைப்பதில் தேர்ந்தார். பின்னர் தமிழிசைப் பாடற் கருவியும் ஆக்கினார். திருவாங்கூர் மன்னரும், இசை மேதையருமாகிய சுவாதித்திருநாள், வடிவேலர் பிடில் திறமையை மெச்சிப்புகழ்ந்தார். அவருக்குத் தந்தத்தினால் செய்யப்பட்ட பிடில் ஒன்றனை கி.பி. 1834இல் பரிசாக வழங்கினார். இவ்வாறு ஆங்கில இசைக்கருவியைத் தமிழிசைக் கருவியாக விளங்க வழிசெய்த வடிவேலுப்பிள்ளை அவர்கள் திறத்திற்குத் தமிழகம் கடமைப் பட்டுள்ளது என்று பாராட்டுவார் **மயிலை சீனி வேங்கடசாமி** (தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் 109).

'தமிழிசைக் கலைவள'மாகக் காணப்பெறும் சில குறிப்புகள் இவை.

6. காரிருள் மூட்டம்

இசைத் தமிழ்ப் பாகுபாடு இருந்தும், பண்சுமந்த பாடல்கள் அமைந்தும், தமிழிசை ததும்பி வழிந்தும், வெள்ளப்பெருக்காய்ப் பெருகியும், கலைவளம் சுரந்தும் – இருப்பினும், 'தமிழிசை என ஒன்று இல்லை' என்றும், 'இருப்பனவெல்லாம் வேற்றிசையே' என்றும், 'தமிழ்ப்பாட்டு இசைப்பின் மேடையே தீட்டுப்பட்டுப் போகும்' என்றும், 'அப்படியே ஓரிரு தமிழ்ப் பாடல்கள் பாட வேண்டும். எனினும் அவற்றைத் 'துக்கடாப்பாட்டு' என்றும் 'சில்லறை' என்றும், 'உருப்படி' என்றும் தமிழ் நாட்டில் இருந்து கொண்டு தமிழ் மண்ணின் வளத்தைத் துய்த்துக் கொண்டு தமிழ்க்கேடு செய்தாரின் தந்நலச் செயலின் விளைவால் ஏற்பட்டதே இக்காரிருள் மூட்டமாம்.

தமிழிசை கொழித்த மண்ணில் கருநாடக இசையே இசையாகிய தென்ன? என்னும் வினா பலர்க்கும் தோன்றலாம். திருமறைக்காடு இடமும் பெயரும் மாறாமலே வேதாரணியமாக விளங்குவது நாம் அறியாததா? திருமறைக்காடும் வேதாரணியமும் வெவ்வேறு ஊர்களா? இன்று திருமறைக்காடு என்றால் அது எங்கே உள்ளது என்று கேட்பாரும் இலரா? மயிலாடுதுறை, மாயூரமாகி, மீண்டும் மயிலாடுதுறையாக ஊரறிய வாய்த்திருப்பது நாடறி செய்திதானே! இப்படி ஏற்பட்டதே கருநாடக இசை என்பதாம். தமிழிசை வேறு, கருநாடக இசை வேறு இல்லை; தமிழிசையே கருநாடக இசை எனப்பெயர் கொண்டு உலவுகிறதாம். இதன் வரலாற்றுப் பின்னணி என்ன?

பன்னிரண்டாம் நூற்றாண்டில் சோமேசுவர புல்லோகமால் (1116 – 1127) என்ற குறுநில மன்னன் ஆண்டு கொண்டிருந்தான். அவனுடைய நாடு மகாராட்டிரம். அவன் இசையில் ஈடுபாடு கொண்டவன். 'மானச உல்லாசம்' என்ற சிறந்த நூல் செய்தவன். தென்னிந்திய சங்கீதத்தில் ஈடுபட்டு இது தன்னாட்டுக்குத் தேற்கே காணப்பட்டமையாலும் அடுத்துள்ள தென்னிந்திய நாடு கருநாடக மானமையாலும் தான்கண்டு போற்றிய இச்சங்கீதத்திற்குக் 'கர்நாடக சங்கீதம்' என்று பெயர் வைத்தான். அக்காலத்தில் தெற்கே இருந்த

த.4.

சங்கீதம் தமிழ்நாட்டுச் சங்கீதம் ஒன்றுதான். இது அவனுக்குத் தெரியாது. அவன் வைத்தபெயர் நிலைத்துவிட்டது. அது முதல் தென்னாட்டுச் சங்கீதத்தைக் கருநாடக சங்கீதம் என்று வடநாட்டார் வழங்கத் தலைப்பட்டார்கள். இவ்வழக்கு கருநாடக நாட்டுக்கோ கன்னட மொழிக்கோ தொடர்புடையதன்று. தமிழ்நாட்டில் வழங்கிய பண்ணிசைதான் அப்போது கருநாடக சங்கீதம் என்று பெயர் பெற்றது. (கர்நாடக சங்கீதத்தின் ஆதி மும்மூர்த்திகள். 8 – 9).

தமிழிசை சிதைவுற்ற வகையைப் பரிதிமாற் கலைஞர் (வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார்) தாம் இயற்றிய **தமிழ்மொழியின் வரலாற்றில்** குறிப்பிடுகிறார்:

"பழைய இசைத் தமிழ் நூல்களுள் பெரும்பாலன இறந்து விட்டன. இரண்டொன்று மட்டில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அவை தாமும் சின்னாட்களில் வெளியிடப்படாவிடின் அழிந்து படினும் படும். இவ்வாறு இசைத்தமிழ் நூல்கட்குக் குறைவு நேரக் காரணம் யாது?

இடைக்காலத்தில் இருந்த மக்களுக்குள் ஒழுக்கச் சீர்திருத்தஞ் செய்யப் புகுந்த போலியாரியர் சில்லோரான் விளைந்த கேடாம் இது. இவ்வுலக வாழ்க்கைக்கு அறம் பொருள் இன்பம் என்ற மூன்றுஞ் சிறந்தனவாம் என்னும் உண்மையை நன்குணராது 'அறமே யாரும் பின்பற்றுதற்குரியது. மற்றும் இன்பம் கைவிடுதற் குரியது' என்று எண்ணி, இசையினால் இன்பம் மிகுதலின் அதனையும் கடிய வேண்டும் என்று புகுந்து ஆரியரும் சைனரும் ஒருங்கு சேர்ந்து இசைத்தமிழைப் பெரிதும் அலைத்துத் தொலைக்க முயன்றனர். [இசை நாடகம் காமத்தை விளைக்கு மென்றுரைத்தார் உரையாசிரியருள் தலைசிறந்த நச்சினார்க் கினியரும்]. அம்முயற்சி களில் அநேக நூல்கள் அந்தோ! அழிந்து போயின. இப்போழ்தத்து எஞ்சியிருப்பன மிகச்சிலவே. இவற்றை இறைவன் பாதுகாத் தருள்க. மேற்கூறிய மருட்கை உணர்ச்சி இக்காலத்தினும் பலரிடம் குடிகொண்டிருக்கிறது இஃதென்னே!" என்பது அது (49 – 50).

இதில், சைனரும் தமிழிசையை அலைத்துத் தொலைக்க முயன்றவராகக் கூறியுள்ளமை மீள் ஆய்வுக்குரியதாம். ஏனெனில், நமக்கு மிகுதியாகக் கிடைக்கும் இசைத்தமிழ்ச் செய்திகள் எல்லாம் சிலப்பதிகாரம், சிந்தாமணி, பெருங்கதை, சூளாமணி, திவாகரம்

முதலாகிய நூல்களில் கிடைப்பனவே. இவற்றை இயற்றியவர்கள் சமணர்கள். ஆதலாலும், கலையழிப்பில் அவர்கள் தலைப்படாமை யோடு காத்தோம்பும் கடப்பாடும் மேற்கொண்டனர் என்பதும் அவர்கள் வைத்துச் சென்றுள்ள நூலானே இனிது விளங்கும்.

மேலும், இப்பரிதிமாற் கலைஞர் குறிப்பிடும் ஓர் அடிப்படை அழிவினைச் செயலும், உன்னிப்பாக உணர்ந்து என்றும் போற்றிக் காக்க வேண்டுவதாம். அது,

"தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாம் அறிந்தன போலவும் வட மொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர்",

என்பது (தமிழ் மொழி வரலாறு. 33). இதே சூழ்ச்சி முறையைத் தமிழிசை முறையைக் கற்று வடமொழியிசை முறையாக்கி, ஆங் கிருந்து தமிழுக்கு வந்தது போல் காட்டும் முயற்சி மேற் கொள்ளப் பட்டதாம். தூய தனித்தமிழ்ச் சிவஞான போதமும் வடமொழிப் பெயர்ப்பெனக் காட்டிய ஒன்றே இதனை விளக்க வல்லதாம்.

இனிப், "பாலைகளைப் பன்னிரண்டு இராசிகளாக வகுத்துக் கூறும் தமிழ் வகுப்பு முறை தமிழர்க்கே உரியதாகவும், வளர்ச்சியைக் குறிக்கும் ஒருநிலையாயும் இருக்கின்றது. கருநாடக இசையிலுள்ள தற்காலச் சுரமுறை இவ்வகுப்பு முறையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவ்வகுப்பு முறையைப் பொறுத்தே மேளகர்த்தா முறையும் ஏற்ற பெற்றி ஒழுங்கு செய்யப்பட்டதாகத் தெரிகிறது" என்று திரு. **என்.எசு. இராமச்சந்திரன்,** 'கருநாடக சங்கீதத்தின் இராகங்கள்' என்னும் நூலில் கூறுவது நோக்கித் தெளிவாக முடிவு செய்ய வாய்க்கின்றதாம்.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் (1210 – 1241) காசுமீர நாட்டுச் சாரங்கதேவர் என்பார் தென்னாட்டுக்கு வந்து ஊரூர் தோறும் வழங்கப்படும் தமிழிசையை ஆராய்ந்து சங்கீத ரத்தினாகரம் என்னும் பெயரிய வடமொழி நூல் ஒன்றனை எழுதினார். அதுவே கருநாடக இசைக்கு முன்னோடி நூலாகக் கருதப்படுகிறது. அக்காலத்திற்குப் பின்னர்த்தான் தமிழ்ப்பண்கள் வடமொழி இராகப் பெயர்களை ஏற்றன.

'செவ்வழியை, யதுகுல காம்போதி என்றும்,
சாதாரியைக், காமவர்த்தினி என்றும்,

புறநீர்மையைப், பூபாளம் என்றும்,

இந்தளத்தை, மாயாமாளவ கௌளை என்றும்

தக்கேசியைக், காம்போதி என்றும் கூறுவாராயினர்' என்று அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைப்பகுதித் தலைவராக இருந்த கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் கூறுகிறார்கள்.

சங்கீத ரத்தினாகரத்திற்குப் பின்னர், சுரமேளகலாநிதி (1550) வந்தது. நல்ல பாக்கம் அன்னமாசாரியார் தெலுங்குக் கிருதிகள் இயற்றினார் (1424 – 1503). புரந்தரதாசர் (1480 – 1544) பாடல்கள் அதன்பின் பிறந்து கீர்த்தன மாக்கப்பட்டன. கோவிந்த தீட்சிதர் 'சங்கீத சுதா' என்னும் நூல் செய்தார். ஐம்பது ராகங்களைக் குறிக்கிறார். அவர்தம் மகனார் வேங்கடமகி தஞ்சை விசயராகவ நாயக்கர் அவைப்புலவராகத் திகழ்ந்து 'சதுர்த் தண்டிப்பிரகாசிகா' என்னும் இசை இலக்கண நூல் இயற்றினார்.

'கோவிந்த தீட்சிதரும் வேங்கடமகியும் தமிழ் நாட்டில் வாழ்ந்து தமிழ் நாட்டுக் கோயில்களிலெல்லாம் நன்கு வளம் பெற்றிருந்த நாகசுரக் கலையின் சாரமான இசை அமுதத்தைப் பருகி அந்த அமுதம் பொங்கித் ததும்பி வழிந்த புண்ணிய விசேடத்தால் இசை இலக்கணம் செய்தார்கள். கோவிந்த தீட்சிதருக்கும் அவர் மனைவிக்கும் கற்சிலைகள் பட்டீச்சுரம் கோயிலில் பண்டைக் காலத்திலேயே அமைக்கப்பட்டிருந்தன' என்று அறிஞர் மு.அருணாசலம் குறிப்பிடுகிறார்.

மேலும், "அவர்கள் செய்த இலக்கணத்துக்குரிய இலக்கியம் – சங்கீதம் – எங்கிருந்தது, எதைப் பார்த்துச் செய்தார்கள் என்றால், தமிழ்நாட்டில் இருந்தது. இதைப் பார்த்துச் செய்தார்கள். கருநாடக சங்கீதம் என்று மட்டும் பெயர் கொடுத்த இந்தச் சங்கீதம் வடநாட்டில் இல்லை என்பது வெளிப்படை. அன்றி அங்கு இசைத் தொடர்பு விட்டுப்போயிற்று. சமஸ்கிருதத்திலும் இல்லை. சமஸ்கிருதத்தில் சுரசங்கீதம் இருக்கத் தகுமேயன்றி, பாவசங்கீதம் இருப்பதற் கில்லை. 'பாவம் என்பது பேச்சு வழக்கில்தான் வரமுடியும்" என்கிறார்.

ஆகம நூல்கள் வடமொழியில் உள்ளன. ஆனால் அதைச் செய்தவர்கள் தமிழாய்ந்த தமிழ்ச்சான்றோர்களே. அவர்கள் எழுதிய இலக்கணங்களுக்கு இலக்கியமாக இன்றும் திகழ்ந்து வருபவை தமிழ்நாட்டுக் கோயில்களே. இசைக்கலையும் இதுபோன்றதே. தமிழ்நாட்டு இசைக்கலையைக் கொண்டே அவர்கள் வடமொழியில்

இலக்கண நூல் இயற்றினார். அவர்கள் வடமொழியில் ஆகமம், இசை, சிற்பம் முதலிய கலைகளைச் செய்தமை தமிழ்நிலம் அன்றிப் பிறநிலங்களுக்கும் பொதுவாகிப் பயன்படும் கருத்தாலேயாகும். இந்நாளில் தாம் காணும் அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆங்கில மொழியில் எழுதப் பெறுவதுபோல் அன்று வடமொழியில் எழுதப்பட்டதாகும்.

சங்கீத மும்மூர்த்திகள் என்பார் தியாகையர் (1767 – 1847) சியாமா சாத்திரிகள் (1762 – 1827) முத்துசாமி தீட்சிதர் (1776 – 1835) என்பார்.

மூவரும் திருவாரூரிற் பிறந்தவர்களே; இவர்கள் கேட்டவையெல்லாம் தமிழிசையே. தியாகையர் தெலுங்கு நாட்டுக்குப் போனதில்லை; தெலுங்குப் பாட்டைக் கேட்டதில்லை; தம் வீட்டு மொழியாக இருந்த தெலுங்கில், தாம் கேட்ட தமிழிசையைப் பாட்டாக்கிக் கூறினார். சாத்திரிகள் தெலுங்கிலும் தமிழிலும் கீர்த்தனைகள் செய்தார். தீட்சிதர் வடமொழியில் பாடினார். அவரவர் தாய்மொழியில் பாடினார் என்பது தகும். இவர் இசை கற்றதெல்லாம் கோயில் மேளக்காரர், நாகசுரம் இசைப்பார் இவர்களிடத்தேயாம். இவர்தம் கிருதிகள் கிடைக்கப் பெற்றதும் திருப்பாம்புரம் நடராச சுந்தரம் பிள்ளை என்பவரிடத் திருந்தேயாம்.

பதினாறாம் நூற்றாண்டு முதல் விசயநகர வேந்தர் ஆட்சி தமிழகத்தில் பரவியதால் அவர்கள் மொழியாகிய தெலுங்கு சிறப்புற்றது. இசைவாணர்களும் போற்றினர். அக்காலத்திற்கு முன்னும் பின்னும் தமிழிசைப் பாடல்கள் இல்லாமல் போகிவிடவில்லை. ஏற்பட்டது யாதெனில், தமிழில் இசைப்பாக்கள் இருந்தும் அவற்றைப் பாடாமல் தெலுங்கிலும் பிறமொழிகளிலும் உள்ள கீர்த்தனைப் பாடல்களையே பாடிவந்தனர் என்பதும், அப்படிப் பாடுவதிலேயே உறுதிப்பிடியாக இருந்தனர் என்பதும் தான்.

பட்டுக்கோட்டையிலே ஓர் இசை நிகழ்ச்சி; மகாராசபுரம் அழைக்கப்பட்டிருக்கிறார். கோயில் விழா; பட்டுக்கோட்டை நாடிமுத்துப் பிள்ளை முன்னின்று நடாத்துகின்றார். வழக்கம் போல் மகாராசபுரம் தெலுங்கிசையைத் தொடங்குகிறார். அவையில் இருந்த மாப்பிள்ளையன் என்பார் "தமிழ்ப்பாடல்! தமிழ்ப்பாடல்!" என்கிறார்.

பாடமுடியாது என்கிறார் மகாராசபுரம்!

'ஆம்! நீர்பாட முடியாது' – என்கிறார் மாப்பிள்ளையனார்.

"என்னையா இது?" என்கிறார் நாடிமுத்தர்.

"இது உங்கள் சொந்த நிகழ்ச்சி இல்லை; கோயில் நிகழ்ச்சி; எங்களுக்குத் தமிழ்ப்பாட்டு வேண்டும்" என்றார் மாப்பிள்ளையன். நாடிமுத்தர் மகாராசபுரத்திடம், "ஏனையா, தமிழ்ப் பாட்டுப் பாட வேண்டியதுதானே" என்றார். "முடியாது" என்றார் மகாராசபுரம்.

"சரி! மூட்டையைக் கட்டிப் புறப்படும்" என்றார் நாடிமுத்தர். இஃதொரு சான்று.

திருவையாற்றிலேயே தியாகராசர் விழாவிலே எம்.எம். தண்டபாணி தேசிகர் தமிழ்ப்பாட்டு ஒன்று பாடிவிட்டார். கூட்டமே எழுந்து விட்டது! பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்த கூட்டமா? இல்லை! தெலுங்கிசை பாடவந்த கூட்டம்! என்ன சொல்லிக் கிளம்பியது. தியாகராசர் வளாகமே தீட்டுப்பட்டுவிட்டது! இனித்தீட்டுக் கழித்தால் அன்றிப் பாடமாட்டோம் என்று கூட்டமாகக் கிளம்பிவிட்டது! இது தெலுங்கு நாட்டில் நிகழ்ந்ததில்லை!

"காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண்பாடக் கவினார் வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடமாடும் திருவையா"ற்றில்
நிகழ்ந்ததாகும்!

கருநாடக இசை மும்மூர்த்திகள் தோன்றுமுன், கருநாடகக் கீர்த்தனைத் தமிழ்ப்பாடல்கள் இலவா? கீர்த்தனை பாடுவார் தோன்றினர் இலரா? மும்மூர்த்தியர்க்கு முன்மூர்த்தியராக, மும்மூர்த்தியர் திகழ்ந்துள்ளனர் என்பது வரலாற்றுண்மை! ஆயினும் அவர்கள் பிறப்பையும், சிறப்பையும், இசைச்சுரப்பையும் அறிந்தாரும். அறிந்ததைத் துணிந்துரைத்தாரும், அரங்கேற்றி னாரும் அரியர் ஆயினர். கற்பிப்பார் கருதாப் பொருள் கற்பார்க்கு எட்டுமா? அதற்கும் ஒரு விடிவு காலம் வேண்டியிருந்தது. அக்காலம் வரும்வரை காரிருள் மூட்டத்துள் கனன்று கொண்டிருக்கும் கங்காகவே அவர்கள் இசைப்பாடல்கள் அமைந்து கிடந்தன.

அம்மூவர் எவர்?

சீர்காழி முத்துத் தாண்டவர் (கி.பி. 1600)

தில்லை விடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை (1712 – 1787)

சீர்காழி அருணாசலக் கவிராயர் (1711 – 1779)

என்பார்.

முத்துத்தாண்டவர் இயற்றிய கீர்த்தனங்கள் 60; பதங்கள் 25. இவை 1852இல் அச்சிடப்பட்டவை. இவர் கீர்த்தனங்களுடன் இணைந்த கீர்த்தனங்களாக மாரிமுத்தாப்பிள்ளை கீர்த்தனங்கள் 25 கிடைத்துள. இவை பல்வேறு பதிப்புகளைப் பெற்றுள. எனினும் இப்பாடல் எண்ணிக்கையில் மாற்றமில்லை.

மாரிமுத்தாப் பிள்ளை இக்கீர்த்தனங்களையன்றி, புலியூர் வெண்பா, சிதம்பரேசர் விறலிவிடு தூது, தில்லைப்பள்ளு, சித்திரக் கவிகள், சிங்கார வேலவர் பதிகம் என்பனவும் செய்தார்.

அருணாசலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனை கி.பி. 1771 இல் இயற்றப்பட்டது.

இதனுள் "இசைப்பகுதிகள் 258; தரு என்ற கீர்த்தனம் 197; திபதை என்னும் ஈரடிக்கண்ணிகள் 60; தோடையம் என்னும் கடவுள் வணக்கம் 1. மொத்த விருத்தங்கள் 268; கொச்சகம் 6. வெண்பா 2. கலித்துறை 1. வசனப்பகுதி இரண்டே இரண்டு வரி." என்று கணக்கிட்டுரைப்பர். "இராகங்கள் 40; தாளங்கள்: ஆதிதாளம் 146 பாடல்கள். அடதாளச்சாபு 78 பாடல்கள்; ஏனை யவை 7 பாடல்கள்" என்றும் கூறுவர் (ஆதி மும்மூர்த்திகள். 42 – 43)

சீர்காழித் தலபுராணம், அநுமார் பிள்ளைத் தமிழ் முதலியனவும் இவர் பாடியவை. இவர்தம் கீர்த்தனை வழிஞராகக் கருதப்படுவார் மிகப்பலர்.

நந்தனார் சரித்திரக் கீர்த்தனம் பாடிய கோபாலகிருட்டிணபாரதி, உத்தர ராமாயணக் கீர்த்தனை பாடிய அனந்தபாரதி, திருவிளை யாடல் கீர்த்தனை பாடிய மழவை சுப்பிரமணிய பாரதி, பெரிய புராணக் கீர்த்தனை பாடிய இராமசாமி சிவம், பாகவத தசம ஸ்கந்த கீர்த்தனை பாடிய இலக்குமி அம்மாள், அருணாசலேசுவரர் கீர்த்தனை பாடிய வீரணப்புலவர், மேலுமொரு பெரிய புராணக் கீர்த்தனை பாடிய மழவை சிதம்பர பாரதி, மகாபாரதக் கீர்த்தனை பாடிய முத்துராம முதலியார், கந்தபுராணக் கீர்த்தனை பாடிய கவிகுஞ்சர பாரதியார், பெற்றான் சாம்பான் சரித்திரக் கீர்த்தனை பாடிய தியாகராச தேசிகர் என்பார் பெரிய அளவில் கீர்த்தனம் பாடியவர்கள். இவையன்றித் தனித்தனி அடியார் வரலாறு பாடியவர்களும் உளர்.

இக்கீர்த்தனங்கள் பழைய தமிழிசை மரபில் வந்தவை. இவை பெரிதும் சோழ நாட்டில் பயில வழங்கியமையாலும், சோழநாடு

என்பது தஞ்சை நாடு ஆகலானும் இவ்விசைப்பாணி 'தஞ்சாவூர்ப் பாணி' என்றே வழங்கப்பட்டது. இதுவே மொழிகடந்த நிலையில் கருநாடக சங்கீதம் எனவும் பட்டது. கருநாடகம் என்பது தூய தமிழிசை என்பதேயாம் என்பது ஆதி மும்மூர்த்திகள் பற்றி ஆய்ந்த அறிஞர்கள் கருத்தாகும்.

"தெருவில் வாரானோ – என்னைச் சற்றே
திரும்பிப் பாரானோ"

என்னும் முத்துத் தாண்டவர் கீர்த்தனமும்,

"காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே – எனைக்
கைதூக்கி ஆள் தெய்வமே"

என்னும் மாரிமுத்தாப்பிள்ளை கீர்த்தனமும்,

'ஆரோ இவர் ஆரோ – என்ன
பேரோ அறியேனே"

என்னும் அருணாசலக் கவிராயர் கீர்த்தனமும் அவையோர் உள்ளமெலாம் கொள்ளை கொண்டவை. இவற்றைப் பாடிய கீர்த்தனைத் தோன்றல்கள் தமிழிசைத் தோன்றல்களேயாவர்.

'சீர்த்தி' என்பது மிகுபுகழ் என்பதாம். சீர், சீரை, சீர்மை என்பனவெல்லாம் புகழ்வழிப்பட்டனவே. சீர்த்தி என்னும் பெண் பாற் பெயரும் பண்டே வழக்கில் இருந்தது. சீரன் என்பது கீரன் என மாற்றம் பெற்றதுபோல், சீர்த்தனை என்பது கீர்த்தனையாகத் திரிந்தது. தமிழ்ச் சீர்த்தனை கீர்த்தனையாகி மயங்கிய வகை இது.

தமிழிசைக் கீர்த்தனை புறக்கணிக்கப்பட்டு, தெலுங்கு வடமொழி இந்துத்தானிக் கீர்த்தனைகளே கோலோச்சிக் கொண்டிருந்த காலம் காரிருள் மூட்டம் கப்பிய காலமாகும்.

இப்பகுதி நிறைவிலே ஒரு செய்தி:

"தமிழ்ப் பாட்டுக்கும் தெலுங்குப் பாட்டுக்கும் சம அந்தஸ்து அளிக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து.

தமிழ்ப் பாட்டுகளைத் தவிர தெலுங்குப் பாட்டுகளே பாடக் கூடாதென்று ஒருவர் என்னைச் சொன்னால் நான் அந்தக் கச்சேரிக்குப் போகச் சம்மதிக்கமாட்டேன்" என்று கூறினார், சங்கீத வித்வான் அரியக்குடி ராமானுச ஐயங்கார் (22.11.1941). 'சொன்னார்கள்' (பக். 54) என்னும் சுரதா நூலில் இடம் பெற்றுள்ள செய்தி இது.

இதே பெரியவர் உள்ளகச் செய்தி என்ன?

"தெலுங்குப் பாட்டுகளைத் தவிர தமிழ்ப்பாட்டுகளே பாடக் கூடாதென்று ஒருவர் என்னைச் சொன்னால் நான் அந்தக் கச்சேரிக்குப் போகச் சம்மதிக்க மாட்டேன்" என்னும் நோக்கும் போக்கும் இருந்ததா? எப்படிமறைப்பினும் உண்மை தன் முகத்தைக் காட்டிவிடவே செய்யும்தானே!

எகுபதியம் உட்பட உலகிசை யனைத்திற்கும் தமிழிசையே தாயாயினும் கடந்த ஐயாயிரம் ஆண்டுகளாகத் தமிழ், தமராலும் மாற்றாராலும் (பெரும்பான்மை இலக்கியமும் சிறுபான்மை மொழியும்) சிறிது சிறிதாக மறைப்பும் குறைப்பும் அழிப்பும் பழிப்பும் உற்று, தலைமைத் தமிழ்ப் புலவராலும் தக்கவாறு அறியப்படாது போயினமையின் இன்று, மகள் தாயைப் பெற்றாள் என்னும் முறையில் இயற்றமிழ் வடமொழி வழியதென்றும், இசைத் தமிழ் கருநாடக சங்கீத வழியதென்றும், நாடகத் தமிழ் பரத சாத்திர வழியதென்றும் உண்மைக்கு மாறான கருத்துக்கள் உலவியும் ஓரளவு நிலவியும் வருகின்றன எனக் காரிருள் மூட்டம் கப்பிய வகையை எடுத்துக் காட்டுகிறார் பாவாணர் (பழந்தமிழிசை மதிப்புரை பக். 25).

மேலே விடிவெள்ளி கிளர்ந்த வகையைக் காணலாம். அதற்கு முன்னர்க் காரிருள் கப்பிக் கிடந்த நிலையைக் காட்டும் ஒருவேடிக்கைச் செய்தி:

குட்டப்பராயடு என்றொரு தெலுங்கரசன் தமிழ் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்தான். கலைமகள் நாளன்று அவன் கொலுவிருந்து புலவரைச் சிறப்பிக்க முயன்றான். அப்பொழுது ஒருவன் புலவன் எனச் சொல்லி,

"ராயடு ராயடு காவெட்டி ராயடு
கோவைப் பழம்போலச் சிவந்த ராயடு
குன்றி மணிபோலச் சிவந்த ராயடு
காவியக் கல்லுபோலச் சிவந்த ராயடு
கட்டப்ப ராயடுமகன் குட்டப்ப ராயடு"

என்று ஓலைச் சுருளில் வைத்துப்படித்தான். இராயடுவுக்குப் பொருள் புரியவில்லை. அருகிருந்தவர்கள் அஃது ஓர் அருமையான தமிழ் வாழ்த்துப்பாடல் என்று மெச்சுவதைக் கேட்ட இராயடு புலவனுக்குப் பொற்பரிசு வழங்கினான்.

அதைக்கண்ட மற்றொருவன் பொறாதவனாகி, இப்பாடலில் உவமைவழு இருக்கிறது. குன்றிமணி காவிக் கல்லையும் கோவைப் பழத்தையும் போல் சிறந்ததாகாது. குன்றிமணி மூக்கில் கருமை இருக்கிறது. இராயடு அவ்வாறு இல்லை. ஆதலால் பாட்டு, பிழைபட்டது என்றான்.

பரிசில் பெற்றவனுக்குப் பாடும் புலமை இல்லாது போயினும் பொழுதுக் கேற்ற அறிவு இருந்தது. அவன் உடனே, 'இவன் எதிர்த்துக் குற்றம் காட்டுவான் என்றே நான் என் பாடலில் குன்றிமணிக்கு முன்னும் பின்னும் கோவைப் பழத்தையும் காவிக்கல்லையும் வைத்திருக்கிறேன். கோவைப்பழத்தைப் பிழிந்தால் சாறுவரும். அச்சாற்றில் காவிக்கல்லை இழைத்தால் ஒரு சிவந்த குழம்பு உண்டாகும். அதை எடுத்துக் குன்றிமணியின் மூக்கில் தடவி விட்டால் குன்றிமணியின் களங்கம் மறைந்து போகும்; ஒரே சிவப்பாக இருக்கும். இதைத் தெரிந்து கொள்ளாது இவன் பழிக்கப் புறப்பட்டு விட்டான்" என்றான். இராயடு நிறை வடைந்து மேலும் பரிசுகள் கொடுத்தான். "இத்தகைய வருந்தத்தக்க நிலையே அக்காலத்தமிழுக்கு ஏற்பட்டிருந்தது" என்கிறார் கோ.சுப்பிரமணியபிள்ளை. (முத்தமிழ் முழக்கம். 60 – 61)

தமிழிசை ஆர்வம் அரங்கைக் கூட்டுவார்க்கு இருந்தாலும், அரங்கேற வருவார்க்கும் ஆர்வமும் துணிவும் வேண்டுமே! எத்தகைய இக்கட்டு நிலை?

பின்னே தமிழிசைச் சங்கம் தோற்றுவித்து, அரங்கும் அமைத்து விட்ட நிலையில், "யாரும் பாடவரவில்லை என்றால் நானும் அண்ணாமலைச் செட்டியாருமே மேடையேறிப் பாடிவிடுவது என்று தீர்மானித்தோம். ஆனால் அந்நிலை ஏற்படவில்லை" என்று ஆர்.கே. சண்முகனார் குறிப்பிடுகிறார்.

ஆனால், மதுரையில் தமிழிசைச் சங்கம் தோற்றுவித்து, அரங்கும் ஏறியபோது (31.12.45) பாடப்பட்ட 14 பாடல்களில் மூன்றே மூன்று பாடல்கள்தான் தமிழ்ப்பாடல்களாம்! பாடுவார் அப்படி உச்சிக்கிளையில் இருந்தனர்! பாடக்கேட்கும் தமிழர் அப்படிக் குனிந்து கண்ணை மூடிக்கிடந்தனர்.

'காரிருள் கப்பிக்' கொண்ட கொடிய நிலைதானே இது?

7. விடிவெள்ளி

காரிருள் கப்பிக் கொண்டுள்ள பொழுது 'வைகல்' எனப்படும். அவ்வைகலை அகற்ற, விடிவெள்ளி தோன்றும். அப்பொழுது, 'வைகறை'' எனப்படும். தமிழிசை தமிழ்மண்ணில் மீண்டும் திகழத் தமிழ்க் கீர்த்தனங்கள் இசைப்பாடல்கள் சிறு நூல்கள் எனப்பலர் இயற்றியமையை அறிந்தோம். ஆனால் அதனை அழுந்தி நின்று ஆய்வு வகையால் தெளிவிக்க முயன்றாருள் தலைமகனாரும், ஒப்பாரும் மிக்காரு மின்றி இசைத்துறையில் தோய்ந்தவரும், கருணாமிர்தசாகரம் என்னும் பெயரிய, பெரியதோர் இசைநூலை வழங்கியவரும் தஞ்சை ஆபிரகாம் பண்டிதரே ஆவர் (1859 – 1919). ஆபிரகாம் பண்டிதரின் இளந்தைப் பருவத்தே விளங்கியவர் வள்ளலார் (1823 – 1874). *அவ்வள்ளலார் வாழ்ந்த நாளிலேயே* பாடும் பறவையாகத் திகழ்ந்தவர் **வண்ணச் சரபம் தண்டபாணி** அடிகள். அவ்வடிகள் காலத்திலேயே புகழ் வாய்ந்த இசைச் செல்வராகத் திகழ்ந்தவர் மாயூரம் **வேதநாயகம் பிள்ளை** (1826 – 1889) இவ்வாறு, இசைச் செல்வர்கள் பலரும் தமிழ் மண்ணில் திகழ்ந்த பேறும், அவர்களைப் பற்றி அறிந்து கொண்டு பற்றிச் செல்லும் பேறும் ஆபிரகாம் பண்டிதர்க்கு வாய்த்திருக்கவும் கூடும். அது உள்ளூறு தூண்டலாக இருந்திருக்கவும் கூடும்! ஆயினும் என்ன? ஆபிரகாம் பண்டிதர் ஒருவர் தாமா அந்நாளில் அறிஞராகத் திகழ்ந்தார்? பிறரெல்லாம் தூண்டப் பெற்றிலரே!

பண்டிதரின் தமிழிசைப் பற்றுமைக்கு ஏற்பட்ட ஒரு சூழலை அவர்தம் இசைவல்ல மகனார் வரகுணபாண்டியனார் வரைந்துளார்.

1901 ஆம் ஆண்டின் இறுதியில் "கருணானந்தர் வைத்திய சாலை இல்லச் சிறுவர் 'தமிழறியுஞ்சங்கம்'" எனப் பெயர் பூண்ட ஒரு சங்கத்தை நிறுவி, அதில் தம்மக்களையும் தம் உற்றார் உறவினரின் மக்களையும் உறுப்பினர்களாக்கித் தாம் அதற்குத் தலைமை ஏற்று, கட்டுரை வரைதல், சொற்பொழிவாற்றல், இசைபயிலல், நாடகமாடல் முதலிய பல அருநிகழ்ச்சிகளை அதன்

உறுப்பினர்களைக் கொண்டே தம் முன்னிலையில் நடத்தி இன்புற்றுக் களித்துவந்தார்.

ஒவ்வொரு ஞாயிறும் மாலையும் அவர்கட்குத் தம் மறை கூறும் நன்னெறியினைப் பற்றி ஓதுவார். மிடற்றிசை, யாழிசை, கின்னரி இசை, மேனாட்டு இசை, வரலாற்று இசை நிகழ்ச்சிகள் (கதா காலட்சேபம்) முதலியவற்றில் தக்க பல ஆசிரியரைக் கொண்டு அவர்களைப் பயிற்றுவித்து வந்தார். தம் மக்கள் தாம் அறியாப் பிறமொழிகளில் அமைந்துள்ள இசைப்பாக்களைப் பாடுவதால், அவர்களும் அதனைச் செவிமடுப்போரும் எவ்வகையிலும் உள்ளக் கிளர்ச்சியையும் உணர்ச்சியையும் அமைதியையும் எள்ளளவேனும் அடைதற்கியலா திருத்தலைக் கண்ட பண்டிதரவர்கள், மிக உள்ளம் வருந்தினார்.

பலநாள்கள் உன்னி அதற்கும் தக்கதொரு வழிசெய்து களைந் தார். மேற்குறித்த சங்க மக்கட்கு அவரவரின் இசையாசிரியர்கள் கற்பித்த பிறமொழிக் கீர்த்தனங்கள், வர்ணங்கள், சுரகெதி களானவற்றிற்கு அரும்பொருள் நிறைந்த தமிழ்ப்பாக்களை இயற்றி அவற்றை அவர்களுக்குக் கற்பித்தும்வைத்தார்.

இவ்வாறு சற்றேறக் குறையப் பதினைந்து வர்ணங்கள், இருபத்தைந்து சுரகெதிகள், இருநூறுக்கும் மேற்பட்ட கீர்த்தனைகள் ஆகியவற்றிற்குத் தமிழ்ப்பாக்களை அமைத்து அவற்றுள் ஒருநூறு பாடல்களைப் பாலை, கேள்வி, பாணி (சுருதி, சுரம், லயம்) என்பனவற்றின் குறிப்புகளுடன் ‘கருணாமிர்த சாகரத் திரட்டு என்ற இசைப்பாநூலை 1907ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டார். தமிழிசையைப் புதுப்பித்ததற்கு அடிகோலியதில் முதல்வரான இவர், இதன் பிறகும் உள்ள நிறைவு கொண்டாரில்லை.

ஒருவர் இயற்றிய இசைப்பாக்களிலுள்ள ‘பண்ணாளத்தியாகிய வர்ணமெட்டு’களில், வேறொருவர் தமிழ்மொழிப் பாக்களை அமைத்துத் தாம் பாடுவது "இரவல் சீலையை உடுத்திக் கொண்டு கலியாணப் பந்தலில் மினுக்குதலை ஒக்கும்" என எண்ணினார். ஆகலின், பல பண்களில் (இராகங்களில்) பல பண்ணாளத்திகளை இயற்றிக் கொள்ளும் விதிமுறைகளையும் ஆராய்ந்தறியப் புகுந்தார். புகவே ஒரு தானநிலையிலுள்ள (ஸ்தாயியிலுள்ள) பாலைகளின் (சுருதிகளின்) அலகுகள் வடமொழி நூல்கள் கூறுவதுபோல் இருபத்திரண்டாக இராது, இருபத்து நான்காக இருத்தல் கண்டு

அந்நுண்பொருளை நம் சிலப்பதிகாரத்தின் துணை கொண்டு மேலும் துருவி யாய்ந்து ஒரு தான நிலையிலுள்ள பாலைகளின் அலகுகள் 24, 48, 96 என அமைந்திருத்தலைக் கண்டு மிகமகிழ் வுற்று இஃதொன்றினையே பொருளாகக் கொண்ட 'கருணாமிர்த சாகரம்' என்றோர் நூலை வெளியிட்டார். கருணாமிர்தசாகரம் 1917 இல் வெளிவந்தது.

இரட்டைப் பேரளவுப் பக்கங்கள் 1346 கொண்டது அக் கருணாமிர்த சாகரத்தின் முதற்பாகம். அவர் அந்நூலை ஆக்குதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளையெல்லாம் முகவுரையால் (1 – 20) அறியலாம்.

"சரித்திர காலம் ஆரம்பிக்கிறதற்கு வெகுகாலத்திற்கு முன்னதாக வுள்ள லெமூரியா நாடு தமிழ்நாடாயிருந்த தென்றும், அதில் வசித்து வந்தவர்கள் தமிழர்களாய் இருந்தார்கள் என்றும், லெமூரியாவில் பேசப்பட்டு வந்த பாஷை தமிழாயிருந்ததென்றும், அது இயல் இசை நாடகமென்னும் முத்தமிழாக வகுக்கப்பட்டு இலக்கண வரம்புடன் மிகுந்த தேர்ச்சியுடையதாய் இருந்ததென்றும் அதன்பின்னுண்டான பிரளயங்களில் அந்நாடு கொஞ்சம் கொஞ்சமாகக் கடலால் விழுங்கப்பட்டபின் பல கலைகளும் இசைத்தமிழைப் பற்றிச் சொல்லும் அரிய நூல்களும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து, தற்காலம் அனுபோகத்திலிருக்கும் சொற்பமுறை மிஞ்சியிருக்கிற தென்றும் தெளிவாக அறிவோம்.

இன்றைக்குச் சுமார் 1850 வருடங்களுக்கு முன்னிருந்த இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தாலும் அதன் உரையாலும் சொற்ப பாகம் காண்கிறோம். இதில் உலகத்தவர் எவரும் தற்காலம் வரை கண்டு கொள்ளாமல் இருக்கும் சுரம், சுருதிகள், இராகங்கள், இராகங்கள் உண்டாகும் முறைகளைப் பற்றி அங்கங்கே சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறதென்று காண்போம். பூர்வ தமிழ் மக்களின் சங்கீத முறையில் சிலவற்றை எழுதவந்த மற்றவர்கள் பூர்வ முறைக்கும் அனுபோகத்திற்கும் ஒத்து வராத சில முறைகளையும் சுருதிக் கணக்குகளையும் எழுதி வைத்ததினால் இவ்வளவு தூரம் பலர் பலவாறாக நினைக்க இடமுண்டாயிற்று என்று தெளிவாகக் காண்போம்.

உலகத்தில் இதுவரையும் சங்கீதத்தைப்பற்றி எழுதிய சாஸ்திரங்கள் யாவற்றிலும் தமிழ்மக்களின் கானமுறை மிக

மேலானதென்றும் எந்தத் தேசத்தவரும் நாளிதுவரை அறிந்திராதவை யென்றும் யாரும் சாஸ்திர முறையாய் ஒப்புக்கொள்ளக் கூடியதென்றும் நாளது வரையும் தென்தமிழ் நாட்டில் அனுபோகத்தில் நிலைத்திருக்கிறவை யென்றும் திட்டமாய் அறிந்து கொள்வோம்.

உலகத்தவர் எவராலும் இதன்மேல் நுட்பமாய்ச் சொல்ல முடியாதென்று கருதும்படி மிகுந்த தேர்ச்சி பெற்ற சங்கீத நூலைப் போலவே சிற்பம், சோதிடம், கணிதம், வைத்தியம், வாதம், யோகம், ஞானம் முதலிய அருங்கலைகளும் மற்றும் பாஷைகளில் திருப்பப்பட்டு வந்திருக்கின்றன என்றும், வருகின்றன என்றும் நூல் ஆராய்ச்சி செய்யும் அறிவாளிகள் காண்பார்கள்.

தமிழ்மக்களின் கானமே மிகப்பூர்வமானது. தமிழ் மக்களின் கானமே உலகத்தவர் கானங்கள் யாவற்றினும் மிகுந்த தேர்ச்சி யுள்ளது. உலகத்தவர் யாவரும் அனுபோகத்தில் காணக்கூடியது. அவர்கள் சொல்லும் ஏழு சுரங்களும் பன்னிரண்டான அரைச் சுரங்களும் இருபத்துநான்கான கால்சுருதிகளும் 48, 96 ஆன நுட்பச் சுருதிகளும் நிச்சயமானவை. நம் வாயினால் சொல்லவும் காதினால் கேட்கவும் கூடிய நுண்மையான ஓசை இன்னதென்று திட்டமாய் மற்றவர் அறிந்து கொள்ளாததினால் சுருதிகள் ஒன்றுதான், சுருதிகள் இரண்டு விதம், சுருதிகள் மூன்று விதம், சுருதிகள் நான்குவிதம், சுருதிகள் ஒன்பது விதம், சுருதிகள் பத்தொன்பது விதம், சுருதிகள் இருபத்திரண்டு விதம், சுருதிகள் இருபத்தைந்து விதம், சுருதிகள் நாற்பத்திரண்டு விதம், சுருதிகள் ஐம்பத்து மூன்று விதம், சுருதிகள் அறுபத்தாறுவிதம், அனந்தங்கள் என்று பலர் பலவிதமாகச் சொல்லுகிறதாக நாம் அறிவோம். பூர்வ தமிழ் மக்கள் வழங்கி வந்த இசைத் தமிழின் வார்த்தைகளும் பல அரிய முறைகளும் தற்காலத்தில் முற்றும் வழக்கத்தில் இல்லாமல் அந்நியபாஷைச் சொற்களால் வழங்கி வருவதால் அவற்றிற்குரிய பல குறிப்புகளையும் அங்கங்கே அடிக்கடி எடுத்துச் சொல்ல வேண்டியதாயிற்று" என்று முகவுரையில் (18 – 19) வரைகிறார். நூல் உள்ளுறையை விளக்கிக் காட்டுவது ஈதாம்.

"தமிழர்களுக்குச் சங்கீதம் ஏது? கண் காது மூக்கு வாய் என்னும் வார்த்தைகள் கூட சமஸ்கிருதத்தில் இருந்து திரிந்து தமிழில்

வழங்குகின்றன என்று சொல்லிய கனவான்களுக்கும் நான் மிகவும் மனப்பூர்வமாக வந்தனம் சொல்கிறேன் (14) என்றும்,

"தமிழர்களுக்குச் சங்கீதம் ஏது என்று சொல்லி என் அபிப்பிராயத்திற்கு முற்றிலும் விரோதமாய் இருந்தாலும் கர்நாடக சங்கீதத்தில் மிகப்பாண்டித்திய முள்ளவரென்று நாளதுவரையும் யாவராலும் கொண்டாடப்பட்டுவரும் சிறந்த வித்வான் மகா.ரா.ரா. ஸ்ரீ மகா வைத்திய நாதையர் அவர்களிடத்தில் கேட்டுக் கொண்டபடி என் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்த பஞ்சாபகேசபாகவர்க்கு நான் நன்றியுள்ளவனாய் இருக்கிறேன் என்றும் (15) கூறும் பகுதியால் தமிழிசைக்கு இருந்த எதிரீடுகள் என்ன வென்றும், அவ்வெதிரீடு தந்த துணிவும் உழைப்பும் மிகுதி என்றும் புலப்படும்.

"சங்கீதத்திற்குப் புதிய உலகம் தோன்றியிருக்கிறது.

சங்கீதத்தில் வழங்கும் சுருதிகளை அறிவதில் இவைபோதும்"

எனப் பரோடா இசைமாநாட்டில் இவர் கருத்துக்குக் கிடைத்த வரவேற்பும் மதிப்பீடும் உயர்ந்தவையாம் (16).

இவர் தம் இசையாய்வை முறையாகவும் செம்மையாகவும் செய்து உண்மையை நிலைநாட்ட வேண்டும் என்னும் உறுதிப்பாடே 27.5.1912இல் தஞ்சையில் **'சங்கீத வித்யா மகாஜன சங்கம்'** என்னும் சங்கம் நிறுவவும் தொடர்ந்து ஆய்வு அரங்குகள் நிகழ்த்தவும் ஆயிற்றாம்.

அவ்வகையில்,

27.5.1912 இல் முதல் இசைத்தமிழ்க் கருத்தரங்கும்

31.8.1912 இல் இரண்டாம் இசைத்தமிழ்க் கருத்தரங்கும்

19.4.1913 இல் மூன்றாம் இசைத்தமிழ்க் கருத்தரங்கும்

9.8.1913 இல் நான்காம் இசைத்தமிழ்க் கருத்தரங்கும்

18.4.1914 இல் ஐந்தாம் இசைத்தமிழ்க் கருத்தரங்கும்

24.10.1914 இல் ஆறாம் இசைத்தமிழ்க் கருத்தரங்கும்

19.10.1916 இல் ஏழாம் இசைத்தமிழ்க் கருத்தரங்கும்

கூட்டி ஆராயப்பட்டனவாம். இவற்றையெல்லாம் எண்ணும்போது ஆபிரகாம் பண்டிதர் தனியொருவராகத் தமிழிசை இயக்கம் எனத் திகழ்வது தெளிவாகின்றது. இவர்தம் அருமைத் துணைவியார் உதவியும், அருமைச் செல்விமார் இசைப்பாட்டும் கருவிப் பாட்டும்

காட்டித் தம் தந்தையார் தமிழிசை ஆய்வைப் பல்வேறு அரங்குகளிலும் அறிஞர்கள் கொண்டாடும் வகையில் மெய்ப்பித்துக் காட்டிய அருமை மிகு பாராட்டுக்கு உரியதாம்.

1916 மார்ச்சு 29 இந்து செய்தித்தாளில். "ஒரு ஸ்தாயியில் வெகுகாலமாய் வழங்கிவரும் 22 சுரஸ்தானங்களுக்குப் பதிலாக 24 சுரஸ்தானங்கள் இருக்கின்றன என்று ராவ் சாகேப் ஆபிரகாம் பண்டிதரவர்கள் சொல்லி ரூபகாரப் படுத்தினதானது எல்லாருடைய மனத்திலும் ஒருவிதக் கிளர்ச்சியை உண்டு பண்ணியது. அந்தச் சுருதிஸ்தானங்களை வீணையின் மூலமாயும் வாய்ப்பாட்டின் மூலமாயும் அவர்கள் குமாரத்தி மரகதவல்லியம்மாள் ருசுப்படுத்தின தானது எல்லோருக்குமெ பரம சந்தோஷத்தை உண்டுபண்ணிற்று. அதில் ஒருவராவது குற்றம் கண்டுபிடிக்கமுடியவில்லை. ஒவ்வொரு வரும் அந்த ஸ்வரஸ்தானங்களைக் கேட்டு மகிழ்ந்தது மல்லாமல் அந்த அம்மாளின் சாரீரத்தையும் கேட்டு ஆனந்தித்தார்கள்" என்னும் செய்தி வந்தது. அது பரோடாவில் நிகழ்ந்த அனைத்திந்திய இசைக் கருத்தரங்கில் நிகழ்ந்ததாகும் (கருணாமிர்த சாகரம். 998). பண்டிதர் தாம் சொல்லும் எதனையும் உறுதியாகவும் தெளிவாகவும் கூறும் இயல்பினர். ஆய்வில் சலிப்பு அற்றவர். பொறுமையாக நிறுவிக் காட்டச் சளைக்காதவர். மாறுபட்டாரையும் மதிப்பவர். இவை யெல்லாம் கருணாமிர்த சாகரப் பெருங்கடலின் ஒவ்வொரு பக்கத்திலும் துளிக்கும் துளிகளாகும். ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்:

தேவாரப் பண் சொல்லத் தஞ்சைப் பெரிய கோயிலில் 50 பேர் ஏற்பட்ட பிறகே, சங்கீத ரத்நாகரர் "தக்கவிபாஷா தேவாரவர்த்தினி" என்று எழுதியிருக்கிறார். தமிழ் நாட்டில் பலபண்கள் பாடப்பட்டு வந்த பிறகே சாரங்க தேவர் சங்கீத ரத்னாகரம் எழுதியிருக்கிறார் என்று தெரிகிறது. இப்படியிருக்கச் சங்கீத ரத்னாகரமே பூர்வ நூல், சமஸ்கிருத பாஷைக்குப் பிறகே சங்கீதம் உண்டாயிற்று, தமிழர் களுக்குச் சங்கீதம் தெரியவே தெரியாது என்று குதர்க்கமிடுவோர் மேற்படி சாசனம் எழுதியிருக்கும் கல்லைப் பார்ப்பார்களாக" என்று இராசராசன் கல்வெட்டுச் செய்தியைக் காட்டுகிறார் (932)

தஞ்சை இசையாய்வு அரங்குகளுக்கு வந்திருந்தோர் பட்டியல், ஆய்வுச் செய்தி, தடைவிடை என்பனவெல்லாம் காண ஆபிரகாம் பண்டிதர் 'இசைப்பட்டடை' நிறுவனமாகவே விளங்கியமையை உணரமுடியும்.

ஆபிரகாம் பண்டிதர், '**தமிழிசையே உலகத் தலைமை இசை**' என்றும், அவ்விசையே மற்றை மற்றை இசைகளுக்கு அடிமூலமாய் அமைந்து ஆட்சி செய்கின்றது என்றும் நிறுவிக்காட்டினார். வேற்றிசையாளர்களும் ஒப்புமாறு அரங்குகளில் பாடியும் இசைத்தும் ஏற்க வைத்தார். அவர் பணி அந்நாளில் தமிழிசைப் பாலை யிடையில் பசுஞ்சோலை என அமைந்ததாம். ஏனெனில் தமிழ் வல்லாரும் தமிழிசை ஒன்றெனத் தனித்தில்லை என்று நம்பிக் கொண்டிருந்த நாளில், அதுவே உலகின் மூல இசை என்பதை விளக்குவது எளிமைப்பட்டதாகுமா?

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் எழுந்த இவ்விசைப் பட்டடை முயற்சியின் போதிலேயே, தமிழ்ப் பாட்டுத் தமிழ்நாட்டு இசையரங்குகளில் பாடப்படவேண்டும் என்னும் ஒரு கருத்து வலிமையாகக் கிளர்ந்தது. அதனைச் செய்தவர் பாரதியார்.

1916 ஆம் ஆண்டு மே, சூன், சூலைத் திங்களிலே 'ஸங்கீத விஷயம்' என்னும் தலைப்பில் எழுதியதில் உள்ளசில குறிப்புகள்:

"ரஸ ஞான மில்லாதபடி பல்லவிகளும் கீர்த்தனங்களும் பாடுவோர் ஸங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள். இக்காலத்து ஸங்கீத வித்வான்களிலே பலர் 'ஸங்கீதத்திற்கு நவரஸங்களே உயிர்' என்பதை அறியாதவர்.

"முத்துசாமி திக்ஷிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் முதலியவர்களின் கீர்த்தனங்களிலே சிலவற்றை அதிக ஸங்கதிகளுடன் பாடுவோரே 'முதல் வித்வான்கள்'. இந்தக் கீர்த்தனங்களெல்லாம் ஸமஸ்கிருதம் அல்லது தெலுங்கு பாஷையில் இருக்கின்றன. ஆகவே முக்காலே மும்மாகாணி வித்வான்களுக்கு இந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும் பதங்களையும் கொலைசெய்தும் விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவனுக்கு 'ரஸம்' தெரிய நியாயம் இல்லை.

"நானும் பார்த்துக்கொண்டே வருகிறேன். பாட்டுக்கச்சேரி தொடங்குகிறது. வித்வான் 'வாதாபி கணபதிம் என்று ஆரம்பஞ் செய்கிறார். 'ராமநீ ஸமான மெவரு' 'மரியாத காதுரா' 'வரமு லொஸகி'... ஐயையோ ஐயையோ ஒரேகதை.

"எந்த ஜில்லாவுக்குப் போ. எந்த கிராமத்திற்குப் போ எந்த 'வித்வான்' வந்தாலும், இதே கதைதான். தமிழ்நாட்டு ஜனங்களுக்கு

இரும்புக்காதாக இருப்பதால் திரும்பத் திரும்பத் திரும்பத்திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களை வருஷக்கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தோற்காது உள்ள தேசங்களிலே இந்த துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். 'பூர்விக மஹான்களுடைய பாட்டுக்களை மறந்து போய் விட வேண்டும்' என்பது என்னுடைய கக்ஷி அன்று. அவற்றை அர்த்தத்துடன் பாடவேண்டும். பதங்களைப் பிழையாக உச்சரிக்கக் கூடாது. பதங்களை வாய்விட்டுத் தெளிவாகச் சொல்ல வேண்டும். விழுங்கி விடக்கூடாது. பத்து முப்பது கீர்த்தனங் களையே ஓயாமற் பாடி ஸங்கீதத்தை ஒரு தொல்லையாகச் செய்துவிடக்கூடாது.

"புதிய புதிய கீர்த்தனங்களைக் கொண்டுவர வேண்டும். இப்போது ஸங்கீத வித்வான்களிலே தலைமைப் பட்டிருப்போர் தமிழிலே புதிய மெட்டுக்களில் கீர்த்தனங்கள் செய்ய முயல வேண்டும். நவரஸங்களின் தன்மைகளையும் இன்னின்ன ரஸங்கள் உண்டாகும் என்பதையும் கற்றுத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். (கட்டுரைகள் பக். 402 – 404).

பூர்வகாலத்து மகான்களுக்குத் தெய்வப் பிரஸாத மிருந்தது. எங்களுக்கு இல்லையே. என்ன செய்வோம் என்று புதிய வித்துவான்கள் புதிய கீர்த்தனங்கள் அமைப்பதிலே பின்வாங்கக் கூடாது. தெய்வங்கள் இறந்து போகவில்லை. இப்போதும் அவற்றை உபாஸனை செய்து அவற்றின் அருள் பெறலாம். தெய்வப் பிரஸாதத்தை ஒருவன் பக்தியாலும், ஜீவதயையாலும், நேர்மை யாலும், உண்மையாலும், இடைவிடாத உழைப்பினாலும் ஸம்பாதிக்க முடியும்.

'நாட்டிலே ஸங்கீதத்திற்குச் சரியான போஷணை செய்யும் ராஜாக்களும் பிரபுக்களும் இல்லை. எங்களுக்கு ஜீவனமே கஷ்டமாயிருக்கிறது. மனக்கஷ்டம் இல்லாமல் இருந்தால் அன்றோ ரஸஞானத்தை வளர்த்துக் கொண்டு போகலாம். சில வருஷங் களுக்குள்ளே சில கீர்த்தனங்களை வரப்படுத்திக் கொண்டு ஜீவனத்திற்கு வழிதேட வேண்டிய ஸ்திதி ஏற்பட்டிருக்கிறது. என்ன செய்யலாம்?' என்று நினைத்து மனமுடைந்து போகவேண்டாம்.

இப்பொழுது உலக முழுவதிலுமே ராஜாக்களையும் பிரபுக்களை யும் நம்பி வித்தை பழகும் காலம் போய்விட்டது. பொது ஜனங்களை நம்ப வேண்டும். இனிமேல் கலைகளுக்கெல்லாம் போஷணையும்

ஆதரவும் பொது ஜனங்களிடமிருந்து கிடைக்கும். அவர்களுக்கு உண்மையான அபிருசி உண்டாக்கிக் கொடுப்பது வித்துவான் களுடைய கடமை. பிறகு நல்ல போஷணை கிடைக்கும். ஒரு பிரபு மாதம் ரூபாய் 100 கொடுப்பான். ஊர் சேர்ந்தால் தலைக்குக் கால் ரூபாயாக வசூல் பண்ணி மாதம் 1000 ரூபாய் கொடுக்கும். ஊரையே எஜமானாகக் கொள்ள வேண்டும்.

ஊர்தான் ராஜா. இந்த ராஜாவுக்கு ஆரம்பத்திலே கொஞ்சம் ஞானம் அளித்துப் பழக்கம் கொடுத்தால் வித்தைகளுக்கு எந்தவிதமான குறைவும் ஏற்படாது. நவரஸங்களும் சேர வேண்டும். கருணாரஸமும் (அதாவது சோகரஸமும்) சிருங்கார ரஸமுந்தான் நமது தேசத்தில் நடைபெறுகின்றன. மற்ற வீரம், கோபம் (ரௌத்ரம்), வியப்பு, வெறுப்பு, அச்சம், நகைப்பு, சாந்தம் என்ற ரஸங்களின் விலாஸம் பாட்டிலே காணப்படவில்லை. நல்ல பாட்டுப் பாடினால் நல்ல மதிப்புத் தானாகவே வரும். அதிலிருந்து நல்ல வரும்படி ஏற்படும்.

திருஷ்டாந்தமாக. ஹாஸ்யரஸம் தோன்றும்படி ஒருராகத்தை விஸ்தரிக்கும்போது, அதிலே அர்த்தச் சேர்க்கை இல்லா விடத்தும் ஜனங்கள் கடகடவென்று சிரிக்க வேண்டும்.

ரௌத்திர ரஸம் தோன்றும்படி பாடினால் அதைக் கேட்கும்போது ஜனங்களுக்கு மீசை துடிக்க வேண்டும்; கண்கள் சிவக்க வேண்டும். வீர ரஸமுள்ள பாட்டை ஒரு வித்வான் பாடும்போது, ஜனங் களெல்லாம் தம்மையறியாமல் முதுகு நிமிர்ந்து தலைதூக்கி உட்கார வேண்டும். அவர்கள் விழியிலே வீரப்பார்வை உண்டாக வேண்டும். அப்போதுதான் பாட்டு ஸபலமாகும்.

பொருளிலும் ஓசையிலும் 'ரஸம்' கலக்காத பாட்டு இனிமேல் தமிழ் நாட்டிலேயே வழங்கலாகாது.

முத்துசாமி தீக்ஷிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர் இந்த மூன்று பெயருடைய கீர்த்தனங்களைத்தான் வழக்கத்தில் அதிகமாகப்பாடுகிறார்கள். இவற்றுள்ளே தீக்ஷிதரின் கீர்த்தனைகள் பச்சை ஸம்ஸ்கிருத பாஷையிலே எழுதப்பட்டவை. இவை கங்கா நதியைப் போலே கம்பீர நடையும் பெருந்தன்மையும் உடையன. வேறுபல லக்ஷணங்களும் இருந்த போதிலும், ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டிருப்பதால் இவை நமது நாட்டுப் பொது ஜனங்கள் ரஸானுபவத்துடன் பாடுவதற்குப் பயன்படமாட்டா.

வித்துவான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால், **தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம்பாட்டுகளை மீட்டும் மீட்டும் சொல்லுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி ஸங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்."**

இன்னும் விரிவுடைய இக்கட்டுரை பாரதியாரால் எழுதப்பட்டு சுதேசமித்திரன் நாளிதழில் 1916 மே 3 ஆம் நாள் வெளியானது.

இதில் சில பகுதிகளைச் சுட்டிக் காட்டும் பெ.தூரன், "பாரதியார் இவ்வாறு கூறி முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. நிலைமை மட்டும் அநேகமாக அப்படியே இருக்கிறது!" எனப் பாரதி தமிழில் வரைந்தார் (பக். 180) அதற்குப் பின்னர் நாற்பது ஆண்டுகள் கடந்தும், எவ்வளவோ முயற்சிகள் நடந்தும் நிலைமை என்னவோ இன்னும் அவ்வாறே தான் உள்ளது! ஓரளவு மாற்றம் ஏற்படினும் மனங் கொள்ளாராய்ச் சாண்ஏற முழம் சறுக்குவாரும் சறுக்கிவிடச் செய்வாருமாகவே தமிழக இசைத் தோன்றல்கள் உள்ளமை கண்கூடு.

"அந்தோ! நமக்குக் கொஞ்சம் கூட தெரியாத அன்னிய பாஷையில் பாட்டுக் கற்றுக் கொண்டு 'க' என்றதற்கு 'கலோ 'பலோ' என்ற ஸந்தேகத்துடன் தப்பும் தவறுமாய்ப் பாடுவதைவிட நாம் நம் தாய்பாஷையில் நமக்குச் சுலபமாய் விளங்கக் கூடியதாய், நம் தெய்வத்தைக் குறித்ததாய் உள்ள பாட்டுகளைப் பாடினால் எவ்வளவு நன்றாயிருக்கும்"

– எனப் பார்வதி செல்லம்மாள் (மதுரை) என்பார் ஆனந்த போதினி ஸங்கீத சாஸ்திரம், 447 – 449 (1919) என்பதில் வரைந்துள்ளார்.

"தமிழ் நாட்டின் பல பாகங்களில் அடிக்கடி சங்கீதக் கச்சேரிகள் நடைபெறுகின்றன. பாடுகிறவர்கள் தமிழர்கள்; கேட்பவர்களும் தமிழர்கள்; ஆனால் தமிழ்ப் பாடல்கள் மட்டும் பாடப்படுவது கிடையாது. என்ன வெட்கக்கேடு! எவ்வளவு காலம் தமிழர்கள் இதனைச் சகித்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்? கச்சேரி முடிகிற தருணத்தில் ஓரிரண்டு தமிழ்ப்பாட்டுக்களைச் சின்னா பின்னப் படுத்திப் பாடி விடுகிறார்கள் வித்துவான்கள். தமிழ்ப் பாஷையில் பாடல்களே இல்லையென்று இவர்கள் கருதுகிறார்களா? அல்லது

நமது மனோபாவத்தைத் தமிழ்ப்பாடல் மூலம் சரியாக வெளிப்படுத்த முடியாது என்று நினைக்கிறார்களா?

"பண்ணிசைத்துப் பரம் பொருளைக் கண்டிருக்கிறார்கள் தமிழர்கள். இதற்குத் தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் முதலியனவே சாட்சி. அருணாசலக் கவிராயருடைய ராம நாடகமும், பாரத கீர்த்தனைகளும், கவிகுஞ்சர பாரதியாரின பதங்களும் தமிழ்ச் சங்கீதக் களஞ்சியங்கள். இவை யெல்லாவற்றையும் எங்கேயோ ஒரு மூலையில் புதைத்துவிட்டு, பாடகர்களுடையவும் கேட்பவர்களுடைய வும் பாஷையல்லாத ஒரு பாஷையில் சங்கீதக் கச்சேரிகள் நடைபெறுகின்றன. இந்த முறை மாற்றப்பட வேண்டும். தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்", என வரலாற்றுலகுக்குக் காலமெல்லாம் தொண்டுசெய்த முதுபேரறிஞர் வெ. சாமிநாதர் கூறுகிறார் (நாடும் மொழியும். பக். 52).

இவ்விடிவெள்ளியில் முற்படக் கண்ட ஆபிரகாம் பண்டிதரை அடுத்துத் தமிழிசைத் துறையில் முழுமையாகத் தோய்ந்து அதன் ஆய்வுக்கும் வளர்ச்சிக்கும் பாடுபட்ட இசைச் செல்வர் திரு. இலக்கு மணப் பிள்ளை என்பார் ஆவர். திருவனந்தபுரத்தை வாழ்விடமாகக் கொண்ட இவர், தமிழிசை மேடைகள், ஆய்வரங்குகள் எங்கெங்கு நிகழினும் அங்கங்கெல்லாம் பங்களிக்கத் தவறாமல் விளங்கினார்.

திரு. தி. இலக்குமணப் பிள்ளை தம் பதினான்காம் அகவையில் திருச்செந்தூர் முருகன்மீது ஓர் இசைப்பா (கீர்த்தனம்) இயற்றிப் பாடியவர்.

1927 ஆம் ஆண்டு சென்னையில் கூடிய பேரிசை மாநாட்டில் இவர்தம் இசைப் புலமையை வியந்து இவருக்கு ஒருபொற்பதக்கம் அளிக்கப்பட்டது. இசைநூலாசிரியர் திரு.எம்.எசு. இராமசாமிஐயர் என்பார் 'தமிழ்த் தியாகையர்' என்று இவரைப் புகழ்ந்தோதினார்.

1934 இல் திருநெல்வேலியில் கூடிய சென்னைமாகாணத் தமிழர் மாநாட்டில் 'இசைத்தமிழ்ச் செல்வர்' என்னும் பட்டம் அளிக்கப் பெற்றார்.

பின்னே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 'சங்கீபூஷணத் தேர்வு வினாத்தாள் அமைப்பாளருள் இவர் ஒருவராக இருந்தார்.

"தமிழிசை ஒழுகிசை; ஒழுகிசையாவது ஒன்றன்பின் ஒன்றாக இசைச் சுரங்கள் தொடர்வது (Melody).

ஆங்கில இசை ஒன்றிசை; ஒன்றிசையாவது ஒரே பொழுதில் பல இசைச் சுரங்களும் முழங்குவது (Harmony).

வடநாட்டு இசையும் ஒழுகிசையேயாம்" என்கிறார் இலக்குமணர் (செந்தமிழ்ச் செல்வி 3:229)

"மலைநாட்டில் இப்போதும் கானக்குறிஞ்சி, புறநீர்மை, இன்னிசை, இந்தளம் முதலிய தமிழ்ப்பண்கள் வழங்கி வருதலைக் காணலாம். அந்நாட்டில் செண்டை, உடுக்கை, முழவு, இடக்கை முதலிய பற்பல தமிழ் வாத்தியங்கள் இக்காலத்தும் நடைபெறு கின்றன. சில பண்கள் ஆரிய ராகத் தொகுப்பில் உட்பட்டு குறிஞ்சி, சுருட்டி, இந்தோளம், பாடி முதலிய ராகங்களாய் உருமாறித் தமிழ்ப்பண்கள் என்னும் தமிழ்ப் பெருவாழ்வை இழந்தன" என்கிறார்.

"கொல்லி, வியாழக் குறிஞ்சி, தக்கேசி, இந்தளம், கானக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி முதலிய பண்கள் பாடக் கேட்டோரின் உள்ளமாகிய இருட்டறைகளில் பக்தி உணர்ச்சியெனும் தீபத்தை எழுப்பி அவர் ஆருயிரை நெக்குவிட்டுருகச் செய்யும் ஆற்ற லுடையன. அவ்வளவு உருக்கம் ஆரிய ராகங்களுக்கு இல்லையென உறுதியாகச் சொல்லலாம். நீரா, மீனா என்னும் தமிழ்ப் பகுதிகள் எவ்வாறு ஸம்ஸ்கிருதத்தில் ஆதியில் புகுந்து கொண்டனவோ அவ்வாறே தமிழ்ப்பண்களிலுள்ள நீண்ட கமகங்கள் அல்லது வளைவுகள் பிற்காலத்தில் ஆரிய ராகங்களில் சென்று பரவிப் பெரும் இன்பத்தைக் கொடுக்கலாயின என்பது தேற்றம் எனத் தமிழிசை நலம் வடமொழியான வகையைக் குறிப்பிடுகிறார் (செ. செ. 232)

அக்பர் ஆட்சி நடத்தியபோது "தென்னிந்தியாவில் இருந்து ஒரு நாயுடு வட இந்தியாவில் குடியேறி இக்காலத்துத் தியாகய்யர், தீக்ஷிதர் முதலிய பெரும் இசைப் புலவர் இயற்றியவை போன்ற இசைப் பாக்கள் இயற்றியிருந்தார் என்றும், அவற்றில் சில இப்போதும் வடஇந்தியாவில் பாடப்பெற்று அனந்தம் ஜனங்களுக்கு ஆரா இன்பம் விளைக்கின்றன என்றும் கேள்விக்கு எட்டுகின்றது" என்றும், சுவாதித்திருநாள் மன்னரால் மதித்துப் போற்றப்பட்ட வடிவேலு நட்டுவர் பேரிசைப்புலவராகிய திருவையாற்றுத்

தியாகய்யருடன் நெருங்கிப் பழகினவர் என்றும் குறிப்பிடுகிறார். (செ. செ. 232, 235) – 1925 – 26.

'தமிழ் நாட்டுச் சங்கீதம்' என்னும் தலைப்பில் காயகசிகாமணி அரிகேசவ நல்லூர் முத்தையா பாகவதர் எழுதிய கட்டுரை 'கலைமகள் கதம்பம்' என்பதில் இடம் பெற்றது (சனவரி 1934). அதில் பரிபாடல் இசை, சிலப்பதிகார இசை, தேவார இசை என்பவற்றைப் பற்றி வரைந்துள்ளார். சிலப்பதிகார இசைபற்றிக் கூறும்போது, "சங்கீத வித்துவான்கள் சிலப்பதிகாரத்தை நன்றாக ஆராய்ச்சி பண்ணவில்லை. ஆராய்ச்சி பண்ணியவர்களுக்கு அதில் எவ்வளவோ அருமையான ரத்தினங்கள் புதைந்து கிடக்கின்றன என்பது தெரிகிறது. யாராவது ஆராய்ச்சி செய்து சொல்ல வந்தால் அதற்கு மதிப்புக் கொடுப்பதில்லை. பண்டிதர்களும் சங்கீத வித்துவான்களும் சேர்ந்து பழகுவதில்லை. தமிழ்ப் புத்தகத்தில் இவ்வளவு அருமையான சங்கதிகள் இருக்கின்றன என்பதைச் சங்கீத வித்துவான்கள் நம்புவதில்லை. தாங்களாக ஆராய்ச்சி செய்து அறிவதும் இல்லை. ஆராய்ந்து அறிந்தவர்கள் அடங்கி யிருக்கிறார்கள்" என்றும், "சிலப்பதிகாரத்தைப் போலச் சங்கீதத்துக் கென்று அமைந்த அருமையான நூலை எந்தப் பாஷையிலும் பார்க்கமுடியாது. அதில் சொல்லப்பட்ட எவ்வளவோ விஷயங்களை நாம் இன்னும் நன்றாக அறிந்து கொள்ள முடியவில்லை" என்றும் கூறுகிறார். "தமிழில் முடியுமா?" என ஒருவினாவை எழுப்பி, தமிழில் முடியும் என்பதைத் தெளிவிக்கிறார் இசைச் செல்வர் தி.இலக்குமணப்பிள்ளை. "தமிழ்மொழி உயர்தரச் சங்கீத சாகித்தியத் திற்கு இசைவதன்று எனக் கூறல், தமிழ் மொழியையும் இலக்கியங் களையும் ஆழக்கற்று அவற்றின் அருமை பெருமைகளை அனுபவித் தறியாதவரின் இழுக்குரை என்றே முடிவு கட்டலாம்" என்கிறார்.

"தெலுங்கில் சங்கீத சாகித்தியங்கள் உண்டாவதற்குச் சற்று முந்தியும் ஒத்த காலத்தும் பிந்தியும் தமிழில் அவ்வகைச் சாகித்தியங்கள் உண்டாய் இருந்தன என்பதற்கு முத்துத்தாண்டவர் பதங்கள், அருணாசலக் கவிராயரின் இராமாயணக் கீர்த்தனங்கள், கனம் கிருஷ்ணையர், கவிகுஞ்சரம், கோபால கிருஷ்ண பாரதியார், இராமசாமி சிவன், மகாவைத்திய நாதையரின் தமையனார், திருவிதாங்கூர் க்ஷீராப்தி சாஸ்திரிகள், நீலகண்டசிவன், வேதநாயகம்

பிள்ளை முதலியோரின் கீர்த்தனங்கள் ஏராளமாய்ச் சாட்சிபகரும்" என்கிறார்.

தியாகய்யர் தெலுங்கராய்ப் பிறந்தமையால் தெலுங்கில் சாகித்தியங்கள் இயற்றினார் என்னும் இலக்குமணர், ஸ்ரீபட்டணம் சுப்பிரமணிய அய்யரும், இராமநாதபுரம் (பூச்சி) ஸ்ரீநிவாச ஐயங்காரும் தமிழராய்ப் பிறந்தும் தமிழைப் புறக்கணித்து சாகித்தியம் இயற்றுவதற்குத் தெலுங்கைமட்டும் கைக் கொண்டமையால், உயர்தரமான சாகித்திய விஷயத்தில் தமிழுக்குப் பெருஞ்சேதம் விளைந்தது. கருநாடக சங்கீதப் புலமையிலும் ஆராய்ச்சியிலும் பெரியரான ஸ்ரீ எம்.எஸ். இராமசாமி அய்யர் அவர்களின் கொள்கை இதுவே. அதன்பின் தெலுங்குதான் உயர்தர சங்கீத சாகித்தியங்களுக்குப் பொருந்தும் மொழியென்ற ஓர் இழுக்கான தோரணை பரவத் தொடங்கிற்று. ஆனால் தெலுங்கு மொழியில் சாகித்தியங்கள் இயற்றிய ஸ்ரீ தியாகய்யர் தமிழராய்ப் பிறந்து தமிழில் சாகித்தியங்கள் இயற்றியிருந்திருப்பரேல் இப்போது அவருக்குள்ள கீர்த்தியும் அவருடைய கீர்த்தனங்களைக் கற்றுப் பாடுவதில் ஜனங்களுக்குள்ள ஆர்வமும் சற்றும் குறைபடாது. எனெனில் அவருடைய சாகித்தியங்களின் வசீகரத்திற்குக் காரணம் அவருடைய அபூர்வ சங்கீதத் திறமையேயன்றித் தெலுங்குமொழியின் தனிச் சிறப்பல்லவென்பது ஆராய்வோர்க்கு எளிதிற் புலப்படும்.

தென்னிந்தியாவில் ஸ்ரீ தியாகய்யர் கீர்த்தனங்களைப் பாடும் சங்கீத வித்வான்களும் ஏனையோரும் பெரும்பாலும் அக்கீர்த்தனங்களின் பொருளை உணர்ந்து கொள்ளாமையும் தெலுங்கு மொழியைக் கற்க வேண்டுமென்ற அவா சிறிதும் இல்லாமையுமே அதற்குச் சான்றுபகரும். அன்றியும் அவர்களை இழுத்து வயப்படுத்தும் காந்தம் அக்கீர்த்தனங்களில் உள்ள சங்கீத நயமும் சுகமுமேயன்றி அவற்றின் வெளிப்போர்வையாகிய மொழியன்று என்னும் உண்மை எளிதில் உய்த்துணரக் கிடக்கின்றது" என்கிறார்.

தாய்மொழி இனிமையிலும் உருக்கத்திலும் பக்தி உணர்ச்சியை நெஞ்சில் துளும்பவைக்கும் ஆற்றலிலும் உயர்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் வன்மையிலும் மற்றெம் மொழிக்கும் பின்னிடாதென்ற உண்மையைச் சான்றுகளால் விளக்குகிறார். தாம் இயற்றிய தமிழ்க் கீர்த்தனங்களையும் குறிப்பிடுகிறார். (செ.செ. 17: 426 – 30).

"13ஆம் நூற்றாண்டில் இருந்த சாரங்க தேவருக்குப் பின்பு தமிழில் இசை இலக்கணம் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் தமிழிசை ஏற்பாடும் ஆரிய சங்கீத ஏற்பாடும் கலப்புண்டு தமிழ்ப் பண்கள் பல வடமொழிப் பெயர்கள் பூண்டு வடமொழியில் சங்கீத இலக்கணங்கள் எழுதப்பட்டு வந்தமையால் தமிழிசைக்குத் தனியான இசைஇலக்கணம் எழுதுதல் அவசியமில்லை என்று கண்டு அவ்விலக்கணம் எழுதும் வேலை விடப்பட்டதாயிருக்க வேண்டும் என்று உய்த்துணராம்" எனக் கர்நாடக இசைபற்றி எழுதிய கட்டுரை ஒன்றில் திரு. இலக்குமணப் பிள்ளை எழுதுகிறார் (ம.த.ச. பொன் விழாமலர். 216).

1927 இல் சென்னையில் அனைத்திந்திய இசைமாநாடு ஒன்று நிகழ்ந்தது. அதில் உரையாற்றிய சங்கீத கீர்த்தனாசாரியார் சி.ஆர். சீனிவாச ஐயங்கார் "தேவாரத்தில் 24 தமிழ்ப் பண்கள் குறிக்கப் பட்டுள்ளன. அவை இன்றும் ஓதுவார்களால் பாடப்பட்டு வருகின்றன. அவற்றிற்கும் இப்போதைய கர்நாடக இராகங்களுக்கும் நெருங்கிய ஒற்றுமைப்பாடு காணப்படுகிறது. இருவகை இராகங் களும் ஒருவகையே என்று சொல்லலாம்" என்று கூறியுள்ளார். (ம.த.ச. பொன் விழாமலர். 216)

நெல்லை, தமிழிசைவாணர் சுந்தர ஓதுவா மூர்த்திகள் 'இசைத் தமிழின் மாண்பு' என்றொரு கட்டுரை வரைந்தார் (செந். செல். 18:355). அதில், "சங்கீத ரத்னாகரச் சாரங்கதேவர் தர்க்கவிபாஷா தேவார வர்த்தனி, மாளவ கைசிக தேவார வர்த்தனி, பின்னசம்ச வியாஷா தட்சிணகுச்சரி, திராவிடி, திராவிடகுச்சரி, திராவிடபாஷா சோமராகம், தட்சணாத்யாபாஷா சுத்தபஞ்சமம், தட்சணபாஷாங்கம் என்று தமிழ் நாட்டில் வழங்கிவந்த பண்களைச் சொல்லுகிறார்" என்கிறார்.

குரல் முதற் சுரம் சட்ஜமம் என்றும், துத்தம் இரண்டாம் சுரம் ரிஷபம் என்றும், கைக்கிளை மூன்றாம் சுரம் காந்தாரம் என்றும், உழை நான்காம் சுரம் மத்திமம் என்றும், இளி ஐந்தாம் சுரம் பஞ்சமம் என்றும், விளரி ஆறாம் சுரம் தைவதம என்றும், தாரம் ஏழாம் சுரம் நிஷாதம் என்றும் இக்காலத்தில் வேற்றுப் பெயர்களால் வழங்கப்படுகின்றன என்றும் கூறுகிறார்.

"ஏழு சுரங்களையும், ஏழு தாளங்களையும், ஏழு பாலைகளை யும், ஏழு பண்களையும், ஏழு முழவுகளையும், ஏழு வங்கியங்

களையும், யாழின் ஏழு நரம்புகளையும் முற்றிலும் தமிழிசையில் வழங்கிவருகிற கணிதமுறை" என்கிறார்.

"தமிழ் எழுத்துகளின் உயிரெழுத்து பன்னிரண்டாகவும், அவற்றுள் நெட்டெழுத்துமட்டும் ஏழாகின்றது. அவை யாழின் பன்னிரண்டு மெட்டுகளையும் ஏழு சுரங்களையும் நினைவு கூர்விக்கின்றன" என்கிறார்.

"தமிழரே சங்கீதப் பிக்ஷையைப் பலர்க்கும் அளித்தனர். இவர்கள் இசையை அவரவரும் தங்கள் பாஷைக்குத் தக்கபடி சொற்களை அமைத்து இசைநூல்கள் எழுதிக் கொண்டனர். தமிழரின் பேரிசையைக் கற்றுக் கொண்டவர்கள் காலஞ்சென்ற திரு. முத்துசாமி தீக்ஷிதர், திரு. தியாகராஜையர், திரு. சியாமா சாஸ்திரிகள் முதலியோர். முத்துசாமி திக்ஷிதரவர்களால் ஆக்கப்பட்ட சமஸ்கிருத சாஹித்யங்கள் இணைந்துள்ள சங்கீத விஸ்தாரமும், தியாகராஜ ஐயரால் ஆக்கப்பட்ட தெலுங்கு சாஹித்யங்கள் இணைந்துள்ள ஸ்வர நிரவல்களும், சியாமா சாஸ்திரியாரால் ஆக்கப்பட்ட தெலுங்கு சாஹித்தியங்கள் இணைந்துள்ள சங்கீதமும் தமிழே. அந்த ஸ்வரங்களுக்கு நேராகத் தமிழ் எழுத்துக்களை அமைக்க முடியும்" என்றும் கூறுகிறார். (செந். செல். 18:355 – 9.)

அரிகேசவ நல்லூர் முத்தையா பாகவதர் 1933 ஆம் ஆண்டிலேயே, பச்சையப்பன் கல்லூரியில் நிகழ்ந்த இசையரங்கில் தமிழ்ப்பாடல்கள் சில பாடினார். அன்றியும் தமிழ்ப்பாடல்கள் அரங்குகளில் பாடவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். (தமிழர் இசை. 786)

இவருக்கும் முன்னவராக இருந்து தமிழிசை பாடியவர்களும், தூண்டியவர்களும் உளர். அவருள் ஒருவர் நயினாப்பிள்ளை.

காஞ்சிபுரம் நாயனாப்பிள்ளை (சுப்பிரமணிய பிள்ளை) 1887 – 1934.

முதன் முதலாக இசையரங்குகளில் தமிழ்ப் பாட்டுகளுக்கு முதன்மையும் மேன்மையும் வழங்கியவர் இவரே. இசைக்குரிய தாளவகைகள் எல்லாம் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்க் கருவூலத்திலேயே அமைந்து கிடக்கின்றன என்பதை எடுத்துக் காட்டித் திருப்புகழுக்குப் பெரும்புகழ் அளித்தவரும் இவரே என்பர்.

எண்ணற்ற புதிய பண்களையும் இராகங்களையும் தாமே உற்றுணர்ந்து அமைத்துப்பாடிய பெருமை இவர்க்குண்டு. பல்லவி என்றால் நாயனாப் பிள்ளையே என்னும் பெருமை பெற்றார். தமிழிசையில் வைத்த பற்றாலே நெல்லை சுந்தர ஓதுவா மூர்த்திகளைத் தம் சிறந்த நண்பராகக் கொண்டிருந்தார்.

7.5.34இல் பச்சையப்பன் மண்டபத்தில் நாயனாப் பிள்ளைக் காக நடந்த இரங்கல் கூட்டத்தில் அதுகாறும் எவரும் அறிந்திராத 'சகன் மோகினி' முதலிய புதிய இராகங்களில் இவர் பெற்றிருந்த பயிற்சியும் திறமும் பலபடப் பாராட்டப்பட்டன.

"சிறப்புடனே இந்நாளில் செறிந்திசைக்கும் தாளமெல்லாம்
வறப்பறியா மலைநாட்டின் வருமருண கிரிநாதன்
பிறப்பொழிக்க மொழிந்தளித்த பெருமைபெறு திருப்புகழாம்
திறப்புடைநற் களஞ்சியத்திற் றேர்ந்ததெனத் தெளிந்தோயே"

என்பது இரங்கல் பாடல்களுள் ஒன்று.

இவ்வரிசையில் காணத்தக்க ஒரு பெரியார் ஈழத்து விபுலானந்த அடிகள்.

யாழ்நூல் கண்ட இசைப்பேரறிஞர் விபுலானந்த அடிகள் சென்னைப் பல்கலைக்கழகச் சார்பில் 22.2.36 முதல் ஆறு சொற் பொழிவுகள் ஆற்றினார். அவற்றுள் முதல் நான்கு பொழிவுகள் "பண்டைத் தமிழிசை" என்னும் பொருள்பற்றியனவாகும். மற்றை இரண்டும் தமிழ்க்கலையும் சிற்பமும், தமிழும் அறியவிய லாராய்ச்சியும் என்பது பற்றியவை.

பாணர்களைப் பற்றி விரிவாகப் பேசிய அடிகள் அவர்கள் இசைத்த யாழைப்பற்றியும் எடுத்துரைத்தார்.

"இந்தப் பாணர்கள் எடுத்துச் செல்லும் யாழ்கள் இரு வகைப்படும். ஒன்று பேரியாழ்; மற்றொன்று செங்கோட்டியாழ்.

சிறிது காலத்திற்குபபின் மகரயாழ், சகோடயாழ் என்ற இரு புதிய யாழ்கள் தோன்றின.

முதலிரண்டு யாழ்களும் சங்க காலத்தவை. செங்கோட்டி யாழான சிறிய யாழுக்கு 7 தந்திகள். பேரியாழுக்கு 21 தந்திகள். சகோட யாழுக்கு 14 தந்திகள். மகரயாழுக்கு 17 தந்திகள். மகரயாழும் சகோட யாழும் சிலப்பதிகார காலத்திற்குப் பிற்பட்டவை.

ஏழு சுரங்களுக்கும் தமிழ்ப்பெயர் வருமாறு:

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம். தாரம் என்பது சமஸ்கிருதச் சொல்லன்று. சமஸ்கிருதத்திலுள்ள தாரம் என்பதற்கு வேறு பொருள் உண்டு.

தாரத்தில் இருந்து உழையும், உழையில் இருந்து குரலும், குரலிலிருந்து இளியும், இளியிலிருந்து துத்தமும், துத்தத்தில் இருந்து விளரியும், விளரியிலிருந்து கைக்கிளையும் தோன்றின.

முதன் முதலாகப் பேரியாழின் 21 தந்திகளின் நீளத்தைக் கணித்துக் கொள்ளலாம்.

முதல் தந்தி 36 விரல் அளவு நீளம் இருக்குமானால் 8 ஆம் தந்தியும் 15 ஆம் தந்தியும் முறையே 18 விரல் அளவும், 9 விரல் அளவும் இருக்கும்.

5, 9, 13, 17, 21 ஆம் தந்திகள் முறையே 21, 16, 10. 2/3, 7. 1/9, 4. 20/27 விரல் அளவு இருக்கும். 16 ஆம் தந்தி 9 ஆவதை விட உச்சதாயியில் 8 ஆவது சுரமாகையாலும் 2 ஆம் தந்தி கீழ் தாயியில் 8 ஆவது சுரமாகையாலும் இவை இரண்டின் நீளம் முறையே 8, 32 விரல் அளவாகும். இது போலவே இதர தந்திகளின் நீளத்தையும் கணிக்க வேண்டும்.

பாணன் சுர தானங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்து 7 சுரங்களோடு புதிய 5 சுர தானங்களைக் கண்டுபிடித்தான். அடுத்தபடியாக 12 சுரதானங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து மேலும் 10 சுரதானங்களைக் கண்டுபிடித்தான். சுரதானம் என்பதற்குத் தமிழில் அலகு என்பார்கள்.

கி.பி. 2 ஆம் நூற்றாண்டிலேயே இந்த 22 சுருத்தானங்களையும் தமிழர் கண்டு பிடித்து விட்டனர். ஆனால் ஆராய்ச்சி அம்மட்டோடு நிற்கவில்லை. பாணன் அலகைப் பின்னப்படுத்திக் கொண்டே போனான். இதனால் 41 அரை சுருதி தானங்களும், 94 கால் சுருதி தானங்களும் 421 அரைக்கால் சுருதி தானங்களும், 388 வீச சுருதி தானங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

1000 தந்திகளையுடைய யாழ் அரைவீச சுருதி தானத்தையும் காட்டியது. அந்த யாழில் பெரியதந்தியின் நீளம் 84 விரல் அளவாகும். சிறிய தந்தியின் நீளம் 32 விரல் அளவாகும்.

22 அலகுகள் அல்லது சுருதிகளைப் பாணன் கீழ்க்காணுமாறு பாகுபாடு செய்தான். குரல் 4 அலகுகள்; துத்தம் 4; கைக்கிளை 3; உழை 2; இளி 4; விளரி 3; தரம் 2.

புராதனத்தமிழ் இசைக் கணிதத்தின்படி 'மா'வே முதல் சுரமாகும். இதற்குப்பல ஆதாரங்கள் உண்டு. இந்தச் சுரங்களைச் சில மிருகங்கள் பறவைகள் இவற்றின் சத்தத்தோடு தமிழர் ஒப்பிட்டுள்ளனர். புராதனத் தமிழரின் குரல் — ம; துத்தம் — ப; கைக்கிளை — த; உழை — நி; இளி — ச; விளரி — ரி; தாரம் — க.

12 ராசிகளில் தமிழர் கீழ்க்காணும் ஏழைமட்டும் தெரிந்து கொண்டனர்; இளியை ரிசபமும், விளரியைக் கடகமும், தாரத்தைச் சிங்கமும், குரலைத் துலாமும், துத்தத்தைத் தனுசும், கைக்கிளையைக் கும்பமும், உழையை மீனமும் குறித்தன.

சிலப்பதிகாரத்தில் 7 இடைச்சிகள் குரவைக் கூத்தாடுகையில் மேலே கண்ட ராசிகளின் தானங்கள் அமைந்திருப்பது போலவே வரிசையாக நிற்பார்கள் என்று கண்டிருக்கிறது.

தற்போது கர்நாடக சங்கீத சாத்திரப்படி அலகுகளைக் கீழ்க்காணுமாறு பாகுபாடு செய்துள்ளனர். ச—4; ரி—3; க—2; ம—4; ப—4; த—3; நி—2.

அரங்கேற்று காதையில் 70 முதல் 94 வரை உள்ள வரிகள் யாழிசைப்போனைக் குறிக்கின்றன. அந்த வரிகளுக்குப் பூரணமாக அர்த்தம் தெரிந்து கொண்டால் பண்டைத் தமிழ் இசையின் பொக்கிசத்திற்குத் திறவு கோல் கிடைத்துவிடும். 5 வருட காலத்திற்கு மேலாக நான் ஆராய்ச்சி செய்ததன் பயனாகச் சிறிது ஒளி கிடைத்துள்ளது. அந்த வரிகளுக்கு அடியார்க்கு நல்லார் வியாக்கியானம் எழுதவே இல்லை. அடியார்க்கு நல்லார் காலத்திலேயே பண்டைத் தமிழிசை புறக்கணிக்கப்பட்டதென்று தெரிகிறது.

— விடுதலை இதழில் வெளிவந்து, பின்னே செந்தமிழ்ச் செல்வியிலும் இடம் பெற்ற விரிந்த செய்திகளின் சுருக்கம் இது. (செ.செ. 14:343; 394:427 — 1936 — 37).

10.7.38இல் வானொலி உரையாற்றிய அரசியல் அறிஞர் சத்திய மூர்த்தி 'நம்முடைய கச்சேரிகளில் அநேகமாக ஆரம்பமுதல் முடிவுவரை பாட்டின் பாஷை நமக்குப் புரியாததாகவும் சில சமயங்

களில் பாடகர்களுக்கே புரியாததாகவும் இருக்கின்றது. தமிழ் நாட்டில் பாடகர்கள் கச்சேரிகளில் தமிழ்ப் பாடல்களை அதிகமாகப் பாடவேண்டும். தமிழில் அழகிய பாடல்கள் இல்லை என்பது வீண் சாக்கு" என்று உரைத்தது நினைவுகூரத்தக்கது. தமிழிசை பற்றிப் பாரதியார் கூறியவற்றை முன்னர் அறிந்துளோம். அத்தொண்டில் ஈடுபட்டு அரும்பணி செய்தாருள் பாவேந்தர் பாரதிதாசனாரும் ஒருவர்.

பாரதி கவிதா மண்டல அலுவலகத்தில் பாவேந்தர் பாரதி தாசனார் இருந்தார். அப்போது பஞ்சாபகேசய்யர் என்பார் "தெலுங்கு சமஸ்கிருதம் போன்று தமிழில் கீர்த்தனங்கள் பாட முடியாது. அவ்வாறு பாடினாலும் அவை தாளத்திற்கும் சங்கதி போட்டுப் பாடுவதற்கும் ஒத்து வராது" என்றார்.

அபபொழுது பாவேந்தர் உடனிருந்த எஸ். ஆர். சுப்பிர மணியத்தைப் பார்த்து, "சுப்ரமண்யா, அவன் என்ன சொன்னான். தியாகராசர் கீர்தத்னைபோல் தமிழில் பாடமுடியாது! அது என்ன தியாகராசர் கீர்த்தனை? இங்கு ஏதாவது இருக்கிறதா?" என்றார்.

'இருக்கிறது' என்று சுதேசமித்ரன் வாரப்பத்திரிகையில் உள்ள மொழிபெயர்ப்பும் இசையமைப்பும் என்ற பத்துக் கீர்த்தனைகளைக் கொடுத்தார் சுப்பிரமணியம். மேல் நிகழ்ந்ததைச் சுப்பிரமணியமே கூறுகிறார்.

சாப்பிட்டு வந்தவுடன் கவிஞர் எழுதினார்.

"நிஜமர்ம முலனு" என்னும் கீர்த்தனையைத் தியாகராசர் முத்திரையுடன் எழுதினார்.

"உடையாரேபாடு" என்றார். அவருடன் சேர்ந்தும் பாடினார். "அவன் என்னமோ சொன்னானே; சங்கதி; அதெல்லாம் போட்டுப் பாடு" என்றார். அவரும் பாடிவிட்டு "இந்தப்பாட்டு அற்புதம்! அற்புதம்" என்றார்.

"பத்துக் கீர்த்தனைகளை மொழிபெயர்த்தார். கவிதா மண்டலத்தில் வெளியிட்டோம்"

—என்று எஸ்.ஆர். சுப்பிரமணியம் பாவேந்தரின் மொழி பெயர்ப்புக் கீர்த்தனைகள் பிறந்த சூழலைக் குறித்துள்ளார்.

(ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் கவிதா மண்டலம் 1:3; 35 ஆண்டு 1935.)

பாவேந்தர் பயன்படுத்திய இராகங்கள், தாளங்கள், மெட்டுகள் என்பவற்றைப் பற்றியெல்லாம் விரிவாக ஆய்ந்து தொகுத்து பாரதிதாசன் 'இதழ்ப்பணிகள்' என்னும் ஆய்வேட்டில் முனைவர் மா. அண்ணாதுரை வெளியிட்டுள்ளார்.

'பல்லவி — அநுபல்லவி — சரணம்'

என முதற்கண் அமைத்த பாவேந்தர் பின்னே,

'பல்லவி — அநுபல்லவி — தொகையரா'

'பல்லவி — அநுபல்லவி — சரணங்கள்'

'எடுப்பு — துணையெடுப்பு — அடிகள்'

'எடுப்பு — உடன்எடுப்பு — அடிகள்'

என்றெல்லாம் மொழித்தூய்மை யாக்கத்திலும் நடையிட்டார்.

குரல்வினை, தாரம், தாளம், மேளம், ஆலாபனை என்னும் சொற்களின் விளக்கங்களைக் குயில் இதழில் 'வந்தவர் மொழியா?' செந்தமிழ்ச் செல்வமா? என்னும் பகுதியில் வரைந்தார்.

அழகிசைக் கழகம், தமிழிசைக் கழகம், கலையாராய்ச்சிக் கழகம் என்றெல்லாம் தமிழிசை வளர்ப்புக் கழகங்களை நிறுவினார். தமிழை வளர்க்கும் சான்றோர்களாகிய தண்டபாணி தேசிகர் விபுலானந்த அடிகள் ஆகியோரைப் பாடினார்:

"இடரில் தமிழிசைஏ தென்ற புலியைப்
பிடர்சிலிர்த்துப் பாய்ந்து பெரிய — குடர்கிழித்த
சிங்கங்கள் தம்மில்ஒரு சிங்கம்நம் தேசிகர்
எங்கும் இசைபொழியும் வான்"

என்பது தேசிகரைப் பற்றிய பாடல்.

'இசையமுது' என முதலிரு பாகங்களும், பாடல் தொகுதி களிலும் குயில் இதழிலும் பல இசைப்பாடல்களும் இயற்றிய பாவேந்தர் தமிழியக்கத்தில் தமிழை 'இசைத்துமகிழ் நல்யாழ்' என்றும் 'மக்கள் வாழ்வாம் கடலியக்கும் சுவைப்பாட்டு' என்றும் பாராட்டுகிறார்.

"பாடகர்காள், தோயுந்தேன் நிகர்தமிழாற் பாடாமே தெலுங்கிசையைச் சொல்லிப் பிச்சை ஈயுங்கள் என்பீரோ"

என்றும்,

"செந்தமிழில் இசைப்பாடல் இல்லையெனச்
செப்புகின்றீர் மான மின்றிப்
பைந்தமிழில் இசையின்றேல் பாழ்ங்கிணற்றில்
வீழ்ந்துயிரை மாய்த்த லன்றி
எந்தமிழில் இசையில்லை எந்தாய்க்கே
உடையில்லை என்ப துண்டோ
உந்தமிழை அறிவீரோ தமிழறிவும்
உள்ளதுவோ உங்கட் கெல்லாம்?..."

என்றும்,

"வெளியினிலே சொல்வதெனில் உம்நிலைமை
வெட்கக்கே டன்றோ? நீவிர்
இளிபோலச் சொல்வதன்றித் தமிழ்நூல்கள்
ஆய்ந்து கிழித்திட் டீரோ?
புளியென்றால் புலி என்றே உச்சரிக்கும்
புலியீரே புளுக வேண்டாம்.
துளியறிவும் தமிழ்மொழியில் உள்ளதுவோ
பாடகர்க்குச் சொல்வீர் மெய்யாய்".

என்றும்,

"தமிழ்மொழியில் தமிழ்ப்பாடல் மிகவுண்டு
தமிழ்க்கவிஞர் பல்லோர் உள்ளார்
உமைத்தாழ்வு படுத்தாதீர்"

என்றும்,

"தமிழ்நாட்டுப் பாடகரே தமிழ்பாடித்
தமிழ்மானம் காப்பீர் நன்றே"

என்றும் தமிழியக்கப் 'பாடகர்' பகுதியில் உணர்வு பொங்கப் பாடியுள்ளார்.

கூத்தரைப் பாராட்டும் பாவேந்தர் இசைப்பாட்டாளர் கேட்டை,

"வாய்ப்பாட்டுப் பாடிடுவோர் பெரும்பாலோர்
வண்டமிழ்க்குத் தீமை செய்தார்"

என்றும் அவர்,

"என்னருமைத் தமிழ்நாட்டை எழிற்றமிழால்
நுகரேனோ செவியில் யாண்டும்
கன்னல்நிகர் தமிழிசையே கேளேனோ"

என்று ஏங்குகிறார்.

"தமிழிசைப்பாட் டியற்றுபவர் தமிழர்களாய்
இருந்தால்தான் தமிழ்த்தென் பாங்கில்
அமைவுபெறும்"

என்று பாட்டு இயற்றுவோரில் காட்டுகிறார்.

"எந்நாளும் தமிழிசையே பாடு வோர்கள்
இருக்கின்றார் சிலர்என்றால் அவரை விட்டுப்
பொன்னாகத் தெலுங்கிசைபா டிடுவார் தம்மைப்
போயழைப்பார் தமிழிசையே இயக்கு வோர்கள்
சொன்னாலும் வாய்நாறும் செய்கை அன்றோ
தொட்டதெல்லாம் மேற்பூச்சு வஞ்சம் சூழ்ச்சி"

என்று தமிழிசை ஆர்வலர் எனத் தம்மைக் காட்டிக் கொள்வார் சிலரும் தடமாறிச் செல்லுதலைச் சுட்டுகிறார்.

இவற்றுட் சில காலவகையான் விரிவாக்கப்பகுதியில் இடம் பெறத்தக்கவை எனினும் தமிழிசை இயக்கத்தின் தோற்றத்திற்கு முன்னருள்ள செய்தித் தொடர்ச்சி பட்டமையால் சுட்டப்பட்டனவாம்.

இவ் விடிவெள்ளிச் செய்திகள் மேல்வரும் எழுஞாயிற்றுக்குக் கட்டியங் கூறல்களாம்.

த.ந.

8. எழு ஞாயிறு

எழு ஞாயிறு, பொழுது புலர்ந்ததன் அடையாளம். அதன் விடிவே விடியல்; விடியல் பொழுது எவ்வளவு கிளர்ச்சி மிக்கது! எழுச்சி மிக்கது!

பறவைகள் பாட்டு! வண்டின் முரற்சி! ஆடு மாடு கன்றுகளின் ஒலி! சேவலின் கூவல்! பூக்களின் மலர்ச்சி! இன்னனவெல்லாம் ஒருங்கே விடிவு காட்டும் பொழுதல்லவோ அது! காலை களிநடம் செய்யும் காட்சி, எச்சோம்பனையும் கண்மலரச் செய்து கடமைக்கு ஏவுதல் ஒருதலை! அப்பொழுதிலும் மடிந்து கிடப்பவனுக்கு விடிவு உண்டா?

மடி – மடிவின் முதல்நிலை! குடி கேட்டின் தொடக்கநிலை!

"மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்"

என்னும் குறள். அதுவே,

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என்று கூறும். அவ்வகையில் தமிழ்க் குடிமானப் பொருளாகிய தமிழிசை காக்கவும் வளர்க்கவும் கிளர்ந்த எழுஞாயிறாக இலங்குபவர் அரசவயவர் அண்ணாமலையார் ஆவர்.

அண்ணாமலையார் 1920இல் மீனாட்சி கல்லூரியைத் தோற்றுவித்தார். அதன் பகுதியாக 1927 இல் தமிழ்க் கல்லூரி ஒன்றும் வடமொழிக் கல்லூரி ஒன்றும் தோற்றுவித்தார். பின்னே 1929 இல் இசைக்கல்லூரி ஒன்றனையும் நிறுவினார். இதற்கு இடையே 1928ல் மீனாட்சி கல்லூரி அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக உருக்கொண்டது. ஆதலால், எல்லாப் பகுதிகளும் அப்பல்கலைக் கழகத்திற்குள் அமைந்தன.

1.5.1929 இல் வெளியிடப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக்கல்லூரி விளம்பரத்தில் மாணவர்கட்கு இசை கற்பிக்கவும், பெரியோர்களுடைய இசைப் பாடல்களைத் தேடித் தொகுத்துப் பாதுகாக்கவும் இசைக்கலை ஆராய்ச்சி செய்யவும்

அக்கல்லூரி நிறுவப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. அத்திட்டப்படியே 11.5.1929இல் இசைக்கல்லூரி தொடங்கியது.

இசைக்கல்லூரியைத் தோற்றுவித்த பேருள்ளம் பாராட்டுக்கு உரியது. அவ்வுள்ளம் அவ்வளவோடு நின்றுவிடவில்லை. 21.12.1932 இல் சென்னை இசைக்கழகத்தில் (Music Academy) இசை மாநாட்டைத் தொடங்கி வைத்தார் அண்ணாமலை அரசர். அக்கழகத்திற்கு அவர் வழங்கிய நன்கொடை பெரிதும் பாராட்டுப் பெற்றது.

அவர்தம் சிறப்புரையில், "மாணவர் விடுதியோடு கூடிய கல்லூரியில்தான் இசைப் பயிற்சி சிறப்பாக ஏற்படக்கூடும்" என்றும், "இசைக்கலையின் சிறப்பை இசை வளர்ப்பார் யாவரும் பாதுகாக்க வேண்டும்" என்றும் எடுத்துரைத்தார்.

24.12.1933 இல் சென்னை கோகலே அரங்கில் நிகழ்ந்த தென்னிந்திய இசை மாநாட்டினைத் திறந்து வைத்து, "குழந்தை களுக்கு இசையுணர்ச்சி உண்டாக்குவதற்குப் படிப்படியாய் இசையறிவினைப் பெருக்கவல்ல நூல்களை உருவாக்க மாநாடு முயலவேண்டும்" என்றும், "நமது இசையின் உயர்வையும் இறைமையையும் பேண வேண்டும்" என்றும் விரித்துரைத்தார்.

தமிழிசையை இசைக்கல்லூரி கருதியதா? வளர்க்கக் கிளர்ந்ததா?

தோற்றுவித்த தோன்றல் எண்ணம் அதுதான்! ஆனால்,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்னும் தேர்ச்சி நிலையும் நிறுவனர்க்குக் கட்டாயம் வேண்டுமே! இல்லாக்கால் என்னாகும்?

துறைப் பொறுப்பில் அமர்ந்தோர் போக்கு என்னவோ, நோக்கு என்னவோ அதறகே இடமாக்கிவிடுவர். தோற்றுவித்தவர் எண்ணம் தோற்றுப் போகவும் ஆகிவிடும்.

"தமிழிலே கோப்புகளை எழுத வேண்டும்" எனத் தலைமைச் செயலருக்கு முதல்வர் கலைஞர் ஆணை இடுகிறார். ஆனால், அதன் வரிவடிவு என்ன ஆகின்றது? தமிழிலும் கோப்பு எழுதலாம் என ஆணை பிறக்கின்றது. இனித் தமிழில் எழுதப்படுமா?

'தமிழிலே வழிபாடு வேண்டும்" என்று கேட்ட பயன் என்ன ஆனது? 'தமிழிலும் வழிபாடு செய்யப்படும்' என, ஓர் இருண்ட மூலையில் கண்டுகொள்ளவும் முடியாத ஒரு பலகை, கோயிலில் காண்பாரற்றுக் கிடந்தது.

தமிழிலேயே எழுதவேண்டும்; தமிழிலேயே வழிபட வேண்டும் என்பதற்கும், தமிழிலும் எழுதலாம்; தமிழிலும் வழிபடலாம் என்பதற்கும் எவ்வளவு வேறுபாடு?

இது சட்டத்தின் ஓட்டையா? ஆம்! சட்டத்தின் ஓட்டையும் தான்!

இது ஆணையிட்டவர் தொடர் கண்காணிப்பு இல்லாமையா?

ஆம்! அதுவும்தான்!

அதனால்தான்,

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"

என்றார் பொய்யா மொழியார். அவரே மேலும்,

"நாடோறும் நாடுகமன்னன் வினை செய்வான்
கோடாமை கோடா துலகு"

என்றும் கூறினார்.

ஆதலால் எண்ணியது எண்ணியவாறு நிறைவேற வேண்டும் என்று நினைவார் மிகக் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். இவ்வகையில் 'தமிழிசைக் கல்லூரி' என்று பெயர் சூட்டி, அதற்குத் தக்கார் எனத் தேர்ந்தாரை அமைத்திருந்தால் கூட, அவர்கள் "தமிழிசை என்ன? இசைக்கு மொழிக்கட்டு இல்லை; எல்லா மொழியும் இசைக்குப் பொதுவே; மொழிகடந்த பொருள் அது" என்று முட்டுக்கட்டை போட்டுத், தாம் தம்முள் ஒளிவுமறைவு இன்றி வெளிப்படக் காட்டி வெளிப்படத் தொண்டாற்றும் மொழியிலேயே, இசைக் கல்லூரி இயலச் செய்து வருதல் நாடறி செய்தி. அவ்வாறாகவும் வெறுமனே 'இசைக் கல்லூரி' என்று பெயர் சூட்டியதும், தமிழுக்கு எதிரிடையாகச் செயலாற்றலே பிறவிக்கடன் எனக் கொண்டாரைப் பொறுப்பில் அமர்த்தியதும், அக்கல்லூரி தெலுங்கிசைக் கல்லூரியாய், வடமொழியிசைக் கல்லூரியாய் இயலவே வகையாயிற்று!

"ஆர்வத் துடிப்பால் செயல்பட்ட ஆளுமைமிக்க அண்ணாமலை அரசர் தொழிற்பட்டடையிலேயே இப்படி ஒரு நிலையா?" என எண்ணத் தோன்றலாம்! "எண்ணெயும் உண்மையும் இறுதியில் மேற்படும்" என்பது பழமொழி! தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று வேண்டும் என்று பலப்பல அவையங்களும் மன்றங்களும் பல்கால் தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொண்டிருந்தன. அந்நிலையில் அண்ணாமலை அரசர் பல்கலைக்கழகம் தோற்றுவித்தவுடனேயே, தாம் விரும்பிய பல்கலைக்கழகம் தோன்றிவிட்டது என்றே அவை மகிழ்ந்தன! பின்னர்த் தீர்மானங்கள் செய்வதையும் மறந்தன! அவ்வளவு நம்பிக்கை! அவ்வளவு உறுதி!

பல்கலைக்கழகத் தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் அந்நாள் முதல்வர் டாக்டர் சுப்பராயன் 8.9.1928இல் கொண்டுவந்தார். அப்பொழுது சர்.ஏ.பி. பாத்ரோ, "ஆந்திரர் கலைப்பண்பை வளர்க்கத் தனிப்பல்கலைக்கழகம் தோன்றினாற் போலத் தமிழர் கலைப்பண்பைப் பாதுகாத்து வளர்க்கத் தமிழர்க்கென்று ஒருதனிப் பல்கலைக்கழகம் வேண்டுவதே. ஆதலின், நான் மனமார இத்தீர்மானத்தை வரவேற்கிறேன்" என்றார்.

திரு. சுப்பராயன் "நாம், தமிழரைப் பற்றி வானளாவப் புகழ் கிறோம். ஆனால், தமிழ் இன்னும் போதிய முன்னேற்றம் அடையவில்லை. இப்புதிய பெருங்கழகம் தமிழ் வளர்ச்சியிலேயே மிகவும் கருத்தூன்றும். தமிழருக்கு ஒரு தனிப்பல்கலைக் கழகம் வேண்டும் என்று நாம் முன்பு கருதினோம். அக்கருத்து இப்போது சர். அண்ணாமலையின் தருமத்தால் நிறைவேறுகிறது" என்றார்.

தமிழர் எதிர்பார்த்ததும், சட்டமன்றம் எதிர்பார்த்ததும் ஆகிய தமிழ்ப்பல்கலைக்கழகமாக அது செயலாற்றியதா — ஆற்றுகிறதா எனின் உண்மை நாடறியும்!

ஏன் இவ்வளவு எழுத வேண்டும்? எழுதவேண்டும் நிலைதான் என்ன? வரும் ஒலியைக் கேளுங்கள்.

"அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் இசைநூற் புலமையை வளர்த்தற்கு அண்மையில் விதிகள் அமைத்தனர். பொருளுணர்ச்சி இல்லாத 'கிராமபோன்' போன்ற மனிதராகிய இசைக்கருவிகளை இயற்றுவது அறிவுடைமை ஆமோ? இதனை நன்குணர்ந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசைக்

கலையாசிரியர்கள் ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு எனும் முன்று மொழிகளிலும் சிறிதளவு பயிற்சியை மாணவர் பெறவேண்டு மெனக் கருதிப் பாடத்திட்டங்களை யமைத்துத் தமிழை அறவே ஒதுக்கிவிட்டனர். இஃது அறிவுடையோர் எள்ளி நகையாடற் குரியதொரு செயலல்லவா?

பண்சுமந்த பாடல்கள் எனவும் தெய்வத் தமிழ்ப் பனுவல்கள் எனவும் தமிழ்நாடு போற்றும் தேவாரத் திருவாசகங்களையும், திவ்வியப் பிரபந்தங்களையும், திருப்புகழ், திருவருட்பா ஆகிய இசை நூல்களையும் அவமதித்து ஒதுக்கிய வன்கண்ணர்களை இசை யாசிரியர்களாய் அமர்த்திய அப்பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் நன்மதிப்பை எங்ஙனம் பெறுதல் கூடும்?

தேவாரத் திருப்பாடல்களாலும் திவ்வியப் பிரபந்தங்களாலும் பல்லாயிர ஆண்டுகளாக உயிர்பெற்று விளங்கும் திருக்கோயில் களைப் புதுக்குந் திருவினர்கள், அத்திருக்கோயில்களுக்கு உயிரும் வாழ்வும் ஒருங்கே அளித்த தெய்வப்பனுவல்கள் அங்கு வீறுடன் வழங்குவதற்கு வசதிகள் செய்ய நினையாது, தன்னலமே கருதும் தீத்திறத்தாரது பொய்யுரைகளில் மயங்கி, கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறும் வேதக்கிடைகளை நிறுவுவதற்கு முற்படும் ஏழைமைக்கு என்னென்றிரங்குவோம்!"

— எனத் தமிழவேள் உமாமகேசுவரனார் துறையூர், தமிழர் மாநாட்டு வரவேற்புரையில் கூறினார் (செ. செ.10:322 – 3;1932 தலை)

1929ஆம் ஆண்டே தொடங்கிய இசைக்கல்லூரி அல்லவா?

1932 ஆம ஆண்டில் ஒலித்த இவ்வொலி கேட்டேனும் நிலைமையில மாறறம் ஏற்பட்டதா?

அவ்வளவு எளிதில் தோட்கும் (துளைக்கும்) செவியா இசைக் கல்லூரிச் செவி?

துறையூரிலே முழக்கிய முழக்கத்தை ஈராண்டுகள் கழித்து நெல்லையிலும் முழக்குகிறார். நிலை, மாறா நிலைதானே அது?

"*அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக்கல்லூரியில் தமிழ்க்* கல்விக்கு இடந்தராமலும், தமிழிசையை வளர்ப்பதற்குரிய வழிகளை அமைக்காமலும் தமிழ்ப்பற்றுடைய மாணவர்களைச் சேர்க்காமலும் வன்கண்மை புரிகின்றனர்.

இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் கழகத்தில், தமிழ்மொழிக்கும் இப்பல்கலைக் கழகத்திற்கும் சிறந்த தொடர்பு இருப்பதாகச் சட்டத்தில் புலனாகவில்லையே என வாது புரிபவர்களைச் சேர்த்திருப்பதால், அவர்களால் விளையும் தடுமாற்றங்களுக்கு அளவு தானுமில்லை. பல்கலைக்கழகங்களில்'உயர்பதவிகளில் இருப்பவர் களில் பெரும்பாலர் தமிழ்ப்பற்றும் தமிழறிவும் இல்லாதவர்கள். ஆதலால், இக்கழகங்களின் அமைப்பு மாறினாலன்றித் தமிழ்மொழி கீழ்நிலையில் வைக்கப்படும் என்பது ஒருதலை. ஆட்சிக்கழகத்திலும் (Syndicate) கலைக்குழுவிலும் (Academic Council) இடம் பெறுபவர் தமிழ்ப்பற்றில்லாத மேனாட்டுக் கலையறிஞர். இவர்களால் தமிழ் வளர்க்கப் பெறுமென எண்ணுவது ஏமாற்றத்திற்கு இடமாகும்" என்கிறார் உமாமகேசுவரர். இது சென்னை மாகாணத் தமிழ் மாநாட்டுத் தலைமையுரை (நெல்லை. 10.6.34 – செ. செ. 12:575–6)

அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று:

"தமிழ்நாட்டில் நடைபெறும் விழாக்களிலும் பிற திருமணம் முதலிய நிகழ்ச்சிகளிலும் தமிழ்ப்பாடல்களே பாடுமாறு ஏற்பாடு செய்யத் தமிழ்ப் பெருமக்களை இம்மாநாடு வேண்டுகிறது" என்பது.

அண்ணாமலை அரசர் இயற்கை எய்துமுன் எழுதியதும், கையெழுத்து இடுவதற்கு முன்னரே உயிர் பிரிந்ததும் ஆகிய ஒரு நிகழ்ச்சி அறிய வருகிறது. அஃது அப்பெருந்தகையார் இசைமேல் கொண்ட ஏன்? தண்ணந் தமிழிசை மேற்கொண்ட பேசருங் காதலைப் பேசும் நிகழ்ச்சியாம்.

கீர்த்தனைப்புகழ் கோபாலகிருட்டிண பாரதியார் நினைவாக, அந்நாள் வங்க ஆளுநராக இருந்த இராசகோபாலச்சாரியார் பெயரால், ஆண்டுதோறும் பாட்டுப்போட்டி நடத்தி வெற்றி பெறுவார்க்குத் 'தம்பூர்' பரிசு வழங்குவதாகவும், அதற்கு வைப்புப் பொருளாக உருபா 3001 நன்கொடை வழங்குவதாகவும் கடிதம் எழுதியதாம்! அவர் நினைவு அவர்தம் அருமை மகனார் அரசர் முத்தைய வேளால் நிறைவேற்றப் பட்டதாம்! இத்தகைய பற்றாளரையும், தம் வகையில் சீராகக் கொண்டு செல்லும் திறம் உடையவர்களிடம் எத்தகைய விழிப்பு வேண்டும் என்பது தொடர்வரலாறாம்.

இனி இத்தகைய எதிர்பார்ப்பும் ஏமாற்றமுமாம் நிலையுமே 16.11.1940 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் தமிழிசை வளர்ச்சிக்கென்றே உருபா பத்தாயிரத்தை அரசர் அண்ணாமலையார் கொடையாக வழங்க நேர்ந்ததாம். அன்றியும் தலைமை ஏற்றிருந்த ஆளுநர் பெயரால் பல்கலைக்கழக மாணவர்களுள் சிறந்த தமிழிசைப்பாடல் பாடுபவர்க்கு ஆண்டு தோறும் அளிக்கும் பரிசு ஒன்றற்கு உருபா ஆயிரம் ஒதுக்கிவைத்தார்.

புதியவையாகத் தமிழிசைப் பாடல்கள் இயற்றுவதை ஊக்கு விப்பதற்கும், தமிழிசைப் பாடல்களைப் பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கும், தமிழிசைப் பாடல் அச்சீட்டுக்கும் அவ்வைப்புத் தொகை பயன்படவேண்டும் என்பது அரசர் நோக்கமாம். நிற்க.

திருநெல்வேலியில் 21.5.41 முதல் 27.5.41 முடிய ஏழு நாள்கள் மெய்கண்ட சாத்திரமாநாடு நிகழ்ந்தது. அதில் நிறைவேற்றப்பட்ட முதலிரு தீர்மானங்கள்:

1. "தமிழ் வளர்த்த சங்கமிருந்து பொங்கிய நன்னகராகிய மதுரையில் திருக்கோயிலில் தேவாரம் திருவாசகம் முதலிய தமிழ்மறைகளை ஓதுவார் ஒருவருக்கு மட்டும் திங்கள் ஒன்றுக்கு ஏழுருபாயும், அதே கோயிலில் வடமொழி வேதபாராயணம் செய்து வரும் சாத்திரிகள் அறுவருக்கு மொத்தத்தில் ரூ. 135—ம் சம்பளமாக வழங்கிவருவது தமிழுக்கும் தமிழர்களுக்கும் என்றும் அழிவிலா இழிவை அளிப்பதாக இருப்பதனால் ஆலயப் பொறுப்பாளிகளின் மேற்கண்ட செயலை இம்மாநாடு வன்மையாய்க் கண்டிப்பதுடன், இனிமேல் வடமொழி ஓதுபவருக்கு வழங்குவது போல் தமிழ்மறை ஓதுபவருக்கும் குறையாது சம்பளம் வழங்க வேண்டுமென்று இந்து சமய அறநிலையப் பாதுகாப்பாளர்களையும், ஏனைய ஆலயப் பொறுப்பாளிகளையும் இம்மாநாடு வற்புறுத்துகின்றது.

முன்மொழிந்தோர்: திரு. இ.மு. சுப்பரமணியபிள்ளை அவர்கள்.

பின்மொழிந்தோர்:

1) திரு.ந. சிவகுருநாத பிள்ளையவர்கள்

2) திரு. புத்தநேரி ரா. சுப்பிரமணியன்.

2. "தமிழ் நாட்டிற்கே உரிய சென்னை, திருச்சினாப்பள்ளி வானொலி (ரேடியோ) நிலையங்களில் தமிழ்ச்சார்பில்லாத

ஆந்திரச் சார்புடைய பாடல்களுக்கும், சொற்பொழிவுகளுக்கும் கதைகளுக்கும் முதன்மையாகவும் மிகுதியாகவும் இடம் கொடுப்பதை இம்மாநாடு கண்டிப்பதுடன் தமிழ்நாட்டிற் சிறந்த இசைப்புலவர், தமிழ்ப்புலவர்களும், தேவாரத் திருவாசகப் பண்களிலும் பிற இசைக் கலைகளிலும் வல்ல திருவாளர்கள் சுந்தர ஓதுவா மூர்த்தி, தண்டபாணி தேசிகர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, இலக்குமணப் பிள்ளை, பொன்னையாப் பிள்ளை போன்ற இசை வாணர்கள், பிறதமிழ்க் கலைஞர்கள், சொற்பொழிவாளர்கள், கதைவல்லார்கள் ஆகிய இவர்களுடைய புலமைத்திறன் தமிழுலகிற்குப் பயன்படும் வண்ணம் இவர்களுக்கு முதன்மையாகவும் மிகுதியாகவும் இடங்கொடுக்க வேண்டுமென்று இம்மாநாடு மேற்படி வானொலி நிலைய அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிந்தோர்: திரு. பாலகவி வயிநாகரம் இராமநாதன் செட்டியார் அவர்கள்.

பின்மொழிந்தோர்: திரு. தூ.சு. கந்தசாமி முதலியார் அவர்கள்.

இதே மாநாட்டில் இயல், இசை, நாடகம், தொண்டு ஆகியவற்றில் சிறந்தோர்க்குச் சிறப்புப்பட்டங்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இசைத்துறையில் வல்லார் பெற்ற பட்டங்கள் வருமாறு:

திருவனந்தை தி. இலக்குமணப்பிள்ளை— 'இசைக்கலை ஆசிரியர்'

மயிலம் வச்சிரவேல் முதலியார் — 'இசைமணி'

சிதம்பரம் செல்வரத்தினம் பிள்ளை — 'இசைச்செல்வர்'

நெல்லை சா. சுந்தர ஓதுவாமூர்த்தி — 'மறையிசை மன்னர்'

சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை — 'இசைமன்னர்'

மேலகரம் சம்பந்த ஓதுவார் — 'மறையிசைச் செல்வர்'

வீரவநல்லூர் சுந்தர ஓதுவாமூர்த்தி —'மறையிசை மணி'

இவ்விசைச் செல்வர்கள் எழுவருள் முதல் ஐவரும் அரங்கில் இசை நிகழ்த்தியோர் ஆவர். பின் இவரும் மாநாட்டில் இடைஇடையே மறைஇசை ஓதினோர் ஆவார். பட்டங்களுடன் பொற்பதக்கங்களும் வழங்கப்பெற்றனர். (செ. செ. 19: 102 — 110)

இப்பெரு மாநாடு திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகஞ் சார்ந்ததான, தென்னிந்திய சைவசித்தாந்த

சங்கச் சார்பில் நிகழ்ந்ததாகும். அதன் வரவேற்புக் கழகத் தலைவர் பி. சிதம்பரம் பிள்ளை. முன்னின்று நடத்தியவர்கள் கழக அமைச்சர் வ. திருவரங்கனாரும் அவர் இளவல் வ. சுப்பையாவும் ஆவர்.

இனி, 1936 ஆம் ஆண்டே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைமாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாடு தமிழிசை வளரவும், புதிய தமிழிசைப் பாடல்கள் தோன்றவும் விரும்பியது. அவ்விருப்பும் எழுச்சியும் 1941 இல் (14.8.1941 - 17.8.1941) நான்கு நாள் மாநாடாகக் கால்கொள்ள உதவியது.

அம் மாநாட்டுக்கு அண்ணாமலை அரசர் விடுத்த வாழ்த்துரையில், "தாய்மொழியில் உள்ள பாடல்களை இசையரங்கு முடிவில்தான் பாடுவதென்று தள்ளிவைத்தல் தமிழ் நாட்டில் மட்டுமே காணப்படுகிறது. பிறமொழியில் உள்ள பாடல்களின் இசை ஓசையைத்தான் தமிழர்கள் இப்போது அறிய முடிகின்றதே யன்றி, முற்றிலும் பாட்டின் உணர்ச்சியுட் புகுந்து அநுபவிக்க முடிவ தில்லை. பாடல்கள் தமிழில் இருந்தால் இசைநயத்தோடு கருத்தின் நயத்தையும் அறிந்து, பாடகருடைய உணர்ச்சியோடு ஒத்த உணர்ச்சி யுடையவராவர். அது இசை அரங்குகளில் பிறமொழிப் பாடலைப் பாடும் போதெல்லாம் சோர்வாயிருந்து தமிழ்ப்பாடலைக் கேட்டவுடன் தமிழருக்குத் திடீரென உண்டாகும் கிளர்ச்சியாலும் மகிழ்ச்சியாலும் தெள்ளிதின் உணரப்படும். முற்றிலும் தமிழ்ப் பாடலால் அமைந்த இசையரங்குகள் இசைக்கலைஞர்களால் விரைவில் நடைபெறக் கூடும்" என்று எழுதியிருந்தார்.

அற்றைநாள் துணைவேந்தர் சர். கூர்மா வேங்கட ரெட்டி நாயுடு, தொடக்கவுரையாற்றினார். அதன்பின் இசைப்பகுதித் தலைவர், "தமிழ்க் கலை வளர்ச்சிக்காக நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழத்தின் ஆதரவில் முழுத்தமிழிசை மாநாடு கூடும் இந்நாள், சிறந்த நன்னாளாம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் சிறந்த இசையை வளர்த்தனர். ஐந்து வகை நிலத்திற்கும் வெவ்வேறாகிய யாழும் பறையும் இருந்தன. இசையானது கடவுளிடத்தில் அன்பு விளைத்து அமைதிப்பண்பை வளர்க்கின்றது. தமிழர் எல்லோருக்கும் இன்பந்தரக்கூடிய தமிழ்ப் பாடல்களின் பெருக்கத்திற்கு இம்மாநாடு துணை செய்யுமென நம்புகிறேன்" என்று பேசினார்.

வரவேற்புக் கழகத் தலைவர் டைகர் வரதாச் சாரியார், தமிழ் நாட்டின் எல்லாத் துறைகளிலும் இசை கலந்திருப்பதை விளக்கு முகத்தான் நெல்லுக்குத்தும் பாடல் ஒன்றனைப் பாடிக் காட்டி, "எளிய இனிய சொற்களால் இசைப்பாடல்கள் இயற்றி இசைத் தமிழை வளர்ப்பது நம் கடமை" என்றார். தமிழிசையரங்கில் அரியக் குடி இராமாநுசையங்கார் தமிழ்ப் பாடல்கள் பாடினார். அவற்றுள் தேவாரப்பாடல்கள் இரண்டு. முதல்நாள் காலையில் இசையரங்கு கள் நான்கு நிகழ்ந்தன. தமிழ்ப்பாடல்கள் 21 பாடப்பட்டன.

நண்பகல் 1.30 மணிக்குச் செயற்கூட்டம் கூடிற்று. தி.இலக்குமணப் பிள்ளை தலைமை ஏற்றார். கே. பொன்னையா பிள்ளை, தமிழ் இசையின் பொருட்டுச் செய்ய வேண்டியவற்றைப் பற்றி எழுதிய குறிப்புகள் படிக்கப் பட்டன. உ.வே. சாமிநாதையர் விரிவான கடிதம் வரைந்திருந்தார்.

பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய பழைய நூல்களிலும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய அருட்பாடல்களிலும் சித்தர்கள் தாயுமானவர், தத்துவராயர் முதலியோர் பாடல்களிலும் இருக்கும் இசைப் பாடல்களை ஒருங்கு சேர்க்க வேண்டும் என்றும், குறவஞ்சிகள் பள்ளுகள் நொண்டி நாடகங்கள் குறம் முதலியவற்றிலும் பல இசைப்பாடல்கள் உண்டு என்றும், புராணக் கீர்த்தனங்கள் ஏராளமாக உள்ளன என்றும், விலாசம் என்னும் பெயர் பெற்ற நூல்களில் இருந்து பாடல்கள் தொகுக்க வேண்டும் என்றும், தனிக்கீர்த்தனங்கள் நாற்பதுக்கு மேற்பட்ட புலவர்களால் இயற்றப்பட்டுள்ளன என்றும், நாட்டுப் பாடல்களாகிய கும்மி, சிந்து, தெம்மாங்கு, ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு, கப்பற்பாட்டு, கோலாட்டப் பாட்டு, ஊஞ்சற்பாட்டு, ஏசற்பாட்டு, அம்மானைப்பாட்டு, உலக்கைப் பாட்டு முதலியவற்றைத் தொகுத்தல் நலம் என்றும், தற்காலத்திலும் இலக்குமணப்பிள்ளை, முத்தையா பாகவதர் முதலிய இசைப் பாவலர்கள் பாடல்கள் போற்றத்தக்கன என்றும் குறித்திருந்தார்.

முத்தையா பாகவதர், திருநெல்வேலி நெல்லையப்பன் கவிராயர் வீட்டில் தாம் கண்ட 'தாளசமுத்திரம்' என்னும் நூலைப் பற்றியும் தம்மிடமுள்ள 'சங்கீத சந்திரிகை' என்னும் நூலைப் பற்றியும் பேசினார். பின்னர், புதிய தமிழ்ப்பாடல்கள் அமைப்பதற்கும், பழந்தமிழிசைப் பாடல்களைத் தொகுப்பதற்கும் இருபத்தொருவர் கொண்ட ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது.

மாலையில் 5 அரங்குகள் நிகழ்ந்தன. தமிழ்ப்பாடல்கள் 27 பாடப்பட்டன.

இரண்டாம் நாள் காலையில் நான்கு அரங்குகள் நிகழ்ந்தன. 32 பாடல்கள் பாடப்பட்டன.

அண்ணாமலையரசர் வழங்கிய இசைத்தமிழ் வளர்ச்சி நன்கொடையைப் பாராட்டி நன்றித் தீர்மானம் நிறைவேற்றியதுடன், அதனைக் கொண்டு பரிசுகள் வழங்கும் போட்டிகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது.

இசையரங்குகளில் பெரும்பாலும் தமிழ்ப்பாடல்களே பாடப்பட வேண்டும் என்று பலர் பேசிய போது எம்.எசு. இராமசாமிஐயர் முக்கால் பங்கு தமிழ்ப்பாடல்களும் கால்பங்கு பிறமொழி உருப்படிகளும் இருத்தல் வேண்டும் என்றும் மொழிந்தார்.

வேறு அறிஞர் சிலர், முழுதும் தமிழ்ப் பாடல்களே இருக்க வேண்டும் எனத் திருத்தம் தந்தனர். அவையோர், ஒன்றிரண்டு தெலுங்கில் இருத்தல் வேண்டுமென விரும்பினால், அவைபாடப் பெறலாம் என்பதற்கு அவர்கள் இசைந்தார்கள்.

முடிவாக முழுதும் தமிழ்ப்பாடல்களே இருக்க வேண்டும் என்ற தீர்மானம் ஒருமனமாக நிறைவேற்றப்பட்டது.

திருச்சியில் இருந்து வந்த கிருட்டிண மூர்த்தி என்னும் ஆசிரியர், மாணவர்களுக்கு இசை கற்பிப்பதற்குரிய எளிதான ஒருகருவியில் நாலைந்து இராகங்களை இசைத்துக் காட்டினார்.

மாலையில் ஐந்து இசையரங்குகள் நடந்தன. 38 பாடல்கள் பாடப்பட்டன.

மூன்றாம் நாள் காலையில் 6 இசையரங்குகள் நடைபெற்றன. 39 பாடல்கள் பாடப்பட்டன.

நண்பகல், செயற்குழுக் கூட்டத்தில் சென்னைப் பல்கலைக்கழக வடமொழிப் பேராசிரியர் வி. இராகவன், பழந்தமிழ் இசைப்பாடல் மூலங்களை விரைவில் வெளிப்படுத்த வேண்டும் என்றும், கச்சேரிக்குரிய பாடல்களோடு சமயத் தொடர்பான இசையும், நாடகத் தொடர்பான இசையும் தெருக்கூத்தும் பேணப்பட வேண்டும் என்றும் நாடக இசை வளர்ச்சிக்கு நாட்டுப்புற நாடக முறைகளைப் புதுப்பிப்பதும் துணை செய்யும் என்றும், நாட்டுப்புறத் திருவிழாக் களைப் புதுப்பிப்பதால் நாட்டுப்பாட்டுகள் உயிர்பெறும் என்றும்,

தமிழிசைப் பாடலுக்கு நோபல் பரிசு போன்ற பரிசு அமைத்தல் நலமென்றும் தெரிவித்தார்.

முத்துக் குமாரசாமிப் பாவலர், பேசும் படக் காட்சியிலும் நாடக மேடையிலும் பாடும் தமிழ்ப்பாடல்கள் கூடியவரை பழைய தமிழிசை முறையைத் தழுவியிருக்க வேண்டும் என்று கூறினார்.

இசையரங்குகளில் பாடல் பாடுமுன் அப்பாடல்களின் இராகத்தையும், இயற்றினோர் பெயரையும் தெரிவித்தல் நலமெனப் பனையப்பட்டி வினைதீர்த்தான் செட்டியார் கூறினார்.

மாலையில் இசையரங்குகள் 6 நிகழ்ந்தன. 49 பாடல்கள் பாடப்பட்டன. விழா நிறைவு நாளாகிய நான்காம் நாள் காலையில் 10 இசையரங்குகள் நிகழ்ந்தன. 45 பாடல்கள் பாடப்பட்டன.

நண்பகலில் நிகழ்ந்த ஆய்வரங்கத்தில் டி.கே. சிதம்பரநாத முதலியார் சில தீர்மானங்கள் கொணர்ந்தார்.

1. இசை வளர்ச்சிக்காக ஏற்பட்ட கல்லூரி முதலிய இசைநிலைய அதிகாரிகள் இசை கற்பிப்பதில் பிறமொழிப் பாடல்களினும் தமிழ்ப் பாடல்களுக்கு முதன்மை கொடுக்க வேண்டும் என்று இம்மாநாடு அவர்களை வேண்டிக் கொள்கிறது.

2. தமிழிலேயே பாடல்கள் பாடும்படிக்கும் பிறமொழிப் பாடல்கள் இசையரங்குகளில் சிறுபான்மையே இருக்கும்படிக்கும் இசைக்கழகங்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று மாநாடு வேண்டுகிறது.

3. இசையரங்குகளை ஆதரிக்கும் இசை விருப்பாளர்கள் பெரும்பாலும் தமிழ்ப்பாடல்கள் பாடுவதையே ஆதரிக்க வேண்டும் என்று இம்மாநாடு அவர்களை வேண்டுகிறது.

4. வானொலி நிலைய அதிகாரிகள் தங்களுடைய நிகழ்ச்சித் திட்டங்களில் தமிழ்ப் பாடல்களுக்கு முதன்மையும் ஏற்றமும் கொடுக்க வேண்டும் என்று அவர்களை இம்மாநாடு வேண்டுகிறது.

என்பன அவை.

முசிறி சுப்பிரமணிய ஐயர், பள்ளிக்கூடங்களில் தமிழ்ப் பாடல்கள் வாயிலாகவே இசை கற்பிக்கப்பட வேண்டுமானால் அதற்குச் சில இடையூறுகள் உண்டென்றும், போதுமான இசை யினங்கள் தமிழில் ஏற்படும் வரைக்கும் இத்தீர்மானத்தை வழக்கத் திற்குக் கொண்டுவருதல் கடினம் என்றும், ஆனால் தெலுங்கு

வடமொழிகளி லுள்ளபடி தமிழில் இசைப்பாடல்கள் இயற்றுதல் இயலாது என்பது தம் கருத்து அன்று என்றும் கூறினார்.

எனினும், அதன் சார்பான தீர்மானத்தை நிறைவேற்றுதல் தமிழில் இசைப்பாடல் இயற்றுவோர்க்கு ஊக்கம் தருவதால் அது இன்றியமையாதது என்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே, மீளவும் தீர்மானங்கள் அப்படியே உறுதிப்படுத்தப்பட்டன. மாலையில் இசையரங்குகள் 9 நிகழ்ந்தன. தமிழ்ப் பாடல்கள் 54 பாடப்பட்டன.

மாநாடு முழு வெற்றியடைந்ததாக நன்றி கூறப்பட்டது.

'வெற்றியாக இசைத்தமிழ் மாநாடு நிறைந்தது' என்னும் செய்தி, பற்றி எரிந்தது சிலருக்கு. அச்சிலர் பற்றி எரிவைத் தன் பற்றி எரிவொடு பறையறைந்தன சில இதழ்கள். அவ்வகையில் இந்து இதழ் (Hindu) முதல் வரிசையில் நின்றது.

22.8.41 பிறமொழிப் பாடல்களை மாநாடு வெறுத்து ஒதுக்கு வதாகவும், அது இசைக் கலை வளர்ச்சிக்கு முரணானது என்றும் இந்து இதழில் ஒரு கடிதம் வெளிவந்தது.

31.8.41இல் சென்னை மயிலாப்பூரில் டி.எல்.வெங்கட் ராமையர், டி.டி. கிருட்டிணமாசாரியார் முதலியவர்கள், இசைக் கலையின் உயர்வைத் தமிழிசை இயக்கம் குறைப்பதாகவும் அருணாசலக் கவி, பாரதி முதலியவர்களின் பாடல்கள் இசைக் கலை நயம் உடையன அல்ல என்றும், அவை உணர்ச்சியையே எழுப்புவன என்றும், இசைக்கு மொழி அத்துணைத் தேவையற்றது என்றும் பேசியது, 1.9.41 இந்து இதழில் வெளியாயிற்று.

2.9.41 இந்து இதழில் எம்.எசு. இராமசாமிஐயர், "இசையரங்கு களில் தமிழிசைப் பாடல்களுக்கு முதன்மை கொடுக்க வேண்டும் என்று முடிவாயிற்றென்றும், எல்லாம் தமிழில் இருக்க வேண்டும் என்பது இல்லை என்றும், தியாகையர் கீர்த்தனங்களைத் தமிழில் மொழி பெயர்த்தல் நலமென்றும்" எழுதியிருந்தார். அதே நாள் இந்துத் தலைமையுரை, "தமிழிசை இயக்கம் இசைக்கலை வளர்ச்சிக்கு இடையூறாய்ப் பொதுமக்கள் கலையுணர்ச்சியைத் தாழ்த்தக் கூடும்" என்று விரித்தது.

இந்நிலையில் தமிழிசை இயக்கத்தை முளையிலேயே கிள்ளி எறிய முனைவார் இடையே, முனைப்பாகக் காக்கவும் இசைப்

பற்றாளர்கள் கிளர்ந்தனர். ஆதலால், மறுப்பும் மறுப்புக்கு மறுப்பு மாக ஈரணிகள் எதிரிட்டு நிற்கலாயின.

2.9.41இல் கோட்டையூர் சனாதன தர்ம வித்தியாசாலை ஆண்டு நிறைவு விழாவில் கலந்து • கொண்ட செட்டிநாட்டரசர் அண்ணாமலையார், "பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடங்களுள் ஒன்றாக இசையினை அமைப்பதைப் பற்றிப் பாராட்டிப் பேசினார். இயற்றமிழ் வாணரும் இசைவல்லாரும் இணைந்து உழைத்தால் தமிழிசை விரைவில் வளரும்" என எடுத்துரைத்தார்.

4.9.41இல் திருச்சிராப்பள்ளியில் பெரியார் ஈ.வே. இரா. தலைமையில் கூடிய பெருங்கூட்டத்தில் இளவரசர் முத்தையவேள் தமிழிசை இயக்கத்தின் நோக்கங்கள் இவையென விரிவாக எடுத் துரைத்ததுடன், இந்து இதழின் மறுப்புப் போக்கையும் கண்டித் துரைத்தார். அக்கண்டிப்பை மிகவும் வரவேற்றுப் பெரியார் வலுவான கண்டனம் தெரிவித்தார். 6.9.41 இந்து இதழில் இசைபற்றி இரண்டு கடிதங்கள் வந்தன. அவற்றை எழுதியவர்கள் கே.எசு. இராமசாமி சாத்திரியாரும், டைகர் வரதாச்சாரியாரும் ஆவர்.

முன்னவர், "தாய்மொழியிற் பாடும் இசைப்பாடல்கள் மிகுந்த இன்பம் பயக்கின்றன என்றும், பழந்தமிழ்ப்பாடல்களின் இசை முறைகளைப் போற்ற வேண்டும் என்றும், நல்ல இசைக்குரிய இயைபுகளை அமைத்துக் கொண்டால் தியாகையரைப் போன்ற கலைத்தேர்ச்சி வல்ல மக்கள் தமிழ் நாட்டில் பிறந்து தமிழிசையை வளப்படுத்துவார் என்றும், தனி இசைக்கு ஒரு பங்கு நேரமும் தமிழிசைப பாடலுக்கு ஒரு பங்கு நேரமும், பிறமொழி இசைப் பாடல்களுக்கு ஒருபங்கு நேரமும் இசையரங்குகளில் தர வேண்டும் என்றும்" குறித்திருந்தார்.

பின்னவர், "தமிழிசை இயக்கத்தின் நோக்கம் பிறமொழிப் பாடல்களைத் துரத்துவது அன்று என்றும், தமிழ் மக்களுக்குச் சொற்பொருள் விளங்கத்தக்க இசைப்பாடல்களின் சுவையை ஊட்டுவதேயாம் என்றும், நான்கு நாள்கள் நடந்த மாநாட்டில் கலந்து கொண்ட இசைக்கலைஞர்களின் ஊக்கமும் தமிழ்ப் பொது மக்களின ஆர்வமும் இயக்கத்திற்கு நாட்டிலுள்ள விருப்பமிகுதியைக் காட்டின என்றும், நல்ல நேரத்தில் இயக்கம் தொடங்கியது என்றும் எழுதினார்.

மேலும், கேட்போர் தமிழராய் இருக்குமிடத்தில் தமிழ்ப் பாடல்களே இசைவளர்ச்சிக்குத் தக்க வாயில் ஆம் என்றும், தெலுங்கர் தெலுங்குப் பாட்டின் இசையை நன்கு அநுபவிப்பர் என்றும், மிகச் சிறந்த இசைமுறைக்கு முரணாகாத தமிழ்ப் பாடல்களைப் பரப்புவதே இயக்கத்தின் நோக்கம் என்றும், தமிழிசையின் புத்துணர்ச்சிவலியால் பல அழகிய தமிழ்ப்பாடல்கள் தற்காலத்தில் தோன்றியுள்ளன என்றும் தெரிவித்தார்.

இந்து இதழ் இதனை மறுத்து மீண்டும் எழுதியது. இதே இதழில் எசு.எசு. சுந்தரம் என்பவர் மொழிக்கட்சி, சமுதாயக் கட்சிகளின் கலப்பால் இவ்வியக்கம் தோன்றியதெனை ஒரு வண்ணம் பூசினார். மறுநாள் (7.9.41) மைலாப்பூரில், தியாகராச சங்கீத வித்வ சமாசக் கூட்டத்தில், டி.எல். வெங்கடராமையர், கருவூர் சுந்தரம் ஐயர் முதலியோர் "இசைக் கலை வளர்ச்சியில் மொழிக்கட்சியைக் கொண்டு புகுத்துதல் தவறென்று" இந்து இசைக்குப் பின்னிசை இசைத்தனர்.

அதேநாள் தினமணியில் எம். முத்துக்குமாரசாமிப்பாவலர், தமிழ்நாட்டுக்கவிகள் நல்ல தமிழிசைப் பாடல்களை இன்னும் தோற்றுவிக்க வேண்டும் என்று ஊக்கப்படுத்தியதுடன், தமிழகத் துள்ள சில சிறந்த பாவலர்களையும் குறிப்பிட்டார். அவர்கள் பாற்கரதாசு, சண்முகதாசு, சங்கரலிங்கக் கவிராயர், எம்.எசு. பாலசுந்தரம்பிள்ளை, பூமிபாலகதாசு, உடுமலை நாராயணகவி, கவிகுஞ்சர பாரதி, ஆனை வைத்தியநாதையர், மதுரை மாரியப்ப சாமிகள், புதுவை நாகமுத்துப் பிள்ளை, இலட்சுமணதாசு முதலியவர்கள் ஆவர். இவர்கள் தமிழிசைத் தொண்டில் பங் கெடுத்துக் கொள்ள வேண்டும் என்றார். திருவரங்கத்தில் 8.9.41 இல் மருங்காபுரி கோபால கிருட்டிணையர் என்னும் இசைஞர்க்குப் பணமுடிப்பு வழங்கிய கூட்டத்தில் பங்கு கொண்ட சேற்றூர் குறுநிலமன்னரும், பாவநாசம் சிவன் முதலியோரும் 'இசைக் கலையில் மொழிக்கட்சி ஆகாது' என்று கண்டித்துப் பேசினர். தமிழிசை தமிழ்நாட்டில் தமிழ் மக்கள்முன் பாடப்பட வேண்டும் என்ற முயற்சி எவ்வாறு சூழ்ச்சிக்காரரால் மொழிக்கட்சி எனக் கயிறாகத் திரிக்கப்பட்டது என்பதன் சான்று இது.

இந்நிலையில் விடுதலை இதழ் 10.9.41 இல் தமிழிசையை வரவேற்றுத் தலைப்புரை எழுதியது. "மூவேந்தர் காலத்தில்

இசைவளம் பெற்றிருந்த போது, தியாகையர் தீட்சிதர் சாத்திரியார் கிருதிகள் பாடவில்லை. நாடக மேடையில் பாடுகின்றவர்கள் தமிழிசையால் பொதுமக்கள் மனத்தைக் கவர்வது வெளிப்படை. இராக இலட்சணமும் சாகித்யச் சிறப்பும் ஒன்று சேர்ந்த தமிழிசை முன்னாளில் இங்கு இல்லாமல் போகவில்லை. இனி உண்டாக முடியாதென்று எவரும் கூறவும் துணியார். தமிழனின் மனம் குளிரத் தமிழிசையே தேவை" என்பது அதன் சுருக்கம்.

எனினும் தமிழிசைக்கு எதிர்ப்பாகவே இந்து இதழ் எழுதி வந்தது.

தினமணி முகவர், கானவிசாரதா எம்.எசு. இராமசாமிஐயரை நேர்காணல் வகையால் 12.9.41இல் எழுதிய உரையாடல் செய்தி வெளிவந்தது. அதில், "தமிழிசை இயக்கத்தில் வகுப்புவாத உணர்ச்சியாவது சாதித் துவேசமாவது கிடையாது" என்று கூறினார்.

முகவர்: தமிழ்ப் பாட்டுகள் எல்லாம் சில்லறைப் பாட்டுகளா?

இராம: அப்படி எண்ணுகிறவர்கள், எதைப் பற்றித் தங்களுக்கு ஒன்றுமே தெரியாதோ, அதைப்பற்றித் திடமான அபிப்பிராயத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

முகவர்: தமிழ் பாஷையைப் பாடுவதற்கு மாத்திரம் வைத்துக் கொண்டால் போதுமா?

இராம: கருநாடக சங்கீதம் அடைந்துள்ள உயரிய நிலையையே பல்லவி பாடுவதென்பது காட்டுகிறது. பல்லவியைப் பாடுவதற்குத் தமிழை உபயோகிக்கலாம் என்றால் உயர்ந்த கலைமுறையில் பாடுவதற்கு தமிழிசை இணங்கிவரும் என்பதை ஒப்புக் கொண்டதாகும்.

முகவர்: தமிழ்ப்பாட்டுகள் உயர்ந்த நிலையை அடைய வில்லையா?

இராம: கிருதிகள் கீர்த்தனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் தமிழ்ப்பாட்டுகள் உச்சநிலையை அடைந்து விட்டன. அருமையான தமிழ்ப்பாட்டுகள் இயற்றியவரின் பெயரை யான் கூறமுடியும். வர்ணங்கள் தமிழில் இல்லை என்றால் அவை விரைவில் வெளிவரும். அண்ணாமலைநகர் மாநாட்டுத் தீர்மானத்தில் அது அடங்கியிருக்கிறது.

முகவர்: கருநாடக சங்கீதத்திற்கு அவசியமான பாவம் அமைப் பதற்குத் தெலுங்கு பாஷை மிகச் சுலபமாக இணங்கி வருகிற தென்பது உண்மையா?

இராம: அது மதவெறிபிடித்தவன் என் கடவுள்தான் உண்மையான இரட்சகன் என்று கூறுவது போலிருக்கிறது. பாஷை எதுவானாலும் பாவம் பாடகர்களின் மன உணர்ச்சியில் இருந்து வெளிவருகின்றது. உயர்ந்த பாவத்தை வெளிப்படுத்தக் கூடிய ஏராளமான தமிழ்ப் பாட்டுகளை நான் எடுத்துக் கொடுக்கமுடியும்.

மேலும் அந்நேர்காணலில், கருவியிசை வாய்ப்பாட்டுக்குத் துணை செய்வது என்றும், சங்கீதம் பாஷையைக் கடந்தது என்பது அரைகுறையான உண்மை என்றும் கூறினார்.

தமிழிசையைக் காக்கவும் வளர்க்கவும் வேண்டும் என்னும் கருத்துடைய இசைக் கலைவாணர் சிலர், 'இப்பொழுது தக்க பொழுது' எனத் தேர்ந்து ஓர் அறிக்கையை 15.9.41இல் வெளியிட்டனர்.

"தமிழில் இனிய கீர்த்தனங்கள் இல்லை; சாகித்தியம் சங்கீதத்திற்கு அவசியம் இல்லை; சங்கீதத்திற்குச் சுர எழுத்துகள் தமிழில் கிடையா; தமிழ் மொழி சாகித்தியத்திற்குப் பொருத்தப்படாது என்பன போன்றவை சரியானவை அல்ல. விவாதத்திற்கு நிற்கமாட்டா" என்பது அதன் ஒரு பகுதியாகும். இவ்வறிக்கையில் கையொப்பமிட்டவர்களுள் சிலர்:

டி.என். இராசரெத்தினம் பிள்ளை
மாரியப்ப சாமி
தண்டபாணி தேசிகர்
என்.எசு. கிருட்டிணன்
டி.ஏ. மதுரம்
வி.வி. கோபால சர்மா
பாலசுந்தர கவி
கே.ஆர். வேணுகோபால சர்மா.

அறிக்கை அளவில் நில்லாமல் தமிழிசை இயக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் மாபெரும் கூட்டம் நிகழ்த்தவும் ஆர்வலர்கள் கிளர்ந்தனர். அவ்வகையில் சென்னை விக்டோரியாப் பொது மண்டபத்தில் 6.9.41இல் ஒரு பெருங் கூட்டம் கூட்டப்பட்டது.

அதன் தலைவராகத் திகழ்ந்தவர் இராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார். அவர் தம் தலைமையுரையில், "ஐம்பது ஆண்டுகளுக்கு முந்திய இசையரங்குகளில் ஒரு தொடக்கப்பாடல் பாடிய பின்பு இராகமும் பல்லவியும் பாடப்பட்டன. இப்போது தெலுங்கு வடமொழிப் பாடல்களே முக்காற் பங்கு பாடப்படுகின்றன. தமிழிற் போதுமான இசைப்பாடல்களும் இசைநூல்களும் இருந்தன. அவை மறைந்தன எனில், அது தமிழர்களின் கவலைத் தாழ்ச்சி என்றே கூறவேண்டும்.

"கவிகுஞ்சர பாரதியாரின் பதங்களை என் தந்தையார் வெளியிட்டார். அப்புத்தகம் இபபோது காணப்படவில்லை. ஆயிரம் இசைப்பாடல்களுக்கு மேலடங்கிய கையெழுத்து ஏடு ஒன்றை நான் நெடுநாள்களுக்கு முன்பு கண்டேன். பாதுகாவாமையால் அது இப்போது காணப்படவில்லை. பொருள்விளங்காத பாடல்களைப் பாடுவது நகைப்புக்கு இடம்தரும். தமிழ் நாட்டு இசைக்குத் தமிழ் மொழியே தக்க கருவியாகும். தமிழானது இசைப்பாடலுக்கு இணங்காது என்பது தவறு. தமிழ் என்பதே இனிமை என்னும் பொருளுடையதாம்" என்றார்.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் தமிழிசை இயக்கத்திற்கு எதிர்ப்பு இருக்குமென்று தாம் கனவிற்கூட எண்ணியதில்லை என்றும், பொருள் விளங்காத பாடல்களைப் பாடுவதால் பாடல் இயற்றியோர்க்குள்ள சிறப்புக் குறையும் என்றும், தமிழ்ப்பாடல் மூலமாகத் தமிழர்க்கு இசையுணர்ச்சி உண்டாகுமென்றும் கூறினார்.

வி. இராமசாமி ஐயங்கார் "தமிழில் நல்ல இசைப்பாடல்கள் இல்லை என்பார் தமிழ் அறியாதவர்" என்றார்.

திவான்பகதூர் தெய்வசிகாமணி முதலியார், தாம் கேட்ட இசைப்பாடல்களில் தமிழ்ப்பாடல்களே மிக நன்றாக அநுபவிக்கக் கூடியனவாக இருந்தன என்றும், தமிழிசை இயக்கத்தை மறுப்பவர்கள் தமிழன் தமிழ்ப்பாடலைக் கேட்கவும் நுகரவும் கூடாது என்பவராவர் என்றும் கூறினார்.

டி.என். இராசரெத்தினம் பிள்ளை, இசைக்கலைஞர்கள் தமிழ்ப் பாடல்களையே தமிழ் நாட்டில் பாடவேண்டும் என்றும், தமிழ்ப்பாடல் பாடாத இசையரங்கிற்குப் பொதுமக்கள் போகலாகாது என்றும் தெரிவித்தார்.

மேலும் தியாகராச பாகவதர், கே. பொன்னையா பிள்ளை, தாவுத்சா, திருமூர்த்தி ஐயர், தண்டபாணி தேசிகர், செங்கல்வராயர் அறிஞர் அண்ணா ஆகியோரும் தமிழிசை இயக்கத்தை வரவேற்றுப் பேசினார்.

இளவரசர் முத்தையவேள், பெருகி நின்ற கூட்டத்தைக் கண்டு தமிழிசை இயக்கம் வெற்றி பெற அடையாளம் ஈதென்று பாராட்டினார். சிலர் எதிர்ப்பு பலர் ஆதரவுக்கு வழிசெய்தது என்று கூறிய அவர், தெலுங்குப் பேசும் படங்களில், தெலுங்குப் பாடல்களும், இந்திப் படக் காட்சிகளில், இந்திப் பாடல்களும், தமிழ்ப் பேசும் படங்களில், தமிழ்ப் பாடல்களும் பாடப்படுவது போலத் தமிழ் மக்களுக்குத் தமிழ் நாட்டில் தமிழிசை வேண்டும் என்றும் கூறினார். அண்ணாமலை நகர் மாநாட்டுத் தீர்மானங்களை வரவேற்றுப் பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

17.9.41இல் சுதேசமித்திரன் ஆசிரிய உரை 'விஷயத்திற்குப் புறம்பான வாதங்கள்' என்னும் தலைப்பில் தமிழிசை இயக்கத்தை வரவேற்று எழுதப்பட்டிருந்தது. அதே நாள் இந்து இதழில் கோமதி சங்கர ஐயர், தமிழிசை மாநாட்டுத் தீர்மானங்களின் தெளிபொருளை எடுத்துரைத்துத் தமிழ்ப் பாடல்களை இசையரங்குகளில் 'துக்கடா'க் கள் எனவும் 'சில்லறை'கள் எனவும் ஒதுக்குதல் தவறு என்று எழுதிய கடிதம் வந்தது.

அதே நாளில், இந்தியன் எக்சுபிரசு நாளிதழில், டைகர் வரதாச்சாரியார் 'இசையில் பாட்டின் இடம்' என்னும் தலைப்பில், "100 இசைக்கலைஞர் கூடிய மாநாடு செய்த தீர்மானத்தை அதன் கருத்தைத் தவறாயுணர்ந்த ஒருசிலர் மறுத்தல் போற்றத் தக்கதன்று. "இசைக்கு மொழி வேண்டாம் என்பது தமிழை வேண்டாம் என்று நீக்குதற்கே யன்றிப் பிறமொழி வேண்டாம் என்று நீக்குதற்கு அன்று போலும்" என்று கூறினார்.

அண்ணாமலை அரசர் அறக்கட்டளைத் திட்டப்படி இசைப் போட்டி நடத்துதற்குப் பலகலைக்கழகப் பதிவாளர் அறிக்கை விடுத்தார். 23.9.41 முதல் 25.9.41 முடிய மூன்று நாட்களும் போட்டி நிகழ்ந்தன. போட்டி விதிகள்:

1. போட்டியில் தமிழ்ப்பாட்டுப் பாடுபவர் அனைவரும் கலந்து கொள்ளலாம். பாடுவோர் பாடல் இயற்றுபவராகவோ, பிறர் இயற்றியதைப் பாடுபவராகவோ இருக்கலாம்.

2. பாட்டு இயற்றுவோர் தாமே வந்து பாடலாம். பாடல்களை அனுப்பவும் செய்யலாம்.

3. ஒரு முறை பரிசு வாங்கினவர்கள் மறுபடியும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

4. பாடல் இயற்றுவோர் ஒவ்வொருவரும் போட்டிக்கு ஒரு வாரத்திற்கு முன்னேயே சுரம் வகுத்த பாடல்கள் 6—க்குக் குறையாமல் துணை வேந்தருக்கு அனுப்ப வேண்டும்.

5. போட்டியில் குறிப்பிடும் நான்கு பாடல்களுக்குக் குறையாமல் பாடத் தயாராக இருக்கவேண்டும். அப்பாடல்களை இயற்றியவரே பாடலாம்; பிறரைக் கொண்டும் பாடுவிக்கலாம்.

6. பாட்டு இயற்றாமல் பாடல் போட்டியில் கலந்து கொள்பவர் ஒவ்வொருவரும் போட்டிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னேயே பதினைந்து பாடல்களுக்குக் குறையாமல் சுரங்களோடு எழுதித் துணை வேந்தருக்கு முத்திரையிட்ட அஞ்சலில் அனுப்ப வேண்டும். அவற்றில் ஐந்துக்குக் குறையாமல் பாடத்தயாராக இருக்க வேண்டும். ஒவ்வொரு பாட்டும் 15 நிமிடத்திற்குள் பாடுதல் வேண்டும்.

7. பாட்டுகளில் அரசாங்கத்தாருக்காவது ஒரு கூட்டத்திற்காவது தனி மனிதனுக்காவது மாறான சொற்களோ செய்திகளோ இருத்தல் கூடா.

8. போட்டிகளின் முடிவு நீதிபதிகளாற் செய்யப்படும். அவர்கள் முடிவே முடிவாகும்.

9. பாடல்கள் தக்கவையாய் இல்லாவிட்டால் அவர்கள் பரிசு கொடுப்பதில்லை என்று முடிவு செய்யலாம்.

10. பரிசுபெற்ற பாடல்கள் பல்கலைக்கழகத்தின் உரிமை யுடையதாகும்.

பாடல் இயற்றுதல் போட்டியில் கலந்து கொண்டவர் இருபத்து ஒன்பதின்மர். அவருள் மகளிர் ஒருவரே.

பாடுதல் போட்டியில் கலந்து கொண்டோர் முப்பத்திரண்டுபேர். அவருள் மகளிர் பதினைவர்.

பாடப்பட்ட பாடல்கள் 225.

முதல் மூன்று பரிசுகளும் உருபா 200, 150, 100. பாடுதலில் ஆடவர் மகளிர் எனத் தனித்தனிப் பரிசுகள் வழங்கப்பட்டன.

போட்டி முடிவு 27.1.41இல் வெளியிடப்பட்டது.

தமிழ் இசை யியக்கத்திற்கு உண்டாகியுள்ள எதிர்ப்பைக் கண்டித்துத் தினமணி ஒருகட்டுரையை 26.9.41இல் வெளியிட்டது. அதில்,

"நமது நாட்டிற் சரக்குகளை உண்டாக்க வேண்டும் என்று இந்தியர் சொல்லும் போது எல்லாம் எங்களைப்போல் அழகாக அவற்றை உங்களால் ஆக்க முடியாது என்று வெள்ளையர் சொல்வது வழக்கம். அதைப்போலவே வித்துவான்கள் வாதம் செய்கிறார்கள். சங்கீதத்திற்குப் பாஷை அவசியமில்லை என்று சொல்கின்றவர்கள் தியாகராச ஐயரை அவமதிப்பவர்கள் என்று நாம் நிச்சயமாகச் சொல்லமுடியும்" என்று எழுதியது.

இந்நிலையில் சென்னை தியாகப் பிரம்ம மகோற்சவ சபையில் இசைவிழாத் தொடங்கியபோது வரவேற்புச் சொற்பொழிவு அண்ணாமலை அரசரால் செய்யப்பட்டது (4.10.91). நிகழ்ந்த இடம் சாந்தோம் பாரிசுமண்டபம். அப்பொழிவில்,

தமிழிசை இயக்கத்தைப் பற்றித் தவறான கருத்துகள் வெளி வந்தமை தகாது என்று சுட்டிக்காட்டினார். தமிழிசை வளர்ச்சிக்காக யான் அளித்த நன்கொடையினால் தெலுங்குப் பாடல்களையோ வேற்றுமொழிப் பாடல்களையோ நீக்க வேண்டும் என்பது என் நோக்கமே அன்று. என் ஒரே விருப்பம், தமிழ்ப்பாடல்கள் ஆக்குவதற்கும் பழந்தமிழ்ப் பாடல்களை மலர்ச்சியடையச் செய்வதற்கும் ஒரு தனிப்பட்ட ஊக்கம் கொடுக்கவேண்டும் என்பதேயாகும்.

தமிழ்நாட்டு மக்கள் தமிழ்ப்பாடல்களின் மூலம் நுகரும் இன்பத்தைப் போலத் தெலுங்கு அல்லது வேற்றுமொழிப் பாடல் களின் மூலம் இன்பமடைய முடியாது என்பதைத் தவிர வேறு எக் காரணமும் இல்லை. தமிழில் மிகுதியான பாடல்கள் அமைய வேண் டும். மிகுதியான தமிழ்ப் பாட்டுகள் பாடப்பெறவேண்டும் என்று நூற்றுக்கணக்கான மக்கள் உணர்ந்தபடி யானும் உணர்ந்தேன்.

பொருள் விளங்கக் கூடிய பாடல்களைக் கேட்க யான் விரும்புகிறேன். உணர்ச்சியோடும பொருளோடும் பாடப்பெறும் தமிழ்ப் பாடல்களைச் செவிமடுத்து நான் தனித்த இன்பமும் உணர்ச்சியும் பெறுகிறேன்.

மொழி இசைக்கு அவசியமில்லையாயின் கருவி இசையே போதும். வாய்ப்பாட்டு வேண்டுவதில்லை. ஆனால் தியாகையர் தம்முடைய உள்ளத்தை இசைப்பாடல் வழியே விளக்கினர் என்பதால் மொழியின் அவசியம் தெளிவாக விளங்கும் என்று தெளிவித்தார்.

வள்ளல் அண்ணாமலையார் கலையுள்ளம் எவ்வகையானும் தமிழிசையை வளப்படுத்தியே ஆகவேண்டும் என்னும் இயல்பினது. எதிர்ப்பாளர்களால் உண்டாகிய தூண்டலால் அது பெருகியது. அதனால் முன்னர் வழங்கிய கொடையோடு தம் அறுபதாம் ஆண்டு விழா, பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த போது (30.9.41) தமிழில் இசைப்பாடல்கள் இயற்றுவதை ஊக்குதற்பொருட்டும், புதுப்பாடல் களைக் கற்பித்து நாட்டிற் பரவுதற் பொருட்டும் இரண்டாம் நன்கொடையாக 15000 உருபா வழங்கினார். அவர் தம் அக்கொடையின் நோக்கங்களையும் குறிப்பிட்டிருந்தார். அவை,

இசைக் கழகங்களுக்குப் பொருளுதவி செய்தல்.

தமிழ்ப்பாடல்களே பெரும்பாலும் பாடப்பெறும் இசையரங்குகள் அமைத்தல்.

புதுப் பாடல்கள் இயற்றுதல்.

அரிய பழைய பாடல்களைக் கற்பிக்கும் சிறந்த இசைக் கலைஞர்களுக்குப் பாராட்டு நன்கொடை அளித்தல்.

பல்கலைக்கழகத்தாரின் மேற்பார்வையில் தொகுத்து வெளியிடப்படும் பாடல்களைக் கற்பித்தற்குப் பள்ளிக்கூடம் நிறுவி நடத்தல். நாட்டின் எல்லா இடங்களிலிருந்தும், அரியபாடல்களைத் திரட்டுதல். பாட்டுப்புத்தகங்கள் துண்டு இதழ்கள் வெளியிடுதல் என்பனவாம்.

இத்தகு ஆக்கவேலைகளுக்கு இடையே, தமிழிசைக்குத் தமிழ் நாட்டில் உண்டாகிய எதிர்ப்பு வேற்று மொழி மாநிலங்கள் அளவுக்கும் கூடப் பரவலாயிற்று. அவரவர் மொழியில் இசையைத் துய்க்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பவர்க்கு உண்மையாகவே தமிழிசை யார்வலரை எதிர்க்கத் தோன்றுதலே கூடாது. ஆனால், தந்நலக் குறியும் ஆண்டுவந்த நலத்தை இழக்க விரும்பாமையும் விடாப்பிடியும் சேரும்போது சிந்திக்க வாராதே!

25.9.41இல் மசூலிப்பட்டினத்தில் கூடிய சங்கீதக் கூட்டத்தில் தமிழிசைக்கு மறுப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அக்டோபர் முதல் வாரத்தில் மைசூரில் கூடிய இசை மாநாட்டிலும் அக்டோபர் இரண்டாம் வாரத்தில் விசாகபட்டினத்தில் கூடிய கானசபைக் கூட்டத்திலும் தமிழிசை இயக்கத் தீர்மானங்களுக்கு மறுப்புக் கூறப்பட்டன.

சென்னையில் 17.10.41 இல் நிகழ்ந்த தீட்சிதர் விழாவில். பேசிய சர். அல்லாடி கிருட்டிணசாமி ஐயர் இசைக்கலைப் பயிற்சிக்கு அண்ணாமலை நகர் இசைமாநாட்டுத் தீர்மானம் மாறுபட்டதென்று பேசினார். அவ்வியக்கம் அநாகரிகமானது என்றும் சுட்டினார். அச்செய்தி தமிழிசை ஆர்வலர்களைச் சுட்டது.

அத்தகு சூழலில் அக்டோபர் 25, 26 ஆம் நாள்களில் தேவ கோட்டைத் தமிழிசை மாநாடு நடைபெற்றது. அதன் தலைவர் டி.கே.சிதம்பரநாத முதலியார். திறப்புரையாளர் அண்ணாமலை அரசர். ஐயாயிரம் பேர்களுக்கு மேல் கூடியமாநாடு அது.

திறப்புரை கூறிய அண்ணாமலை அரசர், இசைத்தமிழ்ச் சிறப்பைக் குறித்துப் பலபடப்பேசிப் பின்னர்த் தமிழிசை இயக்கம் பற்றியும் குறிப்பிட்டார்:

"சிறிது காலமாகத் தமிழ் இசைக் கலையைப் பற்றிய ஓர் இயக்கம் தோன்றியிருப்பதை நீங்கள் அறிவீர்கள். சென்ற சில நாட்களாகத் தமிழ் இசையைப் பற்றிப் பற்பல வாதங்கள் தோன்றிய செய்தி வருந்தத் தக்கதாகும்.

பொதுவாக மக்களுக்கு அவரவர்களுடைய நாட்டில் தாய்மொழியிலேதான் பேசவும் பிறர் பேசுவதை அறிந்து கொள்ளவும் முடியும். அந்தந்த நாட்டி லுள்ளவர்கள் அந்தந்த மொழி களிலேதான் பாடல்களைப் பொருள் தெரிந்து நுகரமுடியும்.

எடுத்துக் காட்டாக வங்காள நாட்டில் இருப்பவர்களுக்கு வங்காள மொழியிலுள்ள பாடல்களை அறிந்து பாராட்ட முடியுமே அல்லாமல், தமிழ் தெலுங்கு முதலிய வேற்று மொழிப் பாடல்களை அவ்வளவாக உணர்ந்து இன்புற முடியாது. அதில் இருந்து வங்காள நாட்டில் வங்காள மொழியல்லாத பிற மொழிகளையும் பிறமொழிகளில் பாடுகிற வித்துவான்களையும் வெறுக்கிறார்கள் என்றாவது அவமதிக்கிறார்கள் என்றாவது கூறுவது சற்றும் பொருத்தமாகாது.

அதுபோலவே நமது நாட்டிலும் தமிழ்மொழியின் பாடல்களைப் பாடவேண்டும் என்ற முறையான இயக்கம் தோன்றினால், அந்த இயக்கத்துக்குத் தவறான பொருள்களையும் எண்ணங்களையும் ஏற்படுத்திக் கொண்டு வார்த்தைக்கு வார்த்தை வேறான பொருள்களைச் செய்து கொண்டும், வீண்வாதம் செய்வதும், மற்றவர்களுடைய மனத்தைக் கலைத்து ஐயத்தை எழுப்புவதும் மிகவும் நீதியற்றதாகும்.

தமிழ்நாட்டில் தமிழர்களுக்குப் பொருள் விளங்கும் பாடல் களைப் பாடவேண்டும் என்று சரியான ஓர் இயக்கம் தோன்றி வருவதை அறிந்து கொள்ளாமல் தமிழ்நாட்டு மக்களிலேயே சிலர் எதிர்த்துத் தடை செய்வது நற்பேறில்லாக் கொடுமை என்றே சொல்லவேண்டும். இவ்வாறு உண்மையை அறிந்து கொள்ளாமல் இந்த இயக்கத்தில் ஏதோ வஞ்சகமோ, ஏமாற்றமோ இருக்கிறதென எண்ணுபவர்களுக்கு ஒன்று தெளிவாகக் கூறவிரும்புகிறேன்.

இந்தத் தமிழ்நாட்டில் பிற மொழிகளிலாவது அல்லது பிற மொழிகளிற் பாடுகிறவர்களிடத்திலாவது தமிழர்களுக்குச் சிறிதும் வேற்றுமை இல்லை. மகாராஷ்டிரா நாட்டில் மகாராஷ்டிரா மொழிப் பாடல்களும் வங்காள நாட்டில் வங்காள மொழிப் பாடல்களுமே நன்றாக மக்கள் அறிந்து இன்புறக் கூடியவையாக இருப்பது போலவே, தமிழ்நாட்டில் தமிழ் மக்கள் அறிந்து இன்புறக் கூடியது தமிழ் மொழிப்பாடல்களே என்பதைத் தெளிவுபடுத்துவதைத் தவிர வேறு எந்த வேற்றுமையான நோக்கமும் சிறிதும் இல்லை. இவ்வுண்மையை அறிந்த பிறகாவது, இந்தத் தமிழிசை இயக்கத்தை இனிமேல் குறைகள் கூறி எதிர்க்க மாட்டார்கள் என்று நம்பியிருப்போம்.

சில நாட்களுக்குமுன் முத்துசாமி தீட்சிதர் அவர்கள் படத்தைத் திறந்து வைத்த பொழுது என் பெருமை வாய்ந்த நண்பர் சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள், இங்குத் தோன்றியிருக்கிற இசை இயக்கத்தைப் பற்றி அது 'அநாகரிகம்' என்று சொல்லி வந்தார்கள். அவர்கள் பயன்படுத்தியவார்த்தை 'Anti - Cultural'. 'Cultural' என்றால் விருத்தி; அதாவது கல்வி விருத்தி. Anti-Cultural என்றால் அநாகரிகத் தன்மை கொண்டது என்று மொழி பெயர்க்கலாம். அவர்கள் தம் நோக்கத்துக்கு ஆதாரமாக மூன்று பொருள்களைக் குறிப்பிட்டார்கள். அவையாவன:

ஒன்று: இம் மாகாணத்தில் கர்நாடக இசை முறை ஒன்றுண்டு. தமிழ் இசை முறை என்றாவது, தெலுங்கு கன்னட மலையாள இசைமுறை என்றாவது கேட்டதில்லை என்றார்கள்.

இரண்டாவதாக, இசையில் வார்த்தைகள் முதன்மை இல்லை என்றும் மூன்றாவதாக, ஒருவருடைய விருப்பத்திற்காகச் சங்கீதம் உண்டாகமாட்டாது, பரிசு கொடுத்து இசை வளர்ப்பதென்பது முடியாது என்றும் சொன்னார்கள். இவற்றை ஒவ்வொன்றாக ஆராய்வோம்:

இசை முறைகளைப் பற்றி முதலில் கவனிப்போம். இசை முறைகளைப் பற்றி எனக்குத் தெரியும் என்று நான் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால், கர்நாடக சங்கீத முறை ஒன்றுண் டென்றும் தமிழ் இசைமுறையும் கர்நாடக சங்கீத முறையும் ஒன்று தான் என்றும் பல அறிஞர்கள் சொல்வது தெரியும். ஆனால் சர் அல்லாடி அவர்கள் தமிழ்ப்பாட்டுகள் நாம் வேண்டும் என்று கேட்கும்போது ஏதோ புதியவோர் இசை முறையை நாம் உண்டு பண்ண நினைக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதை நான் மறுக்கிறேன்.

சர். அல்லாடி அவர்கள் நமது நோக்கத்தைச் சரியாய் மனத்தில் வாங்கிக் கொள்ளவில்லை. நாம் கேட்பது தமிழ்ப்பாட்டுகள். சங்கீத முறையல்ல. கர்நாட சங்கீத முறைப்படி அமைக்கப்பட்ட பாட்டுகள் வேண்டும் என்றுதான் நாம் கேட்கிறோம். சொற்கள் மட்டும் தமிழ்ச் சொற்களாக இருக்கட்டும் என்கிறோம். இது அநாகரிகமோ?

இரண்டாவதாக, சாகித்யத்தைப் பற்றிக் கவனிப்போம். சர். அல்லாடி அவர்கள் சங்கீதத்தில் சாகித்யம் ஒன்றே முதன்மையானது என்று நினைக்கிறார்கள். அது அவர்கள் கருத்து. அதை நாம் மரியாதையுடன் கேட்டுக் கொள்வோம். ஆனால், அதை அப்படியே நாம் ஒப்புக் கொள்ள முடியாது. அத்தகைய சாகித்யத்திற்கும் சொற்சுவையே மிகவும் முதன்மையென்று நான் நினைக்கிறேன். ஆயிரக்கணககான மக்களும் அவ்வாறு நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் சர். அல்லாடி அவர்களுக்கும் நமக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. ஏனென்றால், அவர்களே அடுத்தவரியில் 'பாஷை தெரிந்தால் சங்கீதம் இன்னமும் உயர்வாகும் என்பதில் சந்தேகமில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது சொற்கள் இல்லாத போதிலும் இசை உயர்வுதான். சொற்கள்

இருந்தால் மிகவும் உயர்வு என்கிறார்கள். நாம் சொல்வதும் அதுதான். சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல் அழகிய வர்ணமெட்டுகளில் சொற்களும் சேரட்டும் என்கிறோம். இப்படிச் சொல்வது அநாகரிகமாகுமா?

மூன்றாவதாக, ஒருவர் விருப்பத்திற்காக இசை உண்டாகாது. பரிசால் பாட்டுக்கிளம்பாது என்று சர். அல்லாடி அவர்கள் சொல் கிறார்கள். இசையே தெரியாதவர்களிடம் சென்று பரிசு தருகிறோம் என்றால் அவர்களால் ஒரு கீர்த்தனம்கூடப் பாடமுடியாது என்பது உண்மை. ஆனால், பரிசும் புகழும் உலகத்தில் கிடைக்கும் என்றிருந்தால் புலமை வாய்ந்தவர்கள் தங்கள் புலமையைப் பெரிதும் வெளிப்படுத்துவார்கள். இது வெளிப்படை. நடப்பில் பார்ப்போம். எத்தனையோ இசைப் புலவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பணமின்றி (இலவசமாக)ப் பாடிக் கொண்டு நடமாட வில்லையே. அவர்கள் இனிய இசையை நாம் நுகர வேண்டுமானால் பெருந்தொகைகள் கொடுக்க வேண்டியிருக்கிறதே! பேச்சளவில் புகழ் மட்டுமில்லாமல், மேற்கொண்டு பரிசும் கிடைக்கும் என்றால் பாடல்கள் இயற்றுவோர்களும் பாடுவோர்களும் தாராளமாக முன்வருவார்கள். புலமை வாய்ந்தவர்கள் பரிசை எதிர்பாராமல் தங்கள் புலமையின் தூண்டுதலாலேயே அரும் பெரும் பாடல்களைப் பாடுவார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அவர்கள் கூடப் பாடினால் பரிசு கிடைத்துவிடுமே என்று பயந்து ஓடிப்போய் விட மாட்டார்கள்.

திரு. சத்தியமூர்த்தி அவர்கள் தியாக – பிரும்மத் திருவிழாவில் கூறியபடி, இந்தச் சச்சரவுகள் முடிவடையுமென்று நம்பி யிருப் பவர்களுள் நானும் ஒருவன். ஆனால், சச்சரவுகள் வளர்வதற்கே அறிகுறிகள் காணப்படுகின்றன. இது மிக வருந்தத்தக்கது. அறிவில் சிறந்த நண்பர்கள் இந்தச் சச்சரவுகள் வளரவிடாமல் தடுத்து இசைத்துறையிலாவது ஒற்றுமையை உண்டு பண்ணுவது நமது நாட்டு முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாய் இருக்கும்.

தமிழ் நாட்டில் தமிழர்கள் விரும்பிக் கேட்கக் கூடியவை தமிழ்ப் பாடல்களே. அவர்களுக்கு உண்டாகியிருக்கும் இந்த உணர்ச்சியை அறிந்து கச்சேரியில் வித்துவான்கள் தமிழ்ப் பாடல்களையே பெரும்பாலும் பாடுவதுதான் பொருத்தமானது. பிறமொழி களிலுள்ள பாடல்களைப் பாடவேண்டுமென்று விரும்புகிற

இடத்தில் அவர்களுடைய விருப்பப்படியே அவர்கள் பாடுவதில் தடையிருக்கக் காரணமில்லை.

தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் அறிந்து நுகரக் கூடிய பாடல்கள் தமிழிலேயே இருப்பதுதான் பொருத்தமானது என்று வற்புறுத்திச் சொல்லுவது மிகையாகாது. பாடுகிறவர்களுக்கும் கேட்கிறவர் களுக்கும் பொருள் விளங்காத பாடல்களைப் பாடுவதைக் காட்டிலும் எல்லோரும் நன்றாகப் பொருள் தெரிந்து கொண்டு நுகரக் கூடியதும் சுவை நிரம்பியதுமான பாடலைப் பாடுவதே பயன்தரக் கூடியது. அதனாலே தான் தமிழ் நாட்டில் தமிழிசை பெருமை யடைய வேண்டுமென்ற உணர்ச்சி பரவி வருகிறது.

தமிழ்ப் பாடல்களைப் பாடமுடியுமா என்றும், தமிழ்ப்பாடல்கள் இருக்கின்றனவா என்றும் சங்கீத வித்துவான்கள் ஐயப்பட வேண்டாம். நம்முன்னோர்கள் இசைத்தமிழ் நூல்கள் எவ்வளவோ இயற்றியிருக்கிறார்கள். இன்னும் புதிதான தமிழ்ச் சாகித்யங்களை இயற்றியும் தமிழ் இசைக்கு வித்துவான்கள் தங்களாலியன்ற உதவிகளைச் செய்யலாம். இத்தனை நாட்களாகப் பேசாமல் இருந்துவிட்டது போல் இராமல் இனிமேலாவது புதிது புதிதான பாடல்களைக் காலத்தின் போக்குக்கு ஏற்றவகையாக இயற்றுவதற்கு வித்துவான்கள் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

தமிழ் நாட்டில் திருமணம் முதலிய சடங்குகளிலும இசையரங்கு களிலும் தமிழர்களுக்குப் பொருள் விளங்கும்படியான தமிழ்ப் பாடல்களையே பெரும்பாலும் பாடும்படி வித்துவான்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் எப்படிப்பட்ட பாடல்களை விரும்புகிறோம் என்பதை இசை வித்துவான்களுக்குத் தெரிவிப்பது நமது கடமையாகும்.

தமிழ் நாட்டில் இசைக்கச்சேரிகளிலும் கதாகாலட்சேபங்களிலும் சினிமாக்களிலும் ரேடியோ நிலையங்களிலும் மக்கள் கேட்டு மகிழ்ந்து நுகரக் கூடிவை தமிழ்ப்பாடல்களே. தமிழில் நல்ல இசையுடன் பாடும்பொழுது பக்தியும் பரவசமும் அடையாமல் இருக்க முடியாது. அயலார் குழந்தைகளிடம் சிறிதும் வெறுப்பில்லை என்றாலும், தங்க விக்கரகம் போன்ற தங்கள் குழந்தைகளைத் தெருவில் விட்டுவிட்டு, அயலார் குழந்தைகளையே பெரிதும் ஆதரித்துப் பாராட்டும் தாய்மார்கள் இருக்கமாட்டார்கள். நற்பேறில்லாக் குறையாகச் சிலகாலம் அவ்வாறிருந்தாலும்

எப்பொழுதுமே அவ்விதம் இருப்பார்கள் என்று நினைப்பது தவறு. அதுபோலவே தமிழ்மக்கள் இதுவரையில் தமிழ் இசையைப் புறக்கணித்திருந்த போதிலும் இனிமேலாவது அது வளர்ச்சி யடைவதற்குத் தங்கள் தங்களால் இயன்றதைச் செய்ய முன்வரு வார்கள் என்பது உறுதி.

தமிழ் இசையின் வளர்ச்சிக்காக இந்நகரில் இப்பொழுது கூட்டப் பெற்றிருக்கும் இம்மாநாடு தமிழ் மக்களுக்கு உண்டாகியிருக்கும் ஊக்கத்தையும் தமிழ் இசையில் அவர்களுக்குள்ள விருப்பத்தையும் நன்றாக விளக்கிக் காட்டுகிறது.

செட்டிமார் நாட்டின் நடுவில் இப்போது கூடியுள்ள மாநாட்டைப் போலவே, இன்னும் பலமாநாடுகள் தமிழ்நாடு முழுவதிலும் கூட்டித் தமிழ் மக்களுக்குத் தமிழ் இசையில் உள்ள ஆர்வத்தை யாவரும் அறியச் செய்யவேண்டும். தமிழ் நாட்டிலுள்ள ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் இத்துறையில் தாய் மொழிக்கும் தமிழ் இசைக்கும் தொண்டு செய்யக்கூடிய சங்கங்களை நிறுவி உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும். இந்தச் சங்கங்களின் ஆதரவில் பல சங்கீத சபைகளை ஏற்படுத்தி அவற்றில் தமிழ்ப்பாடல்களையே பெரும் பாலும் பாடுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தமிழ் வித்து வான்கள் பலபாடல்களை இயற்றியும் சங்கீத வித்துவான்கள் அவற்றைப் பாடியும் தமிழ் மக்களுக்குத் தமிழ் இசை என்னும் தெவிட்டாத தெள்ளமுதைச் செவியுணவாகக் கொடுக்க முயற்சி செய்யவேண்டும்.

தமிழ் நாட்டிலும் தமிழ் மொழியிலும் தமிழ் இசையிலும் பற்றுடைய தமிழ் மக்கள் யாவரும் வாய்ப்பு நேரும் பொழுதெல்லாம் தங்களால் இயன்றதைச் செய்தால் தமிழ்நாடும் தமிழிசையும் செழிப்புற்றோங்கும். ஜில்லாக்கள் தோறும் தமிழிசைச் சங்கங்கள் நிறுவி இத்துறையில் பயன்தரும் முறையில் சங்கத்துடன் உழைப் பதற்கு நமது தமிழ்நாட்டிலுள்ள அறிவாளிகளும் இசைப் பற்றுடையவர்களும் தங்களாலான பொருள் உதவிசெய்தும், கருத்துகள் கூறியும் மனமுவந்து ஒத்துழைத்தும் வருவார்களானால் தமிழ்நாட்டில் தமிழிசை தலைசிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாடு முழுவதும் தமிழிசை முழக்கம் பரவவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த மாநாட்டைக் கூட்டிய செல்வர்களின்

ஊக்கத்தைப் பாராட்டி அவர்களுடைய சிறந்த நோக்கம் கைகூட வேண்டும் என்று நாம் இறைஞ்சுவோம்" என்று கூறி விழாவைத் தொடங்கி வைத்தார். (செந்.செல். 19:340 – 47).

விழாத் தலைமை ஏற்ற டி.கே. சிதம்பரநாத முதலியார், "தமிழ் நாட்டிலேதான் மேளம், இசை, பரதநாட்டியம் முதலியவை இருக்கின்றன. பிறமொழிகளில் கிடையா. தமிழ் நாகரிகம் உலகம் முழுவதும் பரவியிருந்ததற்குப் பல சான்றுகள் உள. தெலுங்கைக் காட்டிலும் தமிழில் உயர்ந்தகலை இருப்பதாக டாக்டர் ஸி.ஆர். ரெட்டி சொன்னார். டாக்டர் இரவீந்திர நாத தாகூர் தமிழ்நாட்டை இசைமிகுந்த நாடு என்று அழைத்தார். இசையில் பயன்படுத்தப் பெறும் மொழி புரியவில்லை என்றும், ஆகவே தாங்கள் அதை நுகரமுடியவில்லை என்றும் மக்கள் சொன்னால் அவர்களை எப்படிக் குறைசொல்ல முடியும்?

தெலுங்கு நாட்டில் தமிழ்ச் சாகித்தியம் உண்டா?

கன்னட நாட்டில் தான் தமிழ்ச் சாகித்தியம் உண்டா? கிடையாது. பிறமொழிச் சாகித்தியத்திற்குத் தமிழ் நாடுதான் இடம் கொடுத்தது. காவிரி நதி ஜலத்தைக் குடித்துத் தமிழ்க் காற்றையே சுவாசித்து வந்த தியாகராச சாமிகள் தமிழிலுள்ள சாகித்தியங்களின் மேன்மையை உணர்ந்தும் தம் சாகித்தியங்களைத் தம் தாய்மொழியிலேயே செய்தார்.

தங்களுக்குத் தெரியாத பாஷையில் உள்ள சங்கீதத்தில் அன்பு செலுத்துவதாகச் சொல்லும் வழக்கம் தமிழ்நாட்டில் தவிர வேறெங்கும் கிடையாது. தாய்மொழி யில்லாத பிறமொழி வாயிலாகப் பாநயம் அறிய முயலுதல் தன் காதலியின் புன்முறுவலைப் பெறுவதற்கு வக்கீல் வைப்பது போலாகும் என்று டாக்டர் தாகூர் கூறினார்" என்றார்.

கல்கி ஆசிரியர் பேசியபோது தமிழிசை இயக்கத்தைப் பற்றிய சச்சரவுகள் பயனின்மையும் அறியாமையும் உடையன என்றும், முழுவதும் தமிழ்ப்பாடல்கள் பாடும் இசை அரங்குகளை ஆங்காங்கு அமைத்தலே தம் கருத்தென்றும் கூறினார்.

26.10.41 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை மாநாட்டில் பேசிய செட்டிநாட்டு இளவரசர் சர்.எம்.ஏ. முத்தையா செட்டியார், "இம்மாநாட்டுக்குத் தமிழ்நாட்டிலுள்ள புகழ்பெற்ற இசைவாணர்கள்

இன்று வந்து பேராதரவு அளித்தமைக்குத் தமிழர்களாகிய நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இங்கு ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் கூடியிருப்பதைப் பார்க்கத் தமிழிசையில் அவர்களுக்குள்ள பற்றுதலைக் காட்டுவதோடு அவர்கள் தமிழ் இசைக்குப் பெரிய ஆதரவு அளிக்க முன்வந்திருப்பதையும் காட்டுகிறது. இத்தறுவாயில் தமிழிசைக் கலையின் பெருமையைப் பற்றிப் பேசுவது பொருத்தமா யிருக்குமென்று நம்புகிறேன்" எனத் தமிழிசை பற்றிச் சிறந்த உரையாற்றினார். அவ்வுரை நிறைவில், "பல்வகையில் பெருஞ்சிறப்புற்றிருந்த இசைத்தமிழ். இடையே சிறிது ஆதரவுக் குறைவினால் தாழ்வடைந்தது. இப்போதுதான் தமிழ் நாட்டிற் புத்துணர்ச்சி தோன்றி யிருக்கிறது. அது மேன்மேலும் ஓங்கித் தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் பெரிதும் தமிழ்ப் பாட்டுகளே பாடும்படியான அறிகுறிக்கு வந்து விட்டது. இத்தகைய இசைக்கு இப்போது நாட்டில் மதிப்பும் பெருமையும் ஏற்பட்டிருக் கின்றன என்பதிலும் மக்கள் அனைவரும் இசையின்பத்தை மிகவும் விரும்புகிறார்கள் என்பதிலும் ஐயமில்லை. இந்நிலைமை ஏற்படக் காரணமாக இருப்பவர்கள் நம் நாட்டு இசைவாணர்களே யாவர். இத்தகைய பெருஞ்சிறப்பைப் பெற்ற இசைவாணர்கள் இன்னும் தங்கள் பணியை இடைவிடாது புரிந்து இசைக்கலைக்கு ஆக்கந் தரவேண்டும் என்பது தமிழர்களுடைய வேண்டுகோள்" என்றார்.

இம்மாநாட்டில் எம்.எஸ். இராமசாமி ஐயர், தி. இலக்குமணப் பிள்ளை, எ.எஸ். ஞானசம்பந்தம், ஏ.எஸ். சர்மா, கே. பொன் னையாபிள்ளை, எ. சீனிவாசகராகவன், டைகர் வரதாச்சாரியார், டாக்டர் டி.எஸ். திருமூர்த்தி, டி.கே. சண்முகம், எஸ்.ஆர். சாரங்க பாணி, கே. நாராயணசாமிஐயர், சொ. முருகப்பா, திருமதி சரசுவதி பாய் ஆகியவர்களும் தமிழிசை வளர்ச்சி பற்றி உரையாற்றினர்.

திருச்சி சகோதரர்கள், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, மதுரை மாரியப்பசாமி, பணையப்பட்டி வினை தீர்த்தான் செட்டியார், எம்.எம். தண்டபாணி தேசிகர், வேலூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, டி.என். மகாலிங்கபாகவதர், மயிலம் வச்சிரவேலு முதலியார், சி.எஸ். செல்வரத்தினம் பிள்ளை, நடேசப்பிள்ளை, ஆலந்தூர் சகோதரர்கள், எம்.கே. கோவிந்தராசன், எம்.கே. தியாகராசபாகவதர் முதலியோர் இன்னிசை வழங்கினர். எம்.என்.எம். பாவலர் குழுவினர் நடிப்புடன் கூடிய பாடல்கள் இசைத்தனர்.

மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள்:

1. தமிழ்நாட்டில் தமிழருக்காக நடைபெறுகிற இசையரங்குகளில் தமிழ்ப் பாடல்களையே முக்கியமாகவும் பெருமை கொடுத்தும் பாடச் செய்யவேண்டும் என்று சங்கீத சபைகளையும் இசையை ஆதரிக்கின்றவர்களையும் இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

2. தமிழர்களுக்கு ஏற்பட்ட தமிழ் நாடகங்களிலும் இதர மொ ழிகளுக்குரிய பாத்திரங்கள் சம்பந்தமில்லாத கட்டங்களில் தமிழ் நாட்டுக்குரிய இசைப்பாங்கில் (கர்நாடகம்) பாடவேண்டும் என்றும், இந்துஸ்தானி மொழியையும் இந்துஸ்தானி வர்ண மெட்டையும் பயன்படுத்தக் கூடாது என்றும் நாடகச் செயலாளர்களையும் பாடகச் செயலாளர்களையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

3. தமிழ்நாட்டில் தமிழருக்காக ஏற்பட்டுள்ள இசைப்பள்ளிக் கூடங்களில் மாணவர்களுக்கு 100-க்கு 90 வீதம் தமிழ்ப் பாடல்களாகக் கற்பிக்க வேண்டும் என்று பள்ளிக்கூட ஆசிரியர்களைக் கேட்டுக் கொள்வதுடன் இந்தத் தீர்மானத்தை உடனே நிறைவேற்ற வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

என்பனவாம்.

மாநாடு கூட்டித் தீர்மானங்களை நிறைவேற்றிய அளவில் அமையாமல் **தமிழிசைச் சங்கம்** ஒன்றையும் நிறுவினர். திருமதி நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்கள் தமிழிசைச் சங்கத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். பனையப்பட்டி வினைதீர்த்தான் செட்டியார் சங்கத்தைத் திறந்துவைத்தார். இப்பணியில் ஊன்றி உழைத்த இளந்தமிழ்வீரர் டி.ஆர். அருணாசலம் பாராட்டுக்கு உரியவராக விளங்கினார். மேலும், எல். இராமநாதன், நா.அண்ணாமலை, சையது மஜீத் முதலியவர்கள் மிகவும் உழைத்தனர்.

அக்டோபர் இறுதிக்கிழமையில் பல்லாரியில் கூடிய இசைவிழா ஒன்றில், அனந்த கிருஷ்ணசர்மா என்பவர், தியாகையர் பாடலின் சிறப்பைப்பற்றிப் பேசியபோது, க்ஷேத்ரக்ஞர் பாடல்போல் தியாகையர் பாடல்கள் இலக்கிய நயம் உடையன அல்லவென்றும், **தியாகையர் பாடலுக்குத் தமிழர்களாலேயே முதன்மை கொடுக்கப்** பட்டது என்றும், அவற்றில் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன என்றும்

கூறினார். 70 ஆண்டுகளுக்கு முற்பட்ட தியாகையரின் ஏடு தம்மிடம் இருப்பதாகவும் கூறினார்.

7.11.41இல் சென்னை இசைக்கலைஞர் சங்கத்தார் ஓர் இசைப் போட்டி ஏற்படுத்தினர். அதில் தமிழிசைப் பகுதிக்கும் 20 பாடல்கள் வேண்டும் என்று குறித்திருந்தனர்.

தேவாரம், திருப்புகழ், இராமநாடகக்கவி, முத்துத்தாண்டவர் பாடல், கோபாலகிருஷ்ணபாரதி கீர்த்தனம், கனம் கிருஷ்ணையர் பதம், சுப்பராமையர் பதம் என்பவற்றிலிருந்து தமிழ்ப்பாடல்கள் பாடப்படவேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர். தமிழிசைச் சங்கத்தின் தோற்றமும், செயற்பாடும், பொதுமக்கள் ஆர்வப் பெருக்குமே இத்தகைய அறிவிப்புக்கு வழி செய்ததாகும். ஏனெனில், தமிழில் பாட்டு இல்லை என்றும், தமிழிசை என்பதே கனவு என்றும், நீண்டத் தகாததாகத் தள்ளிவைத்தவர்களே சிறிதளவேனும் இடம் தருகின்ற சூழ்நிலை உருவாகத் தொடங்கி விட்டதல்லவா! இவ்வளர்ச்சிச் சூழ்நிலையில் 20.12.41இல் திருச்சிராப்பள்ளியில் இசைமாநாடு ஒன்று நிகழ்ந்தது.

பொன்னையாப் பிள்ளை தலைமையில், இலக்குமணப் பிள்ளை கொடியேற்றினார். அமைச்சர் விசுவநாதன் வரவேற்பு உரைத்தார். வரவேற்புக்கழகத் தலைவர் தியாகராசபாகவதர்,

அண்ணாமலை நகரில் நடைபெற்ற மாநாட்டின் தீர்மானம் தமிழ் இசைக்கலைக்கு ஆதரவளிப்பதாகும். மிகவும் நேர்மையானதும் இன்றியமையாததுமான அத்தீர்மானத்திலும் சிலர் தவறு கண்டு பிடிக்க முயன்றார்கள் என்றால், அவர்களுடைய அறியாமையைக் குறித்து வருந்துவதா? நகைப்பதா? என்று நமக்கு விளங்கவில்லை. இது பித்தக் காய்ச்சற்காரன் கற்கண்டு கசக்கிறது என்று சொல்வதைப் போல் இருக்கிறது.

நமது நாடு தமிழ்நாடு; நமது தாய்மொழி தமிழ்; நாம் அனைவரும் தமிழர் எனவே நாம் தாய்மொழியில் இசை கேட்க விரும்புகிறோம். இது இயற்கை; இது நமது உரிமை. இதனைத் தடுக்கவோ மறுக்கவோ எவருக்கும் உரிமை இல்லை.

இன்னும் சிலர் தமிழிசை என்று ஒன்று இருந்ததில்லை என்று வாய்கூசாது கூறுகின்றனர். தமிழ், இயல் இசை நாடகம் எனத் தமிழ் மொழிக்கலையை மூன்று பிரிவு படுத்தியிருந்ததையும், அதற்கே

முத்தமிழ் எனப் பெயர் கொடுத்து வழங்கப்பெற்று வருவதையும் அவர்கள் கேட்டறியார் போலும்! இன்னும் சிலர் தமிழ்ப் பாடல்களையே பாடவேண்டும் என்றால், அந்த இசைக்கச்சேரிக்கே தாம் போவதில்லை என்றும், தமிழ் இசைக்கிளர்ச்சியினால் ஆந்திர நாட்டில் தமிழ்நாட்டு இசைவாணர்கள் எங்குப் புறக்கணிக்கப் பட்டுவிடுவார்களோ என்று பயப்படுவதாகவும் கூறுகின்றனர்.

இது எவ்வளவு அறியாமை நிறைந்த கூற்று என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. தமிழ்ப் பாடல்களையே பாடவேண்டும் என்று கூறும் கச்சேரிக்கு இவர் செல்லாவிட்டால் யாருக்குக் குறைவு? இவருக்கல்லவோ வருவாய் குறையும்?

தமிழ்நாட்டில் தமிழ்ப்பாடல்களையே பாடும் வித்துவான்கள் இல்லாமற் போகவில்லை. அவர்களைக் கொண்டு பொதுமக்கள் கச்சேரி நடத்திக் கொள்கிறார்கள். எனவே தமிழ்ப்பாட்டுப் பாடாத வித்துவான்கள் கச்சேரிக்கு வராமற் போனால் பொதுமக்களுக்கு ஒன்றும் கெட்டுவிடாது. அவர்கள் தமிழர்களைக் கொண்டு தமிழிசை பாடச்செய்து தமிழ் இன்பம் பெறுவார்கள்.

தமிழ் இசைக்கு ஏற்பட்ட இந்தச் சிறு எதிர்ப்பினால் தமிழ் என்றாலும் தமிழிசை என்றாலும் கேவலமாக நினைக்கும் ஒரு கூட்டம் தமிழ்நாட்டில் இருக்கிறதென்று தெரிகிறதல்லவா! இதற்குக் காரணம் தமிழர்களாகிய நாமேயாம். ஏனெனில், தாய்மொழி இசையை இதுகாறும் மறந்து பிறமொழி இசையைப் பேணியிருந்த குற்றம் நம்முடையதேயாகும்.

தமிழ் நாட்டிலே இசையுலகிலே ஒருபுரட்சி – முன்னேற்ற நிலையான ஒருபுரட்சி – சாந்தமான அமைதியான புரட்சி – வெற்றிகரமாக ஏற்பட்டுவிட்டது! தமிழிசைக்கலை மறுமலர்ச்சியுறத் தொடங்கிவிட்டது" என்றார்.

மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றியவர் அண்ணாமலை அரசர். அவர், "தமிழ் மக்கள் பண்டை நாள்முதல் நாகரிகம் வாய்ந் தவர்கள். தமிழ் மக்களுக்குத் தமிழிசையில் மிகுந்த பற்றுண்டாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. இசைத்துறையிலும் தமிழர்கள் புத்துணர்ச்சியோடு காட்டிவரும் ஊக்கம் மிகவும் போற்றத்தக்கது. அண்ணாமலை நகர், தேவகோட்டை, திருச்சி என்னும் மூன்றிடங் களிலும் கூட்டப்பெற்ற மாநாடுகளின் நோக்கம் தாய்மொழியை வளர்ப்பதும் சங்கீதக் கச்சேரிகளில் பெரும்பாலும் தமிழ்ப்

பாடல்களைப் பாடச் செய்வதுமேயாம். இதில் எவ்வித விவாதத்திற்கும் சிறிதும் இடமில்லை என்பதை யாவரும் நன்கறிய வேண்டும். தமிழில் போதிய அளவுக்குப் பாடல்கள் இல்லை என்பதும் இதர பாஷைகளிற் பாடுவது போல் தமிழிற்பாட இயலாது என்பதும் பெருங்குற்றமாகும். இவ்வாறு குறைகூறும் சிறுபான்மையோர் தமிழராக இருப்பது துரதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

திருச்சி ரேடியோ நிலையம் பெயரளவில் மட்டும் தமிழருடையதாய் இராமல் உண்மையிலேயே தமிழ் மொழியையும் தமிழிசையையும் தமிழ் மக்களையும் கருதி அமைக்கப் பெற்ற நிலையமாக இருந்து தன்பணியை ஆற்றிவரும் என்று எதிர்பார்ப்போம். ஒவ்வொரு நகரத்திலும் தமிழிசை வளர்க்கும் சங்கம் நிறுவப்பட வேண்டும். அச்சங்கங்கள் எல்லாம் ஒருதிட்டத்தையமைத்து அதன்படி கடமைகள் செய்யவேண்டும். எல்லாவற்றையும் மேற்பார்க்கும் கழகம் ஒன்றிருத்தல் அவசியம்.

விவசாயம், கைத்தொழில், வாணிகம், இயற்கையழகு, தெய்வ பக்தி, தேசபக்தி, சமூகவளர்ச்சி, ஒற்றுமை முதலிய எல்லாத் துறைகளுக்குக்கும் உரிய இசைப்பாடல்கள் பாடப் பெற்றுப் பரவ வேண்டும். எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவதற்கு இடைவிடா ஊக்கமும் உற்சாகமும் தளரா முயற்சியுமே காரணங்களாகும்" என்று கூறினார்.

உரையாற்றிய சொ. முருகப்பா, "இசையரங்குகளில் தமிழ்ப் பாடல்களைத் துக்கடா வரிசையில் சேர்க்காமல் ஏனைய மொழிப் பாடல்களையே துக்கடா வரிசையில் சேர்க்க வேண்டும். ஓர் இசை வித்துவான், 'தெலுங்கில் பாதி தமிழில் பாதிப் பாடல்கள் பாட அனுமதிக்காத சங்கீதக் கச்சேரிகளுக்கு யான் செல்லமாட்டேன்' என்று கூறியிருக்கிறார். இது அவர்தாம் கூறினாரா? அல்லது அவர்பின்னால் யாராவது இருந்து அவ்வாறு கூறினார்களா? என்று நான் ஐயுறுகிறேன். தமிழ் இசை ஆர்வலர்கள் சற்றுப் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டால் அவர்கள் பித்தம் கூடியவரையில் தெளிந்துவிடும். பொதுமக்கள் சங்கீதக் கச்சேரிகளில் பாடும் பாடல்களின் பொருள் தங்களுக்குத் தெரியாவிட்டால் கச்சேரியை விட்டு வெளியேறி விடவேண்டும்" என்றார். பெருநாவலர் ச. சோம சுந்தர பாரதியாரும் ஆங்குப் பேசினார். "தமிழ்நாட்டில் தமிழ் மொழியில் பாடல்கள் பாடவேண்டும் என்று ஒருமாநாடு கூடுவது

மிகவும் வியப்பாய் இருக்கிறது. தமிழ் நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இத்தகைய மாநாடு நடைபெறாது.

தமிழைத் தவிர எந்த மொழியிலும் இசை நூல்கள் 700 அல்லது 800 ஆண்டுகளுக்குமுன் தோன்றவில்லை. ஆனால், தமிழ் மொழியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இசைநூல்கள் சிறப்புற்றிருந்தன.

பிற்கால இசையாளர்கள் பரத நாட்டிய சூத்திரத்தை ஆதாரமாகக் கொண்டார்கள். சிலப்பதிகார நூலிற்காணும் இசைபற்றிய குறிப்பு களில் இருந்து அதற்குமுன் 5000 அல்லது 6000 ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழிலே பல இசைக்கலை நூல்கள் இருந்திருக்கின்றன என அறிகிறோம்.

இசை, பாடுதல் என்னும் சொற்கள் துய தமிழ்ச்சொற்களே. கருத்து இல்லாவிட்டால் சொற்கள் தோன்றமுடியாது. ஆகையால் இசையும் பாடலும் தமிழருக்குரியன". இவ்வாறு விரித்துரைத்தார் (செ. செ. 19:444–45).

22.12.41இல் சென்னையில் கூடிய இசை மாநாட்டில் பித்தாபுரம் மன்னர் திறப்புரையாற்றிய போது "இசையும் மொழியும் கலந்த இடத்தில்தான் மிகச்சிறந்த மனநிறைவு ஏற்படுகின்றது" என்றார். அவ்விழாத் தலைவர் திருவேங்கடசாமி நாயுடு இசைப்பாட்டின் பொருள் விளக்கத்தால் இசைநயம் நன்றாக உணரப்படும் என்றும், அதுவே இராகம் தாளம் பாவம் முதலிய வற்றை நன்கு நுகர்வதற்குத் துணை செய்யும் என்றும் கூறினார்.

'தமிழ்ச் சங்கீதமே தமிழருக்கு அழகு' என்றும் 'சாகித்தியமும் சங்கீதமும்' என்று இரண்டு கட்டுரைகளை இச் சூழலில் டி.கே. சிதம்பர நாதனார் எழுதினார்.

இரண்டாம் கட்டுரையில், "தமிழ்ச் சங்கீதத்தை வைத்துக் கொண்டு மூன்று கோடி தமிழர்களையும் சந்தோஷப்படுத்தலாம் . அப்படிச் சந்தோஷப்படுத்துவதற்கு ஒரே ஒருவழிதான், சங்கீத மெல்லாம் தமிழிலேயே இருக்கவேண்டும். தியாகையர் பாட்டெல் லாம் சமீபத்தில் வந்ததுதானே. நூற்றாண்டுவிழா இன்னும் கொண் டாடவில்லையே. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக விருத்தி யடைந்து வந்த தமிழ்ப் பாடல்களை வைத்துக் கொண்டுதான் அவர்

தமக்குத் தெரிந்த தெலுங்கில் சாகித்தியங்கள் செய்தார். கலை என்பது நெடுங்காலமாக வரவேண்டியது. ஒருவர் செய்யக் கூடிய காரியமல்ல. தியாகையர் பக்திமான். பக்தியோடு பாடினார். அதற்காக அவரைச் சிலர் மதித்தார்கள். எல்லோரும் பாஷையையும் பாவத்தையும் உணர்ந்து அனுபவித்தார்கள் என்று சொல்ல முடியாது.

தெலுங்குப் பாடல் பிரசாரத்தால் தமிழ்ப்பாடல்கள் எத்தனையோ தொலைந்து போய்விட்டன. மாணவர்களை மாத்திரம் தெலுங்கு கற்கச் செய்வதில் என்ன பிரயோஜனம்? அவர்கள் நடத்தும் கச்சேரிகளைக் கேட்கவரும் பச்சைத்தமிழன் ஒவ்வொருவனையும் ஒவ்வொருத்தியையும் தெலுங்கு கற்க ஏற்பாடு செய்யவேண்டும். தாய்பாஷையிலேயே பாட்டின் பொருளையும் பாவத்தையும் அறிவதற்கே எவ்வளவோ பயிற்சி வேண்டும்" என்று இரண்டாம் கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

இக்கட்டுரையில், டாக்டர் உ.வே. சாமிநாதையர் 'சுயசரிதை'யில் இருந்து, எடுத்துக்காட்டாகச் சில செய்திகளைக் குறிப்பிடுகிறார்.

"சங்கீதத்திலும் சாகித்தியத்திலும் வல்ல வித்துவான்கள் பலர் தமிழில் கீர்த்தனங்கள் இயற்றியிருக்கிறார்கள். பாடுபவர்களும் பாராட்டுபவர்களும் இல்லாமையால் வரவரக் கீர்த்தனங்கள் குறைந்து போயின. ஆயிரக்கணக்கான தமிழ்க் கீர்த்தனங்கள் முன்பு இந்நாட்டில் வழங்கிவந்தன. கருநாடக ராகங்களின் கதிக்கு மிகவும் பொருத்தமாக அவை அமைந்திருந்தன. அன்று நான்கேட்ட அவை இன்று இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. தமிழில் கீர்த்தனங்களே இல்லை என்று கூறவும் சிலர் அஞ்சுவதில்லை. எல்லாம் சற்றேறக்குறைய 60வருஷத்தில் நிகழ்ந்த மாறுபாடுதான்" என்பது அது.

அண்ணாமலை தேவகோட்டை திருச்சிராப்பள்ளி இசை மாநாடுகளுக்குப் பின்னர்ப் புதுக்கோட்டை, ஆத்தங்குடி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தஞ்சாவூர் முதலிய இடங்களிலும் இசைமாநாடுகள் நடைபெற்றன. தமிழிசை இயக்கம் நன்கு கால் கொள்ளலாயிற்று. மேற் குறித்த இடங்களுள் தேவகோட்டையிலும் ஆத்தங்குடியிலும் தமிழிசைக் கல்லூரிகளும் தொடங்கப்பட்டன.

23.1.42இல் அண்ணாமலை நகரில் இசைத்தேர்ச்சியாளர் கழகம் ஒன்று நிறுவப்பெற்றது. அதில் வரவேற்புரை அண்ணாமலை அரசர் கூறினார்.

"தமிழ்ப்பாட்டுகளின் அபிவிருத்தியே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம். சங்கீதத்திற்கு ஏற்ற பாட்டுகள் பிரபலமாக இந்த நாட்டிற் பாடப்பெறுவதற்கு வர்ணம் கீதம் சுரஜதி முதலியன போதுமான அளவுக்கு இல்லை என்று சிலர் சொல்லுகின்றனர். அவ்விதமான குறையிருந்தால், அக்குறையை நிவர்த்தி செய்வதில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும். கருநாடக சங்கீதம் என்பது நமக்கும் நம்மைச் சுற்றியுள்ள ஆந்திரர், கன்னடர் முதலிய சகோதரர்களுக்கும் பொதுவானது. அதன் தோற்றத்தைப் பற்றிய வாதங்களில் நாம் இறங்க வேண்டியதில்லை. ஞானமும் கல்வியும் எங்கிருந்து வந்தால் என்ன? ஆனால், எவ்வளவு முயற்சி செய்தாலும் உயர்தரப் பாடல்கள் தமிழில் இயற்ற முடியாது என்று நினைப்பது தவறாகும்.

தமிழில் மேன்மேலும் பாட்டுகள் வேண்டுமென்று தமிழர்கள் எண்ணுவதும் அதற்காகக் காணப்படும் இயக்கமும் நியாயமானவை என்று ஸ்ரீமான் கோபால ரெட்டியார் அவர்கள் சமீபத்தில் நடந்த தியாகப்பிரம உற்சவத்தில் சொன்னார்கள். சாதாரண ஜனங்கள் நவரசங்களும் மனத்திற் பதிந்து ஆனந்தமடைய வேண்டுமானால் சாகித்தியம் அவசியம்.

தெலுங்கு தேசத்தில் தமிழனொருவன் தெலுங்கைப் பற்றிக் குறைவாகப் பேசினால், நமது ஆந்திர சகோதரர்களுக்கு எவ்வளவு மனக்கொதிப்பு ஏற்படும் என்பதை நான் விஸ்தாரமாகச் சொல்லவேண்டியதில்லை. நூற்றில் தொண்ணூற்றொன்பது தமிழர் நிறைந்துள்ள கூட்டத்தில் ஆந்திர நாட்டுப் பிரமுகர் ஒருவர் நம் தாய்மொழியாகிய தமிழைக் குறைவாகப் பேசுதற்குத் தைரியம் ஏற்படுகிறது. இது நம் நாட்டின் துர்ப்பாக்கியம் என்று சொல்வதைத் தவிர வேறு இல்லை. வித்துவான்கள் எல்லாரும் ஒத்துழைத்து உதவிபுரிந்து தமிழிசைக்குப் பெருமை தந்து தமிழர்கள் எல்லோருக்குமே ஆனந்தத்தை விளைவிக்கச் செய்வது தங்கள் தாய்மொழிக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும்" என்றார்.

இசைத்தேர்ச்சியாளர் குழுவுக்கு,

அரியக்குடி இராமானுஜ ஐயங்கார்

முசிறி சுப்பிரமணிய ஐயர்

இராசமாணிக்கம் பிள்ளை

ஆலந்தூர் வேங்கடேச ஐயர்

பொன்னையா பிள்ளை

டைகர் வரதாச்சாரியார்

என்பார் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

இசைத் தேர்ச்சியாளர் மாநாட்டுத் தலைமை தாங்கிய வரதாச்சாரியார், "மார்க்க சங்கீதம், தேசிய சங்கீதம் என இருவகை யுண்டு. உள்ளுக்குள்ளே பாடி மகிழ்வது மார்க்க சங்கீதம். தேசிய சங்கீதம் பாஷை நிரம்பியது.

அவரவர் பாஷையில் அவரவர்க்குப் பிரியமிருப்பது இயற்கை. சங்கீதமும், பாடுவோனது இஷ்டப்படி நிற்கும். சங்கீதத்திலிருந்து சாகித்தியம் வேறாகாது. தமிழ் முனிவராகிய அகத்தியர் சங்கீதம் வல்லவர்" என்றார்.

வித்துவான் அரியக்குடி இராமாநுஜ ஐயங்கார் 'தமிழிசை இயக்கத்திற் கலந்து கொள்வதாகவும், இசையரங்குகளில் தமிழ்ப் பாடல்கள் பாடத் தொடங்கியவருள் தாமும் ஒருவர் என்றும், அச்சிடாத நூல்களும் ஏடுகளும் தம்மிடம் இருப்பவற்றைப் பல்கலைக்கழகத்திற்குக் கொடுப்பதாகவும் கூறியதுடன், அருணாசலக் கவி இராம நாடகத்தில் 7 கிருதிகளுக்குச் சுரம் வகுத்து அனுப்புவதாகவும் கூறினார்.

இசைக்கலைஞர் உட்கழகம் ஒன்று அமைக்கப்பட்டது. அது 7 நாள்கள் வேலை செய்தது. தமிழில் இல்லாத வர்ணம் முதலியவை களை விரைவில் அமைத்தல், காலஞ்சென்ற இசையாசிரியர்களின் பாடல்களை ஒன்று சேர்த்து ஆய்தல், சுரம் அமைத்து வைத்திருக்கும் பாடல்களைக் கேட்டு முடிவெடுத்தல், எவரிடமிருந்து எந்நூல் களைப் பெறுதல் என்பனவெல்லாம் ஆராயப் பெற்றன. ஆய்ந்து தேர்ந்தெடுத்துச் சுரம் அமைக்கப் பெற்ற பாடல்களை நூலாக அச்சிடுதல் பற்றியும் ஆய்ந்தனர்.

புதிதாக இசைப்பாடல்கள் இயற்றுவோரின் இரண்டாம் இசைப்போட்டி 20.2.42 முதல் 22.2.42 முடிய மூன்று நாள்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்தது.

அப்போட்டிக்கு முதற்பரிசு 200 உருபாவில் ஒரு பரிசும், 150 உருபாவில் ஒருபரிசும், 125 உருபாவில் இரண்டு பரிசுகளும், 100 உருபாவில் இரண்டு பரிசுகளும் ஏற்படுத்தப்பட்டன.

போட்டியில் வென்ற பாடல்களை ஆய்ந்து வெளியிடப் பதிப்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. அவர்கள்,

கா. சுப்பிரமணிய பிள்ளை

தி. இலக்குமணப் பிள்ளை

டைகர் வரதாச்சாரியார்

கானவிசாரதா ராமசாமிஐயர்

பேரா. சாம்பமூர்த்திஐயர்

என்பார்.

'குமரன்' இதழ் 2.4.42இல் 'தமிழிசைமலர்' வெளியிட்டது. அதில் ஐம்பது கட்டுரைகள் இடம் பெற்றன. கட்டுரை யாசிரியர்கள் ஐம்பதின்மர் படங்களும், இசைக்கலைஞர்கள் ஐம்பதின்மர் படங்களும் இடம் பெற்ற அரியமலர் அது.

15.4.42, 16.4.42 ஆகிய இரண்டு நாள்களும் மீண்டும் இசையறிஞர் கழகம் அண்ணாமலை நகரில் கூடி, நூற்று இருபதுக்கு மேற்பட்ட கீர்த்தனங்களைப் பாடிச் சுரவகுப்பைச் சரிபார்த்தனர்.

"பாடல்களுக்குத் தொடக்கத்தில் வகுத்த இசைகளை அடிப்படையாகக் கொண்டு தற்காலத்துக் கேற்றமுறையில் வர்ண மெட்டுகளை அமைக்கலாம்" என முடிவு செய்தனர்.

4.7.42இல் இசைக்கல்லூரி நான்கு வகுப்பு மாணவர்களுக்கும் கற்பிக்கக் கூடிய தமிழ்ப்பாடல்களைத் தீர்மானிப்பதற்கும் பாடப்புத்தகங்கள் எழுதுவிக்க ஏற்பாடு செய்வதற்கும் இசைக்கலை ஆசிரியர் குழுவினரும் பிறரும் துணைவேந்தர் தலைமையில் கூடித் தமிழிசைப் பாடத் திட்டங்கள் வகுத்தனர். சங்கீதரத்நாகரம் முதலிய சில வடமொழி நூல்களைத் தமிழில் பெயர்க்க வேண்டும் என்றும் முடிவு செய்தனர்.

24.7.42இல் இசையாசிரியர்கள் கூடி, 108 கீர்த்தனங்களும் 20 வர்ணங்களும் 20 கீதங்களும் அடங்கிய நூல் வெளியிடுதல் பற்றித் தீர்மானித்தனர்.

1.8.1942 முதல் 3.8.42 முடிய மூன்று நாள்களும் மதுரை மாநகரில் முத்தமிழ் மாநாடு நடைபெற்றது. புகழ்மிக்க புதுமண்டபத்தில் அவ்விழா நிகழ்ந்தது. மூன்று நாள்கள் மூன்று விழாக்கள். இரண்டாம் நாள் விழா, இசை விழாவாகச் சிறந்தது.

இசைத்தமிழ் மாநாட்டை தஞ்சாவூர் ஏ. சோதிப்பாண்டியனார் திறந்து வைத்து உரையாற்றினார். அவ்வுரையில்,

"ஏழு சுரங்களும் பன்னிரு சுரஸ்தானங்களும் முதன் முதல் தோன்றிய காலத்தையும் நாட்டையும் தோற்றுவித்த மூல புருஷரையும், 'தமிழர்க்குச் சங்கீதம் உண்டா?' என்பதையும் நீங்களே யூகித்து அறிந்து கொளளுங்கள்" என்றார்.

மேலும், "இசைத்தமிழை உயிர்ப்பிக்கவென்று கடந்த சில மாதங்களாக நம் தமிழ்நாட்டில் இனி நடைபெறும் இசையரங்கு களில் தமிழ்ப் பாடல்களே மிகவாய் நடைபெற வேண்டும்' என்ற ஒரு நல் இயக்கம் தோன்றியிருக்கிறது. இவ்வியக்கத்திற்கு ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் முன்னோனாய் வாய்ந்தது நம் நாடு செய்த நலமே. அவர்களுக்கு இந்நாடு மிகவும் கடமைப் பட்டுள்ளது. அவர்களின் உண்மையான இயக்கத்தில் நாமும் ஒருமித்துப் பங்கெடுத்துக் கொண்டு நம்மாலியன்ற அளவிற்கு உண்மையாய் உழைத்து வருவோமானால், முடிவில் நல்லவெற்றி பெறுவோம் என்பது திண்ணம்.

இவ்வியக்கம், இன்று நேற்று உண்டானதன்று. நாற்பது ஆண்டுகளுக்குமுன், நான் சிறுவனாய் இசைபயிலும் காலத்திலும் எனக்குப் பொருள் தெரியாது பாடிய தெலுங்குக் கீர்த்தனை, வர்ணம், சுரஜதி முதலியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த என் தந்தை எனக்குப் பாடமான ஒவ்வொரு பிறமொழி உருப்படி களுக்கும் நான் பொருளறிந்து பாடத் தமிழ் மொழியில் இசைப்பாக் களை அமைத்துத் தந்தனர். அவை, இன்றும் என் குடும்பத்தில் பழக்கத்தில் உள்ளன. ஆதலால், இவ்வியக்கம் நான் அறிந்த அளவில் கடந்த நாற்பது ஆண்டுகட்கு முன்பே தோன்றி, புகைந்து கொண்டேயிருந்து இப்போதுதான் நெருப்பாகக் கிளம்பி வருகிறது. இது இன்னும் சில ஆண்டுகட்குள் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் என்று நம்புகிறேன், என்று தமிழிசை இயக்கத் தோற்றம் பற்றியுரைத்தார். தம் தந்தையார் என்று கூறப்பட்டவர் ஆபிரகாம் பண்டிதர் என்பதை அறியின் உண்மை விளங்கும்.

தமிழிசை அயலிசையான வகையையும் சுட்டுகிறார் திறப்புரை யார்: இசைக்கலையின் இனிமையையும் மேன்மையையும் கண்ட பிறமொழியார் இக்கலைக்குரிய அரிய நூல்களைச் சிறுகச் சிறுக நம்மிடமிருந்து கவர்ந்து கொண்டு, தம்மொழியில் மாற்றி எழுதி மூலத்தமிழ் ஏட்டை அழித்துவிட்டு, நமக்குச் சொந்தமான பழம்பொருளையே தற்காலம் நூதனமாக நமக்குக் காட்டி, நமக்கு அக்கலையில் சிட்சையும் செய்வதோடு 'தமிழனுக் கேது சங்கீதம்' என ஏளனம் செய்யவும் முற்பட்டார்.

இவ்வாறே சில இசைக்கருவிகளையும் தண்ணுமைக் கருவி களையும் கைவிட்டிருக்கிறோம். ஆதலின், நாம் இழந்தவைகளைத் தேடிக் கண்டடைதலும் இருப்பவற்றைக் காத்தலும், புதியனவற்றை அமைத்தலும் வேண்டும். இசைக்குதவும் பழமையும் புதுமையுமான ஏடுகளையும் நூல்களையும் கருவிகளையும் ஒரு நிலையத்தில் சேமித்துப் பலருக்கும் எளிதில் உதவுமாறு செய்தலும் வேண்டும். இசை அரங்குகள் நிகழ வென்று பண்டையோரால் கட்டுவிக்கப்பட்ட 'சங்கீதமால்' எனப்படும் நிலையங்களை நம் அரசாங்கத்தார் மூல மாய் முறையிட்டுத் திருப்பவும் நாம் அடைதலும் வேண்டும்" என்றார்.

வரவேற்புக் கழகத்தலைவர் இராவ்சாகிப் ஆ.அ. ஆறுமுகநாடார் தம் உரையில், "தமிழையன்றிப் பிறமொழியை அறியாத தமிழ்மக்கள் முன்னிலையிலே, பிறமொழிப் பாடல்களைப் பாடுவதன் மூலம், தமிழ்மக்கள் அப்பாடல்களைக் கேட்டு எவ்வாறு ஆனந்திக்க முடியும்! பாடல்களின் பொருளை அறிந்தால் அன்றோ உணர்ச்சியை உண்டாக்க முடியும்? ஊமையன் கனாக்கண்ட கதையைப் போலவே ஆகும், மொழியறியாதவன் பிறமொழிப் பாடல்களைக் கேட்டு ஆனந்திப்பதும்"

"தமிழில் இசைக்கேற்ற பாடல்கள் இல்லை என்று வாதிப்போர், ஒன்று தமிழ்மொழி யாராய்ச்சி இல்லாராய் இருத்தல் வேண்டும். அல்லது, வயிற்றுப் பாட்டின் காரணமாகப் பிறமொழி இசைப் பாடல்களைக் கற்று, அப்பாடல்களில் தெய்வீகத் தன்மை இருப்பதாக நம்பிக்கை வைத்திருப்பவர்களாய் இருத்தல் வேண்டும்."

"தமிழ் நாட்டிலேயே வாழ்ந்து வருகின்ற சங்கீத ரத்தினங்கள் தமிழல்லாத பாடடுகள் இரண்டாவது முதலிற் பாடிய பிறகுதான், தமிழில் பாடமுடியும் என்று கூறுவார்களானால், தமிழ் இன்னிசை அடைந்துள்ள நிலையை உன்னிப்பாருங்கள்.

"பொருளற்ற பாட்டுக்களை – அங்குப்
புத்தமு தென்றனர் கைத்தாள மிட்டனர்;
இருளுக்குள் சித்திரத்தின் – திறன்
ஏற்படுமோ இன்பம் வாய்த்திடக் கூடுமோ?
இன்பம் எனப்படுதல் – தமிழ்
இன்பம் எனத்தமிழ் நாட்டினர் எண்ணுக"

என்று பாடியுள்ளார் புலவர் பாரதிதாசன். ஆகவே தமிழ் மக்களிடையே நடைபெறும் இன்னிசையரங்குகளில் தமிழ்ப் பாடல்களே பாடப்பட வேண்டும் எனவும், அதன் மூலம் தமிழ் இன்னிசையும் தமிழிசைக் கருவியும் சிறந்து உயர்ந்து விளங்குவதற்குரிய தீர்மானங்களையும் அறிவுரைகளையும் இம் மாநாட்டிலே நிகழ்த்தித் தமிழிசை இயக்கத்திற்கு ஆக்கமும் புத்துயிரும் அளிப்பீர்களென நம்புகிறேன்" என்றார்.

இசைத்தமிழ் மாநாட்டுத் தலைவராக இருந்தவர் தி. இலக்கு மணப்பிள்ளை. அவர் தமிழிசையின் முன்மை அருமை பெருமை பற்றி விரிவாக உரையாற்றினார். அவர் உரையின் இடையே இந்து அற நிலையத்துறை ஆணையராக இருந்து ஓய்வுபெற்ற டி.கே. சிதம்பர நாதமுதலியார் ஆய்ந்து கண்ட செய்திகள் சிலவற்றை எடுத்துரைத்தார்.

அவர் தமிழ் நாட்டிலும் தெலுங்கு நாட்டிலும் அடிக்கடி சஞ்சாரம் செய்து கோயில்களின் மேற்பார்வை நடத்தி வந்த போது, துருவியறிந்த விஷயங்கள் நமக்கு வெளிச்சத்தைத் தருகின்றன.

ஒவ்வொரு கோயிலின் சார்பிலும் சில தனிப்பட்ட தொழிலாளிக் குழுவினர் உள்ளனர். அவர் ஓதுவார், நட்டுவர், மேளகாரர், தீக்ஷதர் என்னும் நான்கு வகையினராவர்.

ஓதுவார், தேவாரம் முதலிய தோத்திரப் பாடல்களைப் பாடுவோர். நட்டுவர், நடனத்துக்குரிய வகையில் பலவகைப்பட்ட தமிழ்ப்பாடல்களை, தேவாரம் கண்ணிகள் சிந்துகள் தருக்கள் சித்தர் பாடல்கள் பிள்ளைத் தமிழ்கள் இவற்றைப் பாடுவோர். இந்தப் பாடல்களையே மேளகாரரும் மேளத்தில் வாசித்து வந்தார். இவர்கள் தாம் தமிழ்நாட்டுச் சங்கீதத்திற்கு உரியவர்களா யிருந்தார்கள். ஆயிரக் கணக்கான வருஷங்களாகத் தமிழிசை இம்மூன்று வகைத் தொழிலாளிகள் கையில் இருந்தே வளர்ந்து வந்தது.

ஒரு காலத்தில் கோயில் அர்ச்சகரான ஆதிசைவர் சிலர், வடமொழியைக் கற்றுக் கோயில் வழிபாட்டுக்கு உரிய விதிகளைச் சைவாகமங்கள் என்று வடமொழியிலேயே நூல்கள் எழுதிவைத்து விட்டார்கள். அது காரணமாகப் பிறகு வந்த அர்ச்சகர்களும் வட மொழியைக் கற்க அவசியம் ஏற்பட்டது. வடமொழி கற்பிப்பதற்காக தீக்ஷதர்களை ஏற்படுத்தினார்கள். நட்டுவர்களிடம் பாடல்களைக் கேட்டும், மேளகாரர்களின் வாசிப்பைக் கேட்டும் தீக்ஷிதர்கள் தமிழிசைப் பண்களைத் தெரிந்து கொண்டார்கள். வடமொழிப் பயிற்சியிலேயே அழுந்தியிருந்த காரணத்தால் தமிழ் சாகித்தியத் தோடு ஒட்டிய பாவங்களை அவர்கள் அவ்வளவாகக் கற்கவில்லை. சுரங்களை மட்டும் கணக்கிட்டு ராகங்களைப் பாடிக்கொண்டார்கள்.

வடநாட்டில் இருந்து வந்த ஜனங்கள் சிலர் வடமொழி தெரிந்த தீக்ஷதர்களோடு பழக நேர்ந்தது. தமிழ் சாகித்தியம் சம்பந்த மில்லாமலே, பண்களின் ஆரோகண அவரோகணங்களை மாத்திரம் கவனித்துத் தமிழ்நாட்டுப் பல ராகங்களைக் கற்க முயன்றார்கள். தமிழ்நாட்டிலுள்ள ஆற்றுக்கும் ஊருக்கும் மனிதருக்குமே வடமொழியை யொட்டிப் பெயர் கொடுத்த மாதிரியில் இங்கே வழங்கி வந்த ராகங்களுக்கு எப்படியெல்லாமோ பெயர் கொடுக்கத் தலைப்பட்டார்கள். அந்தப் பெயர்களையிட்டு ராகங்களைக் குறிப்பது ஒரு நவீனம் (fashion) அதாவது ஆடம்பரமாய் விட்டது. தமிழ்ப் பெயர்கள் கொஞ்சநாள் கோயிலுக்குள்ளும் நட்டுவர் களுக்குள்ளும் மேளகாரர்களுக்குள்ளும் ஓதுவார்களுக்குள்ளும் வழங்கி வந்தன. நாளடைவில் தீக்ஷதர் ஆதிக்கத்தால் தமிழ்ப்பெயர் களைக் கைவிட்டு விட்டார்கள். ஆனால் ராகங்களும் அவற்றின் களையும் சிறிதும் மாறவிலலை. உலகத்தில் எங்குமே இல்லாத சாயலும் குழைவும் அவற்றில் இருக்கவே செய்கின்றன.

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் இருந்த கோவிந்த தீக்ஷிதர் 72 மேள கர்த்தாக்களைப் பாகுபாடு செய்தபோது, நடைமுறையில் அப்போது இருந்த 103 தமிழ்ப்பண்களுக்கும் வடமொழிப் பெயர்கள் கொடுத்து அவர்களுடைய கர்த்தா ராகங்களாகவும், அவற்றில் உற்பத்தியாகிய ஜன்னியராகங்களாகவும் கைக்கொண்டு சேர்த்துக் கொண்டார். இவ்வுண்மைகளைக் கண்டு பிடித்து எடுத்துச் சொன்ன திரு. சிதம்பரநாத முதலியார்க்குத் தமிழுலகம் என்றும் கடப்பாடுடையது

என்றார். இக்கோவிந்த தீக்ஷதர்க்கு முன்னரே 72 மேளகர்த்தாக்கள் வடநாடு சென்றதையும் குறிப்பிட்டார்.

"சென்னையில் சில ஆண்டுகளின் முன் சங்கீத அக்காடமியின் சார்பாக நடந்த ஒரு மாநாட்டில், வடக்கிருந்து வந்த நாசறுடின் என்னும் வட இந்திய சங்கீத வித்துவான் செய்த சொற்பொழிவின் இடையே, 4 துருபத்துகளைப் பாடினார். ஒவ்வொரு துருபத்திலும் 18 ராகங்கள் வீதம் ஆக 72 ராகங்களின் வேறு பெயர்கள் அவற்றில் குறிக்கப்பட்டிருந்தன. அவை 72 மேள கர்த்தாக்களின் பெயர்கள் என்றும் அக்பர் சக்ரவர்த்தியின் காலந்தொட்டே அவை வட இந்தியாவில் பாடப்பட்டு வருகின்றன என்றும் அவற்றை இயற்றிய வர் கோபால நாயக்கர் என்னும் தென்னிந்தியர் என்றும் அவர் சொன்னதால் 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கோவிந்த தீக்ஷதருக்கு முந்தியே 72 மேளகர்த்தாக்களும் ஆக்கப்படவில்லையோ என்ற ஒரு வலுத்த ஐயப்பாட்டிற்கு இடமிருக்கிறது" என்றார். தமிழ்மொழி உயர்தரச் சங்கீதத்திற்கு ஏற்றதோ அல்லது தெலுங்கு மொழியள விற்கு இனிமையுடையதோ என்று சந்தேகிக்கும் மனப் பாங்கினர் தமிழுலகத்தில் இருப்பாராயின் அவர் அப்படிச் சந்தேகிப்பதற்குக் காரணங்கள் பலதரத்தனவாய் இருக்கலாம்.

1. தெலுங்கு மொழியில் பயிற்சி மிகுதியும் தமிழ் மொழியில் பயிற்சிக் குறைவும்.

2. நியாய அளவு கடந்த தெலுங்கு மொழிப்பற்று அல்லது வடமொழிப்பற்று.

3. தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் இவற்றைப் பற்றிப் போதிய அறிவின்மை.

4. வடமொழி அறிவின் செருக்கு அல்லது தெலுங்கு சாகித் தியங்களின்மேல் இருக்கும் அளவு கடந்த பிரியத்தை அம்மொழியின் மேல் ஏற்றுதலால் தமிழ் மொழியின்பால் உளதாகும் பிரியக்குறைவு. உண்மையான தமிழராயும் தமிழிலக்கியத்தில் சற்றேனும் அறிவுள்ளவராயும் இருப்பவரிடையில் இப்படிப்பட்ட கண்மூடித் தனமான சந்தேகங்கள் எழுவதற்கு இடமில்லை. அப்படி எழுமானால் அது மேல் விரித்த நான்கு இனத்தவரோடு கூடி நெருங்கிப் பழகுவதால் ஒட்டுநோய்போல் எழுந்த மனப்பான்மை யின் பயனாமோ?" என்றார்.

மேலும், "தெலுங்குக்குத் தனி உயர்வு இருப்பதாய் நினைத்து, தமிழராய்ப் பிறந்த பெரிய சங்கீத வித்துவான்களாகிய பட்டணம் சுப்பிரமணிய ஐயர் அவர்களும் இராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்களும் தமிழொழித்துத் தெலுங்கு பாஷையிலே அநேக சாகித்தியங்கள் இயற்றத் தலைப்பட்டது, வருத்தங்கலந்த வியப்பே. அப்படிச் செய்ததால் இசையியல் சாகித்திய விஷயத்தில் தமிழுக்குப் பெரு நஷ்டத்தை அவர்கள் விளைத்தார்கள்" என்று எம்.எஸ். ராமசாமி ஐயர் அவர்கள் வருத்தத்துடன் வெளியிடுகிறார்கள்.

"தமிழறிவும் தமிழ் அபிமானமும் குறைந்த சிலரும், தமிழிசை ஓங்கிவிடுமே என்று அழுக்காறுற்ற வேறுசிலரும் தமிழிசை இயக்கத்தை எதிர்த்து எழுதத்துணிவார்கள். அவர்களுடைய பொய் நியாயங்களும் குதர்க்கங்களும் பொடிபடும் வண்ணம் செட்டிநாட்டு அரசர் அவர்கள் அவற்றிற்குத் தகுந்த மறுமொழிகள் அளித்து விட்டார்கள். வம்புக்குக் குறைகூறுவோருடைய பெருங்கூச்சல் ஓய்ந்து ஒடுங்கிவிட்டது. உலகத்தில் எல்லா நல்லியக்கங்களுக்கும் துவக்கத்தில் இடுங்கிய மனப்பான்மை யுடையோரால் எதிர்ப்புகள் உண்டாதல் இயல்பே. அவற்றையெல்லாம்,

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்ற திருக்குறள் வாக்கியத்தின்படி மன உரம் உடைய பெரியோர், கடந்து நல்லியக்கங்களை நாட்டுவார்கள். எதிர்ப்புகளும் நல்லியக்க வளர்ச்சிக்கு ஓர் உரமாகும்.

தமிழிசைச் சூரியன் எழுந்தது
பகையிருள் எல்லாம் ஒழிந்தது
தமிழிசை இன்பம் பொழிந்தது
தாட்டோட்டம் எல்லாம் அழிந்தது

தமிழிசை இயக்கம் பொங்கித் ததும்பிப் பெருவெள்ளம் எடுத்துப் பாய்கின்றது.

எவ்வித அணைகளையும், எல்லா அணைகளையும் அது தாண்டிவிடும்.

தமிழர்களாகிய நாம் அண்ணாமலை அரசர்க்குச் செய்யும் ஒரே கைம்மாறு என்னவென்றால் இந்த இயக்கத்தை உண்மையுடனும்

பக்தியுடனும் ஆர்வத்துடனும் ஏற்று நடத்தித் தமிழிசையையும் தமிழ்ச் சாகித்தியத்தையும் வளரச் செய்வதே" என்றார்.

ஆங்கு உரையாற்றிய கி.ஆ.பெ. விசுவநாதம் "இசைப்புலவர் களிற் பலர் தமிழ்ப் புலவர்களாய் இல்லாமலும், தமிழ்ப் புலவர்களிற் பலர் இசைப்புலவர்களாய் இல்லாமலும் இருப்பது நமது நாட்டின் பெருங் குறையாகவே அறிஞர்களால் கருதப்பெறுகிறது. இது மாறுதல் அடையவேண்டும். இசைப் புலவர்கள் சிறிதாவது மொழிப் புலமை பெறவேண்டும். சிலப்பதிகாரத்தையாவது ஒவ்வோர் இசைப்புலவனும் படித்துத் தீரவேண்டும். முழுதும் படிக்க முடியா விடினும் அரங்கேற்றுகாதை ஒன்றையேனும் படிக்க வேண்டும். படிக்க முடியாதவர்கள் படிக்கக் கேட்டேனும் அறிந்து கொள்ள வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

இம்மாநாட்டில் சர். பொன்னம்பலம் தியாகராசன் (பி.டி.இராசன்) இரண்டு தீர்மானங்கள் கொணர்ந்தார்:

1. மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வராள் தேவஸ்தானத்தில் முக்கியமான திருவிழாக்களில் சிறந்த இசைவிழாக்களை நடத்தி அவற்றில் பெரும்பாலும் தமிழ்ப்பாடல்களையே பாடச்செய்து. தமிழ்இசையையும் இசைவல்லாரையும் ஆதரிக்க வேண்டுமாய் மேற்படி தேவஸ்தான நிருவாகச் செயலாளர் அவர்களையும் சென்னை இந்துமத பரிபாலனத்தலைவர் அவர்களையும் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

2. எல்லா இசை விழாக்களிலும் பெரும்பாலும் தமிழ்ப் பாக்களையே பாடும்படி ஏற்பாடு செய்து, தமிழிசையைப் பரப்பி வளர்க்க வேண்டும் என்றும் எல்லோரையும் இந்த மாநாடு வேண்டிக் கொள்ளத் தீர்மானிக்கிறது

என்பவை அவை.

இம்மாநாட்டில் ச. சோமசுந்தரபாரதியார், விபுலானந்த அடிகள் ஆகியோரும் உரையாற்றினர்.

எம்.கே. தியாகராச பாகவதரும், எம்.எம். தண்டபாணி தேசிகரும், சேற்றூர் அரசர் சேவகப் பாண்டியனாரும், எம்.எஸ். சுப்பிரமணிய பாகவதர், நடராசன், ஆர்.ஜே. ஆதிலெட்சுமி, திருமதி இலட்சுமி நாராயண நாயர் (தி. இலக்குமணப் பிள்ளையின் மகளார்) ஆகியோர் இசையரங்கேறி இன்புறுத்தினர்.

இசைமாநாட்டுச் செயலாளர் நாராயணப் பிள்ளை நன்றியுரைத்தார்.

இம்முத்தமிழ் மாநாட்டு மலர் அருமை மிக்கது. மாநாட்டு நிகழ்ச்சிகள் பொழிவுகள் அனைத்தையும் தாங்கிய அருமையது. அதன் கொடையே இக்குறிப்புகளாம்.

15.8.42இல் அண்ணாமலையில் கூடிய தமிழிசைப் பாடல் கழகம், தொகுக்கப்பட்ட இசைப் பாடல்களை மூன்று தொகுதிகளாக வெளியிடத் திட்டமிட்டது. முதல் நூல், கீதங்கள், பிரபந்தங்கள், தளாதி, வர்ணம், ஸ்வரஜதி, தில்லானா முதலியன அடங்கியதாகவும்,

இரண்டாம் நூல், பரிசுப்பாடல்கள் அடங்கியதாகவும்,

மூன்றாம் நூல், இசைக்கல்லூரி ஆசிரியர்கள் சுரம் அமைத்த கீர்த்தனங்கள் அடங்கியதாகவும் இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டன.

இதே தமிழிசைப் பாடற்கழகம் 22.8.42, 4.9.42 முதல் 6.9.42, 16.9.42, 23.9.42, 27.9.42, 29.9.42, 10.10.42 ஆகிய நாள்களிலும் கூடிப் பல்வேறு செயல் திட்டங்களை ஆய்ந்து உருப்படுத்தியது. முன்னே தீர்மானிக்கப்பட்ட இசைத்தொகுதிகள் மூன்றுடன், மேலும் எட்டுத் தொகுதிகளும் ஆகப் பதினொரு தொகுதிகள் வெளியீட்டுத் திட்டம் ஏற்பட்டது. இன்ன நூலுக்கு இன்னார் சுரம் வகுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

23.10.42இல் புதுக்கோட்டையில் தமிழிசை மாநாடு நடைபெற்றது. அதன் திறப்புரையாற்றிய அண்ணாமலை அரசர், "தமிழிசை இயக்கமானது தமிழ் நாட்டில் வேரூன்றிவிட்டது. தமிழிசை இயக்கம் சாதித் துவேஷம் கொண்டதன்று. அரசியல் சூழ்ச்சியும் அன்று. இதர பாஷைகளிடத்து வெறுப்புடையதும் அன்று. தாய்மொழிப் பற்றற்று இதர மொழிகளில் மோகம் கொண்டு தமிழ்ப்பாடல்களுக்குத் தோஷம் கற்பிப்பதைப் பெருமையாகக் கருதுவார்களானால் அது சிறிதும் நியாயம் ஆகாது.

"திருச்சி ரேடியோ அதிகாரிகள் தமிழ்மக்களின் விருப்பத்திற்கு இணங்கச் சிறிது காலமாகத் தமிழ்ப்பாட்டுகளை அதிகரித்திருப்பது போற்றத்தக்கது ஆகும். இந்நிலைய அதிகாரிகள் தமிழ்ப்பாட்டுகள் மேன்மேலும் அதிகரிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதே தமிழர்களின் பேரவா" என்றார்.

அவ்விழாவின் தலைவர் கலிபுல்லாசாய்பு. அவர், "என் அன்னையிடம் நான் அன்பு பூண்டால் மற்றொருவர் அன்னையை நான் வெறுப்பதாகாது. என் அன்னையிடம் என் அன்பு இயற்கையாகவே செல்வதுபோல் தமிழர்களுக்குத் தமிழிசையிலே அன்பு உதிப்பதும் அதன் ஆக்கம் கருதி உழைப்பதும் இயற்கையாக எழும் எழுச்சியாகும். அதற்கு மாறாக எவர் கூறுவதும் கண்டிக்கத்தக்கதும் தவறுமாகும்" என்றார்.

27.10.42இல் கூடிய தமிழிசைக் கழகத்தில் முன்னே தீர்மானிக்கப்பட்ட 11 நூல்களையும், திருத்தமான வகையில் அச்சிட வேண்டுதற்குரிய திருந்திய முயற்சிகள் செய்யப்பட்டன. அவற்றுள் 12 ஆம் நூலாக வேதநாயகம்பிள்ளை பாடல் வெளியிட வேண்டும் என்றும் முடிவாயிற்று.

30.12.42இல் ஆத்தங்குடியில் ஓர் இசையரங்கு நடைபெற்றது. அதில் தொடக்கவுரையாற்றிய அண்ணாமலை அரசர், "இவ்வியக்கம் பிரபலமடைந்தமையால் தமிழ்மக்களுக்குத் தமிழிசையில் அபிமானமும் ஆர்வமும் அதிகரித்திருக்கின்றன. தமிழ் நாட்டில் ஆரம்பமுதல் மங்களம் முடியத் தமிழ்ப் பாடல்களாக இருப்பதுதான் திருப்திகரமானது. இடையே ஒன்றிரண்டு பாடல்கள் இதர பாஷைகளிலும் பாடப்பெற்றதால் அதை ஒருவரும் ஆட்சேபிக்க மாட்டார்" என்றார்.

மேலும் அவர், ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரியார் அவர்கள் பல நாள்கள் பிறமொழியில் நடைபெற்ற இசையரங்குகளைக் கேட்டுக் கொண்டிருந்து முடிவில் இவையெல்லாம் செவிக்கு இன்பம் தருவனவாக இருக்கின்றனவே அன்றி உள்ளம் உருகும்படியாக இல்லை' என்று சொன்னார்கள். திரு. சி. இராசகோபாலாச் சாரியாரவர்கள் 'மொழிகளின்றி அநுபவிக்கும் இசையின்பம் குறைவுபட்டது' என்கிறார்கள். இருவரும் தமிழ் நாட்டில் தமிழ்ப் பாடல்களே பாடப்பெற வேண்டும் என்பதை இவ்வாறு வற்புறுத்தியிருக்கிறார்கள்.

பிராமணர், பிராமணர் அல்லாதார் என்ற வேற்றுமை சிறிதும் இன்றி, எல்லா வகுப்பினரும் தமிழ்நாட்டில் தமிழிலேயே பெரும்பாலும் பாடவேண்டும் என்ற ஒரு விருப்பத்தைத் தவிர வேறு நோக்கம் எதுவும் இல்லை. இந்த இசையரங்கில் இப்பகுதியில் உள்ள கனதனவான்கள் எல்லோரும் அங்கத்தினராகச் சேர்ந்து உயர்திரு.

காடப்ப செட்டியார் அவர்களுக்கு ஆதரவளிப்பது தமிழிசைக்கு ஆற்றும் ஒரு சிறந்த தொண்டாகும்" என்றார்.

3.11.42இல் கூடிய தமிழிசைப் பாடல் கழகக் கூட்டத்தில் பல்கலைக்கழகச் சார்பான அவைகள் எல்லாவற்றிலும் கடவுள் வாழ்த்துத் தமிழில் இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பண்டிதமணி அவர்களால் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. 7.11.42 கூட்டத்தில் மேற்குறித்த தீர்மானத்தைத் துணைவேந்தர் ஏற்றுக்கொண்ட செய்தியைப் பதிவாளர் உரைத்தார்.

இசைப்பகுதித் தலைவராக இருந்தவரும், பரிசுபெற்ற தமிழிசைப் பாடல்கள் பதிப்பாசிரியரும், தமிழ் இசை இயக்கம் பற்றி அரிய பெரிய செய்திகளைத் தொகுத்து வழங்கியவரும் ஆகிய கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் 'எதிர்ப்பின் ஆராய்ச்சி' என ஓர் ஆய்வு செய்துளார். அதிலுள்ள சில குறிப்புகள்:

"தமிழிற் பலவகையான இசைப்பாடல்கள் தோன்றி வழங்கிய நெடுங்காலத்தையும், பிறமொழிகளில் இசைப்பாடல்கள் வழங்கி வரும் சுருங்கிய காலத்தையும் பார்ப்பின், பிறமொழிக் கலைஞர் தங்கள் மொழிகளில்தான் இசைப்பாடல்கள் உண்டென்றும் பாடக்கூடுமென்றும் சொல்வது 'கூவலாமை குரைகடலாமையைக் கூவல் ஒக்குமோ கடல்' என்றது போலாம் (கூவல் — கிணறு; குரைகடல் — ஒலிக்கும் கடல்).

"இசை கற்கும் தமிழ்மாணவர்கட்கு, பிறமொழி உருப்படிகள் வாயிலாக உயர்ந்த இசைக்கலையைக் கற்பிப்பதற்குச் செட்டி நாட்டரசர் அளித்த பதினாயிரம் ரூபாயையும் பயன்படுத்திவிடலாம் என்று சிலர் பேசுகின்றனர். அவர்கள் வள்ளல் செட்டிநாட்டரசரின் நோக்கத்தை அறிந்தாரில்லை. தமிழருக்குப் பயன்படும் வண்ணம் தமிழிலேயே இசைப்பாடல்கள் அமைய வேண்டும் என்பது அவர்கள் நோக்கம். எவ்வளவு சிறந்த பிறமொழி இசைப் பாடல்களைக் கற்றாலும் அத்தகைய பாடல்கள் தமிழில் அமையாமற் போனால் யாது பயன்? தமிழிசை வளம்பெறுதல் யாங்ஙனம்?

"சில தமிழிலுள்ள சிறந்த இலக்கியப்பாடல்கள் தெலுங்குப் பாடல்களைவிடப் பொருள் விளங்காதவை என்கின்றனர். அவ்வாறு கூறுதல் தாய்மொழியை யகற்றிப் பிறமொழியைக் கற்க வேண்டும் என்பது போலாம்.

"தமிழிலுள்ள தேவாரம் திருப்புகழ் முதலிய அருட்பாடல்களைக் கேட்கவேண்டாம். தெலுங்கிலுள்ள இசைப்பாடல்களைக் கேட்கத் தெலுங்கைக் கற்றுக் கொண்டு வாருங்கள் என்று சொல்வது, **உங்களிடத்துள்ள பெருஞ்செல்வத்தைக் கையாள முடியாமல் அவற்றை எறிந்துவிட்டு எங்களிடத்தில் வந்து பிச்சை கேளுங்கள் என்பது போலாம்.**

"தமிழ்க் கீர்த்தனங்கள் சொல்மலி வுடையன. இசைநயம் இல்லாதன என்று கூறுதல் தமிழ் இசைவளம் அறியாதார் கூற்று.

சிலப்பதிகார வரிப்பாடல்களில் மீண்டும் மீண்டும் பாடுவதற்காக அமைந்த சொற்றொடர்கள் மிகச் சுருங்கிய பல்லவி வடிவில் அமைந்துள்ளன. சிந்தாமணியிலுள்ள கந்தருவப்பாடல்கள் ஒவ்வொன்றும் மடக்காக வைத்து இரண்டடியும் வேறு இரண்டடி களுமே கொண்டுள்ளன. அவை கீர்த்தனத்திலும் சுருங்கிய அளவுள்ளன.

தேவாரத்திலும் பண் அமைந்த இரண்டடிப்பாடல்கள் பலவுள. சரித்திரக் கீர்த்தனங்கள் தவிர ஏனைய கீர்த்தனங்களில் சொற் சுருங்கியமை மிகப் பல. பல்வேறு வர்ணமெட்டுகளுக்கு இடங் கொடுப்பன பலப்பல.

திருப்புகழ் முதலியவற்றில் உள்ள பெரும்பாடல்களில் இசைக்கு ஏற்பத் தெரிந்தெடுத்துப் பாடும் பகுதிகள் சுருங்கிய அளவில் பலவுள்ளன. இவையெல்லாம் இசைக்கலைஞர்கள் வகுக்கும் புதுப்புது முறைகளுக்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டாய் விளங்கும். தமிழ் வளம் அறியாது, தம் மொழிப்பற்றினால் பிறர் பேசும் உரைகள் வழக்கீட்டிற்கு நிற்க மாட்டா. வர்ண மெட்டுகள் எல்லாவற்றிற்கும் உரியபாடல்களைப் புரந்தரதாசரும், தியாகையர் தீட்சிதர் சாமா சாஸ்திரிகளும், பாக்கிவைக்காமல் பாடி முடித்துவிடவில்லை. அவர்கள் அங்ஙனம் செய்துவிட்டார்கள் எனக் கூறுதல் ஞாயிற்றைக் கையினால் மறைத்து விடலாம் என்பது போலாம். இசைப்பாடல்கள் பணத்திற்கு வா என்று சொன்னால் வராது. அதற்குத்தக்க பெரியோர்கள் வானின்று தமிழ்நாட்டில் இறங்க வேண்டும் என்று கூறுதல் தமிழ்மொழியின் ஆற்றல் அறியாதார் கூற்றாகும். தியாகையர் முதலியவர்களுக்கு முன்னும் பின்னும் இயல் வளமும் இசைவளமும் செறிந்தபாடல்களைப் பல்லோர் பாடியுள்ளனர். தமிழ்மொழியைப் பற்றி அவ்வாறு பேசுதல் தமிழ் அறிவு இல்லாதார்

செயலாகும். தமிழ் தன்னலங்கருதாது பலமொழிகளுக்கும் பலவகையிலும் நெடுங்காலம் இடங்கொடுத்து வந்திருப்பதனால், தனக்குரியதைத் தமிழ் இப்போது பேணக் கருதும் காலத்தில் அதனைக் குறைகூறப் பிறர் அஞ்சினார் இல்லை. விருந்தோம்பும் விரிந்த மனப்பான்மையுடைய தமிழரை அவர் குறை கூறவும் துணிந்தனர். ஒடுங்கிய மனப்பான்மையோடு கலந்து மிகைப்பட்ட மொழிப்பற்று அங்ஙனம் பேசுவோரிடத்திலேயே காணப்படு கின்றது.

மொழி, இசைக்கு இன்றியமையாதது அன்று என்று சிலர் பேசுவர். பொது நன்மைகளுக்கு இசை பயன்படவேண்டும் என்றால் மொழியின் துணை ஒருதலையாக வேண்டப்படும். திரியின்கண் எரியும் சுடர், கண்ணாடிக் கூட்டினுள் வைக்கப்பட்ட போது மிகுந்த ஒளி தருவதுடன் பாதுகாப்புறுதலும் அறியற்பாலது. அவ்வாறே சொற்கலவாத ஒலியளவிலுள்ள இசையானது பாட்டில் அமையும் போது அதன் துணையால் மிக்க இன்பத்தைப் பயப்பதுடன் பன்னெடுங்காலம் நாட்டிலுள்ளார் உளத்தில் நிலைபெறுதலும் கூடும்.

தெலுங்குப் பாட்டுப்பாடுபவரை நோக்கி, "பாடல் வேண்டிய தில்லை; வெற்றிசை முழக்கமே போதும்" என்று சொன்னாரைக் கேட்டிலம். தமிழிசை இயக்கம் வலுவடைந்தால் தம்பாடல் தளர்வடையும் என்ற கருத்துடையவரே அங்ஙனம் பேசினார். அப்போலியுரையில் தமிழர் மயங்காதிருத்தலே நலம். தமிழிசை இயக்கத்திற்கு மாறாகத் தோன்றின கோட்பாடும் இந்நாளில் மழுங்கி ஒழிந்தன.

எழுபத்தைந்து பக்கங்களால் வந்த இம் முகவுரையை மதிப்பிட்ட செந்தமிழ்ச் செல்வி (21:96) "இம் முகவுரை அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாகத் துவங்கிய தமிழிசை இயக்கத்தின் வரலாறாகவே அமைந்துள்ளது" என்று பாராட்டுகிறது. ஆகலின், முதன் முதலாக எழுந்த தமிழிசை இயக்க வரலாற்று நூல், அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைப்பகுதித் தலைவர் கா.சு. பிள்ளை எழுதியது என்னும் பெருமையுடையதாம். தமிழிசை ஆர்வப் பெருக்கு உண்டாகி மேடைகளிலும் தமிழ்ப்பாடல்கள் மிகுதியும் பாடப்பட்டன எனினும் முட்டுக்கட்டை போடுதலே முழுத் தொண்டு என்று

விடாப்பிடி கொண்டவர்கள், தொடர்ந்து அவர் போக்கிலேயே பேசியும் எழுதியும் வந்தனர். அந்நிலையில் "இன்னும் தமிழ் இசைக்கு எதிர்ப்பா?" எனச் செந்தமிழ்ச் செல்வி எழுதியது (20.3.45):

"சின்னாட்களுக்குமுன் மீண்டும் திரு. வேங்கட சுப்பராவ் திரு. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், திரு. வேங்கடராம சாஸ்திரியார் முதலியோர் தமிழிசைக் கிளர்ச்சி பற்றி இசைவில்லாது பேசியதும் 'இந்து', 'சுதேசமித்திரன்' தாள்களும் இசைவில்லாது எழுதியதும் வருந்தத் தக்கன.

தமிழ்நாட்டில், அதன் தாய்மொழி யாகிய தமிழ் மொழியிலே பாட்டுகளை இசை மேடைகளிற் பாட வேண்டும் என்றால் 'இசைக்கு மொழிவேற்றுமை ஏன்? எந்த மொழியிற் பாடினால் என்ன? என்பது என்ன தமிழன்பைச் சார்ந்தது? எந்த மொழியிற் பாடினாலும் ஒன்றும் இல்லாத போது தமிழ்மொழியிற் பாடுதலில் ஏன் வேற்றுமை காட்ட வேண்டும்? அதனை வரவேற்று மகிழ்தற்குக் கூட இசையாமை காட்டும் மனம் தமிழ்மனம் ஆகுமா? ஆகாதபோது எதிர்த்துப் பேசுதற்கும் எழுதுதற்கும் என்ன உரிமை இருக்கிறது?

என்று வினாவியது.

தமிழ் இசைப் பாடல்களும் கீர்த்தனைகளும் இல்லை என்பாரை எள்ளி நகைக்கும் வண்ணம் இளவழகனார், ஔவை சு. துரை சாமிப்பிள்ளை, தண்டபாணி தேசிகர், மு. அருணாசலம் பிள்ளை, மு. இராசாக் கண்ணனார் முதலியவர்கள் கீர்த்தனைப் பாடல்கள் பலவற்றை உருவாக்கி இராகம், தாளம் முதலியன அமைத்துத் தொடர்ந்து வெளியிட்டனர். அப்பாடல்கள் 'தனித்தமிழ்க் கீர்த்தனை கள்' என்னும் தலைப்பில் வெளியாயின.

தமிழிலே இசைப்பாடல் என்ன, தனித்தமிழிலேயே இசைப் பாடல் இயற்றி இசைக்க முடியும் என்பதைக் காட்டினர். இயலிலும் இசையிலும் தேர்ந்த தண்டபாணி தேசிகர் இவ்வகையில் முன்னோடியாகத் திகழ்ந்தார். பாவாணர் கிறித்தவக் கீர்த்தனைகள் தமிழிசைக் கீர்த்தனைகள் என்பவற்றை மெட்டுத் தாளம் ராகம் என்பனவெல்லாம் அமைய இயற்றினார்.

24.1.43 ஞாயிறு மாலை சென்னை கோகலே மண்டபத்தில் நுண்கலைக் கழகச் சார்பில் தண்டபாணி தேசிகர் இசையரங்

கேற்றினார். அலை மோதிய மக்கள் கூட்டத்திடையே தமிழிசை பொழிந்தார். ஆங்குப் பாடிய பத்தொன்பது பாடல்களில் இரண்டே இரண்டு பாடல்கள் மட்டுமே தியாகராசர் கீர்த்தனைகள். பிறவெல் லாம் தமிழ்க் கீர்த்தனைகளேயாம்.

"தேசிகர் சுவரமும் பல்லவியும் பாடுவதில்லை என்ற போதிலும் மூன்று மணிநேரம் மக்கள் மனங்கவர்ந்து இனிக்கப் பாடினார். தமிழ்ப் பாட்டுகளைப் பாடாமல், பிறமொழிக் கீர்த்தனங்களை சுவரம் பல்லவி இல்லாமல் வெறும் பாட்டாகவே அத்தனை மணிநேரம் பாடமுடியாது. சில பல இராகங்களை விளக்கமாகப் பாடினார்கள் எனினும் அவற்றிற் காம்போதி இராகத்தை மட்டும் மிகவும் விளக்கமாகவும் நுணுக்கமாகவும் பாடி மக்களுக்குப் பெருமகிழ்வை ஊட்டினார்கள்.

"இப்போது தமிழிசைக் கிளர்ச்சி நடைபெறினும் தமிழ்ப்பாடல் என்று வழங்குகின்ற பாடல்கள் எல்லாம் பெரும்பாலும் வடசொற் கலப்பு மிக்குடையனவே. அதனால் வடசொற்களைக் கலக்காமல் தூய தமிழில் பல இராக தாளங்கள் அமையக் கீர்த்தனங்கள் இயற்றுதல் இயலாதென்று சிலர் அறியாது கூறிவருகின்றனர். ஆனால் நம் தேசிகர் அவர்களோ பிறமொழிச்சொல் ஒன்றுகூடக் கலவாமல் தூய தனித்தமிழில் கீர்த்தனங்களைத் தாமே இயற்றிவருகின்றார்" என்று பாராட்டப்பெற்றார் (செந்.செல். 20:114 – 115).

1943 மார்ச்சு 28இல் திருநெல்வேலியில் இசைமாநாடு நிகழ்ந்தது. அதன் தலைவராக இலட்சுமணப் பிள்ளை இருந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழக இசையாசிரியர் மயிலம் வச்சிரவேலு முதலியாரும், திருநெல்வேலி அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இசையாசிரியர் நெல்லை சங்கரன் பிள்ளையும் பாடினர்.

முன்னவர் முத்துத்தாண்டவர் பாடல்களைத் திருப்பாம்பரம் சாமிநாத பிள்ளை இராகதாள அமைப்புப்படி பாடினார். பின்னவர் வேதநாயகம் பிள்ளை, இலக்குமணப்பிள்ளை முதலியவர்கள் பாடல்களையும் பாடினார். இசைவாணர்கள் இருவரும் "தமிழே இசைக்குப் பொருத்தம்; இசைக்கேற்ற மொழி தமிழே" என்னும் உயரிய உண்மையை மெய்ப்பித்ததாகத் தலைவரும் பொது மக்களும் பாராட்டினர்.

தமிழிசை இயக்கம் கண்ட வள்ளல் அண்ணாமலையரசர் உள்ளத்தில் 'தமிழிசைச் சங்கம்' என்றோர் அமைப்பு இன்றியமையாதது எனத் தோற்றமுற்றது. அதனால் தம் அடையாற்று மாளிகைக்கு 19.4.43 திங்கட்கிழமை, பிற்பகல் 3 மணிக்குத் தக்கார் சிலரை வருவித்துக் கலந்துரையாடிச் செயல்திட்டம் வகுத்துத் 'தமிழிசைச் சங்கம்' என்னும் அமைப்பினை உருவாக்கினார். சுவை விருந்தும், தண்டபாணிதேசிகரின் தமிழிசை விருந்தும் நிகழ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அப்பொழுதே நான்கு இலக்க உருபாவுக்கு மேல் நன்கொடை சேர்க்கப்பட்டிருந்தது. அரசுப்பதிவு பெறும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

அவ்வமைப்பின் தலைவர் சர். அண்ணாமலைச் செட்டியார்; துணைத்தலைவர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் என முடிவு செய்யப்பட்டது. திவான் பகதூர் இரத்தினசாமி முதலியார் முதலிய பெருமக்கள் பங்களிப்பாளராக விளங்கினர்.

தமிழிசைச் சங்க முயற்சி இவ்வாறு நடைபெற்று வரும் காலச் சூழலில், அறிஞர்கள் சிலர் தமிழிசை பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதலாயினர். அதற்குக் கரந்தைத் தமிழ்ப் பொழிலும், கழகச் செந்தமிழ்ச் செல்வியும் மிகுந்த வரவேற்பளித்தன. இவ்வகையில் விபுலானந்த அடிகளின் இசைத்தமிழ்க் கட்டுரைகள் தமிழ்ப் பொழிலில் (17) தொடர்ந்து வந்தன. அவற்றைப் பாவாணர் பார்வையிட்டார். அவ்வாய்வு தமிழ்வழி மரபொடு ஒத்தியல்வதாகத் தோன்றாமையால் அக்கருத்துகளை மறுத்துச் செந்தமிழ்ச் செல்வியில் கட்டுரை எழுதினார். அக்கட்டுரை 'குரலே சட்சம்' என்பது.

கடந்த நூற்றாண்டின் இறுதியிலும் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும் இயற்றமிழ் சார்ந்த இலக்கண இலக்கிய ஆய்வுகளில் பெரும் பெரும் புலமைத் தலைகளெல்லாம் மோதிக் கொண்டன. புலமையோடு பண்பாடும் விளங்கும் மோதலாகவும் அவை இருந்தன; அதற்கு மாறாகவும் இருந்தன. அவ்வகையில் சான்றாக "ஆகுபெயர் அன்மொழித் தொகை ஆய்வு", "கொழு — துன்னூசி விளக்கம்" என்பனவற்றைச் சுட்டலாம். ஆனால், இசைத்தமிழ் ஆய்வில் இத்தகைய அழுந்திய ஆய்வு ஏற்படவில்லை. அந்நிலை, தமிழிசை இயக்கம், தமிழிசை நூல்வெளியீடு என்பவற்றால்

வாய்த்தது. அத்தகைய ஒன்றே 'குரலே சட்சம்' என்னும் பாவாணர் கட்டுரையாகும்.

தமிழ்ப் பொழிலில் விபுலானந்த அடிகள் எழுதிவந்த தமிழிசைக் கட்டுரைத் தூண்டலே இத்துறை வெளிப்பாடாகும். விபுலானந் தருக்கு முன்னரே ஆபிரகாம்பண்டிதரின் கருணாமிர்த சாகரம் வெளிவந்தமையையும் அறிவோம். அவ்விருநூல்களும் ஊக்கமாகக் கிளர்ந்தது பாவாணர் கட்டுரை எனலாம். கட்டுரைத் தொடக்கத் திலேயே தமிழாய்வு வழிமுறையைப் பாவாணர் விளக்குகிறார்:

இயற்றமிழ் உணர்ச்சி போன்றே இசைத்தமிழ் உணர்ச்சியும் மிக்குவரும் இக்காலத்தில், இசைத் தமிழைப் பலரும் பலவாற்றால் தத்தமக் கிசைந்தவாறு ஆராய்வது தக்கதே. ஆனால், ஒரு படத்தைத் தலைகீழ்த் திருப்பிப் பார்ப்பது போல் முதனூலை வழிநூலாகவும், வழிநூலை முதனூலாகவும் பிறழக் கொண்டு ஆராய்ச்சி நடத்துவது ஒரு சிறிதும் தக்கதன்று முத்தமிழில் எத்தமிழை ஆராயினும் முன்னதாக இன்றியமையாது அறியவேண்டிய உண்மைகள் மூன்றுள. அவை:

"தமிழும் தமிழரும் தோன்றியது குமரிநாடு என்பதும்,

ஆரியர் வருமுன்னரே தமிழர் பலதுறையிலும் முழு நாகரிகம் அடைந்திருந்தனர் என்பதும்,

தமிழர் அல்லது திராவிடரிடத்தினின்றே ஆரியர் நாகரிகத்தை அடைந்தனர் என்பதுமாம்.

ஆரியர் வருமுன்னரே தமிழ் முத்தமிழாய் வழங்கியதாகலின், ஒருவர் எத்துணைக்கலைபயில் தெளிவும் ஆராய்ச்சி வன்மையும் வாய்ந்தவர் எனினும், ஆரிய வேதங்களை இசை முதனூலாகக் கொண்டு ஆராயின், விளக்கின்றிப் புத்திருள் வழிப்போவார் போல் இடர்ப்படுவாராவர். தமிழ்க்கலைகளையும் நூல்களையும் வடமொழியில் பெயர்க்கும் போது குறியீடு, பாகுபாடு, தொகையீடு, முதலியவற்றை இயன்றவரை மாற்றி வழிநூலையே முதனூலாகக் காட்டுவது ஆரியர் வழக்கம்" என்கிறார்.

அந்நிலையில் இசைத் தமிழைப் பற்றி விபுலானந்த அடிகள் எழுதிய ஆய்வுரை, 'முதலிலேயே கோணியதாக' அறிந்தார். அதில் ஆழ ஆய்ந்து, அடிகள் கூறுவதுபோல் "குரல் மத்திமம் அன்று; குரலே சட்சம்" என்னும் முடிவுக்கு வந்தார். அதற்குரிய சான்றுகளைத் தன்

மதம் நிறுத்தல், பிறன்மதம் மறுத்தல் என இரு பகுதியாய்க் காட்டி நிறுவுகிறார். (செந்.செல். 20:330 – 335).

ஏழிசை வரிசையில் குரல் முதலிற் கூறப்படுதல்.

மத்தளத்திற்கு வலக்கண் குரல் என்றல்.

குரலை முதல் தானம் என்றல்:

கேள்விச்சுரம் (சுருதி) இயல்பாய்ச் சட்சமா யிருத்தல்.

குரல் என்னும் சொல் தொண்டையையும் அதில் பிறக்கும் ஓசையையும் குறித்தல்.

குரலே சட்சமாக ஆபிரகாம்பண்டிதர் கொண்டமை என்னும் ஆறும் தன்மதம் நிறுத்தலாக் கூறுகிறார்.

இளிக்கிரமத்தில் அலகு கணக்கிடல், புள் விலங்கு ஒலிகள் பற்றியவை ஒரு நிலைப்படாமை, பிறப்பிடம் ஒவ்வாமை, பட்டடை என்பது அடிமணையே யன்றி இளியன்று என்பன பிறன் மதமறுத்தல்.

ஆபிரகாம் பண்டிதர் மகனார் வரகுணபாண்டியனார் இசைத் தமிழ் விளக்கம் என்னும் நூலில் 'குரலே சட்சம்' என்று எழுதியிருப்பதையும் தாம் இயற்றிய இசைத்தமிழ்ச் சரித்திரமும் இவ்வழிச் செல்வதே என்றும் இக்கட்டுரையில் சுட்டுகிறார் ஞா.தேவநேயப்பாவாணர்.

இதற்கு மறுப்பாக வித்துவான் க. வெள்ளைவாரணனார் "குரல் மத்திமமே; சட்சமன்று" என்றொரு கட்டுரை வரைகிறார் (செந்.செல். 20:427–436).

ஆய்வார்க்கு வேண்டும் இயல்பாகப் பாவாணர் சுட்டிய குறிப்புகள் விபுலானந்த அடிகளார்க்கும் ஏற்புடையதே என்பதை அவர்தம் யாழ்நூல் வெளிவருங்கால் அறியவரும் என்றும், அதிலுள்ள கருத்துகளால், 'வேதகாலத்திற்கு மிக முந்தியே தமிழ்யாழ் இருந்தது என்பது முடிவாகின்றது' என்றும் கூறும் வெள்ளை வாரணர் பாவாணர் சுட்டும் மறுப்புகளை மறுக்கிறார்.

இயற்றமிழ் இசைத்தமிழ் ஆகிய இரண்டும் வல்லார் அடிகள்; அவ்விரு திறமும் இல்லார் ஆய்வு வன்மை பெறாது என்று சுட்டும் குறிப்பு வெள்ளைவாரணர் கட்டுரையில் இருத்தலால் பாவாணர் "அடிகளார் பல ஆண்டுகளாகத் தமிழிசையை ஆராய்ந்து வருவது தமிழுலகனைத்தும் அறிந்ததே. ஆனால் பிறர் தமிழிசையை

ஆராயவில்லை என்பது இதனால் எங்ஙனம் பெறப்படும்? என்கிறார். தம் இசைப் பயிற்சியையும் சுட்டுகிறார்.

வீணை என்னும் பெயர் வேறுபாட்டானேயே யாழ் வேறென்று கொள்வது விருத்தாசலத்தின் வேறு பழமலை (முதுகுன்றம்) என்று கொள்வதேயாகும் என மறுக்கிறார்.

"எழுவகை நிலமாவன சரிகமபதநி என்னும் எழுவகைப்பட்ட எழுத்தடியாகப் பிறக்கும் குரன் முதலாகிய ஏழும்" என்று அடியார்க்கு நல்லார் (சிலப். 14:152-4) கூறியிருத்தலைக் கண்விழித்துக் காண்க என்கிறார். மறுப்பின் முடிவில் ஆளத்தி, யாழேவீணை, ஏழிசைப் பெயர்கள் என்னும் கட்டுரைகள் வெளிவரும் என்றும் கூறுகிறார்.

தமிழிசையரசு தண்டபாணிப்பிள்ளை, வேலூர்த் தேவார இசைவேந்தர் அப்பாதுரை ஆச்சாரியாரின் மகனார் சம்பந்தமூர்த்தி ஆச்சாரியாரும் போன்ற அறிஞர்முன் இக் கொள்கையை மெய்ப்பித் தால் தோல்வியை ஒப்புவதாகச் சுட்டுகிறார். அதனோடு அம்மறுப்புரை தொடராமல் அமைகின்றது.

இசைவல்லார் இத்தகு மறுப்புக்கட்டுரைகளை ஆய்வதன் வழியே சில ஒளித்தடங்கள் கிட்டவாய்க்கும். அதற்குக் கருவியாக இவ்வாறு வெளிப்பட்ட ஆய்வுக் கட்டுரை, மறுப்புக் கட்டுரை, மறுப்பின் மறுப்புக்கட்டுரை என்பவற்றை அடைவுசெய்து தொகை நூலாக்கித்தரின் இசைத்துறை வளர்ச்சிக்கு உதவும்.

ஆய்வாளர்களிடையே தமிழிசை இடம் பெற்றதுடன், பொது மக்களிடையேயும் பொலிவுறத் தொடங்கலாயிற்று. 10.9.43இல் வள்ளல் அழகப்பர் மகளார் உமையாள் திருமணம் நிகழ்ந்தது. மணமகனார் இராமநாதன். நிகழ்ந்த இடம் அழகப்பரின் கொட்டையூர்.

பல்லாயிரவர் குழுமிய அத்திருமண அரங்கிலே இயலிசை நாடகமாகிய முத்தமிழும் பொழிவால் களிநடம் புரிந்தன. இசை என்பது தமிழிசையே ஆகிய தனியிசையாம். *அன்று ஊர்ப்பொது* மக்கள் சார்பில் அழகப்பர்க்கும், மணமக்களுக்கும் நிகழ்ந்த பாராட்டுக் கூட்டத்தில் அண்ணாமலை அரசர், "இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஒரு திருமணத்தைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. இந்தத் திருமணம் தமிழிசை இயக்கத்திற்குப் பேராதரவாய்

விளங்கியது. தெருவெல்லாம் தமிழ்முழக்கம்" என்று பாராட்டிப் பேசினார்.

பண்டித மணி, தமிழிசை வளர்ச்சியைப் பாராட்டி மாறுபட்டோர் கருத்துகளைக் கண்டித்து நன்முடிவுகளும் வழங்கினார்.

அழகப்பர், "தமிழிசை வளர்ச்சிக்கு நம்மால் ஆவனவெல்லாம் செய்யவேண்டும்" என்று அப்பாராட்டு நன்றியுரையில் குறிப்பிட்டார். செல்வமும் செல்வாக்கும் உடையவர்கள் தலையிட்டுச் செய்யும் போது, செய்யப்படும் பொருளும், சீராட்டுக்கும் பாராட்டுக்கும் உரியதாகிச் சிறப்புறுதல் இயல்புதானே!

சென்னையில் தமிழிசைச் சங்கம் கால்கொண்டதை அறிந்துளோம். அதன் மாநாடு 23.12.43இல் சென்னை முறை மன்றத்திற்கு முன்னேயுள்ள மரியன்னை மண்டபத்தில் (St. Mary's Hall) சிறப்பாக நிகழ்ந்தது. மண்டபம் கொள்ளாமல் உள்ளும் புறமும் வெள்ளமெனப் பெருகியது மக்கள் வெள்ளம்.

தண்டபாணி தேசிகரின் தமிழிசைப் பாடலோடு தொடங்கியது. அண்ணாமலை அரசர் திறப்புரை ஆற்றினார். ப. சம்பந்த முதலியார் வரவேற்புரை வழங்கினார். டி.கே. சிதம்பர நாதமுதலியார் தலைமை ஏற்றார். ஆர். கே. சண்முகம் செட்டியார், சி. இராசகோபாலாச் சாரியார் சொ. முருகப்பா, பி. சாம்பமூர்த்தி ஐயர், என்.எஸ்.கிருஷ்ணன், மீனாம்பாள் சிவராஜ், கல்கி ரா. கிருஷ்ண மூர்த்தி, டி. செங்கல்வராயன், இந்திராணி பால சுப்பிரமணியம், அறிஞர் அண்ணா ஆகியோர் உரையாற்றினர். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் நன்றியுரைத்தார். 24.12.43 முதல் 4.1.44 முடியத் தமிழிசை மழை பொழிந்தது.

தமிழிசை நான்கு நிலைகளில் பரவி வருவதைச் சம்பந்த முதலியார் தம் வரவேற்புரையில் விரித்துரைத்தார்:

1. தமிழிசைக் கச்சேரி 2. இன்னிசைக் கருவிகளுடன் தமிழ்ப் பாகவதர்கள் செய்யும் தமிழ்க்கதை 3. கோயில்களில் தேவாரம் முதலியன பாராயணம் செய்தல். 4. தமிழ் நாடகமேடை பேசும்படக் காட்சி வானொலி என்பன அவை.

தமிழில் கதை செய்யும் போதும் நாடகம் நடிக்கும் போதும் அயல் மொழிப் பாடல்கள் பாடுவது முறையற்றது என்பதை விளக்கினார்.

பாகவதர் ஒருவர் பிரகலாத சரிதையைத் தமிழில் செய்கிறார். முதலில் இருந்து தமிழிலேயே பேசிக்கொண்டு வந்து, பிரகலாதன் தன் தந்தையுடன் தர்க்கம் செய்யும் போது அயல்மொழியில் இருந்து ஒன்று இரண்டு என்றில்லாமல் மூன்று நான்கு சீதபத்தியம், கந்தபத்தியம் முதலியவைகளைப் பாடுவது தவறு.

தமிழ்மொழியில் அக் கருத்துகள் அடங்கிய செய்யுட்கள் இல்லாமல் போயினவா? அவ்வாறே இல்லாமற் போயினும் தமிழ்மொழியில் புதிய பாட்டுகளைக் கட்டும்படியான திறமை வாய்ந்த கவிஞர்களும் இல்லாமற் போயினரா? இது தமிழ்த் தாய்க்குப் பெருங்குறையாகும்.

நாடகமேடையில் வள்ளி திருமணம் நடைபெறுகின்றது. அதில் வரும் எல்லா வசனங்களும் பாட்டுகளும் தமிழிலே இருக்க வேண்டியிருக்க இடைஇடையே அயல்மொழிப் பாடல்கள் வருகின்றன. சுப்பிரமணியராக நடிப்போன் 'ஜெய ஜெய கோகுல பாலா' என்னும் பாடலை ஏன் பாட வேண்டும்? அவன் அந்தப் பாட்டைப் பாடுவது அசந்தர்ப்பம் என்னும் குற்றமாகும்.

மேடையில் அரிச்சந்திரன் கதை நடக்கிறது. மயான காண்டம் — சந்திரமதி தன் மடிந்து போன மகனைத் தேடிக் கொண்டு வருகிறாள். அச்சந்தர்ப்பத்தில் மேடையில் நுழையும்போது 'ஹைறமௌலா குத்ரதே என்னும் பிறமொழிப் பாடலைப் பாடிக் கொண்டு வருவதை நான் கேட்டிருக்கிறேன். இப்பிற மொழிப் பாடலை ஏன் பாடவேண்டும்? இப்பாட்டின் பொருள் யாருக்கேனும் தெரியுமா? இதைவிட ஆபாசம் என்ன இருக்கிறது? இத்தகைய ஆபாசங்கள் நாடகமேடையில் மட்டுமல்ல; பேசும் படக்காட்சி களிலும் தற்காலம் இருக்கின்றன. தமிழிசையானது வளர்ந்தோங்க வேண்டும் என்றால் தமிழ் நாடகங்களிலும் திரைப்படங்களிலும் தமிழ்ப் பாடல்களைத் தவிர பிறமொழிப் பாடல்களுக்கு இடங் கொடுக்கவே கூடாது என்பது எனது உறுதியான அபிப்ராயமாகும். இன்னொரு விஷயத்தைப் பற்றி என் அபிப்ராயத்தை இம்மாநாட்டிற்குத் தெரிவிக்க வேண்டியதே தமிழனாகப் பிறந்த என் கடமையாகும்.

சென்னை சர்வகலாசாலை சங்கீதப் பரீட்சையின் விவரங் களைக் குறிக்கும் போது, ஒவ்வொருமாணவனும் தெலுங்கு படிக்கத் தெரியவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன்.

அதன் அர்த்தம் எனக்குத் தெரியவில்லை. தெலுங்குப் பாட்டுகள் பாடும்போது அவற்றின் அர்த்தத்தை அறியும் பொருட்டு ஒவ்வொரு மாணவனும் தெலுங்கு தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என்றிருந்தால் அதன்படியே தமிழ்ப்பாடல்களைப் பாடும்பொழுது அவற்றின் அர்த்தத்தை அறிந்து பாடவேண்டியது அவசியம் அல்லவா? அதற்காக மற்ற பாஷை பேசும் மாணவர்கள் தமிழைப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டுமென்று குறிப்பிட வேண்டாமா? இவ்விஷயம் இம்மாநாடு ஆராயவேண்டியதாகும்." இவ்வாறு பலவற்றை அவைமுன் வைத்து ஆய்வுத் தடம் காட்டினார். திறப்புரை ஆற்றிய அண்ணாமலை அரசர், தமிழிசை இயக்க வளர்ச்சி பற்றியும் மக்கள் ஆர்வப் பெருக்குப் பற்றியும் உண்டாகிய பூரிப்புடன் விளங்கினார். தாம் நட்ட பழமரம் நடுவூர்ப் பழமரமாய் நாடளாவிய பயன்தரக் காண்பது எல்லார்க்கும் எளிதில் வாய்ப்பதா?

அவர் தம் உரையில், "தமிழிசை புதிதன்று; தமிழிசை இயக்கம் படையெடுப்புமன்று; அபசாரமும் ஆகாது.

தமிழர் இசைச் செல்வமே இந்திய சங்கீதத்திற்குத் தாயூற்றாக இருந்ததென்று தக்க புலவர் ஆய்ந்து சொல்கின்றனர்.

பிறமொழிப் பாடல்களில் மோகங்கொண்ட சிலர் தடைச் சுவர் எழுப்பினார்கள். இயற்கைக்கு விரோதமான இத்தடை எத்தனை நாள் நிற்கமுடியும்?

தாயிடமிருந்து மக்களை எத்தனை நாள் பிரித்து வைக்க முடியும்? தமிழர் உணர்ச்சி பெற்றெழுந்தனர். தாங்கள் இழந்த செல்வத்தை மீட்டனர். காலச் சுழலில் மறைந்து போன கலைக் கோயிலைக் கண்டுபிடித்தனர்.

தமிழ் மொழிக்கு நலம் தரும் இந்த இயக்கத்திற்கும் எதிர்ப்பும் இடர்களும் முளைத்தன. ஆனால், தமிழிசை வேகத்தில் அந்த இடர்கள் தகர்ந்து போயின. எனினும் இன்னும் விதண்டா வாதங்களும் பிடிவாதங்களும் சிற்சில இடங்களில் காண்கின்றன. தமிழிசை எதிர்ப்பாளர் விநோதமான குறுக்கு வாதங்களைக் கிளப்பிக் கூச்சலிட்டனர். பத்தி பத்தியாகப் பத்திரிகைகளை நிரப்பினர்.

குறுக்குவாதங்கள் இப்போது மறைந்து வருகின்றன. சிலரிடம் உள்ள பிடிவாதம் 'தமிழிசை இயக்கம் ஒரு ஜாதி இயக்கம்' 'அரசியல்

சதுரங்கம்' என்னும் வாதங்களைக் கிளப்பியது. **தமிழிசை இயக்கம் தூயகலை இயக்கமே. அதில் அரசியல் கலப்பே இல்லை. ஜாதிப் பித்தமும் இல்லை.**

'சங்கீதத்தை அதன் உயர்ந்த பதவியில் இருந்து கீழே இறக்கி அரசியல் வாதங்களுக்கோ வேறு எவ்விதமான கட்சிகளுக்கோ பயன்படுத்தினால் அது கேவலம் பிரசாரத்தன்மையுள்ளது; குறுகியதும் சாரமற்றதும் கபடமானதுமான காரியமாகும்' என்று நேற்று மியூசிக் அகாடமியில் ஸர்.எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் சொன்னார்கள். இது மிகவும் நியாயமானதேயாம். தமிழிசைச் சங்கத்தார் சம்பந்தப்பட்ட மட்டில் இவ்வித எண்ணங்கள் அவர் களுக்குக் கொஞ்சமேனும் கிடையாது. யாராயிருந்தாலும் சரி. அரசியல் துறையிலுள்ள ஒரு கட்சியார் மற்றொரு கட்சியாரைக் கண்டிக்க, சங்கீதத்தை ஒரு கருவியாக உபயோகிப்பார்களேயானால் அவர்களுக்கு ஸர். இராதாகிருஷ்ணன் அவர்கள் பிரயோகித்த பதங்கள் முற்றிலும் பொருந்தும்.

மற்றோர் இடர் சில பத்திரிகைகளால் வந்தது. அவை தமிழிசை எதிர்ப்பாளருக்கே இடமளித்தன. தமிழிசையாளர் பேச்சை ஆதரிப்பது இல்லை. வெளியிடுவதில்லை. வெளியிட்டாலும் இங்கும் அங்கும் விலக்கி, செய்திகளைத் தங்கள் இஷ்டப்படி வெளியிடு கின்றன. இது நியாயமன்று. இது போன்ற காரியங்கள் விசனிக்கத் தக்கவை. பத்திரிகைகள் எல்லாவற்றையும் சமமாகக் கருத வேண்டு மென வேண்டுகிறேன். மற்றொருபுறம் சங்கீதம் அரண்மனையில் இருந்து பொதுமக்கள் ஆதிக்கத்திற்கு வந்து விட்டது என்ற பேச்சைக் கேட்கிறோம்.

இசை எவர்மிராசும் அன்று. தமிழிசை தமிழரின் பொதுச் செல்வம். அதைப் பயிலவும் பாடவும் வல்லவருக்கெல்லாம் அது பொதுவாகும்.

இசைக் கலையால் நமது நாடுமுழுவதும் ஒன்றுபட இடமுண்டு. தமிழர் அனைவரும் கலைக்கோயிலில் அன்பு மயமாக விளங்கும் நாளே தமிழர் நன்னாள். அந்நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க் கிறேன். தமிழிசைச் சங்கத்தின் நோக்கம் இன்னது என்பதைத் தெளிவாகச் சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் நடக்கும் இசையரங்குகளில் தமிழ்ப் பாடல்களே முதன்மை பெறவேண்டும். கச்சேரியின் ஆரம்பமும் மங்களமும்

தமிழ்ப் பாட்டுகளாக இருக்க வேண்டும். கச்சேரியில் பெரும்பகுதி தமிழ்ப் பாடலாக இருக்கவேண்டும். இடைஇடையே இதரமொழிப் பாடல்களையும் பாடலாம். அதற்குத் தடையில்லை. பிறமொழிப் பாடல்களை நாம் வெறுக்கவில்லை. தமிழ் நாட்டில் நடக்கும் கச்சேரியைக் கேட்கும் தமிழருள்ளம் 'இன்று தமிழிசை யரங்கு நடந்தது; நம் உள்ளம் தமிழிசையால் பூரித்தது' என்று உணர வேண்டும். தமிழ் நாட்டில் நடக்கும் பாட்டுக்கச்சேரிகள், தமிழருக்கு இன்பமளிக்க வேண்டும். இதுதான் நமது நோக்கம்" என்றார்.

விழாத் தலைமை ஏற்ற டி.கே.சி. தமிழிசை கோயில்களில் வளர்ந்த வகையை விரிவாக எடுத்துரைத்தார். தமிழிசை எதிர்ப்புப் பற்றிய சில செய்திகளையும் குறிப்பிட்டார். அவர் பொழிவில் சிலகுறிப்புகள்:

தமிழ் நாட்டில் உள்ள பண்களின் தெளிவையும் வேறுபாடு களையும் கண்டு அதிசயிக்காதவர் கிடையாது. வட இந்தியாவில் இருந்து வந்த பூர்வ மக்களும் அதிசயித்தவர்களாய்த் தங்கள் நாட்டிற்கே அவற்றைக் கொண்டு போயிருக்கிறார்கள். பெயர்களை எப்படியோ கொடுத்துக் கொண்டார்கள்.

சபை என்றால் பாடுகிறவர் வேறு, கேட்பவர் வேறு என்று அமைந்திருந்தால் அதைச் சபை என்று சொல்லலாமா? பாடகரும் கேட்பவரும் ஒரே இதயப்பாங்கு படைத்தவர்களாக ஒரே உணர்ச்சியில் மிதக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான சபை ஏற்படுகிறது.

தமிழோடாவது உணர்ச்சியோடாவது பாடினால் 'மட்டரகம்' என்று பேசும் நிலைக்கே வந்து விட்டது. இந்த விதமாக ஒருவர் சொல்லி, பத்துப்பேர் சொல்லி, நூறுபேர் ஆயிரம்பேர் என்றெல் லாம் சொல்லி வந்ததால் நம்முடைய சங்கீதத்திற்கு விமோசனமே கிடையாதோ என்று கையை நெரிக்கும்படியான நிலைமை வந்துவிட்டது.

இந் நிலையில் சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு நம்முடைய சங்கீதத்தில் ஆர்வங்கொண்ட சிலர், தமிழில் பாடுவது என்று ஏற்றபட்டாலொழியப் புராதனமான பண்பாடு கொண்ட சங்கீதம் உயிரற்று வறண்டு போய்விடும் என்பதாகக் கருதி நமது கச்சேரிகளில் தமிழ்ப்பாட்டுப் பாடவேண்டு மென்று சொல்ல ஆரம்பித்தார்கள். இதனால், தமிழிசை உணர்ச்சி ஓரளவு பரவி

வந்தது. ஆனாலும், பிரமாத வெற்றியடைந்ததாகச் சொல்வதற்கு இல்லை.

தமிழிசை இயக்கம் இப்படி நின்ற நிலையில் தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் ஓர் அரிய சம்பவம் நேர்ந்தது. அண்ணாமலை அரசர் நன்கொடை ஒரு புதிய யுகத்தையே ஆரம்பித்துவிட்டது. அன்றுமுதல் நாடெங்கும் தமிழிசை யுணர்ச்சி நாளுக்கு நாள் அதிகமாகிப் பரவி வந்திருக்கிறது. எங்கே பார்த்தாலும் தமிழ்ப்பாட்டே வேண்டும் என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்" என்று கூறினார்.

மாநாட்டுக்கு வந்த வாழ்த்துச் செய்திகளில் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் ஐ. குமாரசாமிப்பிள்ளை, "எம் கரந்தைத் தமிழ்ச்சங்கச் சார்பில் தஞ்சை மாவட்ட இசைத்தமிழ்க் கழகம் ஒன்றை நிறுவி ஒழுங்குறச் செயல் நிகழ்த்தி அரசரவர்களுக்கு ஆதரவு தருவதென முடிவு செய்துள்ளோம்" என்றார்.

"தமிழிசைக்கு இன்றுடன் 700 இசைப்பாடல்கள் இயற்றி முடிந்தன என்பதை மாநாட்டுக்கு அறிவிக்கிறேன்" என யோகி சுத்தானந்த பாரதியார் எழுதினார். "தமிழிலேயே பேச வேண்டும் என்ற இயக்கம் வெற்றி பெற்றுள்ளது. இதனால், ஆங்கிலத்தை யாரேனும் வெறுக்கின்றனரா? தமிழிலேயே பாடவேண்டும் என்றால் பிறமொழிப் பாடல்களை வெறுப்பது, அழிப்பது என்று எவ்வாறு கூறமுடியும்?" என்று தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் வரைந்தார்.

"ஒரே முடிவைத் தமிழ் மக்கள் என்று உண்மையாய்த் தம்மைச் சொல்லிக் கொள்பவர்கள் கைக் கொண்டால் சாலும். இனிய நந் தமிழ்மொழிப் பாட்டை யன்றி – தமிழிசையை யன்றிப் பிற எம்மொழிப் பாட்டையும் கேளோம்; பாடோம் பயிலோம்; என்னும் உறுதியே அம்முடிவு" என்றார் கு.மு. அண்ணல் தங்கோ.

"தமிழர்கள் தமிழ்ச் சாகித்தியத்தைத்தான் பொருள் தெரிந்து இதயபூர்வமாக அநுபவிக்க முடியும் என்பதில் இரண்டு பட்ட அபிப்ராயம் இருக்கமுடியாது" என்றார் அ. சீனிவாசராகவன்.

பிடில் சீநிவாசய்யர், "தமிழிசைதான் தென்னிந்தியாவின் இசை. அது சூரியனைப் போன்றது. அதை மறைக்க எந்த மேகங் களாலும் இயலாது. தமிழிசையின் இயற்கைப் பிரகாசத்தையும் தனிச் சிறப்பையும் பண்டிதர்களை விடப் பாமரர்களே நன்றாய் உணர்ந்து அநுபவிக்கின்றனர். தமிழ் இசையின் விடியற்காலம்

வருகின்றது. சூரியன் உதயமாகப் போகின்றான். தமிழிசையின் பிரகாசம் தமிழ்ப்பாஷையின் மூலமே பூரணமாய் வெளிப்பட வேண்டும்.

மற்ற இசைகளுக்கும் மற்ற பாஷைகளுக்கும் இடங்கொடுக்கும் பாவம் தமிழிசைக்கு உண்டு. அதனாலேயே தமிழிசை கேடுற்றது. **பயிரைக் கெடுக்க வந்த களைகளைப் பிடுங்கி எறிய வேண்டுமா? அவற்றோடு உறவு கொண்டாட வேண்டுமா?"** என்றார்.

தமிழிசைச் சங்க 'கௌரவ காரியதரிசி டி.எஸ். கச்சாபிகேச முதலியார் வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்.

அடுத்து உரையாற்றியவர் ஆர்.கே. சண்முகம் செட்டியார். அவர் அமெரிக்கா சென்றிருந்த போது அவரோடும் இருந்த அமெரிக்க நண்பர் ஒருவர் தமிழ் நாட்டுச் செய்திகளைப். படித்துப் பார்த்துவிட்டுப் பேசிய உரையாடலைக் குறிப்பிட்டார்.

"என்ன உங்கள் ஊரில் ஒரு புதிய சண்டை ஆரம்பித்திருக்கிறது போல் இருக்கிறதே என்று சொன்னார்.

என்ன விசேஷம் என்று கேட்டபோது, தமிழிசை விஷயமாகச் சச்சரவுகள் நடந்து கொண்டிருப்பதைப் பற்றியும் கூட்டங்கள் நடந்து கொண்டிருப்பதைப் பற்றியும் அச்செய்தித்தாளில் இருந்த செய்தியைக் காட்டினார்.

"வாஸ்தவம் தான்; ஒரு கலவரம் ஏற்பட்டிருக்கிறது" என்று சொன்னேன். ஏன்? இந்தவிதமாகக் கலவரம் வரக்காரணம் என்ன? என்று கேட்டார்.

நான் சொன்னேன்: இப்பொழுது தமிழில்தான் பாட்டுக்கள் பாடவேண்டும் என்று கேட்கிறோம். அதற்குச் சில கூட்டத்தாரும் பாகவதர்களும் ஆட்சேபணை செய்கிறார்கள். அதனால்தான் இந்தக் கலவரம் ஏற்பட்டது என்று சொன்னேன்.

உடனே அந்த மனிதர் "இப்படி ஏன் தமிழில் பாடவேண்டும் என்று கேட்க வேண்டும்" என்றார். எனக்குத் தூக்கிவாரிப்போட்ட மாதிரி ஆகிவிட்டது. என்னடா இந்த மனிதர் ஆந்திர தேசத்தில் இருந்து வந்தவரா என்று சந்தேகம் உண்டாகிவிட்டது! (கைதட்டல்). 'ஏன்? தமிழில் தானே நான் பாடவேண்டும் என்று கேட்கிறேன். அதில் என்னதப்பிதம்?' என்றேன்.

'ஏன்? உங்கள் தாய்பாஷையில் சங்கீதம் இல்லையா? தமிழில் பாட வேண்டும் என்று கேட்கிறீர்கள் என்று கேட்டார் (கைதட்டல்). அப்பொழுது எனக்கு அர்த்தமாகிவிட்டது. அதாவது நம் தாய்பாஷையில் இப்பொழுது சங்கீதம் நடக்கிறது என்றும், அது அல்லாமல் வேறொரு பாஷையில் நாம் இப்பொழுது கேட்கிறோம் என்றும் அவர் அர்த்தம் செய்து கொண்டு கேட்டார்.

அதற்கு, 'இல்லை; எங்கள் தாய்பாஷை தமிழ்தான். தமிழ்நாட்டில் தமிழில் பாடவேண்டும் என்று கேட்கிறோம்' என்று சொன்னேன். 'அப்படியா சமாச்சாரம்' இந்தியாவைப் பற்றி மேல் நாட்டினருக்கு – இங்கிலீஷ்காரர்கள் அமெரிக்கா தேசத்தார்கள் இவர்களுக்கு சமாசாரங்களைப் படிக்கப் படிக்க சந்தேகம் ஏற்படும் என்பது தெரிகிறது. உங்கள் விஷயங்களை அர்த்தம் செய்து கொள்ளவே முடியவில்லை. 'ஒரு தேசத்தில் சங்கீதம் எப்படி இருக்க வேண்டும் என்கிற நிலைமையில் மக்கள் இப்படி இருக்க வேண்டுமானால், அவர்கள் தேசத்தின் நிலைமை என்ன என்பது விசித்திரமாகத்தான் இருக்கிறது' என்றார்.

இம்மாதிரி நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது சைனா தேசத்து எழுத்தாளர் ஒருவரும் இருந்தார். நீங்கள் அவர் பெயரைக் கூட அறிந்திருக்கலாம். லிங்யுடாங் என்பது அவர்பெயர். அவர் ஒரு பெரிய ஞானி. பெரிய எழுத்தாளர். உடனே இது விஷயமாக ஒரு தர்க்கம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் சொன்னார் 'இரண்டு முக்கியமான விஷயங்கள் மனிதன் வாழ்க்கைக்கு வேண்டியன. இந்த இரண்டு விஷயங்களிலும் எந்த ஊரைச் சுற்றினாலும் நாடோடித்தனம் செய்தாலும் கூட, அவனவன் தேசத்தின் விஷயங்கள்தான் அவனுக்கு ருசியைக் கொடுக்கும்' என்றார்.

அவை என்னவென்றால் ஒன்று சாப்பாடு; மற்றொன்று சங்கீதம். நான் சைனாவில் இருந்து வந்து அதிக நாளாயிற்று. அமெரிக்கா தேசத்துச் சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சாப்பிட்டுப் பழகிப்போய் விட்டது வாஸ்தவம்தான். இருந்தாலும் சைனா தேசத்துச் சாப்பாட்டை எவனாவது ஒரு புண்ணியவான் ஒருநாள் போட்டால் அன்றுதான் எனக்கு ஆத்ம திருப்தி ஏற்படுகிறது என்றார் அந்த சைனா தேச நண்பர். அதே மாதிரிதான் சங்கீதமும்.

ஏதோ ஒரு நாள் நான் கன்னிமாரா ஹோட்டலில் 'டின்னர்' சாப்பிடுகிற மாதிரி வேறுபாஷையில் இரண்டு பாட்டுகள் ஏதோ ஒரு

சமயம் கேட்டால் நன்றாய்த்தான் இருக்கும். எப்பொழுதும் வேறுபாஷையில் கேட்டுக் கொண்டேயிருந்தால் அதனால் ஆத்ம திருப்தி உண்டாகாது. இது எனக்கு மிகவும் உண்மையாகப்பட்டது. இந்தத் தத்துவம் கொஞ்சம் தெரிந்தால் தமிழ்நாட்டிலே தமிழ் இசை இயக்கம் என்பது ஏன் வந்தது என்கிற கேள்வி கேட்க இடமே இருந்திராது.

நானும் இந்தத் தமிழிசை இயக்கம் ஆரம்பித்தது முதல் யோசித்துப் பார்த்தேன். உலகத்தில் எந்தத் தேசத்தை நாம் உதாரணமாக எடுத்துக் கொண்டாலும், இந்தத் தமிழ் நாட்டைத் தவிர மற்ற எந்த நாட்டிலாவது சங்கீதம் அந்தத் தேசத்தின் தாய் பாஷையில்லாமல் வேறு பாஷையில் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்தால் கிடையவே கிடையாது. இந்த விசித்திரம் தமிழ் நாட்டில்தான் இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் இந்தியாவில் மற்ற மாகாணத்திலாவது, மற்ற தேசங்கள் எதிலாவது இந்த மாதிரி ஆபத்து தாய்மொழிக்கு வந்தது கிடையாது.

தாய்மொழியின் நிலைமை எப்படி இருக்கிறதென்று கேளுங்கள். வயிற்றுப் பிழைப்புக்கு அதாவது உத்தியோகம் பார்க்க வேண்டுமானால் இங்கிலீஷ் படிக்கவேண்டும். கலியாணம் கருமாந்திரம் முதலியவை செய்வதானால் சமஸ்கிருதத்தில் செய்ய வேண்டும் (கைதட்டல்). தேசாபிமானி என்கிற பெயரெடுக்க வேண்டுமானால் ஹிந்தி படிக்க வேண்டும் (கைதட்டல்). சங்கீதம் பாடத் தெலுங்கு படிக்கவேண்டும். சாதாரணமாகப் பேசும்போது நேற்று உங்களை 'மீட்' பண்ணும் போது ஒரு 'மேட்டர்' சொல்லுவதற்கு 'கம்ப்ளீட்டாய்' மறந்து போய்விட்டேன் 'சார்' என்று இந்தமாதிரி மணிப்பிரவாளமாகப் பேசவேண்டும். இப்படியிருந்தால் தமிழுக்கு நாம் கொடுத்திருக்கும் ஸ்தானம் தெரியவரும்.'

இங்குப் பேசியவர்கள் தமிழில் பெரிய கீர்த்தனங்கள் இருக்கின்றன இசை இருக்கிறது என்று சொன்னார்கள்.

இருக்கிறதோ இல்லையோ அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அதைப்பற்றிக் கவலையும் இல்லை. தமிழில் என்ன இசை இருக்கிறதோ அந்த இசை எனக்குப் போதும்.

என்னுடைய தமிழில் ஒரு பாட்டைக் கேட்கும்போது என்ன ஆத்மதிருப்தி உண்டாகிறதோ அந்தத் திருப்தி எனக்கு வேறு எந்த பாஷையில் பாட்டுக் கேட்டாலும் உண்டாகாது. ஆகையினால்,

தமிழிசை 2000 வருஷத்திற்கு முன்பிருந்தே இருக்கிறதோ இல்லையோ, விசேஷமோ என்னவோ தமிழனாகப் பிறந்த எனக்குத் தமிழிசைதான் வேண்டியிருக்கிறது. அதைப்பற்றி நான் யாரிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. கேட்பதாய் உத்தேசமும் இல்லை.

சாதாரணமாய் மனிதர்களுக்கு இயற்கையாக உண்டாகும் உணர்ச்சியின் காரணமாகத் தமிழிசை இயக்கம் உண்டாயிற்று. அது உண்டானவுடனே பெரியகலாட்டா – எதிர்ப்பு – புதிது புதிதான வியாக்கியானம் எல்லாம் எழுந்தன.

'சங்கீதத்திற்குச் சாகித்தியம் போதும்; பாஷை வேண்டாம்; தமிழிசை இயக்கம் அரசியல் சூழ்ச்சி' இந்த மாதிரி எல்லாம் கேள்விப்படுகிறோம். அரசியலில் சூழ்ச்சி என்னவோ இருக்கிறது. ஆனால், அது தமிழிசை இயக்கத்தில் இருக்கிறதா? அல்லது, அதை எதிர்ப்பவர்களிடத்தில் இருக்கிறதா? என்றுதான் தெரியவேண்டும்.

தமிழிசை அரசியல் சூழ்ச்சி என்று சொல்லுகிறார்கள். நம் இராஜா அவர்கள் எங்களிடத்தில் அரசியல் சூழ்ச்சி இல்லையென்று சொன்னார். இன்னும் 50 தரம் சொன்னாலும் அதை ஒருவரும் கேட்கப் போவது இல்லை. ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். நமக்கும் தெரியாமலேயே சூழ்ச்சி செய்து விட்டோமா என்று ஒரு சந்தேகம்! ஆனால், இன்று இங்கு வந்து இந்தச் சபையைப் பார்த்தபோது பரவாயில்லை, நம் சூழ்ச்சி நல்ல சூழ்ச்சிதான் என்று தோன்றியது. ஏனென்றால், நாங்கள் இந்தச் சங்கீதத்தின் மூலமாக ஓர் அரசியல் சூழ்ச்சியைத் தெரிந்தோ தெரியாமலோ கைக்கொண்டதன் காரணமாக ஒரே மேடையில் திரு. இராஜகோபாலாச்சாரியாரும் நானும் உட்கார நேர்ந்தது! இந்த விதமான அரசியல் சூழ்ச்சி இன்னும் அதிகமாக வந்தால் நம் நாட்டுக்கு நல்லதென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்" என்றார். பலத்த கைதட்டல் எழுந்தது. பின்னர் டைகர் எஸ். வரதாச்சாரியார் பேச்சை, வித்துவான் அன்பு கணபதி படித்தார். அதன்பின். சி. இராசகோபாலாச்சாரியார் பேசினார்:

"வந்து கேட்கிறவர்கள் எதற்காக வருகிறார்கள்? ஏதாவது கடமையைச் செலுத்த வரவில்லை. சந்தோஷத்திற்காக வருகிறார்கள். அல்லது பலனை பெற வருகிறார்கள். அதை நாம் கவனிக்க வேண்டும். அதை நாம் கவனித்தால் இந்த இசை

இயக்கத்தைப் பற்றி இருக்கிற அபிப்ராய பேதங்கள் அநேகமாகப் போகுமென்று நான் நினைக்கிறேன்.

இந்த இசை இயக்கத்தைப் பற்றி வித்தியாச அபிப்ராயம் இருப்பதற்குக் காரணம், தாங்கள் முன்னாலேயே மனத்தில் வைத்துள்ள அபிப்ராயத்தை அப்படியே பத்திரமாக வைத்துக் கொண்டு ஆக்ஷேபிப்பதாக நான் எண்ணுகிறேன்.

மொழியைப் பற்றிக் கவனமே வேண்டுமா? வேண்டாமா? என்கிற வாதம் பிரமாதமாக இந்த இசை இயக்கத்தில் அடிபடுகிறது. மொழி பற்றி வித்தியாசம் ஏற்பட்டபடியால் மொழியே வேண்டாம் என்கிற வாதம் போட்டால் நம் கக்ஷிபலமாய்ப் போய்விடுகிறது என்கிற உத்தேசத்தின் மேல் சங்கீதத்திற்கு மொழியே வேண்டாம் என்று சிலர் சொல்கிறார்கள்.

தியாகையர் தமிழில் பாடுவதற்குப் பதில் தெலுங்கில் பாடினார். அது ஒன்றே போதும் இந்த இக்கத்திற்கு ஆதரவு. தமிழ்நாட்டிலேயே பிறந்து தமிழ் நாட்டிலேயே வளர்ந்து தமிழ்த்தேசத்திலேயே புகழ் பெற்றவர். தெலுங்க ரில்லை அவர். வடக்கில் இருந்து வந்தவ ரில்லை. அவர் இந்தத் தேசத்தில் பாட்டுச் செய்தார். மொழியும் சங்கீதமும் கூட சேர்ந்து வந்தன அவர் ஹிருதயத்திலிருந்து. வேறு ருசிக்குப் பாடியதில்லை. கடவுளுக்குப் பாடியது. அந்தக் கடவுளுக்கு எல்லாப் பாஷையும் தெரியும். அவரை யாரும் வற்புறுத்தவில்லை. இதில் பாடு அதில் பாடு என்று சொல்லவில்லை. ஏன் தெலுங்கில் பாடினார்? தெலுங்கு நல்லதென்று அதில் அவர் பாடவில்லை. தெலுங்கு தாய் பாஷையானதால் அவர் அதில் பாடினார். நாமும் நம் தாய்பாஷையில் பாடினால்தான் நம் ஆத்மாவுக்கும் திருப்தி கிடைக்கும்; கடவுளுக்கும் காது கேட்கும் (கைதட்டல்).

காதல் கடிதம் எழுத வேண்டும் என்றால் நான் நல்ல இங்கிலீஷ் தெரிந்த ஓர் ஆளிடம் போய் நீ இங்கிலீஷ் லவ் – லெட்டர் ஒன்று எழுதிக் கொடு. நான் என் காதலிக்கு அனுப்பவேண்டும். என்னால் எழுத முடியாது. நீ எழுதித்தா. அதை நான் அனுப்பிக் காதலை வளர்த்து ஜயிக்க வேண்டும் என்றால் அது முடியாது. இங்கிலீஷ் லவ்–லெட்டர் வாங்கி நான் அனுப்பினால் எவ்வளவு சிரிப்பாய் இருக்கும்.

இராமனுக்கு அல்லது கிருஷ்ணனுக்கு நான் லவ் – லெட்டர் அனுப்ப வேண்டுமானால், என் தாய் பாஷையில் எனக்குத்

தோன்றிய முறையில் எழுதி என் அன்புக்குத் தோன்றியபடி நான்பாட வேண்டுமே தவிர இதற்காக மிக நல்ல சங்கீதம் என்று எடுத்து அதை நான் பாடினால் என்ன உணர்ச்சி எனக்கு உண்டாகும்? எனக்கு உண்டாகாவிட்டால் கடவுளுக்கு உண்டாகாது நிச்சயம்; இதுதான் இந்த இயக்கத்தின் தத்துவம் (கைதட்டல்).

அடுத்துப் பேசிய சொ. முருகப்பா, "தமிழை வங்காள தேசத்தில் போய்ப்பாடு என்று சொன்னோமா? குஜராத்தில் போய்ப்பாடு என்று சொன்னோமா? தெலுங்கு நாட்டில் போய்ப்பாடச் சொல்கிறோமா? எங்கள் தமிழ் நாட்டில் தமிழ் மக்களிடத்தில் தமிழ்ப் பாட்டைப் பாடு என்று சொல்கிறோம். வங்காளத்தில் இருந்து வருபவரைத் தமிழில் பாடச்சொல்லவுமில்லை. எவ்வளவு சுற்றிச் சுற்றி வந்தாலும் விஷயம் 'தமிழ் வேண்டும்' அவ்வளவுதான்" என்றார்.

கலைவாணர் தமிழிசையை வரவேற்று ஒரு கதையும் பாட்டும் கூறி, "இந்தப் பாட்டைக் கேட்டு நீங்கள் எவ்வளவு சந்தோஷம் அடைந்தீர்கள். பாடிய நானும் எவ்வளவு சந்தோஷமடைந்தேன். அதற்குக் காரணம் என்ன? நான் சொன்ன ஒவ்வோர் எழுத்தும் உங்களுக்குத் தெரிந்ததனாலேதான் (கைதட்டல்). தமிழ்ப்பாட்டு சங்கீதக் கச்சேரிகளில் அவசியம் வேண்டும் என்பதற்கு இது ஓர் அத்தாட்சி" என்றார்.

அடுத்துப் பேசிய கல்கி, "இதே மண்டபத்தில் மூன்று மாதத்திற்கு முன் ஒரு கூட்டம் நடந்தது. அப்பொழுது என் சகபாடியான ஒரு பெரிய பத்திராதிபர் தமிழில் பாடி சங்கீதத்தின் தரத்தைக் குறைத்து விடாதீர்கள் என்று சொன்னார். இதே இடத்தில் ஒரு கச்சேரியில் ஒரு பாகவதர் தெலுங்கில் மளமளவென்று பாடிக்கொண்டே வந்தார். ஆயிற்று. தமிழ்ப்பாட்டைப் பாடினார். பாடியவுடன் கைத்தட்டல் செய்து ஆரவாரித்தார்கள் ஜனங்கள். நானே இங்கேயே பார்த்தேன். அதாவது 'ஆடும் தெய்வம்' என்னும் தமிழ்ப்பாட்டுக்கும், 'இனிஒரு கணம்' என்னும் தமிழ்ப்பாட்டுக்கும்தான் கைதட்டல் கிடைத்தது. ஆகையினால் நான் நிச்சயமாகத் தெரிந்து கொண்டேன்" என்றார். நிறைவில் பேசிய அண்ணா, "மனித சமுதாயத்தில் ஆரம்பிக்கும் எந்த முயற்சிக்கும் ஓரளவு எதிர்ப்பு இல்லாவிட்டால் அப்படிப்பட்ட முயற்சிக்கு – சங்கீதத்திற்குச் சொல்லுவது போல் – மேளம் கட்டுவதில்லை. எதிர்ப்பு இருப்பது ஒரு விதத்தில் நம் காரியங்

களைச் செவ்வனே நடத்தி நமது கொள்கைகளை எடுத்துச் சொல்ல நல்ல சந்தர்ப்பம் அளிக்கும்.

நம் தலைவர் சர்.ஆர்கே. சண்முகம் செட்டியாரவர்கள் எடுத்துச் சொன்னார்கள், 'தமிழில் இசை இருக்கிறதோ இல்லையோ; அது மற்ற இசைகளுக்கு மேற்பட்டதோ இல்லையோ — கவலை இல்லை. என் தமிழில் எனக்கு இசை தேவை என்று தமிழர் இதயத்தில் இருந்து கிளம்பும் இந்த வாசகம் நிச்சயமாக சீக்கிரத்திலேயே கைகூடும் என்று நம்புகிறேன் (கைதட்டல்).

இந்த இசை என்ற தமிழ்ச்சொல் உண்மையிலேயே இன்றைய தினம் போல் தலைவர்கள் வேறுகாரியங்களில் இசையாவிட்டாலும் இந்தக் காரியத்திலாவது இசையும் வழியில் ஏற்பட்டதற்குச் சந்தோஷப்படுகிறேன். தமிழிசை இயக்கம் தமிழருக்கு மிக்க பயன்பட வேண்டும் என்பதை எடுத்துச் சொல்வதுடன் நானும் என்னைச் சேர்ந்தவர்களும் வேறு விஷயங்களில் அரசியல் விவகாரங்களில் வித்தியாசமிருந்தாலும் இந்த இசை விஷயத்தில் தமிழிசை விஷயத்தில் மற்ற தலைவர்களுடன் ஒத்துழைக்கச் சித்தமாய் இருக்கிறோம் என்பதை எடுத்துரைத்து முடித்துக் கொள்ளுகிறேன்" என்றார்.

முதல் நாள் நிகழ்ச்சி நிறைவின்பின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் நன்றி கூறினார்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. அ. சென்னை ரேடியோ நிலையத்தில் 100–க்கு 40 விகிதம் தமிழ்ப் பாட்டும், 40 விகிதம் தெலுங்குப் பாட்டும் 20 விகிதம் இதரமொழிப் பாட்டும் பாட ஏற்பாடு செய்யவேண்டும் என்று ரேடியோ அதிகாரிகளை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

ஆ. தமிழ் நட்டில் தமிழ் மக்களுக்கென ஏற்படுத்தப் பெற்றிருக்கும் திருச்சி ரேடியோ நிலையத்தில் பாட எல்லா வகுப்பினர்க்கும் சமமான பங்கு கொடுக்க வேண்டும் என்றும் பாடல்களில் 100–க்கு 80 விகிதம் தமிழ்பாட்டுகளையும் 20 விகிதம் இதர மொழிப்பாட்டுகளையும் பாடும்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் ரேடியோ அதிகாரிகளை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

2. அ. தமிழ் நாட்டிலுள்ள இசைப் புலவர்கள் அனைவரும் கச்சேரிகளில் பெரும்பாலும் தமிழ்ப்பாட்டுகளே பாடவேண்டும். அதனோடு ஆரம்பத்திலும் கடைசியிலும் அவசியம் தமிழ்ப்பாட்டு களையே பாடவேண்டும் என இசைவாணர்களை இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

ஆ. தமிழ் இசை இயக்கத்தை ஆதரிக்கும் இசைவாணர்களை மிகுதியும் போற்றி ஆதரிக்க வேண்டுமென்று தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

3. தமிழ்நாட்டில் தமிழருக்காக நடைபெறுகிற கச்சேரிகளில் எல்லாம் பெரும்பாலும் தமிழ்ப்பாடல்களையே பாடச்செய்ய வேண்டுமென்று தமிழ்நாட்டிலுள்ள எல்லாச் சங்கீத சபைகளையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

4. சென்னைப் பல்கலைக்கழக இசை இலாகாவில் 100—க்கு 40 பங்கு தமிழுக்கும் 60 பங்கு இதர மொழிகளுக்கும் இடமளிக்க வேண்டும் என அப்பல்கலைக்கழகத்தினரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

24.12.43 முதல் 1.1.44 முடிய ஒன்பது நாள்கள் அதே மண்டபத்தில் தமிழிசை அரங்கு நிகழ்ந்தது. அவ்வரங்குகளில் இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் (24.12.43)

இசைவாணர் எம்.கே. தியாகராஜ பாகவதர் (25.12.43)

கானசரஸ்வதி டி.கே. பட்டம்மாள் (26.12.43)

நாதசுரச்சக்கரவர்த்தி டி.என். ராஜரெத்தினம் பிள்ளை

நாதசுர வித்துவ சிரோன்மணி பி.எஸ். வீருசாமிபிள்ளை

நாதசுரம் தவுல் அரசு என்.டி. மீனாட்சி சுந்தரம் பிள்ளை (27.12.43)

கானகலாதர மதுரை மணி அய்யர் (28.12.43)

கோகிலகான இசைவாணி எம்.எஸ். சுப்புலக்ஷிமி (29.12.43)

ஸ்ரீமதி என்.சி. வசந்த கோகிலம் (30.12.43)

கீவளூர் எஸ். மீனாட்சி சுந்தரம்பிள்ளை (31.12.43)

திருவாங்கூர் ஆஸ்தானவித்துவான் என். பாலசுப்பிரமணியம் (1.1.44)

என்பார் இசைத்தனர்.

மாநாட்டிற்குப் பின் தொடர்ந்து நடைபெற்ற இசையரங்குகளில் பாடிய பாடல்களில் சிலவற்றைச் சென்னை வானொலி அவ்வப் போது அஞ்சல் செய்தது.

24.12.43 தமிழிசை மாநாட்டு நிகழ்ச்சி பற்றி 'இந்து' இதழ் 'சங்கீதமும் பாஷையும்' என்னும் தலைப்பில் நச்சினைக் கக்கியது. அவற்றில் சில:

தமிழ் பாடவேண்டும் என்னும் இந்தக் கட்டாயத்தினால் எத்தனையோ வீண் வம்பும் சண்டை சச்சரவும் உண்டாக இடமேற்படுகிறது.

சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியாரைப் போல் அதி தீவிரப் போக்கை யாரும் பின்பற்றுவதற்குத் தயாராக இல்லை.

ஆர்.கே. சண்முகம் செட்டியாருக்கு இந்த விஷயங்கள் எல்லாம் புரியாமல் இருப்பதோடு மேலான சங்கீதம் இன்னது என்பதிலும் அவருக்குச் சிரத்தையே இல்லை போல் தெரிகிறது. மனத்தைத் திறந்து இப்படிச் சொல்வது ஒரு முறைதான். ஆனாலும், இந்தக் காட்டுமிராண்டித் தனத்தைக்கண்டு வருந்தாமல் இருக்க முடியவில்லை. மொழிப்பற்று காரணமாகத் தாய் மொழியிலுள்ள சுத்த அபத்தமான கோமாளித்தனமான பாட்டுகளைப் பாராட்டத் தோன்றலாம். தமிழ்ச் சங்கீதம் என்பது என்ன என்பதைப் பற்றி இந்தத் தலைவர்களுக்குள்ளேயே ஒரே தரமான அபிப்பிராயம் இருப்பதாகத் தெரியவில்லை.

தலைவர்,

"எப்போதோ ஒரு காலத்தில் வடக்கே இருந்து வந்த சிலர் தமிழிலும் இசையிலும் ஈடுபட்டு அப்படியே நம் சங்கீதத்தைத் தங்களோடு கொண்டு போய், பிறகு தங்களுக்கு உரியதாக்கித் தம்முடைய பண்களுக்குப் புதுப்புதுப் பெயர்களைக் கொடுத்து மறுபடி நம் தலையில் அவற்றைச் சுமத்த ஆரம்பித்து விட்டார்கள்" என்பதை நாமெல்லாம் நம்ப வேண்டும் என்று சொல்கிறார்.

தேவாரம் பாடிய மகான்கள் சங்கீத வித்வான்கள் அல்ல. சங்கீதத்துக்காகவோ அல்லது சங்கீதத்தை அனுபவிக்கட்டும் என்றோ தங்கள் பாடல்களைப் பாடவும் இல்லை.

இந்த இயக்க ரசிகசிகாமணிகள் சிலர் வாத்தியங்களின் மூலமாகக் கூட தமிழ்ப் பாடல்களையே வாசிக்க வேண்டும் என்று

வற்புறுத்தும் எல்லை வரை தங்கள் ஆர்வத்தைச் செலுத்தியிருக்கிறார்கள் என்பது இராஜகோபாலாச்சாரியார்க்குத் தெரியாமல் இருக்கலாம்.

மற்றொரு தவறான அபிப்ராயம் என்னவென்றால், இப்போதிருக்கும் சில சங்கீத வித்வான்கள் தமிழ் இசையை ஆதரிக்காத காரணம், அவர்களுக்குத் தெலுங்குப் பாட்டைத்தவிர வேறு தெரியாதென்பதும் இனிமேல் தமிழைக் கற்றுப் பாடுவதென்பது பற்றிய சிந்தனையே அவர்களுக்கு உதிக்காத சோம்பலும் தான் என்று சொல்வதாகும். ஒரு வார்த்தையில் சொல்லப்போனால், இது பெருத்த அபாண்டம். தமிழ்ப்பாட்டுகள் கச்சேரியின் முடிவிலே பாடப்பட்டு வந்தன என்ற குற்றம் சாட்டுகிறவர்கள், அந்தப் பாட்டுகளிலே சங்கீத வித்வான் தம் ஞானத்தைக் காட்ட ராக விஸ்தாரத்திற்கு இடமில்லை என்பதையும் அவை இனிமையாய் இருந்த போதிலும் அந்த முறையில் பாடுவதுதான் சரியானது என்பதையும் உணரத் தவறிவிடுகிறார்கள்.

மனோதர்மத்தையும் கற்பனையையும் செலுத்திச் சஞ்சாரம் செய்ய இயலும் பாடல்கள் தமிழைத் தவிர மற்ற பாஷைகளில் தான் இருக்கின்றன.

கலையின் சிகரத்தை அடைவதற்குக் குறுக்குப் பாதை ஒன்றும் கிடையாது. அதோடு மாகாணப் பித்திற்கும் இதில் இடமில்லை.

மாநாடு முடிந்த மறுநாள் – இசையரங்கு தொடங்கியது (24.12.43): அடுத்த நாள் காலையில் 'இந்து' வைத்த ஒப்பாரிகள் இவை (25.12.43):

இதற்கு லிபரேட்டர் இதழ் 'ஒரு வக்கிர விமர்சகரின் குறுக்குப் பாய்ச்சல்' என்னும் தலைப்பில் மறுப்பு எழுதியது.

அதன் சில பகுதிகள்:

ஒரு சமுதாயத்தை அழுத்துவதும், ஓர் உரிமைக் கூட்டமே முன்னேற்றமடைய முயற்சிகள் பல செய்வதும் இந்த ஹிந்துவின் நெடுநாளைய கொள்கை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஹிந்து இம்மாதிரியான தலையங்கம் எழுதியிருப்பது கண்டு நாம் சந்தோஷம் அடைகின்றோம். ஏனெனில் இம்மாதிரியான தலையங்கம் குருடனுக்குப் பார்வையையும் செவிடனுக்குச் சரியான

செவியையும் ஊமைக்கு நாவன்மையையும் கொடுப்பது போல் தூங்கிக் கொண்டு இருக்கும் பலரைத் தட்டி எழுப்பும்.

இந்தத் தமிழிசை இயக்கம் ஒரு பெரிய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஒரு சிறு நிலையேயாகும். தமிழர்களைத் தட்டி யெழுப்பும் இத்தமிழிசை இயக்கத்தை, உரிமை கொண்டாடும் கூட்டத்தினர் பகிஷ்கரிப்பது சகஜந்தானே! முன்னேற்ற வேகம் தங்களைப் பாதாளத்தில் தள்ளிவிடுமோ என்று இவர்கள் பயப்படுவது நியாயந்தானே!

வெறும் வார்த்தை வேட்டுச் சித்தார்த்தியார் சர். இராதா கிருஷ்ணன் 'இசை மேதையானது, ஆனந்தலயத்தில் இதய பாவத் தோடு நித்திய வஸ்துவுடன் உறவு கொண்டாடுகிறது' என்று சொல் கிறாரே! அந்த விவகாரமெல்லாம் இசைவிற்பன்னர்களுக்கு இன்று சற்றும் கிடையாது என்பது ஹிந்து பத்திரிகைக்குத் தெரியாதா?

அதன் வாதமும் போலி! வேஷமும் போலி!

தமிழரின் சிறந்த சிருஷ்டி உணர்ச்சியையே நசுக்கிப் பாழ்படுத்த இந்த ஹிந்துவும் இதைப் போன்ற சில விஷம ஸ்தாபனங்களும் முயற்சி செய்து வருகின்றன. ஆந்திரர்கள் புத்துயிர் பெற்றெழ விரும்பினால், இவை அவர்களையும் ஒருகை பார்த்துவிட எண்ணாது விட்டு விடாது. இத்தகைய கொடிய பிரச்சாரத்தை தடுப்பதற்கேதான் இசைவாணர்கள் தம்மில் பாட ஊக்கமளிப் பதற்காகவும், ரசிகர்கள் தங்கள் தாய்மொழியிலேயே கேட்டு ரசிப்பதற்காகவும் இத் தமிழிசை இயக்கம் தோன்றியிருக்கிறது. முன்னேற்றம் முன்னேற்றம் என்று சொல்லிக் கொண்டு இந்த 'உரிமை'க் கூட்டங்கள் பல குற்றங்களைப் புரிந்து பாவ பண்டாரத்தை நிரப்பி வருகின்றன.

இசையின் அடிப்படை தெரிந்ததுபோல் போலிப் பாசாங்கு செய்வதினால் என்ன பிரயோஜனம்? உண்மையாகவே பொருளைத் தெரிந்துதான் அனுபவிக்க வேண்டும். கச்சேரிக் கூட்டங்களில் இசை மரக்காலா? படியா? என்று கேட்கும் பலபோலி ரசிகர்கள் தாங்கள் ஞான சூனியர்கள் என்பதை வெளிக்காட்டாமல் இருக்கக் கச்சேரி நடக்கும் போது தங்கள் தலைகளையும் கைகளை யும் மனம் போனவாறு ஆட்டுகிறார்கள். இவர்கள் அக்கச்சேரிகளில் வீற்றிருப்பதே அலங்கோலக் காட்சியாக இருக்கிறது. இவர்கள்தாம்

இத் தூயதமிழிசை இயக்கத்தை எதிர்க்கப் பாடுபடும் 'சேனையின் வீரர்கள்'.

இந்த இயக்கத்தை ஆரம்பித்து வைத்தவர்கள் தற்காலத்தில் நம்மிடையே இசைப்பெருந்தகைகள் இருப்பதாக மனப்பால் குடிக்கிறார்கள் என்று நமது சகாப்பத்திரிகை சொல்லுகிறது. மனப்பால் குடிக்கும் விவகாரத்தில் நமது சகாவாக்கு வசிஷ்டர் வாக்கு என்பதை நாம் அறிவோம். **தமிழர்களிடையே அது மேதையைக் காணவேண்டுமானால் அந்தத் தமிழன் செத்துச் சாம்பலாகி இருக்க வேண்டும் போலும்!**

இயக்கம் தனது உயரிய நோக்கத்தை மறக்கக் கூடாது. ஜாக்கிரதையுடன் தவறாமல் அது நாலைந்து வருஷங்கள் வேலை செய்யுமானால் திறமைசாலிகள் பலர் புது வேலைகள் செய்வதைக் காணலாம். சுயநலமிகள், விஷமக்கார கங்காணிகள் இதுவரை நமது கலை வாழ்வைப் பாழ்படுத்தி வந்திருக்கிறார்கள். ஹிந்துப் பத்திரிகை, தனது பழைய வேஷங்களை எல்லாம் களைந்து தேசத்தின் உண்மை ஊழியனாக நமது நிழலிலே வேலை செய்யும் காலத்தை அவர்கள் காணுவார்கள்:

— இது லிபரேடரின் 25.12.43 செய்தி.

'வெள்ளத்திற்கு எதிரே துரும்பு' என்னும் தலைப்பில், தமிழுக்கோ, தமிழருக்கோ, தமிழ் நாட்டிற்கோ, எந்தவிதத்திலும், எவ்வித சேவையையும் செய்யாத சில 'துரும்பு'கள் இசைக் கிளர்ச்சியைத் தாக்குவதால் என்ன சாதித்துவிட முடியும் என்று கேட்கிறோம்.

"தமிழருக்குத் தமிழ்ப்பாட்டுதான் தேவை என்பதற்கு ஆதாரம் கூற வேண்டிய அவசியமே இல்லை. 'தாய்மொழியிலே புரியும்படி பாடு' என்று பாடகர்களை நாம் கட்டாயப்படுத்த நமக்கு உரிமை இருக்கிறது.

இந்தக் கிளர்ச்சியை எதிர்ப்பவர்கள்தாம், தங்கள் கட்சிக்கு ஆதாரந்தேடி அலைந்து என்னென்னவோ உளறுகிறார்கள். ஆனால் அவர்கள் பேச்சை ஒரு முட்டாள்கூட லட்சியம் செய்யமாட்டான்" என்று எழுதியது தந்தி (24.12.43)

அதே தந்தி, "ஹிந்து முதன் முதலாகக் காட்டும் காரணம் சங்கீதம் மக்களுக்காக அல்ல; ஆண்டவனுக்காகத்தான் பாடப்படுகிறது'

என்பது. அப்படி ஆண்டவனுக்காகப் பாட விரும்பும் சங்கீத கேசரிகள், சாதாரண மக்கள் கூடி இருக்கும் சபைக்கு வரக்கூடாது என்பதுதான், தமிழிசை இயக்கத்தாரின் கட்சி. ஏனென்றால், உயர்ந்த தத்துவார்த்தங்களைக் கொண்டதும் பகவானால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடியதுமான சங்கீதத்தைப் பொது ஜனங்கள் கேட்க விரும்பவில்லை. தங்களுக்கு நன்றாகப் புரியும்படி பாடுவதுதான் சங்கீதம் என்று தமிழர்கள் கருதுகிறார்கள். ஆகவே 'தமிழிலேயே பாடு' என்று கட்டளை இடுகிறார்கள். கலை என்பதற் காக, ஒரு மாபெரும் சமுதாயம் தனது ஜீவாதாரமான உரிமையை விட்டுக் கொடுக்க முடியுமா? உதாரணமாக ஆளுவதும் ஒரு கலைதான்! இதற்காக வெள்ளைக்காரன் நம்மிடம் வந்து ஆளுவது ஒருகலை! இது உலகத்திற்குப் பொதுவானது! குறுகிய தேசியத்தைப் புகுத்தி 'நான்தான் ஆளவேண்டும்' என்று சண்டைக்கு வராதே! 'நான் எப்படித் திறமையாக ஆளுகிறேன் என்பதைப் பார்த்து ரசித்துக் கொண்டு இரு' என்று சொல்ல வந்தால், நாம் ஏற்றுக் கொள்ளுவோமா? கலைக்காகப் பிறரிடம் அடிமைப்பட்டுக் கிடக்க ஒப்புவோமா?

ஒரு தமிழரின் பத்திரிகையான 'ஹிந்து' இம்மாதிரி எழுதுவது தமிழ் நாட்டுக்கே கேவலமல்லவா!" என்றும் எழுதியது.

குடியரசு, தமிழிசையை எதிர்ப்பாரை மிகக் கண்டித்து எழுதியது:

"தமிழ்நாட்டில் தமிழில் இசை இருக்க வேண்டும் என்பதற்காக ஓர் இயக்கமும், அதற்காக ஒரு கிளர்ச்சியும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பது ஒன்றே தமிழர்கள் எவ்வளவு தூரம் தங்கள் உரிமைகளை இழந்தவர்களாக இருக்கின்றனர் என்பதையும் பிறர் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்களாக ஆக்கப்பட் டிருக்கின்றனர் என்பதையும் நன்கு எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. இந்த நிலையில் மிகுந்த முயற்சியின் மீது தமிழ்நாட்டில் தமிழ் இசைக்கு ஆதரவு தேடப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டில் தமிழர்களிடையே தமிழில் பாட்டுப்பாட முடியாது என்று கூறும் அளவுக்குத் துணிவு கொண்டவர்களும் இத்தமிழ் நாட்டில் இருந்து வருகின்றனர். தமிழில் பாட்டுப்பாட வேண்டும் என்று கேட்கும் தமிழர்களை எதிர்த்து அடக்கத் துணிவு கொண் டவர்களுக்கும் தமிழ் நாடு இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறது.

'தமிழ் நாட்டில் தமிழ்ப்பாட்டுகள் பாடப்படவேண்டும். தமிழில் இசை இருக்க வேண்டும்' என்று கூறுபவர்களை நையாண்டி செய்து அவ்வாறு கூறுவதும் கோருவதும் முட்டாள்தனம் என்று மேடைகள் மீதேறிப் பேசிடத் துணிவு கொண்ட கூட்டத்தினருக்கும் இத் தமிழ்நாடு இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவு எதிர்ப்பையும் மீறித் தமிழர்கள் வாழும் நாட்டில் தமிழ்ப்பாட்டுப் பாடுவதற்குப் பெருஞ் செல்வர்களின் ராஜாக்களின் முயற்சியும் ஆதரவும் கூட்டுறவும் வேண்டப்படுகின்றன. அந்தோ! தமிழர்கள் அடைந்துள்ள கேவல நிலைமைதான் என்னே!" என விரிவாகச் சாடுகின்றது. தமிழிசை ஆதரவாளர்களையும் அப்பாடலின் மொழிநிலை தொடர்பாக எச்சரிக்கின்றது:

இன்று தமிழ் நாட்டில் தமிழில் இசை இருக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்பவர்கள் **தமிழ் இசையென்று கூறித் தமிழ் வாசனைத் தைலம் மட்டும் பூசப்பட எந்த இசையையாவது தமிழின் பேரால் தமிழ்நாட்டில் பாடவைப்பது என்னும் முறையை – எண்ணத்தை – அடியோடு கைவிடவேண்டும்.**

1. தமிழ்ப்பாட்டுகள் என்றால் அவை முழுக்க முழுக்கத் தமிழ் மொழியில் அமைந்தவையாகவே இருக்க வேண்டுமே யொழிய 100–க்கு 99 வடமொழி வார்த்தைகளைக் கொண்ட தமிழ்ப் பாட்டாயிருத்தல் கூடாது.

2. தமிழில் இசை என்று கூறிக் கொண்டு வடவர் நாட்டுப் புராணக் கருத்துகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் புகுத்தும் எண்ணங்களையும் கொண்ட பாட்டுகளாயிருத்தல் கூடாது.

3. நல்ல தமிழில் இயற்கை எழில்களையும், தமிழரின் வீரத்தையும், அன்பையும், மானமிக்க சமத்துவ வாழ்வினையும், வரலாற்றினையும், நேர்மையையும், நீதி நெறிகளையும், தமிழ்நாட்டுப் பற்றையும், மொழியில் ஆர்வத்தையும், ஒற்றுமையையும், கட்டுப் பாட்டையும் எடுத்துக் காட்டும் பாட்டுகளையே பாடுமாறு செய்தல் வேண்டும்.

4. தமிழர்களை அடிமைப்படுத்தும் சதிச் செயல்களையும், சூழ்ச்சிகளையும், சமய வெறிகளையும், மூடப்பழக்கவழக்கங் களையும், ஆரியரால் புகுத்தப்பட்ட இன்னும் பல அநாசாரங் களையும் வாழ்க்கை முறையில் இருக்கும் கேடுகளையும் அகற்றுமாறு அறிவூட்டும் பாட்டுகளையே பாடுமாறு செய்தல் வேண்டும்.

இவ்வாறு செய்வதற்குத் தமிழர்கள் துணிவு கொள்ளாத வரையில், தமிழ் நாட்டுச் செல்வர்கள் இவ்வாறான முறையில் தொண்டாற்றத் துணிந்து முன்வராத வரையில் அவர்களுடைய எத்தகைய கிளர்ச்சியும் முயற்சியும் பயன்படா தொழியுமாறு செய்யப் பார்ப்பனர்களுக்குத் தெரியும்" என்று சொல்லி மேலும் விரித்தெழுதுகிறது (25.12.43)

தமிழிசை இயக்கத்தார் துணிவான நடவடிக்கை மேற்கொள்ள வில்லை என்பதைக் கடுமையாகச் சாடியது திராவிடமணி (26.12.43).

"எது எப்படிப் போனாலும் போகட்டும் பாட்டுகளையாவது தமிழில் தாய் பாஷையில் பாடக்கூடாதா? தயவு செய்து பாடுங்கள், வேண்டிக் கொள்ளுகிறோம். கேட்டுக் கொள்கிறோம் என்று ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அவர்களும் சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்களும் கடைசியாகப் **பிச்சை கேட்கின்றனர். ஆம்! சந்தேகமில்லாமல் பிச்சையே தான்.**

சென்னையில் சென்ற 23 ஆம் நாள் நடைபெற்ற தமிழிசை மாநாட்டை 'இந்து பத்திரிகையிடத்தும். அதன் வர்க்கத்தாரிடத்தும் தமிழர் சமுதாயம் பிச்சைகேட்கும் சந்தர்ப்பம் – அல்லது திருவிழா கொண்டாட்டம் என்றால் யாரும் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்றும், மறுககமாட்டார்கள் என்றும் நம்புகிறோம்.

ஏனென்றால், தமிழில் – தாய்பாஷையில், தாய் நாட்டில் பாட ஒரு மாநாடு, ஒரு திருவிழா, ஏராளமானோர் கூட்டம், எண்ணற்ற பொருள் செலவு, இதைவிட இதை ஆட்சேபிக்கவும் பத்திரிகை – தேசியம் – வர்க்கம் என்கிறவைக்கும் இந்நாட்டில் இடமும், சந்தர்ப் பங்களும் இருக்கிறது என்கிறபோது ராஜா அவர்களையும் சர். சண்முகம் அவர்களையும் பிச்சாண்டிகள் என்று நாம் ஏன் கூறக் கூடாது?

அவர்கள் பிரசங்கங்கள் எவ்வளவுதான் திறமை மிக்கதாயும், வீர முடையதாயும், நேர்மை கொண்டதாயும் இருந்தாலும் இந்த நிலைமைக்கு அர்த்தமென்ன? ராஜாவும் சண்முகமும் இப்படிப் பேசியிருக்கிறார்களே என்று யார் நடுநடுங்கிப் போய்ப் பேசாது இருந்து விட்டார்கள்? கைமேல் பலனாக எழுத்திலும் காரியத்திலும் இசை இயக்கத்தை விட உண்மையிலேயே பலமடங்கு செல்வாக்கும்

புகழுமுள்ளதான எதிர்ப்புகள் புற்றீசல்கள் மாதிரி சென்னையிலும் மற்றும் தமிழ்நாட்டிலும் இன்று காணப்படவில்லையா?

நூற்றுக்கு 40 ஆவது பாடுங்கள்; 20 பாடுங்கள் என்று தீர்மானம் நிறைவேற்ற முன்வந்த இசை இயக்கத்தார் மனோபாவம் மிக பிற்போக்கானது என்றும் மண்டியிட்டுச் சரணடைந்து பிச்சை கேட்பதைவிட மோசமாயிருக்கிறதென்றும் கருதுகிறோம்.

தமிழர் சமுதாயத்தின் பெயரால் எல்லாவற்றிலும் அதிகாரங்கள் பேச முடிசூடா வேந்தர்களாய், பெரும்பாலும் செல்வாக்காலும் அறிவாலும் வீறுகொண்ட இரண்டு பெரிய தலைவர்களின் இந்நிலைக்காக நாம் மிகவும் இரங்குகின்றோம். உண்மையிலேயே இப்படி மானக்கேடான அதாவது சர். சண்முகம் அவர்கள் தம் சொற்பொழிவில் குறிப்பிட்டதே போன்று அமெரிக்காவில் உள்ள அவர் நண்பர் ஒருவர் 'தாய் பாஷையில் பாடக் கேட்டுக் கொள் கிறீர்களா? இதற்கு ஆட்சேபமா?' என்று ஆச்சரியப்பட்டுக் கேட்கும் மாதிரியான இந்த இயக்கம் தேவையா? என்றும் கூட சந்தேகித்து வருகிறோம்.

'தமிழில்தான் தமிழ்நாட்டில் பாடவேண்டும். அப்படிக்கில்லா விட்டால் இடமில்லை' என்று தீர்மானிக்கவும் பிரகடனப் படுத்தி முழக்கவும் சக்தியில்லாத நிலையில் எந்த மாதிரியான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளத் துணியவில்லையானால், தயைசெய்து தமிழர் சமுதாயத்தை மேலும் உலகறிய அவமானப் படுத்தும் படியான இம்முயற்சியை அடியோடு விட்டுவிடக் கேட்டுக் கொள்கிறோம் அல்லது இப்போதைய அரசியல் நிலைமையில் கொஞ்ச காலத்திற்கு ஒத்தி போடவாவது மன்றாடி வேண்டிக் கொள்கிறோம்" என்கிறது அது.

அகாடமி இசை விழாவில் திறப்புரை ஆற்றிய நீதிபதி சந்திர சேகர ஐயர்,

"காசு கொடுக்கிறவன் நான்; என் இஷ்டப்படிதான் பாடவேண்டும் என்பதெல்லாம் வியாபாரப்புத்திப் பேச்சு" என்றார். இதனைக் குமரன் இதழ் கண்டித்தது (30.12.43):

"சரி, இது வியாபாரப் புத்திப் பேச்சுத்தான். 600 ரூபாய் தந்தால்தான் பாடுவேன் என்று வித்வான் கேட்கிற பேச்சு எந்தப்

புத்திப் பேச்சு? கடவுள் நிலையில் சங்கீத சமாதியில் லயித்து அடிக்கிற தந்தியா இது என்று கேட்க விரும்புகிறோம்.

20 ரூபாய் டிக்கெட்டுக்கு முன்பணம் வாங்கிக் கொண்டு வித்வானுக்கு ஏதோகொஞ்சம் கொடுத்துவிட்டு லாபம் சம்பாதிப்பது எந்தப் புத்தியில் சேர்ந்ததென்பதை நோக்கவேண்டாமா?

பக்தி பரவசப்பட்ட உத்தமோத்தம சங்கீத ஊற்று 27உ மாலை 5 மணிக்கு வா என்றால் வருமா என்று நீதிபதி அவர்களைக் கேட்க விரும்புகிறோம். அந்த மகாப்பிரவாகம் 8.30க்கு நில் என்றால் நிற்குமா என்பதும் தெரியவேண்டும்.

ஒரு சங்கீத வித்வானின் பாடலைக் கேட்கத் தஞ்சாவூர் மகாராஜா விரும்பியபோது 'நீ கேட்கிற போது வராது; அது வரும் போது தான் வரும்; அப்போதுதான் பாடுவேன்' என்று சொன்னாராம். பிறகு பல நாள் இரவு பகலாக அரசன் காத்திருந்தாராம். எண்ணெய் தேய்த்துக் கொண்டே இசையை வித்வான் பாடக் கேட்டு அரசர் மகிழ்ந்தாராம். உண்மைச் சங்கீதம் அப்படி வருகிறது. அந்த வித்வான்கள் காசை விரும்புகிறதில்லை. டிக்கட் போடுகிறதில்லை.· நாலுமணி நேரத் திற்கு 500, 600 ரூ என்று ஒப்பந்தம் செய்கிற போதுதான் வியாபார மாக மாறுகிறது என்பதை வெகு அழுத்தமாகக் கூறுகிறோம்.

அகாடமிக் கட்சியார் சொல்கிறபடி பணவசூல் செய்து, சட்டப்படி வித்வான்களும் காண்ட்ராக்ட் எழுதிக் கொடுத்துத் தெலுங்கு, துலுக்கு பாடுவது சாஸ்திரியமானது அல்லது கடவுளோடு கலக்கும் சங்கீதமாகிறது. அப்படியே எல்லாம் செய்து தமிழ்பாடச் சொன்னால் அது வியாபாரப் புத்திப் பேச்சாகிறது.

இந்தமாதிரி செய்யப்படும் விகடப் பிரசங்கங்களின் உள்ளே என்ன இருக்கிறது என்பது நமக்கும் தெரியும். அவர்கட்கும் நன்றாகத் தெரியும். உண்மை! இது பொதுமக்களுக்குத் தெரியாமல் இருக்கவே அவர்கள் முயல்கின்றனர். அந்த எண்ணம் இந்த ஆண்டு நிகழ்ச்சிகளிலிருந்து பொதுஜனங்கட்கும் வெளிச்சமாகத் தொடங்கிவிட்டது என்பது நிச்சயம்.

நீதிபதி ஐயரவர்கள் பேசியுள்ள பேச்சைக் கேட்டு நாம் வருந்தவில்லை. நீதிபதிகளையும் புரட்டுகிறதே நம் நாட்டுப் புரட்டு என்பதை நினைக்கும் போதுதான் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஆனால், ஆண்டுக்கு ஒருவர் இருவரைக் கொண்டு வந்து

அவர்கள் வேறு துறைகளில் பெற்றிருக்கிற நல்ல பெயரை விற்று முதல் செய்யும்படி இந்த சங்கீத சபையார்கள் செய்து வருவதைக் கண்டு யார்தாம் வருந்தாமல் இருக்க முடியும்?"

என்பது அது

இந்நிலையில் **ஆனந்த விகடனில்** ஒரு சித்திரம் வெளிப்பட்டது. வானத்தில் தன்னிச்சையாக இசை என்னும் வானம்பாடி பறந்து கொண்டிருப்பது போலவும் அதனை அண்ணாமலை அரசர் மொழிக்கட்டுப்பாடு என்னும் வலையையும் கூண்டையும் வைத்துக் கொண்டு அவற்றுள் வந்து பாடக்கட்டுப்படுத்துவது போலவும் வரையப்பட்ட கருத்துப்படம் அது. அதனை 4.1.44 இசை விழாவின் போது ஆர். கே. சண்முகம் செட்டியார் நயமாக மறுத்துரைத்தார். அதனைக் குறிப்பிடும் **நவயுவன்** (15.1.44):

"சர்.ஆர்.கே. செட்டியார் அதற்குச் சொல்லியிருக்கும் வியாக்யானத்தில், 'அது தமிழ் நாட்டு வானம்பாடி எனவே அது தமிழில்தான் பாடவேண்டும்' என்று அந்தக் கடமையை எடுத்துச் சொல்லி மேலும், 'அந்தப்பட்சிக்கு மியூசிக் அகாடமிக் காரர்கள் இழைத்த தீங்கையும் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பட்சியைக் கர்நாடக சங்கீதம் என்ற கூண்டுக்குள் அடைத்து வைத்திருந்தார்கள். தெலுங்குபாடு கன்னடம் பாடு என்று கட்டளையிட்டு வந்தார்கள். அதைத் திறந்து விட்டார் ராஜா சர் என்று விவரித்திருக்கிறார்.

சரியான சவுக்கடி! பலே சர், ஷண்முகம்"

என்கிறது அது

இதே கூட்டத்தில் நன்றி கூறிய சண்முகனார்.

"முதல் முதலில் யாருக்கு எங்கள் மனப்பூர்வமான நன்றி என்றால் எங்களை மிகவும் கவனித்துப் பலவிதமான எதிர்ப்பைக் கொடுத்துக் கட்டுரைகள், தலையங்கங்கள். பிரசங்கங்கள். அதிகப் பிரசங்கங்கள், பகிரங்கக் கடிதங்கள், கேலிச் சித்திரங்கள் இவற்றை யெல்லாம் போட்டுப் பிரசாரம் செய்தார்களே அவர்களுக்கு முதல் வந்தனம். ஏன் அவர்களுக்கு முதல் வந்தனம் என்றால், உலகத்திலே எந்தவிதமான இயக்கமும் எதிர்ப்பு இல்லாவிட்டால் முனனேற்றம் அடையாது. தமிழ்இசை இயக்கத்துக்கு எதிர்ப்பே தோன்றவில்லை என்று ஏற்படுமானால் இந்த இயக்கம் அபிவிருத்தி அடைவதற்கு மார்க்கம் இருந்திராது. அதற்கு வேண்டிய எதிர்ப்பைக் கொடுத்து

எங்களுக்கும் தமிழ்நாட்டில் உள்ள எல்லாத்தமிழ் மக்களுக்கும் உற்சாகத்தைக் கொடுத்த இந்த மகான்களுக்கு எங்கள் வந்தனத்தைச் செலுத்திவிடுகிறோம்" என்றார்.

இதே ஆனந்த விகடனில் ஆசிரியர், தமிழிசை குறித்து எழுதிய மறுப்புக் கட்டுரைக்கு **மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை** 12.1.44இல் அ.வ. இராமநாத செட்டியார் தலைமையில் ஒரு கண்டனக் கூட்டம் நடத்தியது. அக் கூட்டத்தின் நிறைவில், "ஆனந்த விகடன் ஆசிரியர் தமிழிசை குறித்து 2.1.44இல் மறுத்து எழுதியிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. தமிழன் என்று சொல்லிக் கொண்டு, நழுவி எழுதியதை நாங்கள் முழுமனத்துடன் வெறுக் கிறோம்" என்று கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி விடுத்தனர்.

தமிழிசையை வரவேற்று எழுதிய **கல்கி**, தமிழிசை மாநாட்டுச் சிறப்புரைகளைச் சுட்டியது:

1. சங்கீத மகாநாடுகளில் கச்சேரித்திட்டங்கள் அடங்கிய புத்தகம் ஒன்று வெளியிடுவது வழக்கம். அகாடமியார் வெளியிடும் புத்தகத்தில், அகாடமி அக்கிராசனர், திறப்பாளர், போஷகர் முதலிய பெரிய மனிதர்களின் படங்களைப் பெரிதாய்ப் பிரமாண்டமாய் அச்சிடுவார்கள். வருஷாவருஷம் இந்தப் பெரிய மனிதர் படங் களையே போட்டு, கர்நாடக சங்கீதத்துக்குத் தொண்டு செய்வார்கள். சங்கீதக் கச்சேரிகளையும் வித்வான்களுடைய படங்களையும் அச்சிடுவது அநாவசியம் என்றோ அகாடமியின் கௌரவத்துக்குக் குறைவென்றோ விட்டுவிடுவார்கள்.

ஆனால் தமிழிசை மாநாட்டுப் புத்தகத்திலோ மகாநாட்டில் கச்சேரி செய்யும் எல்லா வித்வான்கள் – பக்கவாத்தியக்காரர்கள் படங்களும் அழகாக வெளியிடப் பட்டிருக்கின்றன.

2. அகாடமி நிர்வாகிகள் மாலைபோடுதல் முதலிய மரியாதை களைத் தங்களுக்கே செய்து கொள்வார்கள். வித்வான்களுக்கு நாமத்தைப் போடுவார்கள்.

தமிழிசைக் கச்சேரியில் ஒவ்வொருநாளும் வித்வான்களுக்கு மாலைபோட்டு மரியாதை செய்கிறார்கள்.

3. அகாடமிக் கச்சேரிக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு போகிற வர்கள் அங்கே தங்களுக்கு என்ன மரியாதை கிடைக்கிறதோ என்று நடுங்கிக் கொண்டுதான் போகவேண்டும்.

தமிழிசை மகாநாட்டிலோ, கச்சேரிக்கு வருகிறவர்களை மரியாதை செய்து அழைத்துப்போய் அவர்களுடைய இடத்தைக் காட்டி உட்கார வைக்கும் முறையை எவ்வளவு பாராட்டினாலும் போதாது. ஏதோ நெருங்கிய சிநேகிதர்கள் வீட்டுக் கல்யாணத்துக்குப் போகிறமாதிரி தமிழிசைக் கச்சேரிக்கு ரஸிகர்கள் குஷியாக வருகிறார்கள்"

என்பவை அவை.

இவ்விழாச் செய்திகள் உரைகள் மறுப்புகள் மறுப்புக்கு மறுப்புகள் என்பவற்றை எல்லாம் தமிழிசைச் சங்கம் "தமிழ் இசைமாநாடு" என்னும் மணமலராகத் தொகுத்து வழங்கியுள்ளது. இது வரலாற்றுக்குத் தக்க கல்லெழுத்தும் செப்புப் பட்டயமும் போன்றதாம்.

இம் மாநாட்டை ஒட்டிய மூன்று திங்கள் அளவுக்குள் (25.3.1944) தம் வாழ்க்கைக் குறிக்கோள் இன்னவை என்பதைப் பொன்னெழுத்தால் பொறிக்கும் வகையில் தம் கையெழுத்தால் தம் முகவரிக் கடிதத்தாளிலேயே வரைந்துள்ளார் அண்ணாமலை அரசர். அச்செய்தி:

உ

சிவமயம் 25.3.1944

ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தினந்தோறும் வணங்குவேன். அண்ணாமலை சர்வகலா சாலையின் வளர்ச்சியை ஒவ்வொரு நாளும் சிந்திப்பேன். தமிழ்நாடெங்கும் தமிழிசை முழங்க வேண்டுமென்பது எனது ஆவல். ஈட்டலும் காத்தலும் வகுத்தலும் என்வாழ்க்கையின் கொள்கை.

(ஒப்பம்) மு. அண்ணாமலைச் செட்டியார்.

இறைமை கலைமை தமிழ்மை ஆகிய மும்மையின் முழுமை முகிழ்ப்பே அல்லவோ இப்பட்டயம்!

சென்னைத் தமிழிசைச் சங்கம் 23.1.44 முதல் இசைக்கல்லூரி ஒன்றையும் நடத்திவருகின்றது. அக்கல்லூரியில் நான்கு ஆண்டுகள் பயின்று வெற்றி பெற்றவர்களுக்கு 'இசைச்செல்வம்' என்னும் பட்டமும், ஐந்து ஆண்டுகள் பயின்று வெற்றி பெற்றவர்களுக்கு 'இசைமணி' என்னும் பட்டமும், வழங்கப்படுகின்றன.

இசைச்சங்கம், இசைக்கல்லூரி, இசைமாநாடு எனப் பல திறத்தானும் பணியாற்றி வரும் இவ்வியக்கங்கள் தமிழிசையை அகத்தானும் புறத்தானும் வளர்க்க உதவுகின்றன. முன்னவை இரண்டும் இசை வெளியீடுகளாலும் ஆய்வுகளாலும் பயிற்சியாலும் தமிழிசை அகவளர்ச்சி செய்பவை. பின்னதாம் தமிழிசை மாநாடோ, வெள்ளமெனப் பெருகிவரும் பொதுமக்களின் உள்ளம் தளிர்ப்புறச் செய்யும் புறவளர்ச்சியாகும்.

தமிழிசைமாநாட்டு வெற்றி பல்வேறு பெருநகரங்களில் தமிழிசைக் கழகங்கள் தோன்றுதற்குத் தூண்டலாய் அமைந்தது. அவ்வகையில் தோன்றிய சில கழகங்கள்:

24.1.1944இல் வடார்க்காடு சார்ந்த திருப்புத்தூரில் தமிழிசைக் கழகம் தொடங்கியது; இசைக்கல்லூரி நடாத்தவும் முனைந்தது. அவ்விழாவில் இசையரசு தண்டபாணி தேசிகர் இசையரங்கு நடைபெற்றது. அக்கூட்டத்தில் பேரா. லெப.கரு. இராமநாதன் செட்டியார், சாமிநாயுடு, பி. பெரியசாமிபிள்ளை, கவிநயம் கந்தசாமி முதலியார் ஆகியோர் பங்கு கொண்டனர்.

20.2.1944இல் திண்டுக்கல்லில் தமிழிசைக் கழகம் எம்.எஸ்.பி. சோலை நாடார் தலைமையில் நிறுவப்பெற்றது. டபிள்யூ. பி.ஏ. சௌந்தரபாண்டிய நாடார் தலைமையில் சர்.பிடி. இராசன் கழகத்தைத் தொடங்கி வைத்தார். தமிழிசைப் பள்ளியும் 7.9.44இல் இங்கே தொடங்கியது.

1.5.1944இல் தஞ்சை மாவட்டத் தமிழிசைக் கழகம் தொடங்குதற்குரிய திட்டம் சர்.பிடி. இராசன் தலைமையில் நிகழ்ந்த கூட்டத்தில் முன்வைக்கப்பெற்றது. லெப.கரு. இராமநாதன் செட்டியாரும், டாக்டர் எ. கிருட்டிண சாமியும் இசைக்கழகத்தின் இன்றியமையாமை குறித்துப் பேசினார். பின்னே 29.11.1944இல் ஆர் கே. சண்முகம் செட்டியார் தலைமையில் தொடங்கியது. கழகத் தலைவர் இராவ்பகதூர் ஏ.ஒய். அருளானந்தசாமி நாடார். இக்கழகச் சார்பில் இசைக்கலூரியும் தோன்றியது.

ஐயம்பேட்டை, திருநெல்வேலி, வேலூர், ஈரோடு ,காஞ்சிபுரம், கானாடுகாத்தான் முதலிய நகரங்களில் தமிழிசைக் கழகங்களும் தமிழிசைக் கல்லூரிகளும் தோன்றின.

பல்வேறு இடங்களிலும் தோன்றிய இசைக்கல்லூரிகள் ஒத்தியலும் வகையில் திகழ்வதற்காக அண்ணாமலை நகரில் 24.3.1945இல் 'கல்லூரி ஆசிரியர்கள் கூட்டம்' கூடி ஆய்வு நிகழ்த்தியது. பல்வேறு நகரங்களில் தமிழிசைச் சங்கங்களும், தமிழிசைக் கல்லூரிகளும் தோன்றியமையால் தமிழிசை மாநாடு நிகழும் போதெல்லாம் தமிழ்நாட்டு இசைச் சங்கப் பேராளர் கூட்டம் நடத்தி ஒருமித்த தொண்டாற்றல் நலமென்று தமிழிசைச்சங்கம் முடிவெடுத்தது. அதன்படி, 26.12.1944 இல் முதல்மாநாடு நடைபெற்றது. அதன் தலைவராக சர். இரா. க. சண்முகனார் இருந்தார். இரண்டாம் மாநாடு 26.12.1945 இல் நிகழ்ந்தது. அதன் தலைமைப் பொறுப்பைத் திவான்பகதூர் இரத்தினசபாபதி முதலியார் ஏற்றார். மூன்றாம் மாநாடு 27.12.1946 இல் நிகழ்ந்தது. அதன் தலைவராகச் சட்டமன்றச் செயலர் பா. வேங்கடாசலம் பிள்ளை விளங்கினார். இம்மாநாடுகளிலேயே தமிழிசைக் கல்லூரியில் பயின்று தேர்ச்சியுற்ற மாணவர்களுக்குப் பட்டமளிப்பும் நிகழ்த்தப்பட்டது.

தமிழிசைச் சங்கச் சார்பில் தமிழிசைப் பாடல் போட்டிகள் நடத்தப் பெற்றதை அறிவோம். அவ்வகையில் 28.12.47இல் பொதுவாகத் தமிழிசைப் பாடல் போட்டியும் 11.4.48இல் முத்துத் தாண்டவர் பாடல் போட்டியும் நிகழ்ந்தன. 1948 முதல் கோபால கிருட்டிண பாரதியார் பாடல் போட்டி தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது. இப்போட்டியில் வெற்றி பெறுவார்க்குச் சக்கரவர்த்தி இராசகோலாச்சாரியார் பெயரால் அரசர் அண்ணாமலையார் விரும்பி அமைத்த அறக்கட்டளைப்படி 'தம்புராப்பரிசு' வழங்குதலும் தொடர்ந்து நிகழ்கின்றது.

தமிழிசைச் சங்க இரண்டாம் ஆண்டுவிழா சர்.பி.டி. இராசனாலும் மூன்றாம் ஆண்டுவிழா திரு.வி.க.வினாலும் தொடங்கிவைக்கப்பட்டன. திரு.வி.க. தம் தொடக்கப்பொழிவில், தமிழகத்து இயங்கும் அமைப்புகள் பற்றியும் தமிழ் இசைவளம் பற்றியும், இசை ஒருமை குறித்தும் சில மணிகளைக் கொழித்தார்:

"மன்றங்கள் வெறும் விளம்பரக் கூட்டங்களாதல் கூடாது. அவற்றில் ஆவேசம், வெறி, வகுப்புப்பிணக்கு, மொழிப்பூசல், கட்சிப் போர் முதலிய பேய்கள் நடம்புரிதலாகாது. பேய்க் கூத்தால் இசை ஆக்கம் பெறாது. வசையே ஆக்கம் பெறும்.

சில மன்றங்கள் திங்கட் கொருமுறை விழித்து இசை விருந்துண்டு தூங்கி விடுகின்றன; சில ஆண்டுக்கொருமுறை விழித்து விழாநிகழ்த்தி உறங்கி விடுகின்றன; சில கும்பகர்ணனுக்குத் துணைபோகின்றன; சோம்பல் ஒழிக; சுறுசுறுப்பு எழுக!

ஒவ்வொரு மன்றமும் இசைப்பயிற்சிப் பள்ளியாதல் விழுப்பம்; பிரசாரக் கழகமாதல் சிறப்பு; நூல் வெளியீட்டு நிலையமாதல் நல்லது; மன்றச் சார்பில் பந்தாட்டம் முதலியன நடைபெறலாம்; கலை ஆராய்ச்சிகள் நிகழலாம்; புதுமை காணவும் முயலலாம்.

திருஞானசம்பந்தர், இறைவனை இயல்—இசை—நாடகமாக்கித் தமிழில் தந்த பெரியார். அவர் தமிழ்த் தோன்றல் – முத்தமிழ் விரகர். உள்ளத்தில் இறைமையும், வாயில் பண்ணும், கையில் தாளமும், காலில் நடமும் கொண்ட ஓர் இசைக் கலை திருஞான சம்பந்தம். அக்கலை அறிவுறுத்திய ஆடலும் பாடலும் கொண்ட இசைநெறி செந்நெறிக்கு மாறுபட்டதென்று சமயவாதிகள் நினைக்குங்காலமும் தோன்றியுள்ளது வெட்கம்! வெட்கம்!

பண்மயமான தெய்வத் திவ்வியப் பிரபந்தம் கோயில்களில் எம்முறையில் ஓதப்படுகிறது? கொலை – கொலை – இசைக்கொலை கோயில்களில் நடைபெறுகிறது! கலைநாடு, கொலை நாடாகியது. இசைநாடு, வசைநாடாகியது. கோயில் பழையபடி கலைக்கூடமாக – இசைக்கழகமாக – தமிழிசைச் சங்கத்தார் உழைப்பர் என்று நாடு எதிர்ப்பார்க்கிறது.

இசைவழியே தமிழ்ப் பாக்களைப் போதிப்பது மரபு. இம்மரபு இது காலை வீழ்த்தப்பட்டு வருகிறது. மரபைக் காக்கவேண்டுவது தமிழாசிரியன்மார் கடமை. இக்காலத் தமிழாசிரியன்மார் சிலர் பாக்களைப்பாடி உரை கூற நாணுகின்றனர். சிலர் தமக்கு இசை ஞானம் இல்லையே என்று வருந்துகின்றனர். நாணமும் வருத்தமும் மரபை அழிக்குமே! பின்னே கண்ணீர் உகுப்பதால் என்ன பயன்?

தமிழ்நாடு இதுபோழ்து வழங்குங் காட்சி இரங்கத்தக்கதாய் இருக்கிறது. ஒரு சிறு நிலத்துள் எத்துணை வகுப்பு! எத்துணைப் பிளவு! எத்துணைப் பிணக்கு! தமிழ்நிலம் பழையபடி ஒருமைத் தமிழ்நாடாதல் வேண்டும். ஒருமையைக் கோலவல்லது இசை. இசையை – தமிழ் இசையை – ஓம்ப முனைந்துள்ள தமிழிசை இயக்கம் தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டுக்கும் உழைப்பதைத்

தனக்குரிய முன்னணி வேலைகளுள் ஒன்றாகக் கொண் டிருக்குமென்று நினைக்கிறேன்" (23.12.45).

என்பன அவை.

அண்ணாமலை அரசரால் பரிசுத்திட்டமாகவும், இயக்கமாகவும் இசைக் கல்லூரியாகவும், நூல் வெளியீடாகவும், மாநாடாகவும் ஆய்வரங்கமாகவும் கிளர்ந்து பலபட விரிந்து எட்டாண்டு என எட்டு வைக்கும் காலத்தே ஒரு பேரிடி வீழ்ந்தது! அது வள்ளல் அண்ணாமலை அரசர் இயற்கை எய்தியதாகும் (15.6.48).

தமிழிசை இயக்கத் தந்தை அவர்! தாயாக இருந்து வளர்த்தவரும் அவர்! தாயுமானவராம் தமிழிசைத் தண்ணளியார் மறைவு தமிழிசைப் பற்றாளர்களையெல்லாம் உலுக்கியது 'தமிழிசைத் தந்தை' என்று கரைந்து உருகினார் லெ.ப.கரு. இராம நாதனார்:

"தமிழ் நாட்டினர் மறந்திருந்த தமிழிசை உணர்ச்சியைத் தாமே முன்னின்று தோற்றுவித்து, அதற்கு நேர்ந்த எதிர்ப்புகளைக் களைந்து, தமிழ்நாடெங்கும் பெரும்பாலும் தமிழிசைப் பாடல்களே பாடவும், அதற்குத் துணையாகப் பழையனவும் புதியனவுமாகிய ஆயிரக்கணக்கான தமிழிசைப் பாடல்கள் பல நூல் வடிவில் வெளிவரவும், அண்ணாமலைப் பல்கைலக் கழக இசைக்கல்லூரி வாயிலாக நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் தமிழ் இசையும் இசைக் கருவிகளும் பயிலவும் செய்து இத்தொண்டுகளை வளர்க்கச் சென்னைத் தமிழிசைச் சங்கத்தையும் தோற்றுவித்துப் பிற பல தமிழிசைச் சங்கங்கட்கும், தளராத ஊக்கங் காட்டி உதவிய இப்பெரியாரவர்களைத் 'தமிழிசைத் தந்தை' என்று கூறுதல் சாலப் பொருந்துவதாகும்" என்பதாகும்.

"தமிழ் நாட்டில் கல்விக்கு மதிப்பு உள்ளவரையில், இசைக்கு ஏற்றம் உள்ளவரையில், தமிழ் மொழிக்குத் தனிச்சிறப்பு உள்ளவரையில் வள்ளல் அண்ணாமலைச் செட்டியாரின் புகழ்விளங்குதல் திண்ணம்" என்றார் அறிஞர் மு. வரதராசனார்.

"தத்தளித்து நின்ற தமிழிசைச் செல்விக்குப்
புத்துயிரை ஊட்டியநற் புண்ணியவான் – பத்தியுடன்
எண்ணான்கு அறமும் இனிதா வளர்த்துமகிழ்
அண்ணா மலைமன்ன னாம்"

"பூவாரம் தந்திடுவார் பொன்னாடை போர்த்திடுவார்
நாவார நல்லுரையும் நல்கிடுவார் – பாவாணர்க்கு
அன்புசெய் இந்நாளில் அண்ணா மலையென்பார்
இன்படைவார் உண்டோ இசை"

என்றார் கவிமணி! வாழும் போதே வாழ்த்திப் பாடி, வாழும்பாட்டு இது.

அண்ணாமலையார் மறைவால் தமிழிசை இயக்கம் தொய்வோ சோர்வோ படாமல் படர்ந்து செழித்துக் கிளைக்கும் வகையில் இருபேர் ஊன்றுகால்கள் வாய்த்தன. அவ்வூன்றுகால்கள் தமிழ் இசை நலம் பாலித்த வகையே அடுத்துவரும் ஒளிபரவலாகும்.

9. ஒளிபரவல்

ஒரு பெரிய ஆலமரம்; அம் மரத்தின் அடி, கறையான் அரிப்பால் வீழ்ந்து விடுகிறது. அந்நிலையில் அம்மரத்தின் வீழ்துகளே, மரம் வீழாமல் தாங்கும். அதுபோல் குடும்பத் தலைவரோ தலைவியரோ வீழ்ந்தாலும் குடும்பம் வீழாமல் காக்கும் மக்கள் உண்டு. இதனை,

"சீதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன் றியாங்குக்
குதலைமை தந்தைக்கண் தோன்றின்தான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்",

என்பது நாலடியார் (197). இதற்கு எதிரிடையாகும் குடிநிலையை,

"இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி",

என்று எச்சரிக்கும் திருக்குறள்.

தமிழிசை இயக்கம் தோன்றிய நாள் தொட்டே உட்னாகி ஒன்றாகி உணர்வாகி நின்ற பெருமக்களுள் ஒருவர் இரா.க. சண்முகனார் என்பதை அறிவோம். அண்ணாமலையார்க்குத் தோளோடு தோளாகித் துணைநின்று இயக்கத்தை அவர் இயக்கியதையும் அறிவோம். அவர் தமிழிசை இயக்கத்தைத் தாங்குதற்குத் தம் வலிய தோள்களை முழுமையாகத் தந்தார். மற்றொருவர் அண்ணாமலை அரசரின் அருமை மைந்தரும் இளவரசரும் ஆகிய முத்தையவேள் ஆவர். மரபுரிமைப் பொறுப்புடன் தமிழுரிமைப் பொறுப்பும் செயல்திறச் சீர்மையும் பண்பாட்டு மேம்பாடும் ஒருங்கே கொண்டவர் அவர். இவ்விருவரும் அரசர் அண்ணாமலையார் எண்ணி எண்ணி வளர்த்த எழுச்சி இயக்கத்தை நிலை பெறுத்தி வளர்த்தலைத் தம்பொறுப்பாகக் கொண்டு கிளர்ந்தனர். அவ்வகையால் முப்பெரும் நலங்கள் தமிழிசை உலகுக்கு வாய்த்தன. அவை:

1. பண்ணாய்வுத் தொடக்கம் (24.12.49)
2. சென்னை அண்ணாமலை மன்றத்தோற்றம் (31.10.52)

3. மதுரைத் தமிழிசைச் சங்கத் தோற்றம் (21.1.74)

என்பன.

அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரி இயக்கமும் வெளியிடும் ஆய்வும் முன்னரே காணப்பட்டமையால் அதனை இங்கே தனித்தெண்ண வேண்டிய தில்லையாம்.

பண் ஆராய்ச்சி:

அண்ணாமலையரசர் மறைவுக்குப் பின் 10.10.1948 இல் தமிழிசைச் சங்கச் செயற்குழுக் கூட்டம் நிகழ்ந்தது. அதில் இரா. க. சண்முகனார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முத்தைய வேள் சங்கத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பொருளியல் துறை, ஆட்சித் துறை, தமிழியல் ஆகியவற்றில் தேர்ச்சி மிக்கவராகிய சண்முகனார் தமிழிசைச் சங்கச் செயற் பாட்டை விரிவாக்கம் செய்ய விரும்பினார். அதனால், தமிழ் இசை ஆராய்ச்சிக்குழு ஒன்றனை 1949இல் அமைத்தார். அதன் தலைவர் அவரே; மற்றைச் செயலர்களும் உறுப்பினர்களும் பதின்மூவர் அமர்ந்தனர்.

தமிழ்இசை ஆராய்ச்சிக்குழு 25.11.49இல் கூடிற்று. அதில், "இசைத்தமிழ்ப் பழஞ் செல்வங்களாகிய தேவாரப் பண்கள் தொடக்கத்தில் ஒரே முறையில் தான் பாடப்பெற்றிருக்கும்; பின்பு காலம் செல்லச் செல்ல மக்கள் பலவகைகளில் பாடத் தொடங்கி விட்டனர். அவ்வாறு பலவகையாகப் பாடும் ஓதுவார்களைக் கூட்டிப் பாடிக்காட்டச் செய்து ஆராய்ந்து பழைய முறையைக் கண்டு அம் முறையை எங்கும் பரப்ப எல்லா முயற்சியும் செய்தல் வேண்டும்" என முடிவு செய்யப்பட்டது. இப்பணியை நடாத்த 'உட்குழு' ஒன்றும் அமைக்கப்பட்டது. அதன் செயலராக லெ.ப.கரு. இராமநாதனார் இருந்தார். 27.11.49, 18.12.49 ஆகிய நாள்களில் அக்குழு கூடி, ஏழாவது தமிழிசை விழாவில் 24.12.49 முதல் 27.12.49 முடிய நான்கு நாள்களில் முற்பகல் நேரங்களில் முதற் பண்ணாராய்ச்சிக் கூட்டம் நடத்துவதெனத் தீர்மானித்தனர்.

தீர்மானப்படி சென்னை மெமோரியல் மண்டபத்தில் பண்ணா ராய்ச்சிக் கூட்டம் தொடங்கியது. அதன் வரவேற்புக் கழகத்தலைவராக இருந்த இராமசாமிநாயுடு வரவேற்புரைத்தார். சண்முகனார் ஆய்வைத் தொடங்கி வைத்தார். அப்பொழுது,

"நம் முன்னோர்கள் நமக்குத் தந்துள்ள இசைச் செல்வத்தை யாவரும் உணரும்படி செய்வதே இவ்வாராய்ச்சிக் கூட்டத்தின் நோக்கம். நம் இசையின் உயிர்நாடியான பண்களைப் பற்றி ஆராய்வதென்ற முடிவுக்கு வந்தோம். முதலில் தேவாரப் பண்களை ஆராய்ந்து திட்டப்படுத்துவது அவசியம், என்று கண்டோம். அதன்படியே தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் தேவாரப்பண் இசைக்கும் பாடகர்களை இங்கு வரவழைத்துள்ளோம். பண்ணோடு சேர்ந்த இசை மக்களது உள்ளத்தைத் தொடும்படியான ஒருகலை. தமிழிசை வளர்ச்சிக்கு இக்கூட்டம் மிகுந்த பயனைத்தரும் என்ற மகிழ்ச்சியோடு இந்த ஆராய்ச்சியைத் தொடங்கி வைக்கிறேன்" என்றார்.

பேரா. பி. சாம்பமூர்த்தி தலைமையில் ஆராய்ச்சிக் கூட்டம் தொடங்கியது. அவர் 'பண்—ராக—ஆராய்ச்சி' பற்றிப் பேசினார். ம.ப.பெரியசாமித்தூரன் 'பண்வரலாறு' பறறிப் பேசினார்.

இரண்டாம் மூன்றாம் நான்காம் நாள் கூட்டங்கள் எம்.எம். தண்டபாணி தேசிகர் தலைமையில் நிகழ்ந்தன. எல்லா நாள்களிலும் சண்முகனார் உடனிருந்து ஆய்வுத் துணையும் ஆனார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் ஒன்பது பண்கள் இன்னராகம் எனத் தீர்மானிக்கப்பட்டன; சில மேலாய்வுக்கு உரியன ஆயின.

தீர்மானிக்கப்பட்ட பண்களும் இராகங்களும்:

கொல்லி — நவரோசு; சீகாமரம் — நாதநாமக்கிரியை; செவ்வழி — யதுகுல காம்போதி; கௌசிகம் — பைரவி; பஞ்சமம் — ஆகிரி; செந்துருத்தி — மத்யமாவதி; வியாழக்குறிஞ்சி — சௌராஷ்டிரம்; தக்கேசி — காம்போதி; காந்தாரபஞ்சமம் — கேதார கௌளம்.

நட்டபாடை என்னும் பண்பற்றிப் பெரும்பான்மையோர் நாட்டை என்றும் சிலர் நாட்டைக் குறிஞ்சி என்றும் கருதினர்.

கொல்லிக் கௌவாணம், இந்தளம், குறிஞ்சி ஆகிய பண்கள் ஆராயப்பட்டு இவற்றின் ஆராய்ச்சி அடுத்த ஆண்டிற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

விழாவின் நிறைவில் பண் ஆராய்ச்சி நோக்கம் பற்றிச் சண்முகனார் விரித்துரைத்தார்:

"சென்ற நான்கு நாள்களாகக் கூடித் தேவாரப் பண்களைப் பற்றிச் சில பேசினோம். சில பண்களுக்கு முடிவு கண்டோம். சில பண்களை மேலும் ஆராயவேண்டி ஒதுக்கிவைத்தோம்.

இந்த ஆராய்ச்சியின் நோக்கம் எனன என்பது பற்றி முதல்நாள் கூட்டத்தில் நான் குறிப்பிட்டேன். இந்த ஆண்டில் தேவாரப் பண்களை ஆராயவேண்டும் என எண்ணிய போது எனக்குக் கொஞ்சம் அச்சம் ஏற்பட்டது. இசைவாணர்களும் ஓதுவார்களும் தங்கள் தங்கள் துறைகளில் வல்லவர்களே என்றாலும், ஆராய்ச்சி என்பது அவர்களுக்குப் புதிது. ஏன்? ஆராய்ச்சி என்பதே ஒரு தனிக்கலை. எந்த விஷயத்தைப் பற்றி எப்படி யார் ஆராயவேண்டும் என்று அதற்குச் சில விதிகள் உண்டு. ஆராய்ச்சி என்பதே 100 ஆண்டுகளுக்குள்ளாக மேல்நாட்டில் உண்டாகி வளர்த்த ஒருகலை. எந்த ஆராய்ச்சியிலும் ஒரு முடிவு கண்டோம் என்று எப்போதும் முடிவாகச் சொல்லிவிட முடியாது. 20 ஆண்டுகளுக்கு முன்பு கண்ட முடிவு இப்போது மாறிவிடும். பழையதாகிவிடும். எல்லாத் துறை களிலும் கரைகண்டு விட்டேன் என்று கூறும் மனிதன் ஆராய்ச்சித் துறையில் தோல்வியையே அடைந்து விடுகிறான். எனவே, சென்ற நான்கு நாள்களாக நாம் கூடி ஆராய்ந்த முடிவுகளைக் கொண்டு யாரும் பயந்துவிட வேண்டாம். மேலும் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட வித்துவான்கள் யாவரும் எட்டுப்பண்களுக்கு முடிவு கட்டிவிட்டோம் என்று சொல்லிவிடக்கூடாது.

இந்தப்பண் ஆராய்ச்சி பற்றி அஞ்சினேன் என்று துவக்கத்தில் குறிப்பிட்டேன். இந்தக் கூட்டங்களின் நடவடிக்கைகளைக் கண்டபிறகு எனக்குத் தைரியம் வந்தது. ஆராய்ச்சியில் நீங்கள் மேற்கொண்ட விதமும் காட்டிய திறமையும் எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தன. நம்மக்களுக்குக் கலைத்துறையில் போது மான தைரியமும் திறமையும் இருக்கின்றன என்பதைக் காண எனக்கு மிகவும் திருப்தி.

ஒரு பண்ணைப்பற்றி நாம் பத்து ஆண்டுகள் கூடி ஆராய்ந்து முடிவு கண்டாலும் கவலை இல்லை. அப்பண்ணின் உற்பத்தியை உண்மையாகக் காண வேண்டும். அதாவது இந்தப் பண்ணைச் சம்பந்தர் அந்தக் காலத்தில் இப்படிப் பாடினார் என்ற உண்மையைக் காண வேண்டும்.

நேற்று திரு. ப. சுந்தரேசன் குறிஞ்சிப் பண்ணே இக்காலக் குறிஞ்சிராகம் என ஆதாரம் காட்டிப் பேசினார். சொற்கள் இரண்டும் ஒன்றாக இருக்கும் போது, இசையும் ஒன்றாக இருந்தால் ஏன் அதனை ஒப்புக் கொள்ளக் கூடாது? இரண்டும் தமிழ்ச் சொற்கள் தாமே! வேறு மொழிச் சொற்களாக இருந்தால் சந்தேகப்படலாம். எனவே இந்தப்பண் இசை ஆராய்ச்சியை ஒரு தனிப்பகுதியாகத் தமிழ் இசைச் சங்கத்தில் வைத்து நடத்தலாம் என நினைக்கிறேன்.

இன்னொன்று, தேவாரத்தில் சங்கீதத்தைப் போல அதிகமாகச் சுரம் பாடுவது சரியன்று என்று நினைக்கிறேன். சுரம்பாடுவ தென்பது கணித சாஸ்திரம் போன்றது. கணித சாஸ்திரத்தில் உணர்ச்சியைப் பார்க்க முடியுமா? எனவே சுரம் போட்டுப் பாடுவதன் மூலம் பாடல் உணர்ச்சி பாவத்தைக் கெடுத்துவிடக் கூடாது. நம் முயற்சிகள் 'கிணறுவெட்டப் பூதம் புறப்பட்ட' கதையாகிவிடக் கூடாது.

தேவாரம் என்றால் ஏதோ அது மட்டமானது, பண்டாரப்பாட்டு என்று சொல்லப்படும் பழிமொழி நீங்க வேண்டும். தேவாரம் இசைக்கலை நிரம்பியது. அதனை நாம் உணர்ந்து போற்ற வேண்டும். மற்றமொழிகளை விடத் தமிழில் ஒரு விசேஷம் உண்டு. தமிழ்ப் பாடல்கள் அதாவது இசை என்பது இலக்கியத்திற்கும் இலக்கணத்திற்கும் கட்டுப்பட்டது. இசை வாணர்கள் இலக்கிய இலக்கணப் பயிற்சியில் சிறந்து முன்னேற வேண்டும். அப்போதுதான் இசையின் உண்மையைக் காணமுடியும்.

பண்களுக்கு இசை வகுத்து நல்ல முறைகளில் கோயில்களில் அவற்றைப் பாடச் செய்ய வேண்டும். அதுவே நம் பெருந்தொண்டு ஆகும். நாங்கள் ஊக்கம் குறைந்தாலும் இசைவாணர்கள் எங்களுக்கு ஊக்கம் ஊட்டித் தமிழ் இசையை வளர்க்க வேண்டும்" என்றார்.

பண் ஆராய்ச்சியின் இரண்டாம் கூட்டம் 27.12.50 முதல் 29.12.50 முடிய அதே மண்டபத்தில் நிகழ்ந்தது.

மூன்றாம் கூட்டம் 26.12.51 முதல் 29.12.51 முடிய எழுமூர் 'மியூசியம் தியேட்ட'ரில் நிகழ்ந்தது.

இரண்டாம் கூட்டத்தைத் திருப்புகழ்மணி கிருட்டிணசாமி ஐயர் தொடங்கி வைத்தார். பி. சாம்பமூர்த்தி தலைமையேற்று நடத்தினார்.

வரவேற்பு சண்முகனார் வழங்கினார். திருவாசக ஆராய்ச்சியும் அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்று அவர் உரையில் குறித்தார்.

"பழம்பஞ்சுரம் – சங்கராபரணம்; சாதாரி – பந்துவராளி; புறநீர்மை – பௌளி ராகத்தின் சாயலுடைய அந்தர காந்தாரத்துடன் கூடிய பூபாளம்; மேகராகக்குறிஞ்சி – நீலாம்பரி; அந்தாளிக்குறிஞ்சி – சாமா; திருத்தாண்டகம் – அரிகாம்போதி" எனப் பழம்பண்கள் புதுராக மாகியமை அக்கூட்டத்தில் ஆயப்பட்டது. சில பண்களை உட்குழு ஆயவேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

இவ்வாராய்ச்சிக் கூட்டத்தின் இடையே, இசைபற்றி டி.கே. சிதம்பர நாதமுதலியார், இரா.பி. சேதுப்பிள்ளை, மு. வரதராசனார், ம.ப. பெரியசாமித்தூரன் ஆகியோர் உரையாற்றினர். கல்கி நன்றியுரை கூறினார்.

மூன்றாம் கூட்ட வரவேற்புரையில் சண்முகனார், "இந்த ஆராய்ச்சி கடல் போன்றது. இதில் நாம் மிக எளிதில் நீந்திவிடலாம் என்பதை மறந்துவிடல் வேண்டும். அயர்ச்சி யுறாமல் மேலும் மேலும் ஆராய்ந்தால் பல உண்மைகள் புலப்படும்.

இன்ன பண்ணிற்கு இன்னராகம் என்று முடிவு கட்டி விட்டால் மட்டும் நம் ஆராய்ச்சி முடிவடைந்து விடாது. இதுதான் நம் எதிர்காலத்தில் செய்யப்போகிற மகத்தான ஆராய்ச்சியின் ஆரம்பம் என்று கருத வேண்டும்" என்றார்.

1952 இல் பண் ஆய்வுக் கூட்டம் நிகழவில்லை.

1953 இல் நான்காம் கூட்டம், அண்ணாமலை மன்றத்தில் நிகழ்ந்தது. அது முதல் தொடர்ந்து பண்ணாய்வுக் கூட்டம் அங்கேயே நிகழ்ந்து வருகின்றது.

பண்ணாய்வில் உள்ள சிக்கலகளைக் குறித்து ஆறாம் கூட்டத்தைத் தொடங்கி வைத்த அறிஞர் மு.வ. குறிப்பிட்டார்:

"ஐந்து ஆண்டுகளாக நாம் எவ்வளவோ முயன்றும் சில உண்மைகளைக் காணமுடியாமல் இடர்ப்படுகின்றோம். காந்தாரம், பியந்தைக் காந்தாரம், கொல்லி, கொல்லிக் கௌவாணம் என்னும் நான்கும் தனித்தனிப் பண்களாகத் தேவாரத்தில் குறிக்கப்பட்டிருக்க நான்கின் இசையிலும் வேறுபாடு புலப்படாமல் இன்று திகைக்கிறோம். தக்கராகம், தக்கேசி என்பவற்றிடையிலும் போதிய

தெளிவு பிறக்கவில்லை. ஆதார நூல்களை இழந்து விட்ட குறையே இவற்றிற்குக் காரணம் எனலாம். ஆயினும், இந்த அளவில் நின்றேனும் ஆராய்ச்சி செய்ய உறுதுணையாக இருப்பவை ஓதுவார் பரம்பரை அளிக்கும் சான்றுகளே ஆகும். அந்தச் சான்றுகளு) இல்லையாயின் இயற்றமிழின் சான்றுகள் போதாமல் பஎ ா ஆராய்ச்சி, இருளில் தேடுதலாக முடிந்திருக்கும்.

சீர்திருத்தத்திற்குச் சிறிதும் இடம் தராமல் பழமையை விடாமல் போற்றுதல் பற்றி ஓதுவார்கள் மேல் குறை கூறுதல் உண்டு. ஆனால், **தமிழ்ப் பண்களைப் பற்றி இன்று ஏதேனும் அறிய முடிகிறது என்றால் அவர்களிடம் உள்ள அந்தப் பழமைதான் காரணம் *எனலாம். அதற்காக இன்று அவர்களுக்கு நன்றி கூற வேண்டி* யுள்ளது"** என்றார். பண் ஆய்வின் முப்பதாம் கூட்டத்தைத் தொடங்கி வைத்த வ.சுப. மாணிக்கனார், கடந்த காலப் பண்ணாய்வுத் திறப்பாட்டைத் தொகுத்துரைத்தார் (25.12.'79):

பண்ணாராய்ச்சியின் தொடக்க மாநாடுகள் பழம் பண்கட்குரிய புதிய இராகப் பெயர்கள் எவை என்று ஒத்துப்பார்த்து முடிவு கட்டுவதிலேயே கருத்தைச் செலுத்தியுள்ளன.

முல்லைப்பண் மோகனமாம்; கோடிப்பாலை சங்கராபரணமாம்; அரும்பாலை கரகரப்பிரியாவாம்; செம்பாலை அரி காம்போதியாம்; செவ்வழிப் பாலை யதுகுல காம்போதியாம்; படுமலைப்பாலை கல்யாணியாம்; மேற் செம்பாலை நடைபைரவியாம்; பஞ்சமம் ஆகிரியாம்; செந்துருத்தி மத்தியமாவதியாம்; சாதாரி பந்துவ ராளியாம்; மேகராகக் குறிஞ்சி நீலாம்பரியாம்; புற நீர்மை பூபாளமாம்; – என்ற பண் இராக ஒப்புமைகளால் பெயர்கள் மாறினாலும் தமிழிசையின் மறுபிறப்பே தென்னாட்டுக் கருநாடக சங்கீதம் என்பது எண்பிக்கப்பட்டது. இதனால் பண்குழு தமிழ்மானத்தைக் காத்துத் தந்தது என்று நன்றியுணர்வோடு பாராட்டுகிறேன்.

பின் நடந்த பண் மாநாடுகளில் சிலப்பதிகாரம், சிலப்பதிகார உரைகள், விபுலானந்த அடிகளாரின் யாழ்நூல் முதலியன சிறப்பான ஆய்வுக்கு மேற்கொள்ளப்பட்டிருப்பது நல்ல இசைத் தடத்தில் கால் வைத்திருக்கிறோம் என்பதனைக் காட்டுகிறது.

ஏழ் பெரும்பாலைகள், ஐந்து சிறு பாலைகள், நால்வகை யாழ், இளிக்கிரமம், தாரமே முதல் நரம்பு, குரல் திரிபு, வலமுறை,

இடமுறை, குரல் இளி யுறவு, வம்புறு மரபிற் பாலை, வட்டப்பாலை, அரும்பாலை, அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல், வண்ணப்பட்டடை, தாரத்தாக்கம், யாழுக்கும் பண்ணுக்கும் உள்ள தொடர்பு முதலான நுணுக்கங்களை வீணை கோமதி சங்கர ஐயர், டாக்டர் இராமநாதன், குடந்தை சுந்தரேசனார், பேராசிரியர் வெள்ளைவாரணர் முதலான பெருமக்கள் விளக்கியுள்ளனர். எனவே பண்ணாராய்ச்சி உண்மையான உயர்ந்த தரத்திலும் தடத்திலும் ஓங்கிச் சென்றிருப்பதைக் காண்கிறோம்" என்கிறார்.

இனி, மேலாய்வு யாதாக வேண்டும் என்பதையும் அவ்வுரையில் வ.சுப.மா. குறிப்பிட்டார்:

"இது காறும் இருந்துவரும் தமிழிசை இயக்கம் இனிஇசைத் தமிழ் இயக்கமாகவும் மாற வேண்டாமா?

உருப்படிகள் மட்டும் தமிழாக மாறினாற் போதுமா?

அத்தமிழுக்குள், இசைத்தமிழின் படியும் அமையவேண்டாமா?

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் சாரங்க தேவரின் சங்கீத ரத்னாகரமும் 17 ஆம் நூற்றாண்டில் வேங்கடமகியின் சதுர்த்தண்டிப் பிரகாசியையும் அகோபிலரின் சங்கீத பாரிசாதமும் இன்னபிற சங்கீத லட்சண நூல்களும் வடமொழியில் தமிழகந் தாண்டி எழுதப்பட்டவை. இச்சங்கீத இலக்கணங்கட்குத் தமிழில் சாகித்தியம் செய்வதுவா நம்முடைய நோக்கம்?

பாடல்கள் தமிழ் மொழியாகவும் இருக்கவேண்டும்; அவை இசைத் தமிழாகவும் இருக்க வேண்டும் என்ற தனித்தன்மையை நாம் கடைப்பிடிப்போமாக.

கருநாடக சங்கீதம், தமிழ்வழியாக இருக்கலாம், ஆனால், தமிழிசையைக் கருநாடக சங்கீதத்தின் அடிமையாக ஆக்கிவிடக் கூடாது. தந்தை சாயலை மகனிடத்துப் பார்ப்பதில் தவறில்லை. ஆனால், மகன் சாயலைத் தந்தைத் தன்மைக்கு மூலமாக்கி விடலாகாது.

நன்னூலையும் காரிகையையும் இலக்கண நூலாகக் கொண்டு சங்ககால இயற்றமிழை ஆராய்வது இமயப்பிழை என்பதனைப் புலவருலகம் அறியும். இதுவே பெரும் பிழையாயின், அயல் மாநிலங்களில் வடமொழியில் மிகப் பிற்காலத்து எழுதப்பட்ட சங்கீத ரத்னாகரத்தையும் சதுர்த்தண்டிப் பிரகாசிகையையும்

வைத்துக் கொண்டு இசைத்தமிழை ஆராய முற்படலாமா? இவை வரலாற்று விளக்கத்துக்குத் துணை நூலாகுமேயன்றி, இசைத் தமிழுக்கு மெய்ந்நூலாகா. சிலப்பதிகார இசையையும் தேவார இசையையும் அறிதற்குப் புதிய ஆள்வினைகள் வேண்டும்.

இசைத்தமிழ் பற்றி இன்னும் ஒரு கருத்து. சரிகமபதநி என்ற சுரங்கள் இசைத் தமிழுக்கு உரியவையா?

அரும்பத வுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் இவற்றை இசைத் தமிழுக்கு உரிய எழுத்துக்களாகக் காட்டியிருப்பது இடைக் காலப் பிறவரலாகும். இவற்றைச் சுரமாகவே பாடுமுறை எப்போது தோன்றிற்று என்று அறுதியிடுதற்கில்லை என டாக்டர் இராம நாதன் தம் சிலப்பதிகார இசைநுணுக்க விளக்கத்தில் சுட்டியுள்ளார். குடுமியான் மலைக் கல்வெட்டில் உள்ள இராகங்களுக்கும் தேவார இராகங்கட்கும் சம்பந்தமே இல்லை என்பது இசைப்பேரறிஞர் சாம்பமூர்த்தியாரின் கருத்து

"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ எனும்
இவ்வே ழெழுத்தும் ஏழிசைக் குரலே".

என்பது சேந்தன் திவாகரம் பொதிந்து வைத்திருக்கும் இசைக்குறிப்பு.

"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய"

என்று தொல்காப்பியம் நூன் மரபிற் கூறுவதில் இருந்து தமிழ் எழுத்துக்களையே ஏழிசை எழுத்துக்களாகவும் கொண்டிருக்க வேண்டும் என்று ஊகிப்பதில் தவறில்லை. இந்த அடிப்படையிலும் இசைத் தமிழை ஆராய்ந்து தமிழுருப்படிகளைப் பாட வேண்டும்.

இசைத் தமிழில் வேண்டாத ஒரு தன்மை இடைக்கால முதல் புகுந்திருப்பதாகக் காண்கிறேன். ஏழிசைகளையும் 12 இராசி வட்டம் என்னும் வீடுகளில் நிறுத்தும் முறை எப்போது வந்தது?

சிலப்பதிகாரத்தின் இருவகை யுரையாசிரியர்களும் பண்ணுக் கும் இராசிக்கும் உள்ள தொடர்புகளைப் பல்வேறு வெண்பா மேற்கோள் காட்டி விளக்கியுள்ளனர். சிலப்பதிகாரத்தில் இராசித் தொடர்புக்கு அகச் சான்று உண்டா?

'தொன்றுபடு முறையான் நிறுத்தி, இடைமுதுமகள் இவர்க்குப் படைத்துக் கோட் பெயரிடுவாள், குடமுதல் இடமுறையாக் குரல் துத்தம், கைக்கிளை யுழையிளி விளரி தாரமெனா, விரித்ரு பூங்குழல் வேண்டிய பெயரே'

இந்தச் சிலப்பதிகாரப் பகுதிக்கும் இராசிவட்ட விரிவுக்கும் பண்ணாராய்ச்சி மாநாடு இதுகாறும் தொடர்பு படுத்தி ஆராய்ந் திருப்பது இசைத்தமிழியல் ஆகாது என்பது என் கருத்து.

சங்கீத கலாநிதி முடிகொண்டான் வேங்கடராமையா அவர்கள் சுரங்கள் தாளங்கள் அவைகட்கும் கிரகங்கள் இராசிகள் இவைகட்கும் எண்ணிக்கையில் ஓர் ஒற்றுமை இருப்பதனால் படிப்பவர்குச் சுலபமாக அறிந்து கொள்ளும் பொருட்டே இம்மாதிரி சோதிடத்தில் உள்ள விஷயங்களை வைத்துக் கொண்டு இசையை விளக்கி யிருக்கிறார்கள் உரையாசிரியர்கள் எனவும் வேறு காரணம் ஒன்றும் இருக்க ஞாயமில்லை எனவும் அழுத்தமாகச் சொல்லியிருப்பதை நினைவூட்டுகிறேன்.

தமிழினம் கண்டு வளர்த்துப் பரப்பிய கலைகள் எண் ணிறந்தன. அவையன்றி எழுதிய இலக்கண நூல்களும் எண்ணவும் சொல்லவும் தொலையாதவை. அவைகளெல்லாம் ஏன் தொலைந்தன? எப்படித் தொலைந்தன? ஆடிப்பெருக்கில் ஓடவிட் டோம் என்பது நேற்று வந்த காரணம். இழப்புக்கு உண்மையான காரணத்தைக் கண்டு அதனை விலக்கினால் அல்லது உள்ள கலைகளும் பின்னொரு நாள் இழப்பாகிவிடும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

எப்போது தமிழ்க்கலைகட்குரிய தமிழ்ச்சொற் குறியீடுகளைக் கைவிட்டோமோ, எப்போது அக்குறியீடுகளெல்லாம் வடமொழிக் குறியீடுகளாக ஆயினவோ அங்ஙனம் ஆகிய வடமொழிக் குறிச் சொற்களையே எப்போது கற்கத் தொடங்கினமோ அப்போது தொடங்கிக் கலைக் கிழமை இழந்தோம். இழந்த இசை இலக்கண நூல்களைக் குறிப்பிடும் அடியார்க்கு நல்லார் தம் காலத்து இருந்த சிகண்டி, இசை நுணுக்கம், இந்திரகாளியம் முதலான இசைநூல் களைக் கூறுகிறார். பின்னர் அவற்றையும் இழந்தோம்.

இன்று கிடைக்கும் இசைத்தமிழ்க் குறிப்புகள் எல்லாம் இயற்புலவர்களும் உரையாசிரியர்களும் எழுதிக் காத்த குறிப்புகள், இடைக்கால இசைத்தமிழ்ப் புலவர்கள் முழுதும் வடமொழி

நூல்களைக் கற்றமையாலும் கற்பித்தமையாலும் இசைத்தமிழ் நூல்கள் படியெடுப்பாரற்றுச் சாகுபடியாயின என்பதனை இன்றைய இசைப்பேரறிஞர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

யாழ்நூல் தந்தை விபுலானந்த அடிகள் கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் முதலான நூல்களைக் காலமும் கயவரும் அழிக்க முன்றாராயினும் முக்காலமும் உணர்ந்த சேரமுனிவர் இவற்றினுட் பொதிந்த பொருள்களைக் காத்துக் கொடுத்துள்ளார் எனவும், தொலைந்த இசை நூல்களின் கருத்தனைத்தும் கண்ணாடி மலைபோலச் சிலப்பதிகார முத்தமிழ்க் காப்பியத்தில் கிடக்கின்றன எனவும் பெரிய நம்பிக்கைக்குரிய பற்றுக்கோட்டினை அருளியுள் ளனர்.

தொல்காப்பியம் சங்கவிலக்கியம் முதலான தொன்மை நூல்கள் இன்றுவரை யுள்ளனவே. காரணம் இயற்றமிழ்க் குறியீடுகளைக் கூடியவரை வடமொழியாக மாறாமல் இயற்புலவர்கள் காத்துக் கொண்டனர். தமிழிசையும் இசைத்தமிழும் நிலைபேறும் நல் வளர்ச்சியும் அடைய வேண்டும் என்பது நம் எல்லோர்தம் மாசற்ற விருப்பம். அதற்கு இனிச் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று.

தொல்காப்பியம் சங்கவிலக்கியம் சிலப்பதிகாரம் இவற்றில் வரும் இசைத்தமிழ்க் குறியீடுகளைக் கொண்டு, 'இளங்கோ இசை நுணுக்கம்' என்ற இசைத்தமிழ் நூலைப் படைக்க வழிசெய்ய வேண்டுகிறேன்.

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், எனவும் பண், பண்ணியல், திறம், திறத்திறம், எனவும் வட்டப்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை எனவும் வரும் இன்னோரன்ன தமிழ்க்குறியீடுகள் மீண்டும் இசைத்தமிழில் வாழ்வு பெற வேண்டும். யாழடிப்படையில் இசைத்தமிழ் நுணுக்கங்கள் எழுதப்பட வேண்டும். **தமக்கென ஓர் இசைத்தமிழ் நூல் இல்லாவிடின் தமிழிசை இயக்கத்துக்கு ஆணிவேரும் வேர்விட்டுக் கிளைத்தற்குரிய உரமண்ணும் இல்லாது போய்விடுமோ என்று அஞ்சுகிறேன்",**

என்று இரங்கிக் கூறினார். தாம் உணர்ந்து கண்டு ஓதிய குறிப்புக் கொண்டு உருவாக்கும் இசைச் சூழலையும் எடுத்துரைக்கு முகத்தான்,

"தமிழிசை இயக்கத்தை நிறுவிய வள்ளல் அண்ணாமலை அரசரின் நூற்றாண்டு விழாவினை 1981 இல் நாடு கொண்டாட இருக்கிறது. இவ்வரசரின் விழாவினை ஓராண்டு முழுதும் தமிழிசை விழாவாகக் கொண்டாடுவோம். அங்ஙனம் கொண்டாடும் முத்திரையாக 'இளங்கோ இசை நுணுக்கம்' என்ற இசைத்தமிழ் இலக்கண நூல் அரங்கேற்றப்படும் என்று பெரிதும் எதிர் பார்க்கிறேன். பண்ணாய்வு மாநாட்டில் கலந்து கொள்ளும் இசைப் பேரறிஞர்கள் இந்நூலுக்குரிய திட்டம் செய்ய வேண்டும் எனவும் தமிழிசைச் சங்கத் தலைவராம் டாக்டர் மகராசன் அவர்களும் அரசர் டாக்டர் முத்தைய வேள் அவர்களும் இந்நூற்படைப்புக்கு வேண்டும் உதவியெல்லாம் செய்ய வேண்டும் எனவும் பணிவோடும் நம்பிக்கையோடும் வேண்டிக் கொள்கிறேன்" என்றார்.

ஆக்கமான திட்டம் ஒன்றைத் தந்தால் ஆ! ஆ! என வரவேற்று அன்றே அத்துறையை எடுத்துரைத்த அவரை உள்ளிட்ட அறிஞர் களை ஒருப்படுத்தி ஆக்கப்பணியை நிறைவுறுத்தும் அமைப்பும் அரசும் தமிழினத்துக்கு வாயாமையால் வ.சுப.மா. வேண்டுதல், வேண்டுதல் அளவாகவே நின்று போனமை வரலாறு ஆயிற்று. இன்றும் கூட அக்கருவிகள் ஒழிந்தில. அவற்றை அந்நோக்கில் திரட்டித் தொகுத்து விரித்து நூலும் உரையுமாக ஆக்கிவைப்பின், அழுந்தக் கூறிய அண்ணல் வ.சுப.மா. எண்ணம் நிறைவேற்றப் பட்டதுடன், வள்ளல் அண்ணாமலையாரின் தமிழிசை யியக்கப் பணியும், மலையென நிலைபெறும் கடனாற்றியதாகவும் அமையும்.

இதுகாறும் பண்ணாய்வுக் கூட்டங்கள் 43 நிகழ்ந்துள (1992). அவற்றின் பயன்பாடு என்ன? எனின் அதனைத் தொகுத்து வழங்கியுள்ளார் ம.ப. பெரிய சாமித்தூரனார். அவர் தமிழிசைச் சங்கம் பண்ணாராய்ச்சிக் கூட்டம் ஆகியவற்றின் ஆட்சிப் பொறுப்பிலும் ஆய்வுத் திறத்திலும் இசைத் தமிழ்ப் படைப்புச் சீர்மையிலும் பங்காளர் ஆகலின் அவர் தொகுத்துக் கண்ட பயன்பாடு கொளத்தக்கதாம். பண் ஆராய்ச்சி வெள்ளிவிழா மலரில் 'பண் ஆராய்ச்சியும் அதன் பயனும்' என்பது அக்கட்டுரை:

பண் இராகமாயிற்று. பெயர்கள் மாற்றமடைந்தன. ஆனால், அடிப்படையான இசைமரபு நிலைத்து நிற்பதை இந்த இருபத்தைந்து ஆண்டு ஆராய்ச்சி மெய்ப்பித்துக் காட்டிற்று.

கௌசிகம் என்ற பண் அன்று இருந்தது; தேவாரப் பாடலில் இன்றும் இருக்கிறது. அதுவே பைரவி என்ற பெயரில் பிற்காலத்தில் வழங்கலாயிற்று என்பதையும் நாம் கண்டோம். இவ்வாறே பலபண்கள், இன்று வேறு பெயர்களில் வழங்குவதைத் தேவாரப் பாடல்கள் மூலம் அறிந்து இந்த உண்மை ஐயத்திற்கு இடமில்லாமல் தெளிவாயிற்று. இது பண் ஆராய்ச்சியின் மிகப்பெரிய பயனாகும்.

எனினும், நாம் இன்னும் தொடர்ந்து ஆராய வேண்டிய பகுதிகள் நிறைய உள்ளன. நமக்குக் கிடைத்த 23 பண்களிலும் சில பண்கள், இன்று ஒரே ராகத்தில் பாடப்படுவதை உணருகிறோம். எடுத்துக்காட்டாகக் கொல்லி, கொல்லிக் கௌவாணம், பியந்தை, பியந்தைக் காந்தாரம் ஆகிய நான்கு பண்களும் பெரும்பாலும் நவரோசு என்ற ராகத்தில் சில மாறுதல்களோடு பாடப்படுகின்றன. இவை நான்கும் தனித்தனி ராகங்களேயாகும். அவற்றை நாம் மேலும் ஆராய்ந்து கண்டு பிடிக்க வேண்டும். இதைப் போலவே வேறுசில பண்களையும் தனித்தனியாகக் கண்டறிய வேண்டும். சாளரபாணி என்பது போன்ற பண்கள் நமக்கு இன்னும் தெளிவாக வில்லை. மேலும் 103 பண்கள் எவை என்றும் அறுதியிட்டுக் கூறவும் இயலவில்லை. இவற்றில் ஒரு சில பண்களே நமக்குத் தெளிவாகின்றன" என்கிறார்.

பண்ணாராய்ச்சிக் கூட்டங்களில் தமிழிசை நூல்கள் வெளியீடு நிகழ்ந்துள.

இசைப் பேராசிரியர் தண்டபாணி தேசிகரின் தமிழிசைக் கட்டுரைகள், என்னும் நூல் பண்ணாராய்ச்சிப் பத்தாம் கூட்டத்தில் (28.12.59) வெளியிடப்பட்டது. அவ்வாறே தண்டபாணி தேசிகரால் இசையமைக்கப்பெறற 'தேவாரத் திவ்வியப் பிரபந்தத் திருப்புகழ்ப் பாடல்கள்' என்னும் நூல் பண்ணாராய்ச்சிக் கூட்டத்தின் 17 ஆம் ஆண்டில் (23.12.66) வெளியிடப்பட்டது.

பண்ணாய்வு நிகழ்ச்சியுடன் சில சிறப்பு நிகழ்ச்சிகளும் அவ்வப்போது நிகழ்ந்துள்ளன.

நவசந்தி எனப்படும் வழக்கிழந்த ஒருவகை நடனம் நான்கு, ஐந்தாம் ஆண்டுகளில் நிகழ்ந்தது.

சாரங்கி, தூரியவாத்தியம், சன்னவுடல், சங்கு, முகவீணை, கிள்ளையாழ், தக்கை, கச்சபி, சததந்திரி, சுரமண்டலி முதலிய

பழமையான இசைக்கருவிகள் பல்வேறு கூட்டங்களில் இசைத்துக் காட்டப்பட்டுள்ளன.

விராலிமலைக் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, செந்தில் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி ஆகிய குறவஞ்சிகள் நடித்துக் காட்டப்பட்டுள்ளன.

சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை, மணிமேகலை, சிந்தாமணி ஆகிய நாட்டிய நாடகங்கள் ஆகியனவும் ஆடப்பட்டுள்ளன.

பண்ணாராய்ச்சி வல்ல அறிஞர்களை 'இசைப்பேரறிஞர்' என்னும் விருது வழங்கிச் சிறப்பிக்க வேண்டும் என்னும் திட்டத்தைத் தமிழிசைச் சங்கம் தன் பதினைந்தாம் ஆண்டு விழாவில் மேற்கொண்டது (21.12.57).

இப்பட்டம் பெறுபவர்க்கு இப்பட்டம் பொறித்த நன்மதிப்புமலர், பொற்பதக்கம், தமிழிசைச் சங்கப் பெயர் பொறிக்கப்பட்ட வெள்ளித்தட்டம் ஆகியவை வழங்கப்படும்.

முதல் ஆண்டில் (1957) எம்.எம். தண்டபாணி தேசிகர், பி. சாம்பமூர்த்தி, கும்பகோணம் இராசமாணிக்கம் பிள்ளை ஆகிய மூவரும் பெற்றனர். பின்னர் (59 முதல்) ஆண்டுக்கு ஒவ்வொருவர் 'இசைப்பேரறிஞர்' விருது பெறுவாராகி வருகின்றனர்.

பண்ணாய்வுக் கூட்டங்கள் பற்றிய இச் செய்திகள் இவ்வளவில் நிற்க, இவற்றின் நிகழ்ச்சி விளக்கங்களாகிய அறிக்கைகளைப் பற்றிய ஓர் அறிக்கையை அறியலாம். அதனைத் தருபவர் அதன் பதிப்பாசிரியராகிய பேரா. லெ.ப.கரு. இராமநாதனார்:

"பண் ஆராய்ச்சிக் கூட்டங்களின் நிகழ்ச்சிகள் பற்றிய அறிக்கைகள், ஆண்டுதோறும் தமிழிசைச் சங்கத்தினால் வெளியிடப் பெற்று எல்லாருக்கும் அளிக்கப்பெறுகின்றன.

இதுவரை (1974) பதினேழு அறிக்கைகள் வெளிவந்துள்ளன. இவ்வாராய்ச்சிக் கூட்ட நிகழ்ச்சிகள் முழுதும் ஒலிப்பதிவு செய்யப்பெற்று அதிலிருந்து இவ்வறிக்கைகள் செம்மையாகவும் முழுமையாகவும் உருவாதலால் இவ்வறிக்கைகளில் இக் கூட்ட நிகழ்ச்சிகள் முழுதும் குறைவின்றி அமைந்துள்ளன. இவ்வறிக்கைகளில் பண் ஆராய்ச்சிக் கூட்டங்களின் வரவேற்புரைகள், தலைமையுரைகள், தொடக்கவுரைகள், சிறப்புரைகள், நன்றியுரைகள், இக் கூட்டங்களில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் பற்றிய உரைகள், சிறப்பு

நிகழ்ச்சிகள் பற்றிய விளக்கங்கள், இசை அமைக்கப்பெற்ற தேவாரப்பாடல்கள் முதலிய எல்லாம் அடங்கியுள்ளன.

இவ்வாராய்ச்சிகளில் அறிஞர்கள் கூறிய கருத்துக்கள், எதிர்க் கருத்துக்கள், எடுத்துக்காட்டாக ஓதுவார்களால் பாடப்பெற்ற பாடல்கள் முடிவுகள் முதலிய எல்லாம் விடாமல் இடம் பெற்றிருத்தலால், இசை ஆராய்ச்சியின் சிறந்ததோர் உறைவிடமாக இவ்வறிக்கை நூல்கள் பெரிய உருவில் விளங்குகின்றன.

இதுவரை வெளியாகியுள்ள அறிக்கைகளில் அச்சில் பெரிய அளவில் சற்று ஏறத்தாழ 1300 பக்கங்கள் உள்ளன. இதுவரை நிகழ்ந்துள்ள பண் ஆராய்ச்சிக் கூட்டங்களின் வரவேற்புரை, தொடக்கவுரை, தலைமையுரை, சிறப்புரை, நன்றியுரை ஆகிய வற்றை நிகழ்த்திய சான்றோர்களின் பெயர்ப்பட்டியல், இக்கட்டுரையின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இவர்களின் பேருரைகள் பொன்போற் போற்றத்தக்க பெருமதிப்புடையன வாகும்" என்பது அது.

1974 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்ளவற்றையும் இவற்றோடு இணைத்துப்பார்த்தால் இன்னொரு செம்பாதியாய் ஏறத்தாழ 6000 பக்க அளவு தேறும் அல்லவோ!

அண்ணாமலை மன்றம்:

இனி, அண்ணாமலை மன்றம் சென்னையில் உருவாக்கம் பெற்றதைக் காணலாம்.

சென்னையை அன்றித் தமிழகம் தழுவிய அளவில் உள்ள இசைவாணர் எவர்க்கும், அரசர் அண்ணாமலை மன்றம் இந்நாளில் தெரியாதிருத்தல் இயலாது. சென்னைவாழ் பொதுமக்களும், சென்னை நகர் செல்லும் பொதுமக்களும் பாரிமுனை, பூக்கடை, குறளகம், திருவள்ளுவர் பேருந்து நிலையம், முறைமன்றம் ஆகிய பகுதிக்குச் சென்று மீள்வராயின் அண்ணாமலை மன்றம் கண்ணில் பளிச்சிடாமல் தீராது.

அம்மன்றம் ஒருவேளை பராக்குப் பார்வையில் படாமல் போய்விட்டாலும், அம்மன்றத்தின் முன்னர், அரசர் அண்ணாமலை திருவுருவத்தின் எழிற்சிலை 'என்னைப்பார்' என்று நின்று செல்ல வைக்காமல் தீராது!

தமிழிசைச் சங்கத்திற்கு நிலைத்ததோர் நிலையம் சென்னையில் வேண்டுமென அவர் அவாவினார். அது நிறைவேறச் செய்யும் பேறு, அவர் வழியில் பாடுபட்ட வழிஞர்க்கு உண்டாயிற்று.

இரா.க. சண்முகனார், முத்தையவேள், மு.அ. சிதம்பரம் செட்டியார் ஆகியோர் முயற்சியால் சென்னை அரசின் துணையால் மன்றம் இருக்கும் இடம் வாய்த்தது (1950).

இற்றைச் சூழலைப் பார்ப்பவர்க்கு 'இசை மன்றத்துக்கு ஏற்ற அமைதிச் சூழலான இடம் வேறு வாய்க்கவில்லையா?' என்றே எண்ணத் தோன்றும்! அதுதான் நகரநிலை! அன்று, அமைந்து சிறந்த அரங்கத்திற்கு ஏற்ற இடமாக இருந்தது தான்! இன்று, இச் சூழலால் நெருக்கப்பட்டுள்ளது.

மன்றத்திற்கு இடம் வாய்த்தது. கட்டுமானப் பணியும் தொடர்ந்தது. ஈராண்டுகளில் கட்டுமானப் பணி இனிது நிறை வேறிற்று. 21.10.52 இல் 'ராஜா அண்ணாமலை மன்ற'த் திறப்பு விழா நிகழ்ந்தது.

தமிழிசைச் சங்கம் தன் பத்தாம் ஆண்டுவிழாவை அண்ணா மலை மன்றத்தில் நடத்தியது. அதற்குப்பின்னர் அதன் இடந்தானே! வேறிடம் தேடவேண்டிய தேவை இல்லையே!

மன்றத் திறப்பு விழாவில் பங்கு கொண்ட சி. இராச கோபாலாச்சாரியார் தமிழிசைச் சங்கப் பத்தாம் ஆண்டு விழாத் தொடக்கவுரைஞராகவும் இருந்தார். அவர் தம் உரையில் மன்றத்தின் அமைப்புச் சிறப்பை விளக்கினார்.

"அண்ணாமலை மன்றம் என்னும் இந்தத் தமிழிசை மண்டபத்தின் அமைப்பு மிக அழகாக இருக்கின்றது. இதை அமைத்த வர்கள் திறம்பட வேலை செய்துள்ளார்கள். அளவும் அந்தமும் சரியாக இருக்கின்றன. வழக்கமாகச் சில மேடைகளை நான் பார்த்திருக்கிறேன். அவையெல்லாம் கிஷ்கிந்தா காண்டமாக இருப்பதைக் கண்டிருக்கிறேன். ஆனால் இந்த மண்டபம் அழகாகவும் சௌந்தர்யமாகவும் இருப்பது, மனத்திற்கு மகிழ்ச்சியை அளிக் கின்றது.

மேடையில் இருந்து இம் மண்டபத்தையும், இசைவிருந்துக்காக அமர்ந்திருப்பவரையும் பார்க்கும்போது, இம்மாபெரு மன்றத்தின் காட்சி உள்ளத்தைக் கவர்கின்றது. மன்றம் கலையழகோடு

விளங்குவது மாத்திரமன்றி அமைதியோடு அமர்ந்து இசை இன்பம் நுகர்வதற்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளது. இசையின் ஒலி அலைகள் மன்றத்தின் நாற்புறங்களிலும் உள்ளது உள்ளவாறே பரவிக், கேட்போர் செவியில் ஒலிக்குமாறு அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கருவிகளால் விளையும் நன்மைகளை ரசிகர்கள் அறிவார்கள. மேடையில் இருக்கும் நான் சொல்ல இயலாது.

சுருங்கக் கூறுமிடத்து இம்மன்றம் அமைத்தவர்களின் நோக்கம், இசைமண்டபம் கலையழகோடு விளங்க வேண்டும் என்பது மட்டுமன்று, இசையை நாடி வருபவர்கள் சிரமமின்றி அமர்ந்து இசை இன்பம் அநுபவிக்க வேண்டும் என்ற கருத்துடனும் இதை அமைத்துள்ளார்கள் என்பது தெளிவாகின்றது. இந்த மண்டபத்தைச் சென்னை நகரத்திற்கு அண்ணாமலை அரசர் அளித்த பரிசாகவே நாம் பாராட்டுதல் வேண்டும். ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தமிழ் நாட்டிற்குச் செய்துள்ள அறப்பணிகளும், அவர் திருப்பெயரும் என்றென்றும் புகழுலகில் நிலைபெற்றிருப்பதற்கு அறிகுறியாக இம்மன்றம் நிலைத்திருக்க வேண்டும்" என்றார்.

"பழந்தமிழ் மொழியில் மன்றம் என்பது ஊர் நடுவே உள்ள பொது இடமாகும். இன்று தமிழகத்தின் தலைநகராகிய சென்னையம் பதியின் நடுவே தமிழரின் சீர்மைக்கு ஒரு சான்றாக நிற்கும் இம்மாளிகை தமிழ்மக்கள் அனைவருக்கும் பொதுவுடைமை ஆதலால் இதனை மன்றம் என்று அழைப்பது சாலவும் நன்றே" என்றார் விழாத்தலைமை ஏற்ற இரா.பி. சேதுப்பிள்ளை. தமிழிசைச் சங்கத் தூணாக விளங்கிய ஆர்.கே. சண்முகனார் இவ்விழாவில் தோன்றவில்லையே என்னும் எண்ணம் இதனைப் படிப்பார்க்குத் தோன்றலாம். உடல்நலம் குன்றியிருந்த அவர் விழாவுக்குத் தம் வாழ்த்தினைக் கடித வழியே விடுத்தார்:

"செட்டி நாட்டு அரசரின் கருத்து, அழகியதொரு மண்டபமாக உருக்கொண்டு இன்று காட்சியளிக்கிறது. இம்மண்டபத்தைத் தமிழிசை, நாட்டியம், நாடகத்தின் சின்னமாகக் கொள்ளாது தமிழ்க்கலையின் சின்னமாகவே கொள்ளுதல் வேண்டும். இம்மண்டபத்தின் கம்பீரத் தோற்றம் தமிழர்கள் பெருமை அடைவதற்கு உரியது. தமிழ் அன்பர்கள் எல்லோரும் இவ்வழகிய மண்டபம் பூர்த்தியாவதனை வரவேற்க வேண்டும். பொதுவாகத்

தென்னிந்திய மக்களுக்கும் சிறப்பாகச் சென்னை வாசிகளுக்கும் இம்மண்டபம் சிறந்த பணியாற்றும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வழகிய மண்டபம் செட்டிநாட்டு அரசருக்கு உரியதொரு ஞாபகச் சின்னமாக மட்டுமன்றி, இதன் வழியாக இசை நாட்டியம் நாடகம் ஆகிய கலைகளின் ஒளிக்கதிர்களை யாண்டும் பரப்பி மக்களை மகிழ்விக்கும் என்பது உறுதியாகும்" என்பது அக்கடிதத்தின் ஒரு பகுதியாகும்.

அந்நாள் நிலையில் இம் மன்ற உருவாக்கத்திற்கு எட்டுலக்க உருபா செலவாயிற்றாம். அதில் முத்தையாவேள் தம் குடும்பச் சார்பில் வழங்கியது ஓரிலக்கம். எஞ்சியவை நன்கொடைப் பொருளாம்.

முன்னே தமிழிசைச் சங்கத்தின் அலுவலகமும் கல்லூரியும் ஓரிடத்திலும், மாநாட்டுக் கூட்டங்கள் இசையரங்குகள் பிற இடங்களிலும் நடைபெற்ற நிலைமாறி எல்லாமும் அண்ணாமலை மன்றத்திலேயே நிகழ வாய்ப்பாயிற்று. அன்றியும் பல்வேறு அமைப்புகள் கலைநிகழ்ச்சிகள் நடத்துதற்கும் மன்றம் உதவு கின்றது. அரசியல் சார்புடையவற்றுக்கு இடந்தராமையையும் மேற்கொண்டுள்ளது. இம்மன்றத்தில் இசைக்கருவி நிலையம் ஒன்று 1.1.56இல் திறக்கப்பெற்றது. அருமை மிக்கதும் பயன்படுத்தத் தக்கதுமாகிய இசைக்கருவிகள் ஆங்குத் தொகுத்து வைக்கப்பட் டுள்ளன. இக்கருவித் தொகுப்புப் போலவே இசைக்கலைஞர்களின் உருவப் படங்களைத் தொகுத்தும் மன்றத்தில் வைத்திருப்பது பொருத்த மானதும் போற்றத் தக்கதுமாகும்.

அண்ணாமலை மன்றத் திறப்பின் போதே அண்ணாமலை அரசர் உருவச்சிலை நிறுவப்படவில்லை. பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து 16.11.64 இல் அது நிறுவப்பட்டது. அதனைத் திறந்து வைத்தவர் அந்நாள் ஆளுநர் சயசாமராச உடையார் பகதூர் ஆவர். அச்சிலையை உருவாக்கிய சிற்பி டி.பி. இராய்சௌத்ரி ஆவர். அதன் அந்நாள் மதிப்பீடு உருபா 60,000.

அமைந்த இடத்தில் நிறுவப்பட்ட அண்ணாமலை மன்றம் நகர நெருக்கடியால் ஆரவாரச் சூழலுக்கு இடைப்பட்டது. இசை முதலிய கலை நிகழ்ச்சிகளுக்கு வேண்டிய அமைதிநிலை கெட்டது. அதனால் தமிழிசைச் சங்க வெள்ளிவிழா (1968)வை யொட்டி வெளியொலி உட்புகுந்து செவிப்புலனை உறுத்தாவகையில் மாற்று ஏற்பாடுகள்

செய்யப்பட்டன. புதிய அமைப்பு, ஒலியமைப்பு ஆகியன பற்றித் தனித்தனிக் கட்டுரைகள், உருவாக்கினவர்களால் வெள்ளி விழாமலரில் வரையப்பட்டுள. விரிவை அங்குக் கண்டுகொள்க.

மதுரைத் தமிழிசைச் சங்கம்:

இனி மதுரை மாநகரில் தோன்றிய 'தமிழிசைச் சங்கம்' பற்றிக் காணலாம்.

சென்னையில் தமிழிசைச் சங்கம் தோன்றி, ஆற்றிவரும் பணியை அறிந்த அளவில் பல்வேறு நகரங்களில் தமிழிசைச் சங்கங்கள் அரும்பியதையும், கல்லூரிகள் தோன்றியதையும் முன்னரே அறிந்துளோம். அந்நாளிலேயே மதுரையில் இசைவிழா நிகழ்ந்தது. அமைப்பும் தோன்றியது; ஆனால் நிலைபெறவில்லை. ஆகவே மதுரையில் தமிழிசைச் சங்கம் ஒன்று காணின் தென்னகமெல்லாம் தமிழிசை பரவ வாய்ப்பாகும் என அரசர் முத்தையவேள் எண்ணிச் செயல்பட்டார். அதனால் 21.1.1974இல் மதுரையில் தமிழிசைச் சங்கம் உருவாயிற்று. அதன் தலைவர் லெ.அழகு சுந்தரஞ்செட்டியார். சிறப்புச் செயலர் இராம. ஆறு.சுப்பிரமணியன் செட்டியார். உறுப்பினர் எண்மர்.

தமிழிசைச் சங்கத் தொடக்க விழாவில் தொடக்கவுரையாற்றிய தமிழவேள் பி.டி. இராசன், "சென்னைக்கு அடுத்தபடியாக மதுரையில் 1944இல் என் தம்பி சண்முகவேல் இராசன் முயற்சியால் தமிழிசைச் சங்கம் தோற்றுவிக்கப்பெற்று, மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் ஓராண்டு சிறப்பாக நடைபெற்றது. அதனை சர். ஆர்.கே. சண்முகம் செட்டியாரவர்கள் தொடங்கி வைத்தார்கள். எதிர்பாராத காரணங்களினால் அது தொடர்ந்து செயல்பட முடியவில்லை. அதற்கு முப்பது ஆண்டுகளுக்குப் பின், இன்று இச்சங்கம் தொடங்கப்பெற்றுள்ளது", என்று பழஞ் சங்கத்தைச் சுட்டிக்காட்டினார்.

தமிழிசை விழாவைத் தொடங்கி வைத்த மாநகரத்தந்தை முத்து, அறிஞர் அண்ணா, 'எது இசை?' என்று 1946இல் பேசிய பேச்சின் ஒரு பகுதியைச் சுட்டிக் காட்டினார்:

"சேரனுடைய கொலுமண்டபத்தில் இசைவாணர்கள்

'வாதாபி கண' பாடவில்லை.

சோழன் களிக்க 'சுனோ சுனோ' பாடவில்லை.

பாண்டிய மன்னன் அவையில் 'பலுகவே ஏமிரா' பாடவில்லை.
சேரநாட்டு இளம் மங்கையர் வேழத்தை விரட்டிய
காதலரை வாழ்த்திப் பாடியது தமிழில்தான்.
எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழமன்னர்கள்
சிறப்பைத் தமிழில்தான் பாடினர்.
பாண்டியனின் குமரிகளுக்குப் பாங்கிகள் பாடியது
தமிழ்ப் பாட்டுகள்தாம்.
கோவலன் உள்ளம் குழைய மாதவி பாடியது
மாருபல்கா ஏமிராவும் அல்ல; சல் சலோவும்
அல்ல; தமிழ்"

என்பது அது.

தமிழிசை பற்றிய வளமான செய்திகளை அறிஞர் மு.வ.தம் தலைமையுரையில் குறிப்பிட்டார். அண்ணாமலை அரசர் படத்தைச் சென்னைத் தமிழிசைச் சங்கத் தலைவர் தி.மு. நாராயணசாமிப் பிள்ளை திறந்துவைத்து உரையாற்றினார். சங்கத்தின் முதலாம் ஆண்டுவிழா 17.4.75இல் அறிஞர் ம.ப. பெரியசாமித் தூரன் தலைமையில் காந்தி கலையரங்கில் நிகழ்ந்தது. மதுரைப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் சிட்டிபாபு தொடக்கவுரையாற்றினார். அரசர் முத்தையவேள் மலர் வெளியிட்டார்.

விழாவில் வரவேற்புரையாற்றிய லெ. அழகு சுந்தரஞ் செட்டியார், "இது தோன்றிய ஆண்டிலேயே இதன் வளர்ச்சிக்கு அடிப்படையான கட்டடம் எழுந்து நிலைபெறுதற்கு ஓர் நல்ல இடத்தை நம் தமிழக அரசு அளித்து உதவியது" என்று குறிப்பிட்ட அவர், "புதிய கட்டடத்தின் கால்கோள்விழா 24.4.75இல் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள் அடிப்படைக்கல் நாட்ட இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றும் குறிப்பிட்டார். அவ்வாறே அமைச்சர் மாதவன் தலைமையில் கால்கோள் விழா நிகழ்ந்தது.

சிறப்புரை யாற்றிய முதல்வர் கலைஞர், "அண்ணாமலை மன்றம் சென்னையில் அமைக்கப்பட்ட இடம் நீதிமன்றத்திற்கு அண்மை. மதுரையிலும் முத்தையா மன்றம் நீதிமன்றத்திற்கு அண்மையிலேயே அமைக்கப்படுகின்ற காட்சியினை நாம்

காண்கிறோம். நீண்ட நெடுங் காலமாகத் தமிழுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் களைந்து நீதியை நாம் பெறுவதற்குப் போர்க் கொடியை ஏற்றினோம். அந்த நீதியை நாம் பெறுவோம் என்பதற்கு அடையாளமாகத்தான் நீதிமன்றங்களுக்கு அண்மையிலேயே சென்னையில் அண்ணா மலை மன்றமும், மதுரையில் ராஜா முத்தையா மன்றமும் அமைகின்றன என்று நான் கருதுகின்றேன் (கைதட்டல்).

இன்றைக்கும் கூட என்னதான் தமிழிசையில் கரைகண்ட வர்களாயிருந்தாலும், தேனொழுகப் பாடுகின்றவர்களாயிருந் தாலும் அவர்கள் கச்சேரி என்று சொல்லப்படுகிற ஒரு கலை நிகழ்ச்சிக்கு வருவார்களேயானால், இரண்டு தெலுங்குப் பாட்டாவது முதலிலே பாடினால்தான் எதிரே அமர்ந்திருக்கின்றவர்கள், தங்கள் இலக்கணப்படி இசை பயின்றவர்கள், மன்னிக்கவும், சங்கீதம் பயின்றவர்கள் என்று எண்ணிக் கொள்வார்கள் என்கிற பலஹீனத்தின் காரணமாக ஒன்று இரண்டு தெலுங்குப் பாட்டாவது பாடவேண்டும் என்று எண்ணுகிறார்கள். அல்லது முழுக்க முழுக்கத் தமிழிசையைப் பாடுகின்ற நேரத்திலேகூட, எங்கே தனக்குத் தெலுங்குப் பாட்டுப் பாடத் தெரியாமல் போய்விட்டது என்று கருதுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாக இடையிலே ஒரு தெலுங்குப் பாட்டாவது பாடுகிறார்கள். நான் கேட்டுக் கொள்வ தெல்லாம் பாடினால் தெலுங்காகவே பாடிவிடுங்கள்; இல்லையேல் தமிழாகப் பாடுங்கள் என்பது தான்" என்றார்.

"இசையில் மொழியில்லை. அந்த வாதத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அந்த இசைக்குரிய பாடல் அமைகிற நேரத்தில் அதற்கு நிச்சயமாக மொழி உண்டு; மொழி வேண்டும்" என்ற அவர்,

"'நலந்தானா' என்கிற தமிழ்ப்பாட்டை நாதசுரத்தில் வாசிக்கின்ற நேரத்தில் நாம் நலந்தானா என்ற பாட்டை ஏற்கனவே கேட்டிருக்கிற காரணத்தினால் வாசிப்பது நலந்தானா என்று சொல்கிறோம். அப்படி நலந்தானா என்கிற தமிழ்ப்பாட்டு உருவா காமல் நாதசுரக் கலைஞரே அந்த மெட்டில் ஊதிக்காட்டுவாரே யானால் 'நலந்தானா' என்ற பாட்டு என்று நாம் சொல்லமாட்டோம்" என்று விளக்கினார்.

மதுரைத் தமிழிசைச் சங்கம் இரண்டாம் ஆண்டுவிழா காந்தி கலையரங்கத்தில் 16.4.76 இல் ப.வ.ராம. குழந்தையன் செட்டியார் தலைமையில் நிகழ்ந்தது. மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் சை.வே. சிட்டிபாபு விழாவினைத் தொடங்கி வைத்தார். முத்தைய வேள் மலர் வெளியிட்டார்.

இசை நிகழ்ச்சிகள் எட்டுநாள்கள் மாலை தோறும் நிகழ்ந்தன. அவ்வாண்டிலேயே இன்னிசை நிகழ்ச்சி 4, நாடகம் 5, இன்னிசைச் சொற்பொழிவு 5, நாட்டிய நிகழ்ச்சி 2 – ஆகியவும் நிகழ்ந்தன.

மூன்றாம் ஆண்டு விழா காந்தி கலையரங்கில் 22.4.77 இல் நிகழ்ந்தது. உயர்மன்ற நடுவர் மகராசன் தலைமை யேற்றார். நடுவண் அமைச்சர் பா. இராமச்சந்திரன் தொடக்கவுரையாற்றினார். மாவட்ட ஆட்சித் தலைவர் சுந்தரம் மலர் வெளியிட்டார். முத்தையவேள் திருவிளக்கேற்றி வைத்தார். நிகழ்ச்சிகள் 7 நாள்கள் நிகழ்ந்தன.

'டப்பா சங்கீதம்' என்பது குறித்து மகராசனார் தம் உரையில் "இருபத்தைந்து பேர்கள் கூடி அந்தச் சங்கீதத்தை இசைக்கிறார்கள். அவர்கள் இசைக்கருவிகளைக் கொண்டு வருகிறார்கள். ரம்பம், கோடாலி, விறகுக்கட்டை ஆகியவற்றையும் மண்ணெண்ணெய் டின்களையும் கொண்டு வருகிறார்கள். இத்தனை அபசுரம் போதாது என்று உப்புத்தாள் ஒன்றை வைத்து உரசுகிறார்கள். அது சங்கீதமா?" என்றார். மேலும், "எங்கோ அயல் நாட்டில் இருந்து வந்த இந்த டப்பா சங்கீதம் காதில் உள்ள சவ்வைப் பிடித்து ஆட்டுவதோடு நின்று விடுகிறது. அதற்கு அப்பால் உள்ளத்தில் சென்று பாய்வதில்லை. ஆன்மாவைத் தொடுவதில்லை" என்றார்.

"தாய்மார்கள் தலையலங்காரம் செய்து கொண்டு திருப்பதி சென்று மொட்டையாகத் திரும்பி வருவது போல் தமிழிசை டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களுக்குச் சென்று திரும்பி வருகிறது. அதற்கு எல்லோரும் கைதட்டுகிறார்கள்.

"ஆண்டிப் பண்டாரம் நம்மைச் சேர்ந்தவர். ஆண்டிப்பண்டாரம் மெட்டில் வடநாட்டு இசை இப்போது பாடப்படுகிறது. அந்த மெட்டு நம்மைச் சேர்ந்தது" என்று குறிப்பிட்டார்.

200 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தில் நடந்தது. செர்மன் நாட்டின் பெரிய இசைவல்லுநர்கள் பாடியிருந்த செர்மன்

பாடல்களை இங்கிலாந்தில் இறக்குமதி செய்து இங்கிலாந்தில் பாகவதர்கள் பாடிக் கொண்டிருந்தார்கள். செர்மன் மொழி பாடியவர்களுக்கும் தெரியாது. கேட்டவர்களுக்கும் தெரியாது. ஆனால் நம்மவர்கள் இங்கு செய்வது போல் இங்கிலாந்திலும் அந்தப் பாடல்களை ரசித்துத் தலைகளை ஆட்டினார்கள். அதைப் பார், கார்லைல் என்ற அறிஞன் 'இசைத்தேவி இருக்கிறாளே. அவளுக்குக் கிறுக்குப் பிடித்துவிட்டது' என்று கூறினான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் வளர்ந்த தமிழிசையைப் பாதுகாக்க கார்லைல் போல நம் நாட்டில் ஒருவர் தோன்றினார். அவர்தாம் செட்டிநாட்டரசர் அண்ணாமலை செட்டியார் ஆவார். கார்லைல் சொல்லில் சொன்னதை இவர் செயலில் செய்து காட்டினார்" என்றார்.

சங்கத்தின் நான்காம் ஆண்டுவிழா 29.4.78 இல் 'ராஜா முத்தையா' மன்றத்திலேயே நிகழலாயிற்று. கட்டட வேலை நிகழ்ந்து கொண்டு இருக்கும் போதே நிகழ்ந்த விழா அது. அதனால் வரவேற்புரை கூறிய லெ. அழகு சுந்தரம் செட்டியார், "கண் கவரும் கலை அழகுடன் ராஜாமுத்தையா மன்றம் நம் தமிழ்இசைச் சங்கத்திற்கு உரிய மாமன்றமாக – கம்பீரமாக – வளர்ந்து வருகின்றது. இம் மன்றத்தில் முதல் முதலாகக் கொண்டாடப்படும் விழா" என்றார்.

"இந்த ராஜா முத்தையா மன்றத்தில் நம் தமிழ் இசைச் சங்கம் ஓர் இசைக் கல்லூரியை அமைத்து நடத்த இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறேன். அந்த இசைக் கல்லூரியில் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் ஆகியவற்றைப் பண்முறைகளுடன் கற்பிப்பதற்குச் சிறப்பிடம் அளிக்கப்படும். இசை நூலகம் ஒன்றும் இங்கு நிறுவத் திட்டம் இருக்கிறது. இந் நூலகத்தில் இசை பற்றிய பலமொழி நூல்களும் இடம் பெறுவதோடு, பண்முறைப்படி சிறந்த ஓதுவா மூர்த்திகள் பாடும் இசை நாடாக் களும் தொகுத்து வைக்கப்படும். சிறந்த இசைவாணர்களின் இசைப் பாடல்களின் நாடாக்கள் அனைத்தும் தொகுத்து வைக்கப்படும். இசைக்கருவிகள் சம்பந்தமான பொருட்காட்சிச் சாலை ஒன்றும் ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறோம். இந்த நல்ல திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றி ராஜா முத்தையா மன்றம் தமிழிசைக்கு ஒரு மைய

இடமாக விளங்கும் நாள் விரைவில் வர இருக்கிறது" என்று மன்ற எதிர்கால வளர்ச்சித்திட்டங்களை உரைத்தார்.

ஐந்தாம் ஆண்டுவிழா 29.4.79 இல் தொடங்கியது. அவ்விழாவில் அரசர் முத்தையவேளுக்குத் 'தமிழிசைக் காவலர்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. அப்பட்டத்தை வழங்கிப் பேசிய அந்நாள் முதல்வர் ம.கோ.இராமச்சந்திரனார்,

"செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் தமிழிசைச் சங்கத்தைத் தோற்றுவிக்காமல் இருந்திருந்தால், ஒரு புலவர் அம்முயற்சியில் ஈடுபட்டிருந்தால், புலவர் குழு அம்முயற்சியில் ஈடுபட்டிருந்தால், அந்தத் தமிழிசை இயக்கம் பணம், பதவி, சாதி உயர்வு இவைகளால் உறுதியாக அழிக்கப்பெற்றிருக்கும். செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் இவ்வியக்கத்தில் ஈடுபட்டமையால் பணத்தைக் கொண்டு யாராலும் அவரை விரட்ட முடியவில்லை. அவர் நெஞ்சு உரத்தோடு இவ்வியக் கத்தில் ஈடுபட்டமையால் பதவி கொண்டும் அதிகாரத்தைக் கொண்டும் விரட்ட முடியவில்லை. அச்சுறுத்தி அடிமைப்படுத்தவும் முடியவில்லை. அண்ணாமலையார் அவர்கள் தமிழன் என்ற எண்ணத்துடனும் துணிவுடனும் தமிழிசை இயக்கத்தில் ஈடுபட்ட காரணத்தால் அவரை எதிர்த்து நின்றவர்கள் தம் கருத்தை எதிர்த்து வெளியிட முடியாது தோல்வியடைந்து புறங்கண்டார்கள். கடைசியில் அண்ணாமலை யாருடன் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டார்கள்" என்றார்.

ஆறாம் ஆண்டு விழா மலரை வெளியிட்ட மதுரைமாவட்ட ஆட்சித் தலைவர் பி. துரைசாமி, தம் இளந்தைக்கால இசை நிலையை வெளியிட்டுத் தமிழிசை இயக்கப்பயனைச் சுட்டினார்:

"நான் சிறுபிராயத்தினனாக இருந்த சமயம். அப்போதெல்லாம் இந்தத் தமிழிசை பிரபலமடையாத காலம். நான் ஓர் இசை வாணரிடம் சென்று 'பாட்டுக் கற்றுக் கொள்ள வேண்டும்' என்று கேட்டேன். அவர் 'என்னபாட்டு வரும்' என்று கேட்டார். நான், 'தேவாரம் திருவாசகம்' என்று சொன்னேன்.

அதற்கு அவர் 'கர்னாடக சங்கீதம் என்ன தெரியும்? தெரிந்தால் பாடு' என்றும், உன்னுடைய வீட்டில் யாராவது கர்னாடகப் பாடல் பாடியிருக்கிறார்களா? என்றும் கேட்டார். 'யாருமில்லை'. 'உன் தந்தை, உன் பாட்டன் உன்னைச் சார்ந்தவர்கள் யாருமில்லை. உனக்கு மட்டும் எப்படி வரும்?'

'எப்படியிருந்தாலும் ஒரு பாட்டுப்பாடு, உனக்கு வருகிறதா என்று பார்க்கிறேன்' என்று சொன்னார்.

எனக்குத் தெரிந்த 'ஊனாய் உயிராய்' என்ற பாடலைப் பாடினேன்.

அவர் 'சங்கீத பரம்பரையில் வராத உனக்குப் பாட்டுவராது' என்று சொன்னார்.

அதற்கு நான் 'இந்தப் பாட்டைத்தவிர வேறு பாட்டுத் தெரியும். வேண்டுமானால் அதையும் பாடிக் காண்பிக்கிறேன்' என்று சொன்னேன்.

'உனக்குப் பாட்டு வராது' என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

அந்தப்பாட்டுப் பாடுகிறவர்கள் அப்போது இல்லை. 'உனக்குப் பாட்டுவராது' என்று அன்று அவர் சொன்னதால் நான் வேறு தொழிலுக்குப் போனேன்.

தமிழ்ப்பாட்டு எல்லோரும் எதிர்க்கக்கூடியகாலம். அப்படிப்பட்ட பாட்டு இப்பொழுது வருகிறது என்று சொன்னால் அது ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின் குடும்பத்தின் ஒரு முக்கியமான தொண்டுதான்" என்றார்.

ஏழாம் ஆண்டுவிழாத் தலைமையுரையாற்றிய குன்றக்குடியடிகளார் "வரவர எல்லா இடங்களிலும் நடந்து கொண்டு வருகிற தேவாரப் பாடசாலைகள் பூட்டப்பட்டு வருகின்றன. என்ன காரணம் என்றே நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

தமிழிசைப் பாடல் இயக்கம் நடத்திக் கொண்டிருக்கிற காலத்திலேயே இந்தி மெட்டுகள், கொச்சைத் தனமான மிருக இச்சையைத் தூண்டுகிற இசை நுழைகின்றன" என்று சுட்டிக்காட்டினார். அவ்விழாவில் பேசிய வ.சுப. மாணிக்கனார் இவ் வியக்கத்தின் வெற்றிக்குரிய மூலத்திட்டம் ஒன்றனை முன் வைத்தார். "தமிழிசை இயக்கம் நாடுமுழுவதும் தழுவிய ஒரு பள்ளி இயக்கமாகக் கல்வி இயக்கமாக, கலை இயக்கமாக ஆயிரம் இரண்டாயிரம் பேருக்காவது ஊதியம் வழங்கும் இயக்கமாக அமைய வேண்டும்" என்று கூறினார்.

பதினெட்டாம் ஆண்டில் சிறந்து கட்டிளங்காளையென நடையிட்டு வருகிறது மதுரைத் தமிழிசைச் சங்கம்.

1955இல் 'சென்னை சங்கீத நாடகச் சங்கம்' தோன்றியது. அது பின்னே 'தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம்' எனப் பெயர் கொண்டது. கடந்த முப்பத்தெட்டு ஆண்டுகளாகத் தமிழ்நாடு அரசின் உதவியுடன் இயங்கிவரும் இம்மன்றம் பல்வேறு நலப்பணிகளைச் செய்துள்ளது.

நலிவுற்ற கலைஞர்களுக்கு 'மாத ஊதியம்' வழங்கும் திட்டமுடையது இம்மன்றமாகும்.

'கலைமாமணி' என்னும் விருது தந்து கலைவல்லாரை ஊக்குவிப்பதும் இம்மன்றமாகும்.

பொற்கிழி வழங்குதல், சொற்பொழிவு செய்தல், மெய்ப்பித்துக் காட்டும் நிகழ்ச்சிகள் நடத்துதல், நூல்கள் வெளியிடுதல், நூல்வெளியீட்டுக்கு உதவுதல், பிறமாநிலங்களுடனும் பிறநாடு களுடனும் கலைப் பரிவர்த்தனை கொள்ளல் என்பனவெல்லாம் இம்மன்றப் பணிகளாய்த் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன.

சென்னை, மதுரை, காஞ்சி, வேலூர் முதலாய இடங்களில் அரசினால் ஏற்படுத்தப்பட்ட இசைக் கல்லூரிகள் இயல்கின்றன. தனியார் நடத்திவரும் கல்லூரிகளும் உள்ளன.

இனி, விரிவாக்கம் காணலாம்.

10. விரிவாக்கம்

விரிவாக்கம் என்னும் இப்பகுதி விரிவு மிக்கதும், மேலும் விரியத் தக்கதும் ஆகிய பகுதியாம்.

தமிழிசை இயக்கம் நாடளாவிய அளவில் விரிதற்கு வாய்ப்பாகப் பாட்டியற்றியோர், மேடையேற்றியோர், பாடினோர், நாடகர், திரையர் பற்றிய செய்திகள் எல்லாம் தொகுத்துரைக்கும் பகுதி இதுவாகும். ஆனால், அவ்விரிவு பெறாமல், சில செய்திகளும் சில குறிப்புகளும் சிலர்ச் சுட்டுதல்களுமாக இப்பகுதி வருகின்றது.

ஏனெனில், நிறை பகுதியாக அமையாமல், வளர் பகுதியாக அமைவது ஈதாகலின் என்க.

இன்னொன்றும் சுட்டுதல் சாலும்; 'தமிழிசை இயக்கம்' என்னும் நோக்கு இல்லாமல், இயல்பாகக் கொண்டு பாட்டு இயற்றியும் பாடியும் வரும் தமிழார்வலர் பெருக்கு, இயக்கப்பணி ஆகாமல், இயக்கப் பயன்பாடாகும் ஆதலால் என்றும் கொள்க.

யாழ்நூல்:

முன்னரே கருணாமிர்த சாகரம் பற்றிக் கூறியுள்ளோம். விபுலானந்த அடிகளின் பல்கலைக் கழகப் பொழிவு பற்றியும் குறித்துள்ளோம். இவண் தனித்துப் பெருமையுடன் சுட்டத்தக்க ஒரு நூல் அவர் இயற்றிய 'யாழ்நூல்' என்பதாகும்.

இசைத்தமிழில் அழுந்திய ஆய்வுடைய அடிகளாரின் யாழ்நூல், நச்சாந்துப்பட்டி பெ.ராம.ராம. சித. சிதம்பரம் செட்டியார் பொருள் உதவியால் 1947–இல் கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடாக வெளிப்பட்டது.

இந்நூல் பாயிரவியல், யாழுறுப்பியல், இசைநரம்பியல், பாலைத் திரிபியல், பண்ணியல், தேவாரவியல், ஒழிபியல் என ஏழு இயல்களைக் கொண்ட விரிவுடையது. பல்வேறு வகை யாழ் களையும், யாழுறுப்புகளையும் வண்ணப் படங்களாகக் கொண்டது.

திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில் ஆளுடைய பிள்ளை யார் திருமுன் கூடிய புலவர் பேரவையில் 5.6.47இல் அரங்

கேற்றமாகியது இது. அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்த காலத்து இசைக்கல்லூரிப் பொறுப்பும் கொண்டிருந்தார்.

இசைக்கல்லூரி ஆசிரியர் பொன்னையா பிள்ளையிடம் இசையமைப்பை அறிந்து கொள்ளவும் ஆய்வு செய்யவும் ஏந்தாயிற்று.

யாழின் அமைவைச் சங்க இலக்கியச் சான்று கொண்டே 1936இல் சென்னைப் பல்கலைக் கழக ஆய்வில் ஓவியமாய்த் தீட்டிக் காட்டினார்.

நாடகத்திறம் வல்ல அவர் இயற்றியது 'மதங்கசூளாமணி' என்னும் நூல். அது மதுரைத் தமிழ்ச் சங்கவாயிலாக வெளிப்பட்டது.

"சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையினுள்ளே யாழாசிரியன் அமைதிகூறும் இருபத்து ஐந்து அடிகளுக்கு இயைந்ததொரு விரிவுரையாக இந்நூல் (யாழ்நூல்) எடுத்துக் கொள்ளப்பட்டது" என்கிறார் ஆசிரியர் (395).

வழக்கொழிந்து போன இசைநூல் இலக்கணத்தை வகுத்துரைத்தும் நூற்று மூன்று என்னும் தொகையினவாகிய பண்களின் உருவத்தைத் தந்தும் அவைதம்மை இசைத்ததற்கு வேண்டிய அலகுநிலைகளைக் குறிப்பிட்டும், வழக்கொழிந்து பல்லாண்டு மறைந்துகிடந்த பழந்தமிழிசை மரபிற்குப் புத்துயி ரளித்தது என நூல் நிலை இயம்புகிறார் ஆசிரியர். பண்டையோர் கொண்ட இருபத்திரண்டு அலகுகள் (சுருதிகள்) இவையெனக் காட்டியதோடு, இருபத்து மூன்றாவதாக நின்ற பிரமாண சுருதி என்னும் விதியிசையின் அளவினையும், அது அளவிற் சிறிதா யினும் எண்ணிக்கைக்கு ஈரலகு பெறும் என்னும் பேருண்மை யினையும் நன்கு விளக்கிச் சுருதி வீணை என்னும் கருவியினைச் செய்து முடித்து, இடைக்காலத்தில் நேர்ந்த வழுவினை இந்நூல் களைந்ததென்பது மிகையாகாது. மேலும், ஐவகைக் கிரமங்களின் அமைதியைக் காட்டிக் கிரம வழக்கினைப் பண்டுபோல் என்றும் நிலவச் செய்தது இந்நூலேயாம்" என்றும் கூறுகிறார். (396)

குடுமியான் மலைக் கல்வெட்டுக் கூறுவது முளரியாழ் இசை என்றும், வேங்கடமகி கையாண்ட வீணை மீட்டுருக் காட்டியது யாழ்நூல் எனறும், ஆயிரம் நரம்புயாழ் அமைப்புக் குறிப்பினைக்

கூறுவதும், செம்முறைக் கேள்வி என்னும் யாழிசை மீட்டும் தமிழுலகில் பரவ இந்நூல் உதவுமென்றும் ஆசிரியர் அடிகள் உரைக்கிறார்.

'யாழ்நூல் என்னும் இசைத்தமிழ்நூல்' என்பதே இதன் முழுப் பெயர். இதன் இரண்டாம் பதிப்பு 1974 இல் கரந்தைத் தமிழ்ச் சங்க வாயிலாக வெளிப்பட்டது. வெளியிட்டுச் சங்கமும், யாழ்நூல் கருத்துகளைப் பரப்புதலில் ஈடுபாட்டுடன் ஒன்றியிருந்த அடிகளார் மாணவர் க. வெள்ளைவாரணனாரும் நினைவு கூர்தற்குரியர். தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தார், சென்னைத் தமிழிசைச் சங்கத் தார் முதலியவர்கள் இவ்விசை நூல் வெளியீட்டுப் பொருளுதவியில் முன்னின்றமை பாராட்டுக்கு உரியதாகும்.

யாழ்நூல் வெளிப்படு முன்னரே யாழ்நூல் கருத்துகள் சில கட்டுரை வடிவுற்றமையும் ஆய்வுப் பொழிவுகளாக வெளிப்பட்டமை யும் அறிந்துள்ளோம். அவ்வகையில் தமிழ்ப் பொழிலில், **'பண்ணும் திறனும்', 'குழலும் யாழும்', 'எண்ணும் இசையும்', 'பாலைத்திரிபு', 'சுருதி வீணை'**, என்பனவும், செந்தமிழ் இதழில், **'சங்கீத மகரந்தம் 'இசைக்கிரமம்', 'எண்ணலளவை'** என்பனவும் வெளிவந்தன.

இயற்புலமையும் இசைப்புலமையும் நாடகப்புலமையும் ஆகிய முப்புலமையும் ஒருங்கமைந்த பெருமக்களால்தாம் இத்தகைய கொடைகளை வழங்கமுடியும் என்பது யாழ்நூலால் புலப்படும்.

"தமிழ்க் கீர்த்தனங்களுள் பெரும்பாலான இயற்றமிழ் இலக்கண அமைதி இல்லாதனவாக இருக்கின்றன. சங்கீதப் பயிற்சியில் தேர்ச்சியுள்ள பெரியோர்களுள் பலர் தம்முடைய முழுநோக்கத்தை யும் சங்கீதத்திலேயே நிறுத்தி விடுவதால் அவர்களுடைய இற்றமிழ் அறிவு சுருங்கியதாக அமைகின்றது. தாமே கீர்த்தனங்களை இயற்றும் பல சங்கீத வித்வான்கள் எதுகையும் மோனையும் பொருத்தமாக இருந்தால் போதும் என்ற அளவிலே தங்கள் கீர்த்தனங்களை அமைத்திருக்கின்றனர். சிலரே இயற்றமிழறிவும் நன்கு பெற்று நன்மணம் பெற்ற பொன்மலர் போன்ற கீர்த்தனங்களை இயற்றி யுள்ளார்கள்" என்று தமிழிசைப் பாக்களை இயற்றிய இசைஞர் நிலையைப் பெரும் பேராசிரியர் உ.வே. சாமிநாத ஐயர் குறிப்பிடுகிறார்; இதனை எண்ணி மேலே செல்வோம்.

பாணர் கைவழி:

இயற்றமிழ்ப் புலமையும் இசைத்திறமும் வல்லார் இயற்றிய பாடல்கள் நனிசிறந்தோங்கும் என்பதுடன், அத்தகையவர் தம்மால் இசையுலகமும் புதுப்புதுப் பேறுகளையும் எய்தும் என்பதும் தெளிவாம்.

கருணாமிர்த சாகரம் என்னும் அரிய பெரிய இசைநூலை இயற்றியவர், இசைத் தோன்றல் தஞ்சை மு. ஆபிரகாம் பண்டிதர். அவர்தம் அருமை மகனார் வரகுணபாண்டியர். அவர், அவ்விசை நூல் 1203 பக்கங்களைப் புரட்டியும் பண்டைச் செங்கோட்டு யாழைப் பற்றி, "செங்கோட்டியாழே தற்காலத்து வீணையாகும்" என்னும் ஒரே ஒரு சிறு சொற்றொடர் மட்டுமே இருக்கக் கண்டும், அதனை வலியுறுத்த வேறு சான்றும் இல்லாமை கண்டும் அவ்வுண்மையைக் கண்டு கொள்ளப் பெருவேட்கையுற்றார்.

அதனால் பெரும் புலவர் எல். உலகநாத பிள்ளை அவர்களின் துணையொடு பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், சிந்தாமணி, புறநானூறு, மணிமேகலை, கலித்தொகை, கல்லாடம், பெருங்கதை முதலிய நூல்களை ஆய்ந்தார். தஞ்சை சரசுவதிமால் நூல்நிலையத்தில் 'மேளாதிகாரலெட்சணம்', 'தானநிகண்டு' 'சங்கீத ரத்னாகரம்' என்னும் சுவடிகளைத் தக்கார் துணையுடன் ஆய்ந்தார். இந்நிலையில் தம் தந்தையார் உரைத்த "செங்கோட்டியாழே தற்காலத்து வீணையாகும்" என்னும் உரை உண்மையிலும் உண்மையாதலைக் கண்டு உவந்தார். யாழும் வீணையும் ஒன்றே என்று தெளிவுற்ற நாளில், அவை வெவ்வேறு கருவிகளே எனத் தமிழ்ப் பொழிலில் (1941 மே) 'குழலும் யாழும்' என ஒரு கட்டுரை வந்தது. அதனை ஒட்டிக் குமரன் இசைமலரிலும் ஒரு கட்டுரை வந்தது (2.4.42). மேலும் ஆய்வில் அழுந்தினார். சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமிக்கவுண்டர், அந்நாளில் தமிழ்ப்புலமை நடாத்திய மொழிஞாயிறு பாவாணர் ஆகிய இருவரொடும் இரவு பகல் இரண்டு நாள்கள் மிகநுட்பமாக முழுதுற ஆய்ந்து 'முற்றும் சரியானதே' என்னும் ஒப்புகை பெற்று நூல் அச்சீட்டில் ஈடுபட்டார். அந்நிலையில் விபுலானந்த அடிகளின் யாழ்நூல் வெளிவந்தது (7.5.1947). அண்ணாமலை அரசரின் நினைவுமலரில் பேரா. பி.சாம்பமூர்த்தி எழுதிய கட்டுரையும், "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்" என்னும் மணிவாசகங் காட்டிய கட்டுரை ஒன்றும்

வெளிப்பட்டன. அவையெல்லாம் தம் முடிபை மாற்றத்தக்கவையாக இல்லாமையால் யாழும் வீணையும் ஒன்றே என்பதை வலியுறுத்தும் "பாணர் கைவழி எனப்படும் யாழ்நூல்" என்னும் பெயரிய நூலை வெளியிட்டார் (1950).

அந்நூல் முகவுரையில் எழுதுகிறார்:

'ஹாமில்டன் – பிரிட்ஜ்' என்ற ஆங்கில மூலச் சொல் சில ஆண்டுகளுக்குப்பின் 'அம்பட்டன் வாராவதி' எனத் தமிழிற்றிரிந்து இத்தமிழ்ச் சொல்லிற்கு நேர் ஆங்கிலச் சொல்லாகிய 'பார்பர்ஸ் – பிரிட்ஜ்' என்ற வேறுமாற்றுப் பெயர் அதே வாராவதிக்குத் தற்காலம் ஏற்பட்டிருப்பதை நாம் யாவரும் நன்கறிவோம்.

ஆனால், இன்றைக்குச் சில நூற்றாண்டுகள் கழிந்தபின், வாய்மொழியாய் வரும் இவ்வுண்மையினை அறியாத ஓர் ஆராய்ச்சி யாளன் எழுந்து, 'அறிஞர்களே! இப்போது 'பார்பர்ஸ் பிரிட்ஜ்' எனக் கூறப்படுவது சில ஆண்டுகளுக்கு முன் 'அம்பட்டன் வாராவதி' என்ற பெயர் பெற்றிருந்த வாராவதியாகும். ஆனால் நம்மில் சிலர் சென்னைக் கார்ப்பரேஷனின் மிகப்பழமையான ஆண்டு அறிக்கை யில் கூறப்பட்டுள்ள 'ஹாமில்டன் பிரிட்ஜ்' என்ற வாராவதியே பின்பு 'அம்பட்டன் வாராவதி என மாறிவிட்டது என எண்ணுவர். அதுதவறு. ஏன் எனின் அம்பட்டன் வாராவதியும் வேறு; ஹாமில்டன் வாராவதியும் வேறு. சென்னையின் பழமையான ஆண்டறிக்கையில் கண்டுள்ள 'ஹாமில்டன் – பிரிட்ஜ்' கடல் கொள்ளப்பட்டது. அது மிகவும் அழகு வாய்ந்த வாராவதியாகும்; அதனை இழந்தது நம் போகூழேயாகும். நாம் அதைப்போல் ஒன்றை அஃதிருந்த இடத்தில்தானே மிகப்பொருள் செலவாகிடினும் அஃதே போல் மற்றொன்றை அமைத்துவிட வேண்டுவது நம் யாவர் மீதும் வீழ்ந்த கடனாகும்' எனக் கூறி, கடற்கரையிலிருந்து ஓர் அரைக்கல் தொலைவில் கடலிற்குள் 'முன்பு அது இருந்த இடம் அங்கேதான்' என யாவரும் நம்பும்படி காட்டி, அவ்விடத்தில் வாராவதி ஒன்றைக் கட்டுவிக்க நம்மக்களிடம் மிகச் செல்வம் திரட்டி ஏமாற்றினால் எவ்வாறிருக்குமோ, அவ்வாறாக நம் பிற்காலத்தவரும் யாழ், வீணை என்ற இரு சொற்களின் உண்மைப் பொருளை அறியாது எங்கு ஏமாற்றம் பெற்று விடுவரோ என்ற பேரையப்பாடு என் உள்ளத்தே உதித்து இடைவிடாது வருத்திக் கொண்டே இருந்தது" என்கிறார். இவ்வுண்மையைத் தமிழ் மக்கள் அறிந்து விழித்தெழ வேண்டு

மானால் இதனை அச்சிட வேண்டும் என்று துணிந்து அச்சிட்டதை விரித்துரைக்கிறார் (16–17).

யாழே வீணை:

"ஏழு நரம்புகளையும் ஒன்பது இசைகளுக்குரிய திவவுகளைப் பெற்ற கோட்டினையும், நரம்புகளை வலித்தல் மெலித்தல் செய்யும் மாடகத்தினையும் வணரையும் ஆணிகளையும் பிறவற்றையும் உடைத்தாய் இருந்த நம் பண்டைச் செங்கோட்டியாழே தற்காலம் நம் கையகத்தில் வீணை எனப் பெயர் மாற்றம் பெற்று உலவுகிறது என்ற முடிவான உண்மையை நாம் ஏற்றுக் கொள்வதைத் தவிர்த்து வேறுவழியில்லை என நாம் ஐயமறக் காண்கிறோம்" எனப் பாணர் கைவழி, 'யாழே வீணை'யான செய்தியை உறுதிசெய்கின்றது (157 – 158).

"வீணை என்ற பெயரோ யாழ் என்ற பெயரோ வடமொழி வேதங்களில் இல்லை. அயல் நாட்டினின்று வந்த ஆதிகால ஆரியர்கள் கலையறிவு பெற்றவர்களாக இந்நாட்டிற்கு வரவில்லை. வெறும் நாடோடிகளாய் இங்குப் போந்தனர். வீணையையோ, யாழையோ அவர்கள் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை; இசைத்ததும் இல்லை என்கிறார் **பிரபரானந்த அடிகளார்.** (இந்திய இசையின் வரலாற்று வளர்ச்சி – பொழிவு – இங்கிலாந்து 1960).

இதனைச் சுட்டிக்காட்டும் அ. இராகவனார், "சிலர் வேதங்களில் *வாணா, கஸானா என்னும்* சொற்கள் உள்ளன; அவை வீணையைக் குறிப்பன என்பது கேலிக் கூத்தாம். அது, தமிழன் ஒருவன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழருக்குத் துப்பாக்கி செய்யத் தெரியும் என்று திருக்குறளில் வள்ளுவர், 'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை' என்று கூறியுள்ளார் என்று கூறுவதைவிட மட்டமானவாதம்" என எள்ளுகிறார் (இசையும் யாழும். 320).

பழந்தமிழிசை:

"பழந்தமிழிசை என்னும் இந்நூல் எழுதற்குக் காரணராய் அமைந்தவர், இந்தியன் ஓவர்சீஸ் பாங்கிச் செயல் தலைவர் (Agent) திரு.லெ. இலக்குவனார் ஆவர்.

தம் இல்லத்தில் இசை ஆராய்ச்சிக்கென்றே ஒரு சிறு கூட்டத்தைக் கூட்டுவித்து சங்கீத பூஷணம் S. இராமநாதன் அவர்களையும் குடந்தை சுந்தரேசன் அவர்களையும் என்னையும் இக்கூட்டத்திற் கலந்து கொள்ளச் செய்து, அவரவர் நிகழ்த்தியிருந்த ஆராய்ச்சியின் முடிவுகளை அறிந்து அவற்றின் குறைகளையும் கண்டு அவற்றைக் குறித்து மேலும் ஆராயும் ஆய்வைத் தூண்டியவர் இத்தமிழ்ப் பெருமகனாரே ஆவர்." என்னும் பழந்தமிழிசை நன்றி நவிற்சியுரை யால் எதிர்பாரா இடத்தில் இசைத்தமிழ் ஆய்வுப் பட்டடை ஒன்று இயங்கி இனிய இசைத்தமிழ் ஆய்வு நூல் ஒன்று வெளிப்பட்ட சிறப்பு விளக்கமாகும்.

"இசைபெறு திருவின் வேத்தவை நிறுவிக்
காலனை வெருட்டிக் காத்தனை தமிழிசை
....
அளப்பருங் கருணை வளப்பெருந் தொண்டிற்கு
ஆற்றுகைம் மாறென ஏற்றருள்
தெள்ளு தமிழிசை தெளிநூல் இதையே"

எனத் தமிழிசை இயக்கம் கண்ட வள்ளல் அண்ணாமலை அரசர்க்கே படையலாக்கப்பட்டது 'பழந்தமிழிசை' நூல்.

பழந்தமிழிசையில் கோதண்டபாணியார் கண்டவை எவை?

"முதற்கண் ஐந்திசையாகவிருந்து பின்பு ஏழிசையாக வளர்ச்சி எய்துவதே இயல்பும் முறையும் ஆகும் என்பதே.

"ஏனை ஆய்வாளர்கள் அனைவரும் தொடக்க முதலே ஏழிசைப் பண்கள் – இராகங்கள் – இருந்தன எனவும், பின் இசையமைவின் பொருட்டு அவற்றினின்று இரண்டு நரம்பு (சுரங்)களை நீக்கி ஐந்திசை கொண்டனர் என்னும் கருத்துடன் ஆய்ந்தனர். அதனால் உண்மை பிறழ நேர்ந்தது. உழையும் தாரமும் நீங்கிய ஐந்திசைகளே தொடக்கத்திருந்தன என்னும் மெய்ம்மை கண்டமையால் ஐந்திசைகளே கொண்டு திகழ்ந்த உலகங்கள் எவை எவை என நாடலாயினர்.

"சீனம், எகிப்தியம், கிரேக்கம் முதலிய நாடுகளும் மிகப் பழங்காலத்து இங்ஙனமே கொண்டுள்ளன எனவும் கண்டனர். கண்டது மட்டுமன்றிச் சீனர் பழமையை மாற்றச் சிறிதும் இடம் தராராய் இன்றும் ஐந்திசையே கைக்கொண்டு வருகின்றனர்

என்னும் வாய்மையினையும் கண்டனர். கண்டு 'முல்லைத் தீம்பாணியே' பண்டுள்ள இயற்கையில் எழுந்த இசை எனவும், அந்நிலமே மக்களின் அமைதி வாழ்க்கைக்கும் அச்சமின்றி மா, மரம், புள்ளுடன் நெருங்கிப் பழகுதற்கும் அவற்றாலாம் பயன்களை அவற்றிற்கு ஊறுவிளைக்காது பெறுதற்கும் வாய்ப்புடைத்தாக வுள்ளதெனவுங் கண்டனர். கண்டு, பழந்தமிழிசை உலக இசைகளுடன் தொடர்புடைய தென்னும் முடிவுக்கு வந்து துணிந்தனர். அத்துணிபினை மயங்கும் தமிழுலகுக்கும் பிற வுலகுக்கும் இந்நூல் வாயிலாக எடுத்துக் காட்டியுள்ளனர்" என்னும் பழந்தமிழிசையின் பதிப்புரை அந்நூலின் ஆய்வுத் தடத்தைத் தெளிவிக்கின்றது (5).

'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்பது அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் (1956). ஒன்பது தலைப்புகளைக் கொண்ட இந்நூலில் ஐந்தாம் தலைப்பு இசைக்கலை பற்றியது. இலக்கியத்தில் இசை, பழந்தமிழிசை நூல்கள், செப்பேடுகள், கல்வெட்டுகள், அயலார் ஆட்சியில் இசை, தமிழிசை மறுமலர்ச்சி, சமணரும் இசைக்கலையும், இசைக்கருவிகள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் எழுதுகிறார்:

"தமிழிசை முயற்சியை எதிர்த்தவர்கள் தெலுங்கரும் மராட்டியரும் முகம்மதியரும் அல்லர். பின்னர் யார் என்றால் தமிழர் என்று சொல்லிக் கொண்டு ஆனால் தமிழ்ப்பற்றுச் சிறிதும் இல்லாமல் எந்த வழியிலாவது வாழ வேண்டும் என்னும் ஒரே கொள்கையுடைய ஒருசிறு கூட்டம்தான் தமிழிசை இயக்கத்தை எதிர்த்துப் பின்னர் அடங்கி விட்டது" என்கிறார் (96).

'பண்டைத்தமிழ நாகரிகமும் பண்பாடும்' என்பது பாவாணர் இயற்றிய நூல்களுள் ஒன்று (1966). அதில் கலைகள் என்னும் பகுதியில் இசைக்கலையைப் பற்றி எழுதுகிறார்.

எழூஉம் இசைத் தொகையினின்று 'ஏழ்' என்னும் எண்ணுப் பெயர் கிளர்ந்த வகையைச் சுட்டுகிறார்.

"குமரிக் கண்டத்துத் தமிழர் நுண்மாண் நுழைபுலத்தராயும் தலைசிறந்த நாகரிகராயும் எஃகுச் செவியராயும் இருந்ததினால் ஏழுபேரிசையும் ஐந்து சிற்றிசையும் ஆகிய பன்னீரிசையை (சுரத்தை) யும், கண்டு ஆயப்பாலை என்னும் முறையில் எழுபாலைப் பண்களைத் திரித்தது மன்றி அப்பன்னீரிசையையும் வட்டப் பாலை

என்னும் முறையில் 24 ஆகவும் திரிகோணப் பாலை என்னும் முறையில் 48 ஆகவும் சதுரப் பாலை என்னும் முறையில் 96 ஆகவும் நுட்பமாய்ப் பகுத்து எல்லையற்ற இசைப் பேரின்பத்தை நுகர்ந்திருக்கின்றனர்" என்கிறார் (144).

தமிழகக் கவின் கலை மாட்சி என்னும் செ. வைத்தியலிங்கன் நூலும், **ஆயகலை அறுபத்து** நான்கு என்னும் செந்துறை முத்து நூலும் இசைப்பகுதியுடையவை.

குடந்தை பண்ணாராய்ச்சி வித்தகர் சுந்தரேசனார் இயற்றிய நூல் 'முதல் ஐந்திசைப்பண்' என்பது (1956). தமிழிசைக் கொடையாக வாய்த்த அப்பெருமகனார், தாம் துய்த்த துய்ப்பை அவையோரும் ஒட்டு மொத்தமாகத் துய்க்கச் செய்யும் திறவோராக விளங்கித் தமிழிசை உலாவந்தவர் ஆவர். அவர் பண்ணாராய்ச்சிக் கூட்டங்களில் கலந்து கொண்டு செய்த விளக்கங்கள் பலபட விரிவுடையன. பல்கலைக்கழக இசையாய்வுத் துறைகளில் பணியாற்றிய அவர்க்கு, அக்கழகம் கடந்த இசைமாணவர்களும் இசைவழிஞர்களும் உண்டு.

ஐந்திசைப் பண்களைக் கருநாடக இசையுடன் அவர் பொருத்திக் காட்டுமாறு:

காந்தாரம் – மோகனம்: செந்திறம் – மத்யமாவதி;

இந்தளம் – இந்தோளம்: சாதாரி – சுத்தசாவேரி;

தனாசி – சுத்த தன்யாசி

என்பன அவை.

இசைப்பண்பு என்னும் நூல் 1968இல் வெளிவந்தது. ஆசிரியர் தியாகராசன். இசையாசிரியராகவும், வானொலி நிலையப் பணியிலும் இருந்தவர். தண்டபாணிதேசிகர் அந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார். கலைஞர் அமைதி, 72 மேளராகங் கள், 72 மேளச்சக்கரம், தாளவிமரிசனம் முதலிய 13 தலைப்புகளில் நூல் நடக்கின்றது. 'இசை பயிலும் மாணவர்களும் இசைக்கலைஞர் களும் இசைமாந்தும் பொதுமக்களும் இந்நூலைப் படித்துப் பயன்பெற வேண்டும்' என்கிறது அணிந்துரை.

'இசையும் யாழும்' என்னும் நூல் நுண்கலைச் செல்வர் அ.இராகவன் இயற்றியதாகும் (1971).

தமிழிசையின் வரலாறு, யாழின் வளர்நிலை, அதன் வளர் நிலையில் செங்கோட்டியாழும் வீணையும் பிறந்தவகை ஆகிய வற்றை விரிவாக வரைந்துள்ளார். அரியபடங்களும் விளக்கங்களும் கொண்ட நூல்.

"யாழ்வேறு; வீணைவேறு: இரண்டுமே தமிழக இசைக்கருவிகள்" என்பது இராகவனார் கருத்து. இதனை இதற்கு முன்னுரை வழங்கிய குடந்தை சுந்தரேசனாரும் வலியுறுத்துகிறார்.

'தமிழில் கீர்த்தனை நாடகங்கள்' என்றொரு நூல் 1980இல் வெளிவந்தது. அதன் ஆசிரியர் செல்வி பி. புஷ்பா. அவர்க்கு முழுமையாகக் கிடைத்த கீர்த்தனை நாடகங்கள் பதினொன்றனைப் பற்றிய ஆய்வேட்டின், அச்சீட்டு நூல் அது.

அறிமுகம், தமிழ் இசை நாடகவளர்ச்சி, கீர்த்தனை நாடகங் களின் அமைப்பு, பள்ளு குறவஞ்சி கீர்த்தனை நாடகம் – ஓர் ஒப்பீடு, கும்மிப்பாடல்கள், முடிவுரை என்னும் பகுதிகளையுடையது.

இசைப் பேரறிஞர் எஸ். இராமநாதன் இயற்றியநூல், 'சிலப்பதி காரத்து இசைத்தமிழ்' (1981). இது 1956இல் அவர் இயற்றிய 'சிலப்பதிகாரத்து இசை நுணுக்க விளக்கம்' என்பதற்குப் பின்னர்க் கண்ட ஆராய்ச்சி முடிவுகளையும் கொண்டதாகும்.

சிலப்பதிகாரத்து இசை நுணுக்க விளக்க முன்னுரை, பாராட்டுரை, மதிப்புரை ஆகியவற்றையும் இந்நூலில் இணைத் துள்ளார்.

இந்நூலை, "இராமநாதன் மயங்கா மரபின் இசை முறை காட்டிக் குரலேசட்சம் என்னும் பழங் கொள்கையை நாட்டி முல்லைப்பண் மோகனம் என்று கண்டார்" என்கிறார் ஞா. தேவநேயப்பாவாணர்.

குரலும் சட்சமும் என்னும் இணைப்பில், குரலேசட்சம் என்பதைப் 'பூர்வீக சங்கீத உண்மை' என்னும் நூலில் மதுரை பொன்னுசாமிப் பிள்ளை ஏற்றுக் கொண்டுள்ளதையும், அரியக்குடி இராமாநுச ஐயங்கார், முடி கொண்டான் வேங்கடராமையர், செம்மை வைத்தியநாத பாகவதர், பொன்னையாப்பிள்ளை, பேரா. சாம்பமூர்த்தி ஆகியவர்களும் 'குரலே சட்சம்' என்றதையும் குறிப்பிடுகிறார் (122 – 23).

பழந்தமிழ் நாட்டின் அடிப்படைப் பாலையான செம்பாலை அரிகாம்போதியே யாகும் என்கிறார் (131)

'தமிழக நுண்கலைகள்' (1978) என்னும் நூல் தமிழ்ப் பண்பாட்டு மன்றம் வழங்கியது. அதில் 'தமிழிசை தந்த பெருவளம்' என்னும் அரிய பெரிய கட்டுரை கு. கோதண்டபாணி பிள்ளையால் வரையப்பட்டது (12 – 66).

செவ்வழி என்னும் தமிழிசை வளமே 'மார்க்கா' என வடநாடு சென்று வேதகானமாயிற்று என்பதை விளக்குகிறார் ஆசிரியர்.

இரேக்க நாட்டு இசையிலும் ஐரோப்பிய நாட்டு இசையிலும் தமிழிசை புகுந்து பெருவளம் தந்தது என்பதை முதன் முதலாகச் சுட்டிக்காட்டியவர் கசின்ஸ் அம்மையாரே ஆவார்" என்கிறார் (66).

'தமிழர் தோற்கருவிகள்' என்பதொரு தொகைநூல் ஆர். ஆளவந்தார் செய்ததாகும் (1981). உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு அது.

தோற்கருவி, தோற்கருவிகளுக்கு ஏற்றதோல், தோற்கருவி களுக்கு ஏற்றமரங்கள் ஆகியனவும் அடக்கம் முதல் 'ஐமலிக்கா என்பது இறுதியாக அகர வரிசையில் 86 கருவிகளை விளக்கியும் கூறுகிறது இந்நூல். அரிய இணைப்பு, ஓவியம் ஆகியவற்றைக் கொண்டது. 'தமிழன் கண்ட இசை என்னும் நூல் பொறிஞர் ப. தண்டபாணி இயற்றியது (1983).

"கருநாடக இசை தமிழரின் பூர்வீகச் சொத்து" என்பதை நிறுவுவது அது.

'இசையும் இஸ்லாமும்' என்னும் நூலை டி.யெம். பீர்முகமது எழுதியுள்ளார் (1978).

'இசை இயல்' என்னும் நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாகும் (1944). வெளிவந்த காலம் பிற்பட்டதாயினும் அது 1934 இலேயே எழுதப்பட்டதாகும். இசைக்கல்லூரிப் பாடத் திட்டத்திற்கு ஏற்ற நூற்போட்டித் திட்டத்திற்கு மதுரை இசைச் செல்வர் க. பொன்னையா பிள்ளை அனுப்ப, அவ்வழியில் பரிசு பெற்ற நூலாகும் இது. பின்னே அவரே அண்ணாமலைப் பல்கலைக் கழக இசையாசிரியரும் ஆனார். இது பல்வேறு பதிப்புகளைக் கொண்டது. இவ்வாறு இசைத் தொகுதிகள், வகுப்புக்குத் தகப் பல்வேறு வந்துள.

'இசையியல்' என்னும் பெயரால், மணிவாசகர் பதிப்பக வெளியீடாக ஒரு நூலும் வந்துளது (1986). அதன் ஆசிரியர்

வெற்றிச் செல்வன். இசையின் தோற்றம், தொன்மை முதலாகப் பதினான்கு தலைப்புகளையுடைய நூல்.

'இசை தோன்றிய கதை' என்னும் நூல் முல்லை பி.எல். முத்தையா இயற்றியதாகும் (1988). இசைபற்றிய நல்ல அறிமுக நூல்.

'தென்னக இசையியல்' என்னும் நூல் அரசு இசைக்கலூரி விரிவுரையாளர் செ.ச. செல்லத்துரை இயற்றியது (1984). இசைக் கலைமணி பாடத்திட்டத்திற்கு ஏற்றவகையிலும், நுண்ணிய இசையறிவைப் புகட்டும் வகையிலும் இயற்றப்பட்ட நூல் என்பது ஆசிரியர் குறிப்பு.

இசைப்பட்டம் பெறுவார்க்கெனப் பாடத்திட்ட அமைப்பில் அமைக்கப்பட்டமையால், இசை பயில எண்ணுவார் எவர்க்கும் ஏற்ற கருவி நூலாய் அமையும் வகையில் விளங்குகின்றது. இசையியலை 33 பகுப்புகளில் பகுத்துரைக்கின்றது இந்நூல். நல்லவிரிவும் விளக்கமும் உடையது.

'கர்நாடக சங்கீதத்தின் ஆதிமும்மூர்த்திகள்' என்னும் நூல் இலக்கிய ஆராய்ச்சிப் பேரறிஞர் மு. அருணாசலம் இயற்றியது. மும்மூர்த்திகள் எனப்படுவார்க்கும் முன்னே இருந்தவர் சீர்காழி முத்துத்தாண்டவர், தில்லை விடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை, சீர்காழி அருணாசலக் கவிராயர் என்னும் மூவராவர். இவர்கள் மூவர் வரலாற்றைக் கூறுவதுடன், பழங்காலந் தொட்டு இசைத்தமிழ் வரலாறு, இசைநூல்கள், இசைவாணர் பற்றிய ஆய்வுக் குறிப்பு களையும் கூறுகின்றது. இது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடாக வந்தது. பின்னே விரிவும் விளக்கமும் மிக்க பதிப்பொன்றும் தஞ்சையில் இருந்து வந்தது. 'தமிழ்க் கீர்த்தனை ஆசிரியர் முதல் நால்வர்' என்னும் நூல் முன் மூவருடன் கோபால கிருட்டிண பாரதியாரையும் சேர்த்து வெளிவந்தது (1990). ஆசிரியர் வரகூர் ஆ.க. முத்துக்குமாரசாமி. 'இசைக்கலை வல்லுநர்கள்' என்னும் நூல் வீணை விரிவுரையாளர் கோமதி சங்கர ஐயரால் இயற்றப்பெற்றது (1970). இதில் பெரிய வைத்திய நாத ஐயர், மகாவைத்திய நாத சிவன், கோயம்புத்தூர் இராகவ ஐயர், வீணை கல்யாண கிருஷ்ண பாகவதர், ஆயில்யம் திருநாள் அரசர், வாசுதேவநல்லூர் பல்லவி சுப்பையா பாகவதர், ஆண்மறைநாடு திருமலை ஐயங்கார், காரைக்குடி வீணை சகோதரர் சுப்பராம ஐயர்,

சாம்பசிவஐயர், மதுரை நாதசுரம் பொன்னுசாமிபிள்ளை ஆகியோரைப் பற்றிய செய்திகள் உள்ளன.

'இசை உலகில் மகா வைத்தியநாத சிவன்' என்னும் நூல் இரண்டு பாகங்களைக் கொண்டது. இதுவும் இவர் இயற்றியதேயாம் (1971).

வீணையிசை வழிமுறையில் வந்தவரும் இசையாசிரியப் பணி செய்தவரும் அயரா உழைப்பாளருமாகிய வா.சு. கோமதி சங்கர ஐயர், திருஞான சம்பந்தர் அருளிய 'யாழ்முரிப்பண்' என்பதைத் தனியொரு நூலாக ஆய்வடங்கல் ஆக்கியுள்ளார் (1977). யாழ்முரிப்பண் 'அடாண' என்னும் இராகத்தில் வழங்கப்படுகிறது. வடமொழிப் பெயரால் வழங்கப் பெறும் இராகங்கள் பலவும் தமிழ்ப்பண்களே என்கிறார்.

'தானவர்ணக்கடல்' என்னும் வரிசையில் நான்கு பாகங்களைக் கோமதி சங்கரையர் இயற்றியுள்ளார். "ஆதிதாளத்தில் தோடியிலும் அதன் ஜன்ய இராகங்களிலும் அமைந்த அறுபது தான வர்ணங்கள்" என முதல் நூல் விளக்கத்தை ஆசிரியர் குறிப்பிடுகிறார். அவ்வாறே பிற தொகுதிகளிலும் பிற தானவர்ணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன (1973).

'இசைத் தமிழ் இலக்கண விளக்கம்' என்பதும் இவரியற்றிய இசைநூலே. மதுரை காமராசர் பல்கலைக் கழக ஆய்வுத்துறை வெளியீடாக வெளிப்பட்டது இது (1984).

இது, இசைப் பயிற்சி மாணவர்களுக்காக எழுதப்பட்ட விளக்க நூல்; வினாவும் விடையும் உடையது. இவர்தம் நூல்கள் பலவாம்.

'தமிழிசை வளம்' என்னும் நூல் இசையறிஞர் முனைவர் வீ.ப.கா. சுந்தரம் இயற்றியது (1985). மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பதிப்புத்துறை வெளியீடு.

தனித்தமிழ்ப் புலமையும் பற்றுமையும் சொல்லாக்கத் திறமும் ஆசிரியர்க்கு உண்மையால், வேற்றுச் சொற்கள் பலவும் ஏற்ற தமிழ்ச் சொற்களாக அமைந்து தமிழ் மரபொடும் தகவொடும் கூடிய இசை நூலாக இயலுதல் காணக் கூடியதாம். 'இசைத்துறைத் தமிழ்ச் சொற்கள்' என்றே ஓர் அகராதியும் இவர் ஆக்கியுள்ளமை இவர்தம் கருவி நூற்றிறத்தையும் காட்டும். பண்ணாய்வு அரங்குகளிலும் இவர் பளிச்சிடுதல் அத்தொகுதிகளின் அடைவால் புலப்படும்.

'பழந்தமிழிலக்கியத்தில் இசையியல்' என்னும் இவர்தம் மற்றொரு நூல் (1986), சங்ககால இசைமரபு முதல் கொட்டு முழக்கியல் இறுதியாக 25 தலைப்புகளில் இயலுகிறது. சேறை அறிவனார் இயற்றிய 'பஞ்சமரபு' என்னும் நூலுக்கு உரை கண்டு செம்பதிப்பும் செய்துள்ளார் இவர்.

'பஞ்சமரபு' என்பது இசைமரபு, வாச்சியமரபு, நிருத்த மரபு, அவிநயமரபு, தாளமரபு என்னும் ஐம் பெரு மரபுகளை இயம்பும் இசை இலக்கண நூலாகும். இதனை அரிதில் போற்றிப் பெரிதும் காத்து வந்த பெருமகனார் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர். அதனைப் படியெடுத்து ஆய்ந்து அடிக்குறிப்பு ஆய்வு என்பவற்றுடன் பொள்ளாச்சிச் செல்வர் நா. மகாலிங்கம் பொருளுதவியால் முதற்பாகமும் (1973) பின்னர் முதலிரு பாகமும் இணைத்தும் (1975) வெளியிட்டார். இந்நூல் சிறந்த வடிவாக்கம் பெறக் குடந்தை ப. சுந்தரேசனார் உதவியும் வாய்த்துள்ளது.

தெய்வசிகாமணியார் ஏட்டுக்கொடை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வழியே 'பரத சங்கிரகமாகவும் வெளிவந் துள்ளது. பஞ்சமரபுப் புத்துரைப் பதிப்பே வீ.ப.கா. சுந்தரனார் செய்ததென்க. இவ்வகையில் சுட்டத்தக்க ஓர் அரிய தொகைநூல் 'தமிழர் இசை' என்பதாகும். இது கலைச் செல்வர் ஏ.என். பெருமாள் ஆக்கியநூல். (1984) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளி யிட்டது. 13 தலைப்புகளில் 904 பக்கங்களில் நூல் இயல்கின்றது.

'வாத்தியமரபு' என்னும் பழந்தமிழ் நூல் பதிப்புக்காக ஆசிரியர் மேற்கொண்ட முயற்சிப் பயன் 'தமிழ் இசை' யாகிய வரலாற்றை முன்னுரையில் குறிக்கிறார்.

'தற்காலத் தமிழர் இசை' என்னும் இறுதிப் பகுதி விரிவு மிக்கதாகும் (704 – 824). தமிழிசை தொடர்பான பலவகைக் கலைஞர்களையும் கலைத் துறைகளையும் விளக்கும் பகுதியாக உள்ளது. அரிய பெரிய உழைப்பில் வெளிப்பட்ட நூல் என்பது மேலோட்டமாகக் காண்பார்க்கும் விளங்கும்.

பட்த்துறையின் பல்வேறு பகுதிகளிலும் பயிற்சியுடையவரும் தமிழியல் இசை இலக்கணம் கற்றவருமாகிய புரட்சி தாசனார் **ஏழிசை, சிலப்பதிகாரக் கூத்து, தமிழிசையில்** சாமகானம் என்னும் நூல்களைப் படைத்துள்ளார். தமிழிசைத் திறத்துடன் பற்றுமையும்

உடைய அவர் உணர்வு மிக்க தமிழிசைப் பாடல்கள் ஆயிரக் கணக்கில் இயற்றியுள்ளார். தெலுங்கு முதலிய மொழிமாற்றுப் படங்களிலும் தமிழிசைப் பாடல்களைத் தவழ விடுபவர் அவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரி வெளியீடுகள், அண்ணாமலை மன்ற வெளியீடுகள், ஆண்டு மலர்கள், பண்ணாராய்ச்சி மலர்கள், அறிக்கைகள், மதுரை முத்தையா மன்ற ஆண்டுமலர்கள் என்பவை எல்லாம் தொடக்க நாள்முதல் தொடர்ந்து வெளிவருவன. அவற்றைப் பொறுப்பாக இருந்து வெளியிடும் மலர்க்குழுவினர், நூலும் கட்டுரையும் வழங்கும் அறிஞர்கள், பங்கு கொண்டு உரையாற்றிய அரசியல் தலைவர்கள், அறிஞர்கள், கலைத்தோன்றல்கள் இன்னவர்களை யெல்லாம் பட்டியலிட்டுக் காட்டுவதாயின் தனிப்பெரும் விரிவாகும் என்பது எவர்க்கும் வெளிப்பாடு. ஏனெனில் அவர்கள் நூற்றுவரல்லர்; பன்னூற்றுவர். இனித் தமிழிசைப் பாடல்கள் இயற்றியும், மேடையில் பாடியும் சிறப்பித்தவர்களும் மிகப்பலர். அவர்களுள் சிலர் பெயர்கள்: அண்ணாமலை ரெட்டியார், அநந்தபாரதிகள், அருணாசலக் கவிராயர், சீர்காழி; இராச மாணிக்கம்; கே இராமநாதன். எஸ்; இராமலிங்கம் பிள்ளை, நாமக்கல்; இராமையா பிள்ளை; கண்ணதாசன் கவிஞர்; கவிகுஞ்சர பாரதியார்; கிட்டப்பா; கிருபானந்த வாரியார்; கிருஷ்ணப்பா பாடாரம்; கிருஷ்ணையர் கனம்; கிருஷ்ணன் என்.எஸ். கலை வாணர்; கிருஷ்ணமூர்த்தி கு.சா; கிருஷ்ண மூர்த்தி பாகவதர் நீடாமங்கலம்; கோடிலிங்கம், கோடீசுவர ஐயர்; கோபால கிருஷ்ணபாரதியார்; கோமதி சங்கர ஐயர்; கோவிந்தராசன், சீர்காழி; சங்கரதாசு சுவாமிகள்; சண்முக சுந்தரம், திருப்பாம்பரம்; சம்பந்த முதலியார், பம்மல்; சாமிநாதன், திருப்பாம்பரம்; சாம்பமூர்த்தி; சிவன், பாவநாசம்; சிவசுப்பிரமணிய பிள்ளை, திருப்பாம்பரம்; சுத்தானந்த பாரதியார்; சுந்தரம் ப.கா; சுந்தரம் எஸ்.டி; சுந்தராம்பாள் கே.பி; சுந்தரேச ஓதுவார் நெல்லை; சுந்தரேசனார், குடந்தை; சுப்பிரமணிய ஐயர், பட்டணம்; சுப்பிரமணிய ஐயர், முசிறி; சுப்புலட்சுமி எம்.எஸ்; சுப்பையா பாகவதர், பல்லவி; செயராமன், சிதம்பரம்; செயராமன் டி.கே; செயலட்சுமி, சேலம்; செல்லப்பா, தேனிசை; சோமு, மதுரை; சோமு. மீ.ப; தண்ட பாணி தேசிகர்; தியாகராச பாகவதர்; தேசிகவிநாயகம் பிள்ளை, கவிமணி;

த.14.

நடையரசு, பசுமலை; நாரணதுரைக்கண்ணன்; நாயனாப் பிள்ளை, காஞ்சி; நீலகண்ட சிவன்; பட்டம்மாள்; பாற்கரதாசு, மதுரை; பெரிய சாமித்தூரன் ம.ப; பொன்னையா பிள்ளை; மணி ஐயர், மதுரை; மணி ஐயர், பாலக்காடு; மாரிமுத்தாப்பிள்ளை; மாரியப்ப சுவாமிகள்; முத்துத்தாண்டவர்; முத்தையா பாகவதர், அரிகேசநல்லூர்; வள்ளியப்பா, அழ; வரதாச்சாரி, டைகர்; விசுவநாத தாசு; விளாத்திகுளம் சாமிகள்; வீரமணி, வீருசாமிப்பிள்ளை; வேங்கட சுப்பையர், ஊத்துக்காடு; வேதநாயகம் பிள்ளை, வைத்திய நாத பாகவர், செம்பை; வைத்தியலிங்கம், திண்டுக்கல்.

இந்நாள் திரைத்துறை, தொலைக்காட்சித்துறை, நாட்டுப்புறம் பாடல் ஆடல் துறை ஆகியவற்றிலெல்லாம் ஈடுபட்டு நெஞ்சம் கவரும் தமிழிசைத் தொண்டு செய்வார் மிகப்பலர். வில்லிசை கோலாட்டு என்பன வெல்லாம் மக்கள் மனங்கவர் கலைகள். இவற்றை ஆங்காங்கு வளர்த்தும் உள்நாடு வெளிநாடுகளில் பரப்பியும் வரும் தமிழிசைக் காவலர்கள் உளர்.

'*தமிழிசை இயக்கம்*' என்ற அளவில் எழுதப்படும் இவ்வேட்டில் அவற்றை முற்றாக விரித்தலும் வேண்டுவதில்லை. எதிர்பார்க்க வேண்டியதும் இல்லை. அவை தனித்தனித் துறைச் சுவடிகளாக வெளிப்பட்டுக் கொண்டும் உள்ளன.

ஆகலின், ஓரளவால் தமிழிசை இயக்கம் பற்றிய செய்திகள் இவண் நிறைவுறுத்தப் பெறுகின்றன.

தமிழிசை இயக்கமெனா ஒன்று தோன்றாமலே தமிழ் நாட்டில் தமிழிசையே இருந்திருக்க வேண்டியது இயற்கை ஒழுங்கு. அவ்வொழுங்கு நிலை தடுமாறி, வேற்றிசை நாட்டிசையை விழுங்கி ஏப்பம் விடும் நிலையில் கட்டாயக் காவல் கடமையால், உள்ளுள் ளாகத் தோன்றி, உணர்வாக வீறி, இயக்கமாகக் கிளர்ந்து, கடப்பாடு செய்யும் நிலை உண்டாயிற்று. இதன் எழுச்சியை மாறு கண் ணோட்டத்தோடு அன்று நோக்கியவர்களையும் எதிரிட்டவர்களையும் இவ்வேட்டில் ஓரளவால் அறிந்துள்ளோம். அந்நிலையில், தமிழிசை ஆர்வத்தால் கிளர்ந்தவர்களையும், அமைப்புகளையும் கல்லூரி களையும் எண்ணும் நாம், அந்நிலை வாணவேட்டாகப் பொறி வாணமாகப் புலப்பட்டு அமைதி கொண்டமையும் வெளிப்பட அறிய வாய்க்கின்றது! திட்டமிட்ட இடையீடற்ற செயற்பாட்டில் ஊன்றினால் அன்றி எண்ணிய பயன்கள் எய்தா என்னும் பொதுத்

தெளிவு நாட்டில் உண்டாகி ஆக வேண்டும். உண்டாக்கியும் ஆக்க வேண்டும். அவற்றுக்குச் சார்பற்ற நோக்கர்களின் அமைப்பு ஒன்று உருவாக்க முற்று, நாட்டுக்கு வழிகாட்டியாகும் நிலைமையை ஆள்வோர் முதல் அனைவரும் கூடித் தோற்றுவித்து, அதனை ஒரு மதிப்பியல் அமைப்பாகவும், அதன் வழி நிற்றல் ஆக்கக் கடனாகவும் கொள்ளல் வேண்டும். அப்படி உருவாகுங் காலத்தில் தான் காலத்தையும் பொருளையும் வாழ்வையும் ஒப்படைத்துக் கொள்கைக்காகப் பாடுபட்ட முந்தையோர் எண்ணம் வெற்றியுற்றுப் பாடுபுகழுக் குரியதாக விளங்கும். பின்வருவார்க்கும் அவர்கள் ஆற்ற வேண்டிய கடமை இவையெனக் காட்டுவதுடன், அக்கடமையாற்றும் வழிமுறைச் சான்றாகவும் திகழும். அதனை எண்ணவும், எண்ணியபடி எய்தவும் இத்தமிழிசை இயக்கம் ஒரு தூண்டலாக அமையும் என்னும் நம்பிக்கையுடன் இதனை நிறைவுறுத்துகிறேன்.

தமிழகம் விழிப்புறுமாக!

வெற்றியுறுமாக!

தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவில் இப்போது உள்ள உறுப்பினர்கள்

1. மாண்புமிகு பு.ரா. கோகுலகிருஷ்ணன்
   தலைவர், உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நடுவர்,
   குஜராத் மாநிலம்.
2. திரு. மு.அ. சிதம்பரம் (மதிப்பியல், செயலர்)
3. இசைப்பேரறிஞர் மீ.ப. சோமசுந்தரம் (சோமு)
4. இசைப்பேரறிஞர் க.பொ. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை
5. பேராசிரியர் பண்டித வித்வான்
   லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் (செயலர்)

தமிழ் இசைச் சங்கம், சென்னை

இசைப்பேரறிஞர் பட்டம் வழங்கப் பெற்றவர்கள்

பட்டம் பெற்றவர்கள்	ஆண்டு
1. திரு. எம்.எம். தண்டபாணி தேசிகர்	1957
2. திரு. பி. சாம்பமூர்த்தி ஐயர்	1957
3. கும்பகோணம் திரு.கே. இராசமாணிக்கம் பிள்ளை	1957
4. திரு. பி.எஸ். வீருசாமி பிள்ளை	1959
5. அரியக்குடி திரு. டி. இராமானுச ஐயங்கார்	1960
6. வழுவூர் திரு. பி. இராமையாப் பிள்ளை	1961
7. மதுரை திரு. மணி ஐயர்	1962
8. முசிறி திரு. சுப்பிரமணிய ஐயர்	1963
9. சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை	1964
10. திரு. பாபநாசம் சிவன்	1965
11. திருமதி கே.பி. சுந்தராம்பாள்	1966
12. திரு. திருமுருக கிருபானந்தவாரியார்	1967
13. பாலக்காடு திரு. டி.எஸ். மணி ஐயர்	1968
14. செம்மங்குடி திரு. ரா. சீனிவாச ஐயர்	1969
15. திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி	1970
16. மதுரை திரு. எஸ். சோமசுந்தரம்	1971
17. திரு. ம.ப. பெரியசாமித் தூரன்	1972
18. திருமதி டி.கே. பட்டம்மாள்	1973

19. திருவீழிமிழலை திரு. எஸ். சுப்பிரமணிய பிள்ளை 1974
20. திருமதி த. பாலசரசுவதி 1975
21. மாயூரம் திரு. வி.ஆர். கோவிந்தராசப் பிள்ளை 1976
22. திருவீழிமிழலை
    திரு. எஸ். நடராச சுந்தரம் பிள்ளை 1977
23. திருமதி எம்.எல். வசந்தகுமாரி 1978
24. இராமநாதபுரம் திரு. சி.எஸ். முருகபூபதி 1979
25. திரு. மீ.ப. சோமசுந்தரம் (சோமு) 1980
26. டாக்டர் எஸ். இராநாதன் 1981
27. இசைமணி சீர்காழி எஸ். கோவிந்தராசன் 1982
28. நாமகிரிப்பேட்டை கே. கிருஷ்ணன் 1983
29. லால்குடி ஜி. ஜெயராமன் 1984
30. தஞ்சை க.பொ. கிட்டப்பா பிள்ளை 1985
31. தருமபுரம் திரு. ப. சாமிநாதன் 1986
32. திரு. ஆர்.எஸ். மனோகர் 1987
33. திரு. ஏ.கே.சி. நடராசன் 1988
34. குன்னக்குடி திரு. ஆர். வைத்தியநாதன் 1989
35. வலையப்பட்டி திரு. ஏ.ஆர். சுப்பிரமணியம் 1990
36. மகாராசபுரம் திரு. வி. சந்தானம் 1991
37. கே.ஜே. ஏசுதாஸ் 1992
38. ஷேக் சின்னமௌலானா 1993

பிற்சேர்க்கை

பொள்ளாச்சி தமிழிசைச் சங்கம்

தோற்றமும் வளர்ச்சியும்

பண்ணும் பாடலும் தாளமும் பிற இசைக்கருவிகளும் இயைந்து வரும்போது பிறக்கும் இசை சிறந்தது. ஆயினும் நம் தாய்மொழி யாகிய தமிழுடன் இசைந்து வரும்போது அது நமக்குப் பேரின்பம் பயக்கும்; ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் இறைவன்பால் கொண்டு இசைவிக்கும். இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழிசையை வளர்க்க வேண்டும்; பரப்ப வேண்டும் என்னும் உயர்ந்த நோக் கத்துடன் பொள்ளாச்சியின்கண் தமிழிசைச் சங்கம் தோன்றியது.

1970– ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் நாள் இச்சங்கம் தோன்றியது. கொங்கு நாட்டின் வணிகத் தங்கமும் நம் தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகளின் அகிம்சை (இன்னா செய்யாமை) நெறியையும், வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ள லாரின் சமரச சமயத்தையும் போற்றிப் பின்பற்றுபவரும் விஞ்ஞான அறிவும் மெய்ஞ்ஞான அறிவும் முத்தமிழ் அறிவும் பெற்றவருமான அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றிவைத்து இத்தமிழிசைச் சங்கத்தைத் தொடங்கி வைத்தார்.

தொடங்கி வைத்த அப்பெருமகனார் இச்சங்கத்தின் எந்தவித மான பொறுப்பின் மூலமும் தம்மை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தோன்றாத் துணையாக இருந்து, சங்கத்தை எல்லாவகையாலும் மேம்படுத்தி வெள்ளிவிழாக் காணுமளவுக்கு உயர்வும் சிறப்பும் பெறச் செய்துள்ளார்.

பொள்ளாச்சி சமத்தூர் சமீன்தாரின் இரண்டாவது மகனாரும் அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்களின் மருகருமாகிய திரு. பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் B.Com., B.L. அவர்கள் இச்சங்கத் தலைவர். திரு. RM.V. வெள்ளையப்பன், B.Tech. இச்சங்கத்தின் செயலாளர். இவர்களின் இமாலய முயற்சியினாலும் உறுப்பினர்கள், வணிகப்பெருமக்கள் சான்றோர்களின் உறு

துணையாலும் இச்சங்கம் வளர்ந்து மங்கைப் பருவம் பெற்றுச் சிறப்புடன் திகழ்கின்றது.

தமிழிசைச் சங்கத்தின் நோக்கங்களாகச் சங்கத் தலைவர் கிருஷ்ணராஜ் வாணவராயர் கூறியுள்ளவை:

1. கலைகளைத் தொழிலாகக் கொள்ளாத இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் இடையிடையே அவர்களுக்கு வாய்ப் பளித்தல்.

2. உறுப்பினர்கள் காட்டும் ஆர்வத்தைப் பொறுத்து, தக்க ஆசிரியர்களைக் கொண்டு நுண்கலைகளைப் பயிற்றுவித்தல்.

3. கலைக் கண்காட்சி நடத்துதல்.

4. கலைப்போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குதல்.

5. நூலகம் அமைத்தல்.

6. கலைஞர்களைப் போற்றிப் பாராட்டுதல்.

7. சமூகப் பணிகளையும் மேற்கொள்ளல்.

தமிழிசைச் சங்கத்தின் முதலாம் ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கியவர் செட்டிநாட்டரசர் டாக்டர் திரு. இராஜாசர்M.A. முத்தைய செட்டியார் அவர்கள். தமிழிசைச் சங்கத் தலைவர் தம் வரவேற்புரை யில் "நமது சங்கம் அடைந்திருக்கின்ற வளர்ச்சியை நேரில் கண்டு வாழ்த்தவும், பாராட்டவும், நம் அனைவரையும் ஊக்குவிக்கவும் இன்றைய ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கவும் இசைந்து வந்திருக்கின்ற செட்டிநாட்டரசர் டாக்டர் இராஜாசர் திரு. M.A.முத்தைய செட்டியார் Kt.B.A., D.Litt அவர்களை வரவேற்பதில் இச்சங்கம் பெருமை அடைகின்றது. இது போன்ற ஒரு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க அவர்களை விடப் பொருத்தமான வேறொருவர் இருக்கமுடியாது. தலைவர் அவர்களும், அவருடைய தந்தையாரும் தமிழிசைச் சங்கம் நிறுவிய துங்கருமான செட்டிநாட்டு அரசர் டாக்டர் இராஜாசர் மு. அண்ணாமலை செட்டியார் அவர்களும் தமிழிசைக்கு ஆற்றியுள்ள தொண்டினைத் தமிழகம் என்றென்றும் நன்றிப் பெருக்குடன் நினைவு கூரும். .... குருகுலவாசமுறையில் இசைக் கலைகளைப் பயிற்றுவித்தலும் அவற்றில் சிறப்புற்றுத் தேர்பவர் களுக்குப் பட்டம் வழங்கிப் பாராட்டுதலுமாக அரும்பணியாற்றிவரும் இந்தக் கலைச் செம்மலை எவ்வளவு போற்றினாலும் தகும்." என்று பாராட்டியுள்ளார்.

"ஐந்தாண்டுகள் தொடர்ந்து சிறப்புறப் பணியாற்றிய கலையரங்கினையே சென்னை தமிழ்நாடு நாடக சங்கம் அங்கீகரித்துக் கச்சேரிகள் அமைக்க உதவி செய்வது வழக்கம். அதற்கு விதிவிலக்காய், பொள்ளாச்சி தமிழிசைச் சங்கத்தின் சிறப்பினை அறிந்து ஓராண்டு முடிவிலேயே தமிழிசைச் சங்கத்தை அங்கீகரித்து, தன் செலவிலேயே ஆண்டுதோறும் கச்சேரிகள் செய்வதற்கு இச்சங்கத்திற்கு உதவியுள்ளது" எனச் சங்கத்தலைவர் கூறியுள்ளார். "இச்சிறப்புக்கெல்லாம் காரணமானவர், எந்தவிதமான பலனையும் எதிர் பாராமல் தம்முடைய சொந்த வேலைகளையும் புறக்கணித்துவிட்டுச் சங்க வளர்ச்சிக்குப் பாடுபடும் திரு. Rm.V. வெள்ளையப்பன் அவர்களே" எனச் சங்கச் செயலரைத் தலைவர் பாராட்டியுள்ளார்.

இச்சங்கம் 1973 ஆம் ஆண்டில் திரு. பெரியசாமித்தூரன் அவர்கள் எழுதிய, 'முருகன் அருள் மணிமாலை', 'இசைமணி மஞ்சரி' என்னும் நூல்களை, உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு என். கிருஷ்ணசாமிரெட்டியார் அவர்களைக் கொண்டு வெளியிட்டது. பத்மபூஷண் ப. பெரியசாமித்தூரன் தமிழிசைச் சங்கத்தின் உறுப்பாகத் தமிழிசைப் பள்ளி ஒன்றைத் தொடங்கிவைத்தார்.

இப்பள்ளியில் தகுதிமிக்க ஆசிரியர்கள் வீணை, வயலின், வாய்ப்பாட்டு, ஹார்மோனியம், பரதநாட்டியம் முதலியன கற்பித்து வருகின்றனர். இப்பொழுது 100 மாணவ மாணவியர் கலை பயில்கின்றனர்.

தமிழிசைச் சங்கத்தின் வழித்தோன்றலாகிய 'பொள்ளாச்சி இலக்கியக் கழகம்' மாதந்தோறும் இலக்கியச் சொற்பொழிவு நடத்திவருகின்றது.

1974—ஆம் ஆண்டில் தமிழிசைச் சங்கத்தின் மற்றுமோர் உறுப்பாக, 'தமிழிசைத் தென்றல்' என்னும் திங்கள் இதழ் மலர்ந்தது. இந்த இதழைச் சைவநலமும் தமிழ் நலமும் ஒருங்கமைந்த உரைவேந்தர் திரு. ஔவை துரைசாமி அவர்கள் தொடங்கி வைத்தார். தமிழிசைச் சங்க வெளியீடுகளும் ஆண்டு விழாமலரும் உறுப்பினர்கள் அனைவரும் இலவசமாகப் பெற்று மகிழ்கின்றனர். இச்செயல் வேறு எச்சங்கமும் செய்யாத புதியதோர் சாதனையாகும்.

1976—ஆம் ஆண்டில் உற்சாகமிக்க தமிழிசைச் சங்க மகளிர் உறுப்பினர்களுக்கு, பழச்சாறு சுவைமிகு சிற்றுண்டிகள் முதலியவற்றைத் தயாரித்தல் பற்றி, கோவை வேளாண்மைப் பல்கலைக்

கழகப் பேராசிரியர்களைக் கொண்டு கற்பிக்கும் சமையற்கலை வகுப்பினைச் சங்கம் நடத்தியது.

1978—ஆம் ஆண்டில் தமிழக முதல்வரின் புயல் வெள்ள நிவாரண நிதிக்காக ரூ. 1001/— சங்கம் வழங்கியது.

ஆண்டுதோறும் தவறாமல் கவின்மிகு ஆண்டுமலரை வெளியிடும் ஒரேசங்கம் பொள்ளாச்சி தமிழிசைச் சங்கம் எனப் பாராட்டி, சென்னை திரு சபாநாயகன் சிறப்புமிக்க கேடயம் பரிசு அளித்துள்ளார்!

1981--இல் பாட்டுக் கொருபுலவன் பாரதியின் நூற்றாண்டு விழாவில் அவரது சந்தம் மிக்கபாடல்களால் அவருக்கு அஞ்சலி செய்வது பொருத்தம் எனச் சங்கம் நினைந்தத. அதன் காரணமாக தமிழிசைக்குச் சிறப்பிடம் தரும் தமிழிசைச் சங்கம் 'பாரதத்தில் பாரதி' என்னும் பரத நிகழ்ச்சியைப் படைத்தது.

தமிழிசைச் சங்கம் தொடங்கியதிலிருந்து புரவலாக உறுதுணை புரியும் அருட் செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் தமிழிசைச் சங்கத்திற்கென ஒரு ஏக்கர் இடம் வழங்கினார். சங்கம் நன்றியுடன் அவரைப் பொன்னாடை போர்த்திப் பாராட்டியது.

கலைஞர் பெருமக்களைப் பெருமைசெய்து பாராட்டுவதைத் தனது தலையாய கலைப்பணியாகத் தொடர்ந்து சங்கம் செய்து வருகிறது. உலகறிந்த கலைஞர், அறிஞர் பலரை ஆண்டுதோறும் வரவழைத்துப் போற்றுகிறது. அவ்வகையில் 1982—இல் இசைப் பாரம்பரியம் கொண்டவரும் கர்நாடக இசையுலகில் தன்னிகரற்றவரும் இசைப் பேராசிரியருமாகிய சங்கீத கலாநிதி, பத்மபூஷண் டாக்டர் எம்.எல். வசந்த குமாரியைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி ரூ.11,001 நன்கொடை வழங்கியது.

தமிழிசைச் சங்கச் சார்பாக, 'பொள்ளாச்சி திரைப்படக்கழகம்' 1.5.1983—இல் நிறுவப்பெற்றது. இது விருதுகள் பெற்ற திரைப் படங்களைச் சங்க உறுப்பினர்களுக்குக் காட்டி மகிழ்விக்கிறது. சங்க உறுப்பினர் தொகை 1400 ஆனபடியால் மகாத்மா காந்தி மண்டபத்தில் இப்போது இருகாட்சிகளாக நடத்தப்பட்டு வருகிறது.

தமிழிசைச் சங்கம் 1985—ஆம் ஆண்டில் செய்த சிறந்த சாதனை மகாத்மா காந்தியின் உருவச்சிலை நிறுவியது. 30.1.1985 அன்று பொள்ளாச்சி நகரின் பிரதான சாலையில் காந்தியடிகளின் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவி அதனைப் பொதுமக்களுக்குச்

சங்கம் வழங்கியது. 'மீண்டும் பிறந்தால் நான் ஹரிஜனாகப் பிறப்பேன்' என்று மகாத்மா கூறியதனால், தனலட்சுமி என்ற ஹரிஜனச் சிறுமியைக் கொண்டு சிலை திறக்கவைத்தது புதுமையும் அருமையும் பெருமையுமாகும். அருட்செல்வர் நா. மகாலிங்கனார் வரவேற்புரை கூறினார். தேசபக்தர் திரு. தி.சு. அவினாசிலிங்கனார் விழாவிற்குத் தலைமை தாங்கினார். முஸ்லீம் அறிஞர் மவ்லவி அலாவுதீன், கிறித்தவ நல்லார் சேவியர் அல்போன்ஸ், இந்துமதப் பெரியார் கமலாத்மானந்தா ஆகிய முப்பெருஞ் சமயச் சான்றோர் களும் சிலை திறப்பு விழாவில் கலந்து அண்ணல் காந்தியடிகளின் நெறி பற்றி உரைத்தனர்.

தமிழிசைச் சங்கம் ஆற்றும் கலைப் பணிகளைப் பாராட்டு முகத்தான் தமிழக அரசின் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 1986–இல் சிறந்த சபாவிற்கான கேடய விருது வழங்கிச் சிறப்பித் துள்ளது. மேலும் இவ்வாண்டு பாட்டு, புல்லாங்குழல், பரதநாட்டியம் முதலிய 9 நிகழ்ச்சிகளை வழங்கியது.

தமிழக அரசின இயல் இசை நாடக மன்றம் ஆண்டு தோறும் தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகளின் பிறந்தநாள் விழாவைச் சென்னையில்தான் கொண்டாடி வருகிறது. 1989–இல் தமிழக அரசின் இயல் இசை நாடக மன்றம் பொள்ளாச்சி தமிழிசைச் சங்கத்துடன் இணைந்து முதல் முறையாகத் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் பிறந்த நாள் விழாவைப் பொள்ளாச்சியில் கொண்டாடியது; நலிந்த கலைஞர்கட்குப் பணமுடிப்பும் வழங்கியது.

தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம் இவ்வாண்டு பொள்ளாச்சி தமிழிசைச் சங்கம் மூலம் வாய்ப்பாட்டு, பரதநாட்டியம் முதலிய 7 நிகழ்ச்சிகளை வழங்கியது.

1990, அக்டோபரில் சென்னை மயிலாப்பூர் அகாடமி பொள்ளாச்சி தமிழிசைச் சங்கத்தை, 'சிறந்த புறநகர்சபா' எனத் தேர்ந்தெடுத்து, நற்சான்றிதழும் பரிசும் வழங்கிச் சிறப்பித்தது.

1991–ஆம் ஆண்டின் சுதந்திர நாளையொட்டி, இந்திய அரசு தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் இசை நாடகப் பிரிவும் தமிழிசைச் சங்கமும் இணைந்து தேசிய ஒருமைப்பாட்டு விழா, கவியரங்கம், நடனங்கள், பக்த நந்தனார் நாடகம் ஆகியவற்றை நடத்தியதைப் பாராட்டாத நெஞ்சங்களே இல்லை.

இவ்வாண்டில் 'ஆறாம் நாட்டிய விழா'வைப் பன்னிரண்டு நாட்களில் 14 நிகழ்ச்சிகளைப் பல மாநில நாட்டியக் கலைஞர்

களைக் கொண்டு இச்சங்கம் நடத்தியது. இது இசைச்சங்கத்தின் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வைக் காட்டுவதாகும். ஏழாம் நாட்டிய விழாவும் அவ்வாறே நடைபெற்றது.

ஆண்டுவிழா மற்றும் நாட்டிய விழாக்களில் கலந்து கொள்ளும் தலைவர்கட்கும் கலைஞர்கட்கும் இசைப்பள்ளிப் போட்டியில் பரிசு பெறும் மாணவ மாணவிகட்கும் நினைவுப் பரிசுகள் ஜுவல்லரி திரு V. சண்முகம் அவர்கள் நிதி உதவியுடன் வழங்கப்படுகின்றன.

1993–ஆம் ஆண்டில் முதன் முறையாக இசைப்பேரறிஞர் பத்மபூஷண் திரு. ம.ப. பெரிய சாமித்தூரன் அவர்களது அறக் கட்டளையுடன் தமிழிசைச் சங்கம் இணைந்து அவர்களது பாடல் களைக் கொண்டு இசைநிகழ்ச்சி நடத்தியுள்ளது.

ஆண்டுவிழா மலர்

பொள்ளாச்சி தமிழிசைச் சங்கம் ஆண்டுவிழாக் கொண்டாடும் போதெல்லாம் மலர் வெளியிட்டு வருகிறது.

விழாமலர்கள் எல்லாவற்றிலும் திருமுக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் வெண்பா வாழ்த்தோ, ஆன்மீகக் கட்டுரையோ இடம் பெற்றுள்ளன. அவ்வாறே தவத்திரு சுந்தர சுவாமிகள் வாழ்த்துக்கள் இடம் பெற்றுள்ளன.

விழாவில் பங்குபெறும், பாராட்டுப் பெறும் அறிஞர் கலைஞர் களைப் பற்றிய தகுதிக்குறிப்புக்கள் விழாமலர்களில் இடம் பெற்றுள் ளன. இம்முறை போற்றற்குரியது. மலரினுள்ளே ஆன்மீகம், இயல், இசை, நாடகம், பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத் திலும் இடம் பெற்றுள்ளன. தமிழிசைச் சங்க உறுப்பினர் பலரும் கவிதை, கட்டுரைகள் வரைந்துள்ளனர். ஆதலால் நல்லறிஞர்களின் நினைவு நீரோடையிலிருந்து அள்ளி வழங்கிய கருத்துக்களைக் கொண்டு மிளிரும் இம்மலர் இயலிசை நாடகம் ஆன்மீகம் பற்றிய அறிவுக் களஞ்சியம் ஆகும் என்பதில் ஐயமில்லை.

விழா நிகழ்ச்சிகள் முறையாக எழுத்து வடிவிலும் நிழற் படங்களாகவும் பதிவு செய்யப் பெற்றுள்ளன. இவை அனைத்தும் பொள்ளாச்சி தமிழிசைச் சங்கத்தின் கலைநிகழ்ச்சிக்குரிய வரலாற்றுப் பதிவுகளாக அமைந்துள்ளன.

தமிழிசைச் சங்கம் இசை அரங்குகளால் இசைத் தமிழை வளர்த்து வருகின்றது; இலக்கியக் கழகம், தமிழிசைத் தென்றல் இதழ், சொற்பொழிவு, பட்டிமன்றம், ஆண்டுமலர் இவற்றால் இயல்

தமிழை வளர்த்து வருகின்றது. நாடகம், திரைப்படக் கழகம் இவற்றால் நாடகத் தமிழையும் வளர்த்து வருகின்றது. இயலிசை நாடகம் என்னும் முத்துறைகளில் வல்ல அறிஞர்களையும் கலைஞர் களையும் அழைத்துப் பாராட்டுதலும் பட்டம் வழங்குதலும் பண முடிப்பு அளித்தலும் செய்து பெருமை கொள்கின்றது. இங்ஙனம் முத்தமிழையும் வளர்த்து வரும் இச்சங்கம் பொதுத் தொண்டுகளும் செய்து நல்லோர் கூறும் வாழ்த்துரைகளால் நாளும் வளர்ந்து விரைவில் வெள்ளிவிழா கொண்டாடும் சிறப்பு எய்தியுள்ளது.

அருட்செல்வர் மகாலிங்கம் புரவல ராக,
அவர்மருகன் வாணவராயர் தலைவ ராக,
திரு இராம வெள்ளையப்பன் செயல ராகத்
திகழுவதே பொள்ளாச்சி தமிழிசைச் சங்கம்
வருமானம் கருதாமல் தமிழி சையை
வளர்ப்பதற்குப் பள்ளியொன்று நடத்தும் சங்கம்
அருமைமிகு வீணைபிடில் வாய்ப்பாட் டோடு
ஆடுகிற நாட்டியங்கற் பிக்கும் சங்கம்.

கலைச் சேவை செய்வதுடன் கடமை யாகக்
கருதிப்பல பொதுச்சேவை புரியும் சங்கம்
நிலையாகத் தேசபிதா காந்தி வாழ
நீளுருவம் வெண்கலத்தில் வைத்த சங்கம்
மலையாமல் மாதந்தொறும் கலைநி கழ்ச்சி
மாறாமல் நடத்திவரும் மகிமைச் சங்கம்
கலைமா மணிப்பட்டம் பெற்ற சங்கம்
கனத்தபுகழ் கொண்டிலங்கும் கட்டித் தங்கம்.

பாராட்டுக் கேடயங்கள் பெற்ற சங்கம்
பாராட்டிப் பலபேரை வாழ்த்தும் சங்கம்
ஊரறிய உலகறியக் கலைவல் லாரை
ஊக்குவித்துப் பரிசளிக்கச் செய்யும் சங்கம்
பேரால விருட்சம்போல் ஆயி ரம்பேர்
பெருமளவில் உறுப்பினராய்க் கொண்ட சங்கம்
பாராளும் வகையினிலே கலையை ஆண்டு
பலநூறு ஆண்டுபணி செய்து வாழ்க!

எனச் சிந்தனைக் கவிஞர் பெரி. சிவனடியான் விழைந்தது போல பொள்ளாச்சி தமிசைச் சங்கம் பன்னூறு ஆண்டு பணிசெய்து வாழ்வதாக.

பொள்ளாச்சி தமிழிசைச் சங்க ஆண்டு விழாக்களில் கலந்து கொண்ட பெரியோர், அறிஞர், கலைஞர் பெருமக்கள்.

நாள்	விழா	தலைமை வகித்தவர்	மலர் வெளியிட்டவர்	பாராட்டுப் பெற்றவர்	சிறப்புரை & வாழ்த்துரை வழங்கியவர்
15.10.70	தொடக்க விழா	அருட்செல்வர் திரு N. மகாலிங்கம்		—	திரு N. வேதாந்தாச்சாரி (கரூர்) & புலவர் திலகம் புலவர் திரு கீரன்
10.10.71	முதல் ஆண்டு விழா	டாக்டர் ராஜா சர் M.A. முத்தையா செட்டியார்	திரு.N. மகாலிங்கம்	—	திரு T.K. பகவதி & திருமதி சௌந்தரம் கைலாசம்
27.10.72	2—ஆம் ஆண்டு விழா	அமைச்சர் மாண்புமிகு திரு.க. இராசாராம்	திரு G.R. கோவிந்த ராஜுலு.	மதுரை திரு. S. சோமசுந்தரம்	கவியரசு கண்ணதாசன்
19.10.73	3—ஆம் ஆண்டு விழா	சபாநாயகர் புலவர் திரு க.கோவிந்தன்	கவிஞர் திரு. S.D. சுந்தரம்	—	திருக்குறள் திரு. V. முனுசாமி
02.12.74	4—ஆம் ஆண்டு விழா	தலைமை நீதிபதி மாண்புமிகு திரு. K. வீராசாமி	திருமதி சந்திரகாந்தி கோவிந்தராஜுலு	—	திரு N. மகாலிங்கம்

30.11.75	5–ஆம் ஆண்டு விழா	மாண்புமிகு நீதிபதி திரு. P.R. கோகுல கிருஷ்ணன்	திரு P.R. ராம கிருஷ்ணன்	செம்மங்குடி திரு R. சீனிவாச ஐயர்	–
06.12.76	6–ஆம் ஆண்டு விழா	மாண்புமிகு நீதிபதி திரு. M.M. இஸ்மாயில்	தவத்திரு சுந்தர சுவாமிகள்	டாக்டர் சீர்காழி S. கோவிந்தராஜன்	திரு N. மகாலிங்கம்
01.10.77	7–ஆம் ஆண்டு விழா	கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன்	உடுமலை திரு. V. வித்யாசாகர்	மகாராஜபுரம் திரு. V. சந்தானம்	திரு. க.கு.கோதண்ட ராமன்
14.10.78	8–ஆம் ஆண்டு விழா	முன்னாள் நீதிபதி மாண்புமிகு திரு S. மகாராஜன்	திரு.D.V. நாராயண சாமி	நாமகிரிப்பேட்டை திரு K. கிருஷ்ணன்	திரு A. சுன்னா சாகிப்
01.12.79	9–ஆம் ஆண்டு விழா	டாக்டர் ம.பொ.சிவஞானம்	மாண்புமிகு நீதிபதி திரு.R. செங்கோட்டு வேலன்	டாக்டர் பத்மா சுப்பிரமணியம்	திரு N. மகாலிங்கம்
19.12.80	10–ஆம் ஆண்டு விழா	மாண்புமிகு நீதிபதி திரு. P. வேணு கோபால்	குன்றக்குடி அடிகளார்	திரு. அகிலன்	கலெக்டர் திரு. T.S. சிவப்பிரகாசம்
19.12.81	11–ஆம் ஆண்டு விழா	மாண்புமிகு நீதிபதி திரு. S. மோகன்	திரு K. கந்தசாமி DIG	வீணை திரு. சிட்டிபாபு	கலெக்டர் திரு. K. மலைச்சாமி

28.11.82	12ஆம் ஆண்டு விழா	திரு. G. கருப்பையா மூப்பனார்	திரு.கோ.செல்வம் (AIR)	டாக்டர் M.L. வசந்தகுமாரி	—
18.11.83	13–ஆம் ஆண்டு விழா	திரு. T.V. வெங்கட் ராமன் IAS (தமிழக அரசு உள்துறை செயலர்.	Dr. G. லெட்சமிபதி	டாக்டர் M. பாலமுரளி கிருஷ்ணா	சங்கராபரணம் திரு. M. வெங்கட கிருஷ்ணன்
15.12.84	14 –ஆம் ஆண்டு விழா	மாண்புமிகு நீதிபதி திரு S. நடராஜன்	டாக்டர் திரு N. மகாலிங்கம்	கலைமாமணி திரு.S.V. சகஸ்ரநாமம்	—
01.03.86	15–ஆம் ஆண்டு விழா	மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம்	ரோட்டரி கவர்னர் திரு. P.N. கோபால்	இசைப்பேரறிஞர் திரு.மீ.ப. சோம சுந்தரம்	—
25.04.87	16–ஆம் ஆண்டு விழா	சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு K. வெங்கடசாமி	அருட்செல்வர் டாக்டர் திரு. N. மகாலிங்கம்	இலக்கியப் பேரறிஞர் திரு M. வைத்திய லிங்கம்	திரு. பகீரதன்
15.04.88	17–ஆம் ஆண்டு விழா	Rtn. திரு G. வரத ராஜ் MP	திரு. P. லட்சுமணன்	திருமதி. மணி கிருஷ்ணசாமி	முன்னாள் ஆளுநர் அரிமா MJF திரு A.S. சுப்பையன்
08.12.88	18–ஆம் ஆண்டு விழா	திரு T T வாசு (தலைவர், மியூசிக் அகாடமி)	டாக்டர் N. மகாலிங்கம்	கலைமாமணி திரு V.S.ராகவன்	முன்னாள் ஆளுநர் அரிமா MJF திரு.S.V.S. சிவநாத்

01.12.89	19–ஆம் ஆண்டு விழா	தவத்திரு சுந்தர சுவாமிகள்	திரு.D. பாலசுந்தரம்	டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்	–
28.01.91	20–ஆம் ஆண்டு விழா	அருட்செல்வர் டாக்டர் நா. மகா லிங்கம்	டாக்டர் திரு.நா. மகாலிங்கம்	கம்பன் செஞ் சொற்கொண்டல் கள்ளிப்பட்டி திரு. க.கு. கோதண்ட ராமன்	–
04.01.92	21–ஆம் ஆண்டு விழா	டாக்டர் P.S.G.G. கோவிந்தசாமி நாயுடு	திரு B.V.S.S. மணி/ தலைவர் ஸ்ரீ கிருஷ்ண கான சபா	கலைமாமணிகள் ராதா& ஜெயலட்சுமி	திருமதி நளினி M.K. மேனன்
29.1.93	22–ஆம் ஆண்டு விழா	அருட்செல்வர் டாக்டர் நா. மகா லிங்கம்	திரு. என்.வி. சுப்பிர மணியம்	கலைமாமணி, டாக்டர் சோ. சண்முக சுந்தரம்	முதல்வர் ந. நமசிவாயம் M.A.

மணிவாசகர் பதிப்பகம்